
முத்துலட்சுமி ராகவன்
எங்கிருந்தோ ஆசைகள்...
பாகம் - 3

# முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# எங்கிருந்தோ ஆசைகள்...

## பாகம் - 3

**லட்சுமி பாலாஜி பதிப்பகம்**

68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,

சி.ஐ.டி. நகர், தி.நகர்,

சென்னை - 600 035

அழைக்க : 95669 42486

மின்னஞ்சல் : bchandar24@yahoo.com

website : www.muthulakshmiraghavan.com

**முத்துலட்சுமி ராகவன் எழுதிய**

**எங்கிருந்தோ ஆசைகள்...** *பாகம்* **- 3**

உரிமை : **ஆசிரியருக்கு**

| | | |
|---|---|---|
| பொருள் | : | நாவல் |
| மொழி | : | தமிழ் |
| முதல் பதிப்பு | : | டிசம்பர் 2013 |
| வெளியீடு | : | **லட்சுமி பாலாஜி பதிப்பகம்**<br>68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,<br>சி.ஐ.டி. நகர், தி.நகர்,<br>சென்னை - 600 035<br>செல் : 95669 42486 |
| நூலின் அளவு | : | 1x8 கிரவுன் |
| தாள் | : | 11.6 kg புக் பிரிண்ட் |
| அச்சு எழுத்து | : | 11 புள்ளி |
| மொத்தப்பக்கங்கள் | : | 400 |

**விலை : ₹ 200/-**

லேசர் டைப் செட் : **விஜி கிராஃபிக்ஸ்,** மதுரை.

அச்சிட்டோர் : **பாரதி அச்சகம்,** சென்னை–6

# முக்கிய அறிவிப்பு

இந்தக் கதை எனது சொந்தக் கற்பனையில் உருவானது.... இதன் பதிப்பிற்கான உரிமையை லட்சுமி பாலாஜி பதிப்பகத்திற்கு மட்டுமே தந்திருக்கிறேன்...

இதைத் தழுவி தொலைக்காட்சி தொடர்களையோ... திரைப் படத்தையோ எடுத்தாலும் இணையதளத்தில் என் அனுமதியின்றி வெளியிட்டாலும் நான் சட்ட பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்...

இப்படிக்கு

முத்துலட்சுமி ராகவன்

# ஆசிரியர் கடிதம்...

## மனம் வருடும் ஒரு நிகழ்வு...

ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் எனக்கொரு போன் வந்தது.. எடுத்துப் பேசினேன்...

"முத்துலட்சுமி ராகவன் மேடமுங்களா..?" என்ற கொங்குத்தமிழ் என் காதை வருடியது...

"ஆமாம்.." என்றேன்..

இளம்பெண்ணின் குரல்..! என் அடுத்த கதைகளைப் பற்றி விசாரித்தார்.. அப்போது 'மௌனமே காதலாய்..' என்ற நாவலை திருமகள் பதிப்பகத்தார் வெளியிட்டிருந்தார்கள்.. சொன்னேன்.. கோயம்புத்தூருக்கு வந்திருக்குமா என்று கேட்டார்.. வந்திருக்கலாம் என்றேன்...

"அப்படின்னா.. இப்பவே அந்த புக்கை வாங்கியாரச் சொல்லனுமுங்கோ.. அங்கே போறதுக்குள்ள படிச்சு முடிச்கோனும்.." என்று கொங்குத் தமிழில் கொஞ்சும் தமிழில் கொஞ்சினார்...

எங்கே போகிறார் என்ற கேள்வி இயல்பாகத்தான் என் நெஞ்சில் எழுந்தது.. ஏதேனும் பயணத்தில் இருப்பார் என்று தான் நான் நினைத்தேன்.. அதனால்தான் மனதில் உதித்த கேள்வியையும் நான் கேட்டேன்.. அதற்கு அவர் சொன்ன பதிலில் எனக்கு தூக்கி வாரிப் போட்டது....

"மணமேடைக்கு போகனுமுங்கோ.." என்றார் அவர்..

"மணமேடைக்கா..? யாருக்குக் கல்யாணம்..?"

"எனக்குத்தானுங்கோ..."

"என்னப்பா..? நீங்க எங்கேயிருந்து பேசறிங்க..?"

"கல்யாண மண்டபத்தில... மணப் பொண்ணு ரூமில இருந்து தாங்கோ பேசறேன்.. எனக்கு விடிஞ்சாக் கல்யாணம்..." என்று அவர் சொன்னதை இன்னமும் என்னால் மறக்க முடியவில்லை...

“என்னப்பா சொல்றீங்க.. நீங்க கல்யாணப் பெண்ணா..?”

“ஆமாங்கோ..”

மீண்டும் உறுதிபடுத்திக் கொண்ட நான் ஒரு நொடி பேச்சிழந்தேன்.. எனக்காக வரிந்து கட்டிக் கொண்டு “என்னோட ஆண்ட்டி..” என்று சண்டைக்கு போகும் மகேஸ்வரியைப் போல.. எத்தனை அலுவல்கள் இருந்தாலும்.. அதற்கு நடுவில் என் உடல் நலத்தை விசாரித்து “எப்படியிருக்கீங்க ஆண்ட்டி..?” என்று கவலைப்படும் ராதாவைப் போல.. நான் எதைக் கேட்டாலும் உடனே செய்து கொடுக்கும் சுபத்ரா ராஜாராமைப்போல.. எனக்காக யோசிக்கும் கௌசல்யா பிரேம் குமாரைப் போல.. இந்த அன்பும் என்னைக் கட்டிப் போட்டு காவலில் வைத்தது...

ஜெயஸ்ரீ..! பொள்ளாச்சியென்று நினைக்கிறேன்.. திருமணத்திற்கு முதல்நாள் இரவில் திருமண மண்டபத்திலிருந்து எனக்குப் போன் பண்ணி ஆச்சரியத்தைக் கொடுத்தவர்.. மாப்பிள்ளையைப் பற்றி விசாரித்தேன்...

“கண்டிப்பான முகமுங்கோ.. பயமாயிருக்கு.. அப்படியே ‘என்னவென்று நான்சொல்ல..?’ பிரபாகரனைப் போல முறைச்சுக்கிட்டே இருக்காருங்கோ..” என்றார்..

அவரது குழந்தைத்தனமான பேச்சில் எனக்கு சிரிப்புத்தான் வந்தது..

“ ‘என்னவென்று நான் சொல்ல’ பிரபாகரன் ஒரு பெர்பெக்ட் ஹீரோம்மா.. உன் கணவரும் அப்படித்தான் இருப்பார்..” என்றேன்...

“தெரியலைங்கோ...”

கலவரத்துடன் சொன்ன இந்தக் குழந்தை இப்போது ஆறுமாதப் பெண் குழந்தைக்குத் தாய்..! மைசூரில் அன்புக் கணவருடன் வசிக்கிறார்.. திருமணமான ஒரு மாதத்திலேயே கணவரைப் பிரிந்து பிறந்த ஊருக்கு எப்படி வருவது என்று கேட்டவர்.. பிரசவத்திற்குக் கூட அவரது கணவர் அவரை பிறந்த வீட்டுக்கு அனுப்பிவைத்தது அதிசயம்தான்.. அந்த அளவுக்கு ஆழமான பிணைப்பு அவருக்கும்.. அவர் கணவருக்கும் இடையில் இருக்கிறது...

இதில் எனக்கு ஆழ்ந்த சந்தோசம் உண்டு...

திருமணத்திற்கு முதல்நாளில் தன் மனதின் பய உணர்வுகளை என்னிடம் பகிர்ந்து கொண்ட குழந்தை அது..!

அதன் திருமண வாழ்வு வெற்றிகரமாக அமைய வேண்டும் என்று அந்த நொடியில் நான் கடவுளை பிரார்த்தித்தேன்..

பெருமாளைப் பற்றி நான் கதைகளில் எழுதுவதால் இவரும் பெருமாளின் ரசிகையாகி விட்டாராம்.. மசக்கையின் போது 'உனக்கு என்ன பிடிக்கும்..?' என்ற அன்புக் கணவரின் கேள்விக்கு... 'எனக்கு முத்துலட்சுமி ராகவனைத்தான் பிடிக்கும்..' என்று சொன்னாராம்...

இன்னமும் இவரின் குழந்தைத்தனம் இவரை விட்டு அகலவில்லை.. அதைப் போற்றி பாதுகாத்து நேசிக்கும் இவரின் அன்புக் கணவருக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள்.. "உன் கணவர் உனது ஹீரோவாக இருப்பார்.." என்று நான் அந்தக் குழந்தைக்கு கொடுத்த நம்பிக்கையை இவர் காப்பாற்றி விட்டார்...

வாழ்க.. வளமுடன்..!

என்ன காரணத்தினால் நான் எதிரியாகிறேன் என்று தெரியாமலே பகை மத்தியில் வாழும் சாபத்தைப் பெற்றிருக்கும் எனக்கு இதுபோன்ற மனம் வருடும் நிகழ்வுகளே உயிர்ப்பைக் கொடுக்கின்றன..

இதுவரை நான் ஜெயஸ்ரீயைப் பற்றி எழுதியதில்லை..

"என்னைப் பற்றி ஏன் எழுதலைங்கோ..." என்ற அவரின் கேள்விக்குப் பின்னரே இதை எனது ஆசிரியர் கடிதத்தில் குறிப்பிடுகிறேன் என்பதை இங்கு நான் குறிப்பிடுகிறேன்..

– நட்புடன் –

**முத்துலட்சுமி ராகவன்**

அனுப்ப : muthulakshmiraghavan24@gmail.com

website : www.muthulakshmiraghavan.com

# முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# 'எங்கிருந்தோ ஆசைகள்'

பாகம் - 3

## 70

*நீ வருகின்ற அந்நாளில்...*
*உன் நிழலாகிவிட ஆசைகொண்டேன்..*

**கா**வ்யா உற்சாகமாக இருந்தாள்.. இரவில் நெடுநேரம் வரை அர்ஜீனுடன் பேசிக் கொண்டிருந்ததில் எழுந்த சந்தோச நினைவலைகளில் மூழ்கி தத்தளித்துக் கொண்டிருந்தாள்...

"பாடு காவ்யா..."

காதோரம் அவன் குரல் கேட்டது.. நள்ளிரவின் அமைதியில் பூட்டிய அறைக்குள் யாரும் வர மாட்டார்கள் என்றாலும் போர்வைக்குள் பதுங்கியபடி பேசிக் கொண்டிருந்தவளின் காதோரம் குறுகுறுத்தது..

"பாட்டா..?" அவள் ஒரு தினுசான குரலில் கேட்டாள்...

"ஊம்.. பாட்டுத்தான்.. ஏன் நீ பாட மாட்டியா..?"

“நான் பாடறது இருக்கட்டும்.. ஐயாவுக்கு என்ன திடிர்ன்னு இப்படியொரு ஆசை..?”

“ஏண்டி..? நான் ஆசைப்படக் கூடாதா..?”

அவனது மூச்சுக் காற்றின் தாபத்தை காதுகளில் உணர்ந்த காவ்யாவின் உடலில் சூடேறியது.. பக்கத்தில் இல்லாமலே அவன் பக்கத்திலிருக்கும் உணர்வை அவன் உணர்த்தியதில் அவள் கிறங்கித் தவித்துக் கொண்டிருந்தாள்...

“ஆசைப்படலாம்.. வேணாங்கல..” அவள் முணுமுணுத்தாள்...

“வேணாம்ன்னு கூட நீ சொல்லுவியா..?” அவன் அதட்டியதில் அவளுக்குள் ஆனந்தம் ஊற்றெடுத்தது...

“இந்த நட்ட நடுராத்திரியில உங்ககூடப் பேசவே பயமாயிருக்கு.. இதில பாட்டுப் பாடினா அவ்வளவுதான்..”

“என்ன ஆகும்..?”

“என்ன.. ஆகுமா..? எங்க அம்மா விறகுக் கட்டயத் தூக்கிக்கிட்டு வந்துரும்.. அதனால இப்படியாப்பட்ட அபாய அறிவிப்பு ஆசைகள விட்டுவிட்டு வேற எதையாச்சும் பேசுங்க...”

“ஊஹீம்.. எனக்கு உன் பாட்டைக் கேட்டாகனும்..”

“அடடா.. இதென்ன புதுசா அடம் பிடிக்கறிங்க...”

“அப்படித்தான்னு வைச்சுக்கயேன்...”

“வைச்சுக்கல்லாம் முடியாது.. கட்டிக்கத்தான் முடியும்..”

“ஏய்ய்.. நான் வெளியூரில இருக்கேன்ங்கிற தைரியமா..? இப்படிக் கிளப்பி விட்டேன்னு வைய்யி.. அடுத்த பிளைட்டை பிடிச்சு இந்தியாவுக்கு ஓடி வந்திருவேன்...”

“வேணாம் சாமி.. உங்க வேலயக் கெடுத்தேங்கிற பழி எனக்கு வேணாம்.. போன வேலய முடிச்சுட்டு சமத்துப் பிள்ளையா திரும்பி வாங்க...”

“நீ சொன்னபடி கேட்டா.. என்ன தருவ..?”

திரும்பவும் அவன் குரல் தாபத்துடன் குழைந்து ஒலித்தது.. காவ்யா தவித்தாள்.. மதுரைக்கு அவன் வந்திருந்த போதெல்லாம்.. தொடாமலே பார்வையால் தொட்டு அவளைப் பாடாய் படுத்துவான்.. இப்போதோ... பார்க்க முடியாத தொலைதூரத்தில் இருந்து.. அவன் குரலாலே தொட்டு அவளை மயக்கி இழுக்கிறான்...

காவ்யா கிறங்கித் தவித்து கிளர்ந்து போராடினாள்..

“பாடுடி..” அவன் குழைந்து கிசுகிசுத்தான்..

“வேணாம்..”

என்னவோ.. அவன் கிட்டத்திலிருந்து அவளைத் தொட்டுக் கொண்டிருப்பதைப் போல அவள் வெட்கத்துடன் முணுமுணுத்தாள்...

“எனக்கு வேணும்..” அவளை ஆண்டு கொண்டிருப்பவனைப் போல அவன் பிடிவாதத்துடன் பேசினான்...

“சத்தம் கேக்கும்ங்க...” கட்டினவனிடம் கெஞ்சுவதைப் போல அவள் கெஞ்சினாள்...

“சத்தமில்லாம பாடு..”

“உங்கள நல்லா நாலு மொத்து மொத்தனும்.. இந்தப் பிடிவாதம் எதுக்கு..?”

“நீ பாடறதைக் கேட்டா.. நீ என் பக்கத்தில இருக்கிறதப் போல இருக்கும்டி.. பாடு..”

அதற்கு மேல் அவனின் தாபத்தை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. மெலிதான குரலில் அவனுக்கு மட்டும் கேட்கும் படியாக அவள் பாடினாள்..

*“காதோடுதான் நான் பாடுவேன்...*
*மனதோடுதான் நான் பேசுவேன்..*
*விதியோடுதான் விளையாடுவேன்..*
*உன் மடிமீதுதான் கண்மூடுவேன்..”*

கண்மூடி.. அவன் மடிமீது படுத்திருக்கும் உணர்வோடு தலையணையை இறுக்கிக் கொண்டு பாடினாள் காவ்யா.. அவன் குறுக்கிடவில்லை.. அவள் பாடலில் நனைந்து போனவனாக மௌனத்துடன் கை கோர்த்து அவள் பாடலின் வரிகளைச் சுவைத்து ரசித்துக் கொண்டிருந்தான்..

*“வளர்ந்தாலும் நான் இன்னும்*
*சிறு பிள்ளைதான்...*
*நான் அறிந்தாலும் அதுகூட*
*நீ சொல்லித்தான்...”*

அவளின் குழைந்த குரல் உணர்த்திய அர்த்தங்களில் அவன் பொதிந்திருக்க வேண்டும்.. எங்கிருந்தோ ஆசைகளைத் தேடிப் பிடித்து அவள் மனதில் திணித்து வைத்தவன்.. அவள் சொல்லுவதை ஏற்றுக் கொண்டவனாக லேசாக சிரித்தான்.. அந்த சிரிப்பொலியில் அவன் சொல்லிக் கொடுத்த தருணங்கள் அவள் மனதில் வந்து நின்றன...

*“உனக்கேற்ற துணையாக..*
*எனை மாற்ற.. வா...*
*குலவிளக்காக நான்வாழ*
*வழிகாட்ட.. வா...”*

ரகசியத் தருணங்களின் நினைவோடு அவனை அவள் அழைத்தாள்.. தாங்க முடியாத தாபத்துடன் அவன் பொங்கினான்...

“வந்துருவேண்டி...”

“அப்படி எதையும் செய்துராதீங்க...”

“ஏய்ய்.. நீதானே.. ‘வா.. வா..’ன்னு கூப்பிட்ட..?”

“கூப்பிட்டா..? ஓடி வந்திருவீங்களா..?”

“பின்னே..? வரமாட்டேனா..?”

அவன் பதிலில் அவள் இதயம் நனைந்தது.. அவனுடனான ரகசியப் பேச்சுக்கள் உணர்த்திய காதலில் அவள் வாழ்ந்து கொண்டிருந்தாள்.. இருபத்தி நான்கு மணி நேரத்தின் ஒவ்வொரு மணித் துளியிலும் அவன் நினைவு உறைந்து கிடந்தது.. அவனை நினைக்காத நாளில்லை.. நினைக்காமல் அவளில்லை.. அவன் நினைவை மனதில் சுமந்து கொண்டு வெளியில் விட்டுச் சிறகடிக்கும் சிட்டுக்குருவியைப் போல அவள் பாவனை காட்டினாள்..

உறங்காத இரவின் மணித்துளிகள் சொல்லும் அவளின் காதலின் கதையை.. காற்றில் கலந்த அவளின் குரலோசை சொல்லும் அவளின் ஆசையின் அளவை...

காவ்யா காதலித்தாள்.. அர்ஜீன் அருகில் இருந்த பொழுதுகளைவிட அவன் இல்லாத அந்தப் பொழுதுகளில் அவளின் காதலின் வேகம் அதிகரித்தது..

அவனைக் காணப் போகும் அந்த நாளுக்காக அவள் காத்திருக்க ஆரம்பித்தாள்...

உறக்கமில்லாத இரவை வீங்கிய இமைகள் சொல்ல.. உற்சாகம் கொப்புளிக்க.. சாப்பிட வந்து அமர்ந்த தங்கையை உற்றுப் பார்த்தான் கண்ணதாசன்...

“என்னடா தம்பி.. உந்தங்கச்சிய இன்னைக்குத்தான் புதுசா பாக்கிறாப்புல உத்து உத்துப் பாக்கறியே என்ன விசயம்...?”

அவர்களுக்கு தட்டுக்களை வைத்தபடி கேட்டாள் அன்னபூரணி.. தாயின் பார்வையிலிருந்து எதுவுமே தப்பாது என்று நினைத்துக் கொண்டான் கண்ணதாசன்...

அப்படிப்பட்ட அம்மா எப்படி காவ்யாவின் கண்ணிமைகள் வீங்கியிருப்பதை பார்க்க மறந்தாள்..?

அவன் நினைத்து முடிப்பதற்குள் காவ்யாவின் பின்னந்தலையில் ஒர் அடி கொடுத்தாள் அன்னபூரணி...

“கண்ணெல்லாம் வீங்கிச் சிவந்திருக்கு.. விடிய விடிய தூங்காம பரிட்சைக்கு படிச்சியா..?”

“இல்லேம்மா..” அகப்பட்டுக் கொண்டவளாக திருதிருத்தாள் காவ்யா..

“வேற என்னத்த வெட்டி முறிச்ச..? கதைப் புத்தகத்த கண்ணுக்கு கொடுத்திருந்தியாக்கும்..?”

“ஆமாம்மா...”

தாயே வழி சொல்லிக் கொடுத்துவிட்டாள் என்ற சந்தோசத்துடன் சொன்னாள் காவ்யா..

“அதப் பகல்ல படிக்கிறதுக்கென்ன..?”

“பகல்லதான் நான் வேலைக்கு போயிர்ரேனேம்மா..”

அன்னபூரணியின் முகம் மாறியது.. கவலையுடன் தோசைகளை எடுத்து வைத்தபடி அவள் மகனின் முகம் பார்த்தாள்..

“கண்ணா..”

"என்னம்மா...?"

"அந்தத் துரியோதனன் வந்துட்டுப் போனதில இருந்து பக்கு.. பக்குன்னு இருக்குடா.. அந்த எடுபட்ட தேவராஜன் பய வேற எம்மககிட்ட வாலாட்டறான்னு சொல்ற..."

"இப்ப அப்படியில்லம்மா.. அவனக் கடைக்குள்ள விடக்கூடாதுன்னு உத்தரவே போட்டிருக்காங்களாம்.."

"கடைக்குள்ள வரமாட்டான்ங்கிற.. சரி.. அவன் ரோட்டில வம்புக்கு வந்தான்னா..?"

"கண்ணதாசன் கையென்ன பூப்பறிக்கவா போயிருக்கு..?" கண்கள் சிவந்தான் கண்ணதாசன்..

"அதுக்கில்லடா தம்பி.. வயசுப் பொண்ணைப் பொத்திப் பொத்தி வைச்சுக்கிட்டு எதுக்காக காவல் காக்கனும்..? மாப்பிள்ளயத்தேடி கட்டிக் கொடுத்துட்டா.. அதுக்கப்புறம் அவன் பாடுன்னு நான் நிம்மதியா இருக்கலாமில்ல.."

காவ்யா என்ன அவ்வளவு பாரமாகவா ஆகிவிட்டாள்..? அவளுக்கு கண்கள் கலங்கி விட்டன.. அன்னபூரணி சொன்னதை யோசித்துக் கொண்டிருந்தவன் தங்கையின் கண்ணீரைப் பார்த்து விட்டான்...

"இப்ப எதுக்காக கண்கலங்கற..?" என்று தங்கையை அதட்டினான்..

“ஒன்னுமில்ல..” இமைகளைச் சிமிட்டி கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் காவ்யா..

“ஒன்னுமில்லாததுக்கா அழுகிற..? பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லனும்.. அம்மா இடத்தில இருந்து பாரு.. அப்ப அவங்க கவலை உனக்குப் புரியும்..” கண்டிப்புடன் பேசினான் கண்ணதாசன்...

“இல்லண்ணே...” கண்ணீரை விழுங்கிக் கொண்டாள் காவ்யா...

“என்னைக்கிருந்தாலும் நீ கல்யாணம்ன்னு ஒன்னைப் பண்ணிக்கிட்டுத்தான் ஆகனும்.. காலம் பூராவும் இந்த வீட்டிலயே நீ இருந்துர முடியுமா..?”

“அதுக்கில்லண்ணே...”

“எதுக்கா இருந்தாலும் இப்ப எதையும் பேச வேணாம்.. சாப்பிடு..”

கண்ணதாசன் தங்கையைக் கண்டிப்பதை ஆச்சரியத்துடன் பார்த்தாள் அன்னபூரணி.. அவள் அறிந்தவரையில் அவன் தங்கையைக் கண்டித்துப் பேச மாட்டான்..

“இப்பத்தாண்டா தம்பி நீ எம்பக்கமா யோசிக்கிற..”

“யோசிக்காம என்னம்மா.. நானும் மாப்பிள்ளை தேடிக்கிட்டுத்தான் இருக்கேன்.. நல்ல இடமா அமைய வேனாமா..? எவனோ ஒரு நாதாரிப் பயலுக்கு பயந்துக்கிட்டு

நம்ம வீட்டுப் பொண்ண கண்ட கழிசடைக்கு கட்டிக் கொடுக்க முடியுமா..?"

"அந்த நாய்க்கு யாரு பயந்தது..? விளக்கு மாறு பிஞ்சிராது..? அதுக்காக இல்லைடா கண்ணதாசா.. வெளங்காத வெட்டிப்பய.. ஏதாவது சோலியிருந்தா அதில மனசு போகும்.. இவனுக்கு என்ன சோலியிருக்கு..? வெட்டியாப் பொழுதப் போக்குறவன் மனசில வெளங்காத எண்ணம்தான வரும்..? அவன் பாட்டுக்கு உந்தங்கச்சி கையப் பிடிச்சு இழுத்திட்டான்னா..?"

"கையை வெட்டிர மாட்டேன்..?"

"வெட்டி என்ன பிரயோசனம்..? பேரு பட்டது.. பட்டதுதான..?"

தாயின் கவலையிலும் ஓர் அர்த்தமிருப்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.. ஆனால் காவ்யாவின் விசயத்தில் அந்தபயம் தேவையற்றது என்று அவன் நினைத்தான்...

'காவ்யாவாவது அவன் கையப் புடிச்சு இழுக்கிறதுக்கு கையக் கொடுத்துக்கிட்டு நிக்கிறதாவது...'

காவ்யா பெண்சிங்கம்..! அவளின் நிழலைக் கூட எவரும் நெருங்க முடியாது.. அர்ஜீன் நெருங்கியிருக்கிறான் என்றால் அதற்கு அவளின் அனுமதி இருக்கிறது.. தேவராஜன் அப்படியில்லையே...

அதைச் சொல்லாமல் தாயைச் சமாதானப் படுத்த அவன் முனைந்தான்..

“அம்மா.. இது யாரு..? உங்க மக.. எந்தங்கச்சி..”

“அதுக்கென்னடா..?”

“இதுகிட்ட நின்னு பேசினாலே பல்லைத் தட்டிக் கையில் கொடுத்துரும்.. இதில அவன் கையப்பிடிச்சா சும்மாவா விட்டிரும்..?”

கண்ணதாசனின் பேச்சில் சிரித்து விட்டாள் அன்னபூரணி.. மகளைப் பெருமையுடன் பார்த்தபடி...

“ஆமாமா.. இந்த ராணி மங்கம்மாவப் பத்தி உனக்கு ரொம்பப் பெருமைதான்.. ஆனாலும் தம்பி.. இவ கல்யாணத்த வெரசா முடிச்சிடறது நல்லதுடா..”

“பார்க்கலாம்மா...”

“நம்ம சொந்தபந்தத்திலயே நிறையப்பேரு காவ்யாவ பொண்ணுக் கேக்கிறாங்கடா தம்பி.. உனக்கும் தெரியும் தான.. அவங்களுக்கு என்ன வசதி வாய்ப்பு குறைச்சலாவா இருக்கு..? இல்ல.. மாப்பிள்ளக தான் ஏப்ப.. சாப்பயா இருக்காங்களா.. எல்லாம் சிங்கங்கடா தம்பி.. அவங்கள்ல ஒருத்தருக்கு நம்ம காவ்யாவ கட்டிக் கொடுத்திரலாம்டா..”

“காவ்யா படிச்ச புள்ளம்மா...”

“அவங்களும் படிச்ச மாப்பிள்ளகதாம்பா...”

“கவர்ண்மென்ட் வேலயில இருந்தா நல்லதும்மா..”

“இருக்காங்கப்பா.. நம்ம சாமித்துரை அண்ணனோட ரெண்டாவது மகன் கவர்ண்மென்டிலதான் வேலை பாக்குது.. நம்ம சின்னச்சாமி அண்ணனோட மூத்த மகன் கவர்ண்மெண்ட் வேலதான்.. இன்னும்..”

அன்னபூரணி அடுக்கிக் கொண்டே போக.. கண்ணதாசன் தங்கையின் முகத்தையே கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.. அவளின் முகவெளுப்பையும்.. தோசையைச் சாப்பிடாமல் நின்று விட்ட அவளின் கையையும் கவனித்தவனுக்கு மனம் கனத்தது...

அன்னபூரணியின் பயத்தில் நியாயம் இருந்தது.. நல்லவர்கள் எதிரியாக மாறினால் கவலைப்படத் தேவையில்லை.. கெட்டவர்கள் எதியாக மாறினால் கவலைப் பட்டுத்தான் ஆகவேண்டும்.. அவர்கள் மனித உருவில் இருக்கும் மிருகங்கள்.. எதைப் பற்றியும் கவலைப் படாமல் ஒருவரை அழிக்க எந்த வழியையும் அவர்கள் உபயோகிப்பார்கள்.. எந்த அளவிற்கும் கீழிறங்குவார்கள்..

அப்படிப்பட்ட மிருகத்திடமிருந்து மகளைக் காப்பாற்றி பாதுகாப்பான இடத்தில் சேர்த்துவிட அன்னபூரணி துடிக்கிறாள்...

ஆனால்.. காவ்யா அதை உணர்ந்து கொள்ளும் நிலையில் இல்லையே...

# 71

## *பகைமுடித்து அதை வென்று..*
## *நீ எனைச்சேர ஆசைகொண்டேன்..*

**கா**தல்...!

அது எந்தச் சூழ்நிலையையும் உணராதது.. உணர விடாதது... அதில் மூழ்கி விட்டவர்களுக்கு காதலை மட்டும்தான் தெரியும்.. நல்லது, கெட்டது தெரியாது...

காவ்யாவும் அப்படித்தான்.. அவளைக் காக்கத் துடித்த அன்னையின் பரிதவிப்பை துன்பமாக நினைத்தாள்.. அதை காதுகொடுத்து கேட்கும் தமையனின் பொறுப்பை அச்சத்துடன் நோக்கினாள்...

'இவங்க பேசறத பாத்தா இந்த மாசமே கல்யாணத்த முடிச்சு... கழுத்தப் பிடிச்சு புருசன் வீட்டுக்குள்ள தள்ளிருவாங்க போல இருக்கே..' என்று திகிலடைந்தாள்..

அந்தப் புருசனாக அர்ஜீனை மட்டுமே அவளால் நினைத்துப் பார்க்க முடிந்தது.. புகுந்த வீடாக அர்ஜீனின் வீட்டை மட்டுமே அவளால் நினைத்துப் பார்க்க முடிந்தது...

அர்ஜீனின் குடும்பத்தாரை அவள் பார்த்ததில்லை.. எல்லா விவரமும் அர்ஜீனின் வாய்மொழியின் வழியாக அவள் தெரிந்து கொண்டதுதான்.. அவற்றையும் அவன் கனடா போனபின்பு செல்போனின் வழியாகத்தான் சொன்னான்.. நேரில் பேசிப் பழக ஆரம்பித்தவுடனே தான் அவன் பிரிந்து.. பறந்து போக வேண்டியிருந்ததே...

“அப்பா பார்த்தசாரதி...”

“ம்ம்ம்...”

“பக்கா பிஸினெஸ்மேன்.. எந்த இடத்திலயும் வேரூன்றி நிற்க மாட்டார்.. நகர்ந்துக்கிட்டே இருப்பார்...”

“அவர் குணம்தான் உங்களுக்கும்...”

“ஷ்யூர்.. எங்க பூர்விகம் திருநெல்வேலிப் பக்கமாம்.. பட்.. எங்க தாத்தா காலத்திலேயே மதுரையில தொழில் தொடங்க வந்து செட்டில் ஆனவங்களாம்..”

“நிசமாவா.. நீங்க மதுரைக்காரங்களா..?”

“எதுக்குடி இவ்வளவு ஆர்வம் காட்டற..? மதுரைக் காரனா இருந்தாத்தான் கழுத்தை நீட்டுவியா...?”

“அப்படிச் சொன்னேனா..? ஊர்ப் பாசம்தான்...”

“இப்ப நான் சென்னைக்காரண்டி.. யார் கண்டது.. வருங்காலத்தில கனடாக்காரனா ஆனாலும் ஆகலாம்...”

“ஆவிங்க.. ஆவிங்க.. சொல்ல முடியாது.. உங்க வம்சம்தான் இருக்கிறத விட்டுட்டு பறக்கறதப் பிடிக்கிற வம்சமாச்சே...”

காவ்யா ஏன் அப்படிச் சொன்னாள்.. எதற்காக அப்படிச் சொன்னாள் என்று அவளாலேயே கண்டு பிடிக்க முடியவில்லை... எதிலும் நிலைத்து நிற்காதவன் அவளில் நிலைத்து நிற்பானா என்ற சந்தேகம் அவளின் அடிமனதில் இருந்ததினால் அப்படிச் சொன்னாளோ...

அர்ஜீன் அப்படியெல்லாம் ஆழமாக யோசிக்க வில்லை.. அவள் பேச்சை ரசித்துச் சிரித்தான்...

"நீ கூட பறக்கிற பறவையைப் போலதான் காவ்யா.."

இந்தப் பேச்சில் காவ்யாவின் மனதிலுள்ள சஞ்சலம் அகன்று விடும்..

"ஆமாமாம்.. எனக்கு ரெக்கை முளைச்சிருக்கு..."

"ஈஸிட்..? அப்ப பறந்து இங்க வந்திடேன்..."

அவனின் தாபத்தில் அவள் தத்தளிப்பாள்.. இது என்ன மாதிரியான இம்சை என்று கிறங்கித்தவிக்கும் அவளது உடலும்.. மனமும் தவிக்கும்..

ஆளைக்கொல்லும் அற்புதமான.. அழகான.. இன்பமான.. இம்சை அது..

எங்கிருந்தோ ஆசைகளைத் தேடிப் பிடித்து.. மனதில் விதைத்து ஆட்டிப் பார்க்கும் அவஸ்தை அது...

ஊனும்.. உயிரும்.. உருகித் தவிக்க.. ஆசைகளின் அலைக்கழிப்பில்.. அலைமோதும் இதயங்களை பந்தாடும் வலி அது...

அந்த அலைக்கழிப்பில் அலைபாயும் அவளின் பெண் மனம்...

“ஆசை, தோசை, அப்பளம், வடை.. உங்க பேரை மட்டும் சொல்லிட்டுத் தப்பிக்கப் பாக்கறிங்களா..? அம்மாவ பத்திச் சொல்லுங்க...”

“அம்மா பெயர் சுந்தரி.. ஹவுஸ் வொய்ப்...”

“அதாவது நீங்கள்ளாம் ஹவுஸ் அரெஸ்டில வச்சிருக்கிற ஒரு ஜீவன்..”

“ஏய்ய்.. அவங்க இல்லத்தரசிடி...”

“அப்படிச் சொல்லிச் சொல்லியே இல்லத்துக்குள்ள பூட்டி வைச்சிருவீங்களே...”

“நீ நினைக்கிறது தப்புடி.. வீட்டிலே எத்தனை சர்வண்ட்ஸ் தெரியுமா..?”

“அவங்கள நம்பி வீட்டை விட்டுட்டு வருவீங்களா..?”

“அது.. அது.. வந்து...”

“முடியாதில்ல..? சமையலுக்கு ஆள் இருக்கலாம்.. ஆனா.. யார் யாருக்கு என்ன பிடிக்கும்ன்னு மனப்பாடம் பண்ணிவைச்சுக்கிட்டு.. தினம் தினம் என்ன சமைக்கனும்னு சொல்ல உங்க அம்மா இருந்தாகனும்.. வீட்டைத் துடைக்க ஆள் இருக்கலாம்... ஆனா எங்கெங்கே தூசி இருக்குதுன்னு சொல்லி.. அங்கெல்லாம் துடைக்கச் சொல்லி மேற்பார்வை

பார்க்க உங்க அம்மா இருந்தாகனும்.. காரோட்ட டிரைவர் இருக்கலாம்.. ஆனா.. அந்தக் கார தினமும் கழுவித் துடைக்கச் சொல்ல உங்க அம்மா இருந்தாகனும்...”

காவ்யா சொல்லச்சொல்ல.. இவள் என்ன பக்கத்திலிருந்து அம்மா செய்கிற வேலைகளைப் பார்த்தாளா என்ற திகைப்பு அர்ஜீனுக்கு வரும்..

“எப்படி காவ்யா..? ஹவ் இஸ் இட் பாஸிபிள்..?”

“ஊம்.. வெத்தலயில மை தடவி ஜோஸியம் பார்த்தேன்..”

“அப்படின்னா..?”

அர்ஜீனுக்கு விளங்காது.. செல் போனின் திரையிலேயே உலகத்தைப் பார்க்கிறவனிடம் போய் வெற்றிலையில் மை தடவிப் பார்க்கும் ஜோதிடத்தைச் சொன்னால் அவனுக்குப் புரியுமா..?

“அப்படின்னா.. அப்படித்தான்.. இதுக்கே ஹவ் இஸ் இட் பாஸிபிள்ன்னு மலச்சா எப்புடி..? இன்னும் இருக்கு மச்சான்...”

“மச்சானா..? ஏய்ய்...”

அவன் தேன் குடித்த நரியாவான்.. அவனின் குரல் தரும் போதையில் கள்ளூறும் பூவாக காவ்யா மாறுவாள்..

“போதுமே.. இம்புட்டு வேலகளயும் மேற்பார்வை பாக்கிறது பெரிசில்ல.. உங்க வீட்டில அவங்கள நகர

விடாம காலிங் பெல் அடிக்கும்ல்ல.. அதுக்குப் பதில் சொல்லி அனுப்புறதுதான் பெரிய விசயம்..”

“அதுக்கெல்லாம் ஏன்னு கேட்க ஆள் இருக்குடி...”

“அந்த ஆள் பதில் சொல்லி அனுப்ப முடியுமா..? அந்த அதிகாரம் அவங்களுக்கு இருக்கா.. அம்மா இன்னார் வந்திருக்காங்க.. இன்னதைச் சொல்றாங்க.. இதுக்கு என்ன சொல்லி அனுப்பட்டும்ன்னு கேட்டு ஆள் வருமில்ல.. அந்த ஆளுக்கான பதில உங்க அம்மாதான சொல்லியாகனும்..? தானிக்கு பேரு ஏமி..?”

“அட்லனா...”

“தெழுங்கு தெரியுமா...?”

“உலகத்தச் சுத்தறவன் இந்தியாவச் சுத்தாம இருப்பேனா..?”

“உங்களுக்கு உங்க பெருமை.. உங்க அம்மாவுக்கு அவங்க கஷ்டம்.. குளிக்கக் கூடப் போக முடியாம அவங்கள வீட்டைப் பாத்துக்கிட்டாகனும்.. போனுக்கு பதில் சொல்லியாகனும்.. இதில உஸ்ஸீ... புஸ்ஸீன்னு வீட்டை விட்டு வெளியே போகிற கொடுத்து வைச்ச பிறவியெல்லாம் திரும்பி வர்றப்ப என்னன்னு அவங்க எதிர்கொண்டு கேக்கனும்.. காபி கொடுக்கனும்.. சாப்பாடு பரிமாறனும்.. இதுக்கு ஊட உங்க அழுக்குத் துணிய எல்லாம் கலெக்ட் பண்ணி வேலையாள்கிட்டக் கொடுக்கனும்...”

“வாஷிங் மெஷின் இருக்குடி...”

“அதில தானாப் போய் துணிகள்ளாம் விழுகுமா..?”

“அத போட்டு எடுக்க வேலைக்காரங்க இருக்காங்கடி..”

“அந்த வேலைக்காரங்க ஒவ்வொரு ரூமிலயும் மூலை முடுக்கில கிடக்கிற அழுக்குத் துணிகள எடுத்துக்கிட்டு வருவாங்களா.. அதைத் துவைச்சு மடிச்சுக் கொடுத்ததும்.. அந்தந்த ரூமுக்கு பிரிச்சு அனுப்புவாங்களா..?”

காவ்யா சொல்லச் சொல்ல.. இத்தனை பொறுப்புக்களையும் சுந்தரி சுமக்கிறாளா என்ற வியப்பு அர்ஜீனுக்குள் ஏற்பட்டது...

“இத்தனை நாளாய் இது எனக்குத் தெரியாது காவ்யா.. எல்லா வசதியும் இருக்கே.. அம்மா ஷேஃபா இருக்காங்கன்னுதான் நான் நினைச்சுக்கிட்டு இருந்தேன்..”

“அவங்க பாதுகாப்பாத்தான் இருக்காங்க.. கூடவே உங்க எல்லாத்தையும் பாதுகாத்துக்கிட்டு.. பொறுப்புக்கள தலயில சுமந்துக்கிட்டு இருக்காங்க...”

“ஓ...”

“அம்மாவப் பத்திச் சொல்லியாச்சு.. அப்புறம்..?”

“அக்கா.. ஆனந்தின்னு பேரு...”

அர்ஜீனின் குரலில் தெரிந்த மென்மையில் காவ்யாவுக்கு பொறாமை எழுந்தது.. காதலில் மட்டுமே எழுகின்ற உரிமையுணர்வு அவள் மனதில் எழுந்தது...

“பாசமலர வளர்க்கிறதப்போல இருக்கே...”

“அப்படித்தான்.. அக்காவுக்கு என்மேல் பாசமும்.. பிரியமும்.. அதிகம்...”

“சாருக்கு எப்படியாம்..?”

“அதே பாசமும்.. பிரியமும் என் மனசிலயும் இருக்கு..”

“ஓ.. நீங்க ரெண்டு பேரும் ஒரு கொடியில் பூத்த இருமலர்களா..?”

“ஆமாம்ன்னுதான் சொல்லனும்.. அக்காவை ஃபாரின்ல பிஸினெஸ் பண்ற குடும்பத்தில இருந்து பெண் கேட்டாங்க.. அவங்க எங்கள விட அதிகமான பண வசதி இருக்கிறவங்க.. வெளிநாட்டில் தொழில் பண்றவங்க.. ஆனா அக்கா மாட்டேன்னு சொல்லிருச்சு..”

“ஏன்...?”

“ஏன்னா.. அங்கே மேரேஜ் ஆகிப் போயிட்டா.. சென்னையில இருக்கிற தம்பியைப் பார்க்க முடியாதாம்..”

காவ்யா திகைத்து விட்டாள்.. வெளிநாட்டில் திருமணமாகி விட்டால் இந்தியாவுக்கு அடிக்கடி வந்து போக முடியாது என்பதில் ஒர் அர்த்தம் இருக்கிறது.. பெற்றவர்களைப் பிரிந்திருக்க முடியாது என்று சொல்லும் பெண்களைத்தான் அவள் பார்த்திருக்கிறாள்...

இங்கே அப்படியில்லையே.. கூடப்பிறந்த தம்பியைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக..

வெளிநாட்டில் மணம் முடித்துப் போவதற்கான வாய்ப்பைத் தட்டிக் கழித்த பெண்ணை இப்போதுதான் அவள் பார்க்கிறாள்...

“இதப்பாருடா.. அப்போ நீங்க அக்கா செல்லம்ன்னு சொல்லுங்க...”

இதைச் சொல்லும்போது காவ்யாவின் குரலில் தொனித்த பொறாமையை உணர்ந்து கொண்டவனாக சிரிப்பான் அர்ஜீன்...

“ஏண்டி..? உனக்கு நான் செல்லமில்லயா..?”

அவன் குரல் கிசுகிசுக்கும்.. அந்தக் கிசுகிசுப்பில் அவனைச் செல்லம் கொஞ்சி.. மடியில் போட்டுத் தாலாட்ட துடிதுடிப்பாள் காவ்யா.. அதற்குத்தான் அவன் அருகில் இல்லையே என்ற ஏக்கம் அவள் மனதில் சூழும்.. அந்த மனத்தாங்கலுடன்...

“போதும்.. கிளப்பி விட வேணாம்...” என்று சிடுசிடுப்பாள்...

அந்த சிடுசிடுப்பில் அவன் உரத்த குரலில் ரசித்துச் சிரிப்பான்... அவள் காதினில் தேன் பாயும்...

“காவ்யா... ஐ லவ் யுடி...”

காதலுடன் அவன் சொல்லும் போது.. அவனின் காதலைப் பெற்று விட்ட கர்வத்தில் அவள் மனம் துள்ளும்...

"அக்காவுக்கு ரெண்டு பசங்க.. மூத்தவன் சரண்.. ஆறுவயசாகுது.. சின்னது சாரா.. நாலு வயசாகுது.. அக்கா ஹஸ்பெண்ட் பேரு சத்தியமூர்த்தி.."

அவனின் குடும்ப விவரங்கள் அவளுக்கு அத்துபடி.. தினமும் ஏதாவது ஒரு புதுத்தகவலை அவளுக்கு சொல்லிக் கொண்டேயிருப்பான் அர்ஜீன்... அவளும் அதை ஆர்வத்துடன் கேட்டுக் கொள்வாள்...

காதல் என்பது... காதலிப்பவனைச் சார்ந்த அனைத்தையும் நேசிப்பது.. காவ்யாவும் அப்படித்தான்.. அர்ஜீனின் குடும்பம் என்பதற்காகவே அவள் அவனின் குடும்பத்தை நேசித்தாள்...

காவ்யா அர்ஜீனை நேசித்தாள்.. அதனால் அவனுடைய குடும்பத்தையும் நேசித்தாள்.. அவர்களில் எவரையும் அவள் பார்த்ததில்லை.. ஆனால் அவர்கள் எல்லோருமே அவளுக்கு சொந்தமாக அவள் மனதில் குடியேறினார்கள்..

அர்ஜீன் பேசும் செல்போன் பேச்சுக்களில் அவள் உயிர்த்தாள்.. அதைப் பற்றுக் கோடாக பிடித்துக் கொண்டு அவன் வரும் நாளை எதிர்நோக்கிக் காத்திருந்தாள்.. அவன் வந்துவிட்டால் போதும்.. அவளுடைய துன்பமெல்லாம் தீர்ந்து விடும்.. அவன் வரும் வரை அவளுக்கு துன்பம் நேராமல் இருக்க வேண்டுமே...

*"கண்ணன் வரும் நாளில்..*
*கன்னி இருப்பேனோ...*
*காற்றில் மறைவேனோ..."*

டிவியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த பழைய பாடலில் காவ்யாவின் கண்களிலிருந்து கண்ணீர்துளி தெறித்து விழுந்தது.. அன்னபூரணி தோசையை எடுத்துக் கொண்டு வருவதற்காக சமையலறைக்குள் போய்விட்டாள்.. கண்ணதாசன் ரகசியக் குரலில்...

"காவ்யா..." என்று அதட்டினான்..

காவ்யா சமாளித்துக் கொண்டாள்.. அன்னபூரணி தோசைகளுடன் திரும்பியபோது அவள் முகம் நிர்மலமாக இருந்தது...

"என்னடா தம்பி... ஒன்னும் சொல்ல மாட்டேங்கிற.."

"இப்பத்தான் சொல்லியிருக்கீங்க.. அவங்களப் பத்தி விசாரிக்கறேன்..."

"அவங்களப் பத்தி விசாரிக்க என்ன இருக்கு..? சாமித்துரையண்ணனும்.. சின்னச்சாமியண்ணனும் என்ன அன்னியமா.. அசலா...?"

காவ்யா கலங்கிப் போனாள்.. சொந்தபந்தம் தான் விசாரிப்பிற்கு அப்பாற்பட்டவர்கள் என்றால் அர்ஜீன் என்ன அன்னியனா..? அயலானா..? அவனைப் பற்றி விசாரிக்க வேண்டுமா..?

"அவங்களப் பத்தி விசாரிக்க வேண்டியதில்லம்மா.. அவங்க மகனுக வேலை செய்கிற ஆபிசில விசாரிக்கனுமா.. வேணாமா..?" கண்ணதாசன் கேட்டான்...

"அதைக் கேக்கனும்தான்.." அன்னபூரணி ஒப்புக் கொண்டாள்...

"அதுக்குத்தான் டயம் கேக்கறேன்.. அவங்க வேலை எப்படி..? சம்பளம் எப்படின்னு தெரிஞ்சாத்தான மத்த பேச்சைபேச முடியும்..?"

கண்ணதாசன் அப்போதைக்கு அந்தப் பேச்சை அமுக்கி விட்டான்.. காவ்யா சஞ்சலத்துடன் கடைக்குப் போனாள்...

# 72

*காற்றைப் போல நீ வந்து - என்னைக்..*
*கவர்ந்து செல்ல ஆசைகொண்டேன்..*

'**தீ**யா வேலை செய்யனும் தேவா...' என்று யாரோ அவனுடைய காதில் ஓதியதைப் போல தேவராஜன் தீயாக வேலை செய்து கொண்டிருந்தான்...

ஒருபக்கம் தங்கராஜின் மூலமாக காவ்யாவை உளவு பார்த்தான்.. இன்னொரு பக்கத்தில் அர்ஜீன் இல்லாத

அந்தச் சமயம் பார்த்து அவனுடைய காதலைப் பற்றி பார்த்தசாரதியிடம் பற்ற வைத்தான்...

காவ்யாவின் வீட்டில் கொளுத்திப் போட்டால் தானே கண்ணதாசன் அணைத்து விடுவான்..? அதை பார்த்த சாரதியின் வீட்டில் கொழுத்திப் போட்டால்...?

அணைக்க அர்ஜீன் வருவதற்குள் பார்த்தசாரதி அவனுடைய காதலை அழித்திருக்க மாட்டாரா..?

துரியோதனனின் மூலமாக பார்த்தசாரதியைப் பற்றி அவன் அறிந்த வரை.. அவர் மகனின் காதலுக்கு சம்மதிக்கக் கூடியவராக அவனுக்கு தோன்றவில்லை...

“அவன் கணக்குப் போடறதில மன்னன்டா.. அவங்க தாத்தன் காலத்தில மதுரைக்கு வந்தாங்க.. தொழில செஞ்சு முன்னேறிட்டாங்க.. ஊடே கடையை வித்தாலும்.. வித்த கடையைத் திரும்பவும் வாங்கிக் காண்பிச்சவங்க...”

“நீங்களும் அதப் போல செய்தா என்னப்பா..?”

“எதைச் சொல்ற..?”

“நாம வித்த கடையைத் திரும்ப வாங்கச் சொல்றேன்..”

“அவங்க தாத்தன் உருப்படியான மகனப் பெத்திருந்தான்.. நான் அப்படியா..? உன்னையில்ல பெத்திருக்கேன்..?”

“விடுங்கப்பா.. விசயத்துக்கு வாங்க...”

“இந்த பார்த்தசாரதி அப்பவே ஒரு மார்க்கமாத்தான் யோசிப்பான்..”

“ஒரு மார்க்கமான்னா..?”

தேவராஜன் ஒரு மார்க்கமாகப் பார்த்தபடி கேட்டான்.. துரியோதனன் தலையில் அடித்துக் கொண்டார்..

“ஒரு மார்க்கம்ன்னா.. இந்த மார்க்கமில்ல.. இதெல்லாம் உனக்குத் தான் வரும்.. அவன் உன்ன மாதிரி மார்க்கமா யோசிக்கறவனில்ல.. அவன் மார்க்கமே.. வேற மார்க்கம்...”

‘ஒரு மார்க்கத்துக்கு இத்தனை மார்க்கமா..?’ அரண்டு போன தேவராஜன் கையெடுத்துக் கும்பிட்டான்...

“தெரியாம பேசிட்டேன்ப்பா.. விட்டுருங்க...”

“எத்தனயத்தான் விடறது...?”

“எத்தனையோ விட்டுட்டிங்க.. இதையும் சேர்த்து விடுங்க...”

“உன்னப் பிள்ளயாப் பெத்து தொலைச்சதுக்கு விட்டுக்கிட்டு இருக்கிறதுதான் என் பொழப்பாப் போச்சு..”

துரியோதனன் பேசிய வார்த்தைகளில் ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்திருந்தன.. அவற்றையெல்லாம் கண்டு கொண்டால் வேலைக்கு ஆகாது என்று தேவராஜனுக்கு திட்டவட்டமாக தெரியும்.. அவனும் கண்டு கொள்ளவில்லை...

“அந்தாளு என்னத்தத்தான் யோசிச்சாரு...?”

“ஒரு தடவ அவன் வெளிநாட்டுக்குப் போனான்.. போன இடத்தில நம்ம ஊரு வெங்காயத்துக்கும்.. வர மிளகாய்க்கும் தேவை இருக்கிறத கேள்விப் பட்டிருக்கான்.. திரும்பி வந்ததும் எக்ஸ்போர்ட் லைசன்ச எடுத்து அது ரெண்டயும் வெளிநாட்டுக்கு அனுப்பி வைச்சான்.. நல்ல லாபம் கிடைச்சிருக்கு.. உடனே கடைய விட்டுப்புட்டு அந்தத் தொழிலில் இறங்கிட்டான்.. அதுக்கு இந்த ஊரு சரிப்படாதுன்னு சென்னைக்கு ரயிலேறிட்டான்...”

“திருட்டு ரயிலாப்பா...?”

இப்படிக் கேட்ட மகனை என்ன செய்தால் தகுமென்று முறைத்துப் பார்த்தார் துரியோதனன்...

“உன் புத்தி உன்ன விட்டு எங்க போகும்..? நீயாயிருந்தா அப்படிப் போயிருப்ப...”

“நான் எதுக்குப்பா ஊர் விட்டு ஊர் போகனும்..?”

“அதானே.. அப்ப நீ அதைக் கூடசெய்ய மாட்ட..?”

“அது எதுக்குப்பா.. தேவையில்லாம..? எனக்கென்ன வீடில்லயா..? வாசலில்லயா..? சொத்து பத்தில்லயா..? கடையில்லயா...?”

“அத்தனையும் நீயா சம்பாரிச்ச..?”

“யாரு சம்பாரிச்சா என்னப்பா.. அப்பன் சொத்து புள்ளக்கிதான...”

“இப்படியே பேசிக்கிட்டு இரு.. இதுதான உனக்கு வசதி... அவன் அப்படியில்ல... சென்னைக்கு பர்ஸ்ட் கிளாஸில.. டிக்கெட் எடுத்து ரயிலேறிப் போனான்...”

“அப்படியா..?”

“அப்படித்தேன்.. திருட்டு ரயிலேறிப் போகல.. புரிஞ்சதா..”

“புரிஞ்சிருச்சு..”

“என்னத்தப் புரிஞ்சிருச்சோ... எல்லாம் என் தலைவிதி... அவங்கப்பன் அப்படி வரம் வாங்கிப் பொறந்திருக்கான்... உங்கப்பன் இப்படி வரம் வாங்கி உக்காந்திருக்கேன்...”

“விடுப்பா.. இதெல்லாம் ஒரு பேச்சா..?”

“அதான.. பொழைக்கிறவனப் பத்திப் பேசினா.. உனக்கு அது பேச்சில்லதான்... உன்னைப் புள்ளயாப் பெத்ததுக்கு விட்டுத் தொலைக்கிறதுதான் என் பிழைப்பா போச்சு...”

“ரயிலேறிப் போனவரப் பத்திப் பேசுவிங்களா.. அத விட்டுப்புட்டு என்னக் கரிச்சுக் கொட்டிக்கிட்டு இருக்கீங்க...”

“சென்னைக்குப் போனவன் ஏற்றுமதிய ஆரம்பிச்சான்.. பணம் கொட்டோ கொட்டுன்னு கொட்டுச்சு.. அந்தப் பணத்தில் உக்காந்து சாப்பிடாம

அவன் மகன் கம்யூட்டர் தொழிலில இறங்கிட்டான்.. ம்ஹீம்.. அவன் கொடுத்து வைச்சவன்...”

துரியோதனன் விட்ட பெருமூச்சில் தேவராஜன் சாம்பலாக இருந்து நொடிப்பொழுது வித்தியாசத்தில் விலகி நின்று தப்பித்தான்.. அந்த ஒன்றிற்காகவே அர்ஜீனை வீடுகட்டி அடிக்க வேண்டும் என்ற வெறி அவனுக்குள் கிளர்ந்தது...

“அவங்கப்பன் பணம் கொடுத்திருப்பாரு.. அவன் தொழில ஆரம்பிச்சிருப்பான்.. எங்கப்பன் அப்படியா..?”

“ஏண்டா.. நான் கொடுக்கலையா..?”

“எங்கே..? நானும் ஜவுளிக்கடய நடத்திக் காட்டறேன்னு கெஞ்சிப் பாக்கறேன்.. தர மாட்டேங்-கறிங்களே...”

“அது ஒன்னுதான் என் முகக்கரிய துடைச்சுக்கிட்டு இருக்கு.. அதுவும் உனக்குப் பொறுக்கலியா...?”

“ஏம்ப்பா.. நான் அந்த முகக்கரிய துடைச்சுவிட்டு பவுடர் போட மாட்டேனா...?”

“நீதான.. இன்னும் கொஞ்சம் கரியக் குழைச்சு பூசியில்ல விடுவ.. எதுக்காக ஜவுளிக்கடக்குள்ள நுழையனும்னு தவ்விக்கிட்டு இருக்கிறன்னு எனக்குத் தெரியாதா..? அங்க வேல பாக்குற பொம்பள புள்ளகள ஒருவழி பண்றதுக்கும்.. கடையில சேல வாங்க வர்ற பொம்பளகள ஓட்டி விடறதுக்கும் தான வரனும்கிற..”

கண்டு கொண்டாரே என்றிருந்தது தேவராஜனுக்கு.. எப்படி அவனது எண்ணத்தை மிகச் சரியாக துரியோதனன் வரையறுக்கிறார் என்ற விவரம் அவனுக்கு பிடிபடவில்லை.

“ஏண்டா மகனே...” துரியோதனன் ஆரம்பித்தார்...

“என்னப்பா..?” அலுப்புடன் கேட்டான் தேவராஜன்..

“நீ அந்தப் புள்ளக் காவ்யா கிட்டயும் கடல போடற.. அதுக்கு மேல கண்ணில படற பொம்பளப் புள்ளக எல்லாருகிட்டயும் கடல போடனும்கிற... ஏண்டா..? ஒரு நிலையா நிக்க மாட்டியா..?”

அது என்ன தேவைக்கு என்றிருந்தது தேவராஜனுக்கு.. எப்படியும் காவ்யா அவனுக்கு கிடைக்கப் போவதில்லை என்றாகி விட்டது.. என்னதான் தலையால் தண்ணீர் குடித்தாலும் கண்ணதாசன் ஒருநாளும் அவனுடைய தங்கையை தேவராஜனுக்கு திருமணம் செய்து தரமாட்டான்.. காவ்யாவும் அவனைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டாள்...

என்ன ஒன்று.. தேவராஜன் அவளுடைய காதல் நிறைவேறாமல் செய்துவிட ஆன முயற்சியை செய்து பார்க்கலாம்.. அவனுக்குக் கிடைக்காத காவ்யாவின் காதல் கைகூடாமல் செய்து விடலாம்...

மற்றபடி அவனுக்கு அவள் கிடைத்து விடுவாளா என்ன..? அதனால் அடுத்ததை தேட வேண்டிய அவல

நிலைக்கு அவன் ஆளாகி விட்ட கொடுமையை துரியோதனனிடம் அவன் சொல்ல முடியாதே...

"சரி.. காவ்யாப் புள்ளகிட்ட உன்னால நெருங்க முடியாதுன்னு ஆகிப் போச்சு.. அந்தக் கடையிலயே.. பாவனா வேலை செய்கிறாளே.. அவகிட்ட உன் பாச்சா எடுபடலையா.."

"எங்கேப்பா..."

துரியோதனன் போட்டு வாங்குகிறார் என்பதை புரிந்து கொள்ளாமல் அலுப்புடன் சொன்னான் தேவராஜன்...

"அந்தப் புள்ளய புரிஞ்சுக்கவே முடியலப்பா..."

"ஓஹோ..."

"ஒரு நேரம் சிரிச்சுப் பேசுது.. ஒரு நேரம் முறைச்சுப் பேசுது..."

"அது சிரிச்சுப் பேசற நேரத்தில நீயும் சிரிச்சுற வேண்டியதுதான...? இதையெல்லாம் நீ செய்யாம இருக்கற ஆளில்லயே.. நான் சொல்லிக் கொடுக்கனும்கிற அவசியமில்லயே..."

தூண்டிலைப் போட்டு விலாங்கு மீனை இழுத்தார் துரியோதனன்.. மீன் வகையாக சிக்கிக் கொண்டது...

"அது சிரிக்கறப்ப காவ்யாப்புள்ள பக்கத்தில இருந்து வைக்குதுப்பா..."

“அதாவது காவ்யா பக்கத்தில இருக்கறப்பதான் அந்தப்புள்ள சிரிக்குது...?”

“ஆமாம்பா...”

“காவ்யா பக்கத்தில இல்லைன்னா முறைக்குது..?”

“ம்ம்ம்...”

“விவரமான புள்ளைப்பா...”

துரியோதனன் சிலாகித்ததில் தேவராஜனுக்கு பற்றிக் கொண்டு வந்தது.. அவனை அவர் கிண்டலடிப்பதைப் போல அவன் உணர்ந்தான்.. அந்த உணர்தலில் எரிந்து விழுந்தான்...

“என்னத்த விவரத்த கண்டு புட்டிங்க..?”

“எப்பச் சிரிக்கனும்.. எப்ப முறைக்கனும்னு அது தெரிஞ்சு வைச்சிருக்கே...”

“அப்பா...”

“அது வாயைத்திறந்தாலே இங்கிலீஷ்தான் கொட்டும்.. அவங்கப்பன் சென்ட்ரல் கவர்ண்மென்டில ஆபிசரு.. அதனால அடக்கி வாசி.. சிரிக்குதுன்னு நினச்சுப் பக்கத்தில போனே.. பின்னிப் பெடலெடுத்திரும்.. உன்னயெல்லாம் அது திரும்பிப் பார்க்கும்ன்னு என்ன நினைப்பில நீ கனவு காண்ற...?”

“ஏம்ப்பா.. எனக்கென்ன குறைச்சல்..?”

“நீயே குறைச்சல்தாண்டா...”

“நீங்கதான்ப்பா எனக்கு மொத எதிரி.. மத்தவனுக கூட மறந்து விட்டிருவானுக.. நீங்க இருக்கீங்களே.. நினைச்சுப் பாத்து ஒவ்வொண்ணா எடுத்துக் கொடுப்பீங்க...”

“ஆமாண்டா.. எனக்கு அப்படியொரு நேர்த்திக் கடனிருக்கு...”

“அந்தப் பார்த்தசாரதி கணக்கு போடறதில மன்னன்னா.. நீங்க என்னக் குத்திக் காட்டறதில மன்னன்..”

“முடியலடா மகனே.. நானும் எத்தன நாளைக்குத் தான் எனக்கும் வலிக்கலன்னு நடிப்பேன்...”

“விட்டுத் தள்ளுங்க.. அப்ப.. அந்த பார்த்தசாரதி காவ்யாவ மருமகளா ஏத்துக்குவான்னா சொல்றீங்க...?”

“மாட்டான்...” உறுதியாகச் சொன்னார் துரியோதனன்..

“எப்புடிப்பா..?”

“அதான் சொன்னேனில்ல.. அவன் கணக்குப் போடறதில மன்னன்டா.. அவன் சென்னைக்குப் போயி தொழில் தொடங்கினபுதுசில அவனுக்கு பொண்ணுதர திருநெல்வேலியிலயும் ஆள் இருந்துச்சு.. இந்த மதுரையிலயும் ஆள் இருந்துச்சு.. அவன் அந்த ரெண்டையும் விட்டுட்டு காஞ்சிபுரத்தில போயி பொண்ணக்கட்டினான்.. அவங்க அன்னியம்தான்...”

“ஏன்ப்பா.. காதலா..?”

“ஒரு புண்ணாக்குமில்ல.. அவன் பொண்டாட்டி வீட்டில பணவசதி அதிகம்.. அது வீட்டுக்கு ஒத்தப் பொண்ணு...”

“இதப் பாருடா.. நீங்க சொல்றது சரிதான்ப்பா... அவரு கணக்குப் போடறதில மன்னன்தான்...”

“இப்பப் பாருடான்னு நீ யாரைச்சொன்ன..? என்னத்தான..?”

“ஐயோ அப்பா.. உங்கள நான் அப்படிச் சொல்வேனா..? பொதுவாச் சொன்னேம்ப்பா...”

துரியோதன் நம்பாத பார்வையொன்றை பார்த்து வைத்தார்... தேவராஜனைப் பற்றி அவருக்குத் தெரியும்.. சரக்கை அடித்துவிட்டு அவன் கன்னா பின்னாவென்று துரியோதனனைப் பற்றிப் பேசும் வார்த்தைகளை.. அவனிடம் ஓசிச்சரக்கை உபயமாகப் பெற்றுக் குடிக்கும் எட்டப்பன்களில் சிலர் அவரிடம் போட்டுக் கொடுத்திருந்தனர்..

அதற்கேற்றார் போல.. அவர் திட்டும் போதெல்லாம் அவன் இதைப் போல.. ‘அடா.. புடா..’ என்று பேசிவிட்டு.. பொதுவாக பேசினதாக சொல்லி விடுவதை வழக்கமாக வைத்திருந்தான்...

“உன்னயெல்லாம் என்ன கணக்கிலடா எடுத்துக்கறது..?”

“நீங்க எதுக்குப்பா கணக்க கட்டி இழுக்கறிங்க.. நீங்க என்ன பார்த்தசாரதியப் போல கணக்கு போட்டு..

ஒத்தப் பொண்ணாப் பொறந்ததையா கட்டியிருக்கீங்க..? ஐஞ்சாவதா பொறந்த பஞ்சவர்ணம்ன்னு அம்மாவயில்ல கட்டியிருக்கீங்க..”

அவன் அங்கே சுற்றி.. இங்கே சுற்றி பெற்ற அன்னையிடமே வந்து நின்று விட்டான்.. துரியோதனன் மனதிலும் அப்படியொரு ஏக்கமும்.. பொறுமலும்.. பொறாமையும் உண்டுதானென்றாலும்.. மனைவியின் மீதிருந்த பாசத்தில் அவர் மகனை அதட்டினார்...

“இத அப்படியே உங்கம்மா காதில போட்டேன்னு வைய்யி... உனக்கு சோறு தண்ணி கிடைக்காதுடி.. எப்புடி வசதி..”

“வேணாம்ப்பா வேணாம்.. என் அன்னம் தண்ணியில கை வைக்க வேணாம்.. உங்களுக்கு புண்ணியமாப் போயிரும்...”

“அஃது.. அந்த பயம் இருக்கட்டும்...”

மனதுக்குள் பெருமூச்சை விட்டபடி மகனை எச்சரித்தார் துரியோதனன்..

# 73

## உன்னிடத்தில் என் மனதை... ஒப்படைக்க ஆசைகொண்டேன்...

“**ஆ**க.. அந்தப் பார்த்தசாரதி ஒத்தப் பொண்ணாப் பொறந்த பணக்கார வீட்டம்மாவாப் பாத்து தேடிப் பிடிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டாருன்னு சொல்றிங்க...”

“ஆமாண்டா.. அதுக்கப்புறம் அவன் தொழில வளக்க அவனுக்குத் தேவைப்பட்ட பணம் கிடைச்சிருச்சு.. மாமனார் வீட்டுப் பணத்த தொழில்ல போட்டான்.. கோடிஸ்வரனா ஆகிட்டான்...”

“அப்படியாப்பட்டவரு மகனுக்கு எப்படியாப்பட்ட இடத்தத் தேடுவாரு...?”

“நிச்சயமா அவன் கட்டிதைப் போல ஒத்தப் பொண்ணாப் பொறந்த பணக்கார வீட்டத்தான் தேடிப் பிடிப்பான்.. அவன் மகனும் ஏப்ப.. சாப்ப இல்லையில்ல...”

தேவராஜனுக்கு இந்தப் பேச்சை பிடிக்கவில்லை.. அர்ஜீன்.. ஏப்ப.. சாப்பை இல்லைதான்.. ஆனால் தேவராஜன் அப்படியில்லையே.. அவன் முன்னால் அர்ஜீனைப் பற்றி அப்படிச் சொல்லலாமா..?

அதை துரியோதனனிடம் அவனால் சொல்லிவிட முடியுமா..? அதனால் அவன் அதை கண்டு கொள்ளாமல் அடுத்த பேச்சுக்குத் தாவினான்..

“நானும் அப்படித்தாம்ப்பா நினைக்கறேன்...”

“பரவாயில்ல.. இது ஒன்னிலயாவது புத்தியோட நினைக்கறியே...”

“இத மட்டுமில்லப்பா.. வேற ஒன்னயும் சேர்த்து நினைக்கறேன்...”

“நீ ஒத்த நினப்பு நினைச்சாலே அது ஆபத்தில வந்து முடியும்.. இதில கூட ஒரு நினைப்பயும் சேத்து நினக்கறியா..? அது டேஞ்சராச்சே...”

“யாருக்குப்பா..?”

“யாருக்கோ...”

“தெரியுதில்ல.. யாருக்கோ.. என்னவோ ஆனா உங்களுக்கென்ன..? உங்களப் பழுதுபடிக்கப் பேசின அந்தக் கண்ணதாசன பழிவாங்கனுமா வேணாமா..?”

மகனின் கேள்வியில் அவனை ஒரு மார்க்கமாகப் பார்த்தார் துரியோதனன்.. அந்தப் பார்வையில் திணறிப் போனான் தேவராஜன்..

‘என்னடா இது.. அந்தப் பார்த்தசாரதிதான் ஒரு மார்க்கமாப் பார்ப்பான்னு சொல்லிட்டு.. இப்ப இவரு ஒரு மார்க்கமாப் பாக்கறாரே... பேசாம ஓடிப் போயிரலாமா...?’

அவன் ஓடுவதற்கு அஞ்சியவனில்லைதான்.. அவன் புறமுதுகு காட்டிய நிகழ்வுகளை மட்டுமே அவனுடைய வாழ்க்கை வரலாறு.. படம் பிடித்துக் காட்டும்...

அப்படிப்பட்ட தேவராஜன் அப்போது புறமுதுகு காட்ட யோசித்தான்.. அவன் சம்பந்தபட்ட விவகாரம் என்றால் அவன் புறமுதுகு காட்டி ஓடி விடலாம்.. ஆனால் அது அடுத்தவரைக் கெடுக்கும் விவகாரமாயிற்றே...

எடுத்த அந்தக் காரியத்தை முடிக்காமல் ஓடினால் அவன் எப்படி தேவராஜன் ஆவான்..?

ஆதலினால் அவன் துரியோதனனின் துன்பம் தரும் ஒருமார்க்கபார்வையை சங்கடத்துடன் சந்தித்தபடி..

“என்னப்பா..?” என்று நெளிந்தான்...

“இப்படிக் கொம்பு சீவிவிட்டே என் உடம்ப ரணகளமாக்கிரனும்கிற முடிவோட இருக்கிற...”

“என்னப் பாத்து இப்புடிச் சொல்லிப்புட்டிங்களேப்பா..”

“டேய்ய்.. நடிக்காதடா.. உன் நடிப்ப நீ பிறந்தப்ப இருந்து பாத்துப் பழக்கப்பட்டவண்டா.. இப்ப என்ன அலுவலுக்கு அந்தக் கண்ணதாசன பழி தீர்க்கப் போன்னு எங்கையில அருவாளத் தூக்கிக் கொடுக்கிற..?”

“நான் எங்கேப்பா அருவாளத்தூக்கிக் கொடுத்தேன்..?”

“அப்புடிக் கொடுத்திருந்தாக்கூடப் பராவயில்லயே.. வீரமான மகனப் பெத்துப் போட்டிருக்கேன்னு சந்தோசப் பட்டிருப்பனே.. நீ அந்த வேலயயும் செய்ய மாட்டியே.. முதுகுக்குப் பின்னால குழி பறிக்கல்ல சொல்லுவ...”

“அப்பா.. அந்தக் கண்ணதாசன் குடும்பம் உங்கள வாய்க்கு வந்தபடி பேசுச்சா.. இல்லயா..?”

“அதுக்கு முன்னால.. அவங்க வீட்டுப் பொம்பளப் புள்ளய நான் வாய்க்கு வந்தபடி பேசினேன்.. அதனால அப்படிப் பேசினாங்க... நம்ம வீட்டில வந்து தேன்மொழியப் பத்தி அப்படிப் பேசினா நீயும்.. நானும் சும்மாயிருப்போமா..? உன்னப் போயி என்கூட இணை கூட்டறேன் பாரு... நீ சும்மாயிருப்ப.. நான் இருக்க மாட்டேன்.. பேசினவன உண்டு.. இல்லன்ன... ஒருவழி பண்ணிருவேன்.. அதத்தான அவங்களும் செஞ்சாங்க..?”

‘ஆஹா.. இந்தாளு நாயமா பேச ஆரம்பிச்சிட்டாரே.. இவரு நாயம் பேசினா.. நான் நினைச்சத முடிக்க முடியாதே...’ தேவராஜன் திகிலடைந்து போனான்...

“ஏம்ப்பா இப்படி நெய் காய்ச்சற சட்டியப் போட்டு உடைக்கறிங்க...”

“உனக்கு நெய் வேணாம்ன்னுதான்...”

“எனக்குத்தான் இல்லன்னு ஆகிப்போச்சே.. அந்தப் பேச்ச நான் பேசினேனா..? ஒரே கல்லில் ரெண்டு

மாங்காயை அடிக்கிறதுக்கு சான்ஸ் கிடைச்சிருக்கு.. அதைச் செஞ்சு.. உங்க ரெண்டு பகையாளிகளயும் பழிதீர்த்துக்குவீங்களா.. அத விட்டுட்டு வெட்டி நாயம் பொளந்துக்கிட்டு இருக்கீங்க...”

“அடிச்சேன்னா பல்லு பதினாறையும் உதுத்துப்-புடுவேன்.. படவா.. யாரப்பாத்து வெட்டி நாயம் பொளக்கறவன்னு சொல்ற.. முதல்ல உன்னப் பொளந்திருக்கனும்.. அத விட்டுப்புட்டு வாய் பேச விட்டிருக்கேன் பாரு.. அதுக்கு நீ இதையும் பேசுவ.. இதுக்கு மேலயும் பேசுவ...”

“அப்பா.. கோவப்படாம நான் சொல்றதக் கேளுங்க..”

“நீ உருப்பபடியா எதையும் சொல்ல மாட்டியே...”

“அப்புடி நீங்களா நினைச்சுக்கிட்டா எப்புடிப்பா..? இப்ப அந்தப் பார்த்தசாரதியும்.. கண்ணதாசனும் உங்களுக்கு பகையாளிகதான..?”

“நான் பாட்டுக்கு சிவனேன்னு இருந்தேன்.. என்னத் தூண்டிவிட்டு அந்தப் பார்த்தசாரதிகிட்ட மாப்பிள்ள கேக்கவைச்சு மூக்கு உடைபட வைச்சே.. அதுவும் பத்தாதுன்னு கண்ணதாசன்கிட்டப் பொண்ணுக்கேக்கச் சொல்லி.. மிச்சம் மீதி மூக்கையும் காணாம போக வைச்சே.. இப்ப வந்து அந்த ரெண்டு பேரையும் எனக்கு பகையாளியாக்கி விடற.. உன் மனசில என்னதாண்டா நினப்பு ஓடுது..? அவனுக யாரு.. நான் யாரு..? எதுக்கு அவனுகள நான் பகையாளியா நினைக்கனும்..?”

"பகையாளிகள பகையாளித்தான்ப்பா நினக்கனும்.."

"அது என்ன அலுவலுக்கு..?"

"அப்பத்தாம்ப்பா அவனுகள பழி தீர்க்க முடியும்..."

"அந்தப் பொழப்ப நான் பாத்தா என் வீட்டுப் பொழப்ப யாரு பாக்கிறது..?"

"உங்கள என்ன அருவாளத் தூக்கிக்கிட்டுப் போயி அவனுகரெண்டு பேத்தையும் போட்டுட்டு வாங்கப்பான்னா சொல்றேன்..?"

"உன்னப் புள்ளயா பெத்த கொடுமைக்கு நீ அதையும் செய்வியா..?"

"அப்பா.. ஒத்த போன்காலு.. அந்த ஒன்னிலயே ரெண்டு பேத்தையும் சிண்டப் புடிக்க வைக்கலாம்.. என்ன சொல்றீங்க..?"

அவன் எதையோ சொல்ல வருகிறான் என்பது துரியோதனனுக்குப் புரிந்தது.. அந்த 'எது...' எதுவென்று தான் கேட்டுப் பார்ப்போமே என்ற நினைவில்..

"சொல்லு..." என்றார்...

"உங்க சிநேகிதரு பார்த்தசாரதிக்கு ஒரு போனப் போடுங்க..."

"அவன் எனக்கு சிநேகிதனில்ல..."

"இருந்துட்டுப் போகட்டும்.. நமக்கென்ன வந்துச்சு.. அப்பா அந்த ஒத்தப் போன்காலில.. அடேய் பார்த்தசாரதி..

உம்மகன் இங்கே காவ்யான்னு ஒரு பொண்ணைக் காதலிக்கிறாண்டா.. பொண்ணு தங்கமான பொண்ணு.. உங்குடும்பத்துக்கு ஏத்தகுத்து விளக்குன்னு சொல்லி வாழ்த்துங்க.. இதில என்ன வில்லங்கம் வரப் போகுது..?"

அப்பாவியாகக் கேட்ட தேவராஜனின் கண்களில் கொட்டிய வில்லத்தனத்தை கூர்ந்து கவனித்த துரியோதனனின் இதழ்கள் விரிந்தன.. அவர் மெல்லச் சிரித்தார்...

"சில சமயத்தில உனக்குக் கூடமூளை எக்குத்தப்பா வேலை செய்யுதுடா மகனே.." என்றபடி போனை கையில் எடுத்தார்...

**பா**ர்த்த சாரதி சந்தோசமான மனநிலையுடன் இருந்தார்.. தீனதயாளனின் வீட்டுக்கு பார்ட்டி என்ற பெயரில் அவரும் சுந்தரியும் போயிருந்தார்கள்.. அதுவரை பார்ட்டிகளுக்குப் போவதென்றால் பார்த்தசாரதி சுந்தரியை அழைத்துக் கொண்டு போக மாட்டார்.. சீக்கிரமாக வீட்டுக்குத் திரும்ப வேண்டுமென்று வற்புறுத்துவாள்.. அவளருகிலேயே இருக்க வேண்டுமென்று சொல்லுவாள்.. அவர் கண்ணாடிபாட்டிலை கையில் எடுத்தாலே அதற்குள் இருப்பது குளிர்பானமா.. இல்லைவேறு எதுவுமா என்று தெரியாமலே அவரை விழியால் மிரட்டிக் கொண்டிருப்பாள்.. அவர் யாருடன் பேசினாலும் விழியாலே பின் தொடர்வாள்...

இத்யாதி.. இத்யாதி.. காரணங்களினால் அவளை அவர் பார்ட்டிகளுக்கு அழைத்துச் செல்வதில்லை.. பார்ட்டிகளுக்குப் போவதனால் ஏற்படும் பிரத்யேக சந்தோசத்துக்கும்.. சுதந்திரத்திற்கும் பங்கம் வந்துட கூடாது என்பதினால் கவனமாக அவர் மனைவியை தவிர்த்து விடுவார்...

அப்படிப்பட்ட பார்த்தசாரதி அன்று அதிசயத்திலும் அதிசயமாக மனைவியை உடன் அழைத்துக் கொண்டு தீதையாளனின் வீட்டுப் பார்ட்டிக்குச் சென்றார்...

“நானுமா..?” சுந்தரி கண்களை விரித்தபோது...

“நீயும்தான்..” என்று கண்சிமிட்டிச் சிரித்தார் அவர்..

“என்ன ஆச்சு..? இளமை திரும்பிருச்சா..?”

“ஆமாம்... வேணும்னா ஐம்பதிலும் ஆசைவரும்ன்னு பாடவா..?”

“நீங்க பாடனும்னா அறுபதிலும் ஆசை வரும்னுல்ல பாடனும்...?”

“நான் உனக்காகச் சொன்னேன்டி.. நீ இப்பத்தான ஐம்பதைக் கடந்திருக்க...”

வாலிபம் திரும்பியதைப் போல அவர் குழைந்த குழைவில் பழைய நாள்களுக்குத் திரும்பியதைப் போல உணர்ந்தாள் சுந்தரி.. அவருடன் பார்ட்டிக்குப் போன போது

தீனதயாளனின் குடும்பத்தில் அவர்களை மரியாதையுடன் வரவேற்றார்கள்...

“எதுக்குப் பார்ட்டியாம்..?” சுந்தரி கணவரிடம் கிசுகிசுத்தாள்..

“ஏதோ பெரிய பிஸினெஸ் டீலிங் முடிவாகியிருக்காம். அதுக்குன்னு மிஸ்டர் தீனதயாளன் சொன்னார்...”

“இவர்கூட உங்களுக்கு அதிகமா பழக்கமில்லைன்னு சொன்னீங்களே...”

“இனிப் பழகிக்க வேண்டியதுதான்...”

அதிகப் பழக்கமில்லாத.. புதிதாக நட்பை வளர்த்துக் கொள்ள வேண்டிய ஒருவர் தரும் பார்ட்டிக்கு.. எதற்காக அவளையும் அவர் கணவர் அழைத்து வந்தார் என்று புரியாமல் விழித்தாள் சுந்தரி...

“ஹலோ மிஸ்டர் பார்த்தசாரதி.. வாங்க.. அனுபமா உங்கமிஸஸை மீட் பண்ணனும்கிறா..” தீனதயாளன் அவர்களுக்கு அருகே வந்து அழைத்தார்...

“யா.. ஷ்யூர்..” பார்த்தசாரதி.. வெகு நாகரிகமாக மனைவியின் தோள் தொட்டு அழைத்துக் கொண்டு போனார்....

அனுபமா சுந்தரியைப் போன்ற குண இயல்புடையவள் என்பதை பார்த்த முதல் பார்வையிலேயே கண்டுபிடித்து விட்டாள் சுந்தரி..

“வணக்கம்...” கை குவித்த அனுபமாவிற்கு பதிலுக்கு...

“வணக்கம்..” என்று சுந்தரி கை குவித்த போதே.. அவர்கள் இருவருக்குள்ளும் ஒருவிதமான நட்பு ஏற்பட்டு விட்டது...

“சுந்தரி.. இது நேகா.. தீனதயாளனின் ஒரே பெண்.. நேகா குருப் ஆஃப் கம்பெனிகளுக்கு ஒரே வாரிசு...”

பார்த்தசாரதி அறிமுகப் படுத்திய நேகாவை.. முதல் பார்வையிலேயே சுந்தரிக்கு பிடிக்காமல் போய்விட்டது...

அவள் தாயைக் கொண்டிருக்கவில்லை என்பதை முதல் பார்வையிலேயே கண்டுபிடித்து விட்டாள் சுந்தரி...

வெட்டிவிடப்பட்ட கூந்தலும்.. ஜீன்ஸீம்.. குர்தாவும்.. கண்களில் அலட்சியமும்.. இதழ்களில் உதட்டுச் சாயமுமாக...

“ஹாய்..” என்று கை நீட்டியவளின் கையைப் பிடித்துக் குழுக்க அவளுக்கு மனம் வரவில்லை..

இருந்தாலும் சபை நாகரிகம் கருதி.. அதைச் செய்தாள்.. சுந்தரியின் கையை பட்டும் படாமல் பிடித்துக் குழுக்கிய நேகாவின் இயல்பில் அவளுக்கு மனம் ஒட்டவில்லை...

அவர்கள் விலகி நின்று பேசினார்கள்.. பொதுவான நல விசாரிப்புகளை சுந்தரியும்.. அனுபமாவும் கேட்டுக் கொண்டார்கள்..

“ஹௌ இஸ் யுவர் சன்..?”

இந்தக் கேள்வியினை அனுபமா கேட்டிருந்தால் புன்சிரிப்புடன் அதற்குப் பதில் சொல்லியிருப்பாள் சுந்தரி..

அதை அனுபமா கேட்கவில்லை.. மாறாக.. நேகா அதைக் கேட்டாள்...

“நல்லாயிருக்கான்ம்மா...” மனதின் சுணக்கத்தை மறைத்தபடி பதில் சொன்னாள் சுந்தரி...

“இந்தியாவுக்கு எப்ப ரிட்டர்ன் ஆகிறார்...”

“இன்னும் ரெண்டு மாசமாகும்மா...”

“ஓ...”

என்னவோ பட்டிக்காட்டில் புல்வெட்டும் பெண்மணியைப் பார்ப்பதைப் போன்ற பாவனையுடன் பார்த்து விட்டு உதட்டைக் குவித்தாள் நேகா.. அந்தப் பார்வையில் அவள் கன்னத்தில் நாலு அப்பு.. அப்பினால் என்ன என்று யோசித்தாள் சுந்தரி...

அவளுக்கும்தான் மகள் இருக்கிறாள்.. ஆனந்தியென்ன இந்த நேகாவைப் போலவா இருக்கிறாள்..? அவர்களிடம் இல்லாத பணமா..? இருந்தும் ஆனந்தி பெண்மையின் பிரதிபலிப்பாக இருந்தாள்.. இந்த நேகா அப்படியில்லையே...

# 74

## தொட்டு விட்டுச் சென்றவனை.. கட்டிவிட ஆசைகொண்டேன்...

**தீ**னதயாளனின் வீட்டிலிருந்த வரை அவர்களுக்கு அருகேதான் அனுபமாவும்.. தீனதயாளனும் சுற்றிக் கொண்டிருந்தார்கள்.. நேகா மிதப்பாக புருவங்களை உயர்த்தியபடி யாரிடமாவது பேசுவாள்.. அவர்களுக்கு அருகே வருவாள்.. அருகில் நிற்கிறாளே.. ஏதாவது பேசலாம் என்று சுந்தரி வாயைத்திறந்தால், அதைக் கவனிக்காததைப் போல வேறு யாரிடமாவது பேசப் போய் விடுவாள்.. தொலைந்தாள் என்று நிம்மதியாக சுந்தரி அனுபமாவிடம் பேச ஆரம்பித்தால்.. மறு நொடியில் வந்து நிற்பாள்...

'என்ன பெண் இவள்..'

சுந்தரிக்கு அலுப்பாக இருந்தது.. ரங்க ராட்டினம் போல ஓரிடத்தில் நிற்காமல் சுற்றிக் கொண்டிருப்பவளின் கால்களில் சக்கரரேகை இருக்கிறதா என்று ஆராய வேண்டும் என்று அவள் நினைத்துக் கொண்டாள்...

கிளம்பும் போது வாய் நிறையப் புன்னகையுடன் தீனதயாளனும்.. அனுபமாவும் வாசல்வரை வந்து வழியனுப்பி வைத்தார்கள்.. அப்போதும் கூட நேகா இரண்டும் கெட்டான் நிலையில்தான் இருந்தாள்.. வாசலுக்கும் வராமல்.. வீட்டிற்குள்ளும் போகாமல்.. இடைப்பட்ட இடத்தில் நின்று கொண்டு.. சிரிக்கவும் செய்யாமல்.. சிரிக்காமலும் இருக்காமல் லேசாக உதட்டை வளைத்துக் கொண்டு நின்றாள்...

'அடேங்கப்பா..' சுந்தரி மலைத்துத்தான் போனாள்..

'இந்த வயசிலேயே இத்தனை வித்தைகளா..? கெட்டிக்காரிதான்...'

அங்கிருந்து கார் கிளம்பியதும் அவளுக்கு மூச்சு முட்டும் சூழ்நிலையிலிருந்து தப்பித்து வந்து விட்டதைப் போல இருந்தது...

வீட்டுக்குள் நுழைந்ததும்.. 'அப்பாடி...' என்ற நிம்மதியுணர்வுடன் அவள் உடைமாற்றப் போனாள்.. தூங்கப் போனபோது தூங்காமல் விழித்திருந்தார் பார்த்தசாரதி...

"உறக்கம் வரலையா..?" கண்கள் செறுக கேட்டபடி கட்டிலில் சரிந்தவளின் பக்கமாக திரும்பிப் படுத்தார் பார்த்தசாரதி...

"சுந்தரி..."

“உம்ம்...”

“அந்தப் பெண்ணைப் பத்தி என்ன நினைக்கிற..?”

“எந்தப் பெண்ண சொல்கிறிங்க..?” சுந்தரிக்கு தூக்கம் சொக்கியது...

“எந்தப் பெண் வீட்டுக்குப் போனோம்..?”

“அனுபமாவையா சொல்கிறிங்க..?”

“அறிவுதான்.. அது பெண்ணா..? பெண்ணுக்கு அம்மா...”

‘பெண்ணுக்கு அம்மாவா...?’ சுந்தரிக்கு தூக்கம் பறந்துவிட்டது...

“யாரைச் சொல்றிங்க..? அந்தப் பெண் நேகாவையா சொல்றீங்க...”

“ஆமாண்டி...”

“அவளைப் பத்தி நான் நினைக்க என்ன இருக்கு..?”

“நிறைய இருக்குடி.. அவ கல்யாண வயசில இருக்கிற பெண்.. நம்ம வீட்டில கல்யாண வயசில அர்ஜீன் இருக்கான்..”

“நீங்க அப்படியா வர்றீங்க...?”

“நான் வரலை.. பெண் கொடுக்கனும்னு தீனதயாளன்தான் வருகிறார்.. நேகாவுக்கு அர்ஜீன் மேல இன்ட்ரெஸ்ட் இருக்காம்...”

சுந்தரி பதில் சொல்லவில்லை.. பார்ட்டியில் இருந்த கொஞ்ச நேரத்திற்குள் நேகா அவளை அலைக்கழித்த அலைக்கழிப்பு அவள் நினைவில் வந்தது..

அப்படியொரு பெண்ணுடன் வாழ்நாள் முழுவதும் மாமியார், மருமகள் உறவில் வாழ்வதென்பது அவளுக்கு சாத்தியப்படுமா..?

“உனக்கே தெரியும்.. அந்தப் பெண்தான் நேகா குரூப் ஆஃப் கம்பெனிகளுக்கு சொந்தக்காரி...”

“நம்மகிட்டயும் சொத்திருக்கு.. உங்ககிட்ட எக்ஸ்போர்ட் கம்பெனியும்.. அர்ஜீன்கிட்ட கம்யூட்டர் கம்பெனியும் இருக்கு...”

“இதுகூட நேகா குருப் ஆஃப் கம்பெனிஸீம் சேர்ந்தா வேண்டாம்ன்னா சொல்லிருவ...?”

“அளவுக்கு மீறின சொத்துக்கூட மூச்சை முட்ட வைக்கும்.. மனசுக்கு அமைதியை அது தராது...”

“சுந்தரி...” பார்த்தசாரதி கோபமாக அதட்டினார்...

“நீ வேணும்னே பேசற.. நம்ம ஸ்டேட்டஸீக்கு நேகாதான் ஈக்குவலா வருவா.. நீ காஞ்சிபுரத்திலயே நிக்காதே.. வெளியில வா...”

“நான் காஞ்சிபுரமாவே இருந்துட்டுப் போறேன்.. நீங்க ஃபாரின்காரரா இருந்துட்டுப் போங்க.. இப்ப இந்த காஞ்சிபுரத்துக்காரிக்கு தூக்கம் வருது.. ஆளை விடுங்க..”

“பொறுடி.. நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு...”

“என்ன..?”

“அந்தப் பெண்ணை உனக்குப் பிடிச்சிருக்கில்ல..”

பார்த்தசாரதி கெட்டிக்காரர்.. எப்போதுமே அவர் சுந்தரியின் முடிவுகளைக் கேட்டுக் கொண்டதில்லை.. அவருடைய முடிவுகளைத்தான் சுந்தரியின்மீது திணிப்பார்.. அன்றும் அதைத்தான் அவர் செய்தார்...

சுந்தரி ஆற்றாமையோடு அவரைப் பார்த்தாள்...

‘இவர் ஏன் இப்படி இருக்கிறார்..?’ என்று வருந்தியது அவளின் நெஞ்சம்..

எதை வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்ளலாம்.. மகனின் வாழ்க்கை மீதான முடிவை அவள் எப்படி ஏற்றுக் கொள்வது..?

“இல்லைன்னு சொன்னா விட்டுருவீங்களா..?”

“முட்டாள் போல பேசாதே...”

“அதாவது.. அந்தப் பெண்ண வேணாம்ன்னு சொன்னா நான் முட்டாள்.. அப்படித்தானே..? ஓ.கே.. எனக்கு புத்திசாலிப்பட்டம் தேவையில்லை...”

“பிடிவாதம் பிடிக்காதே சுந்தரி.. நேகாதான் இந்த வீட்டோட மருமகள்..! நான் முடிவு பண்ணிட்டேன்...”

“இதை நீங்க முடிவு பண்ணினா போதுமா..? அர்ஜீன் முடிவு பண்ண வேண்டாமா..?”

கேட்டுவிட்டு சுந்தரி உறங்கிப் போனாள்.. உறங்காமல் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார் பார்த்தசாரதி...

அர்ஜீனின் மனதைப் பற்றி அவருக்குத் தெரியும்.. என்றுமே நேகாவை அவனுக்குப் பிடிக்காது.. அப்படியிருக்கையில் எந்த நம்பிக்கையில் இந்த சம்பந்தத்தை பேசி முடித்திருக்கிறார்...

சிந்தனையில் உழன்று கொண்டிருந்தவரின் வயிற்றில் இன்னும் கொஞ்சம் பீதியைக் கலந்து ஊற்றினார் துரியோதனன்...

துரியோதனனின் போன் வந்தபோது.. தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தார் பார்த்தசாரதி.. இதமான காலை நேரத்தில் ஓய்வாக உலாவிக் கொண்டிருந்ததால் போனை எடுத்து...

“ஹலோ..” என்று சொல்லி விட்டார்...

“யாரு.. என் சம்பந்தியா பேசறது..?”

நக்கலாக ஒலித்த குரலைக்கேட்டவுடன் ‘இது யார்’ என்ற கோபத்துடன் எண்களைப் பார்த்தார்.. துரியோதனன் என்று அது சொல்லியது...

‘என்ன தைரியமிருந்தா இவனுக்கு நான் சம்மந்தின்னு சொல்லுவான்..’ பார்த்தசாரதிக்குள் கோபம் கொப்புளித்தது.. போனை காதுக்கு கொடுத்தவர்..

“சம்பந்தியா..? யாருக்கு யார் சம்பந்தி..?” என்று கேட்டு விட்டார்..

“என்ன சம்பந்தி இப்படிச் சொல்றீங்க.. நீங்கதான் எனக்கு சம்பந்தி...” கிண்டலாகப் பதில் சொன்னார் துரியோதனன்...

பதிலுக்கு பதில் கொடுக்கத் துடித்த நாவைக் கட்டுப் படுத்திக் கொண்டார் பார்த்தசாரதி.. வேண்டாமென்று சொன்ன பின்பும் வீண்வம்புக்கு வருகிற துரியோதனனிடம் வாய்ச்சண்டை போட்டு அவருக்கு சரியாக இறங்குவதில் பார்த்தசாரதிக்கு விருப்பமில்லை.. அழைப்பது துரியோதன்தான் என்பதை முன்னரே கவனித்திருந்தால் அவர் போனையே எடுத்திருக்க மாட்டார்.. போனை எடுத்த பின்னால் பாதிப் பேச்சிலேயே துண்டிப்பது அநாகரிகம் என்று நினைத்தார் பார்த்தசாரதி...

அவருக்குத்தான் வலிக்காமல் வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவதைப் போல பேசும் வித்தையைத் தெரிந்திருந்ததே...

“இன்னும் நீ உன் பெண்ணைக் கொடுக்கும் நினைவில இருந்து வெளியில வரலை போல.. எனக்கும் வருத்தமாத்தான் இருக்கு.. பட்.. அர்ஜீன் மனசில வேற பெண் இருக்கிறாளே.. நாம என்ன செய்ய முடியும்..? ஸோ.. மனதை தேற்றிக்கிட்டு.. உண்மையை ரியலிஸ்

பண்ணிக்க கத்துக்க துரியோதனா... பை தி வே.. என்னோட சம்பந்திக்கு மத்தவங்க என்னை சம்பந்தின்னு கூப்பிட்டாப் பிடிக்காது..."

அதனால நீ இனிமேல் என்னை சம்பந்தியென்று கூப்பிடாதே என்று சொல்லாமல் சொன்ன பார்த்தசாரதியின் பதிலில் கொதித்துப் போனார் துரியோதனன்...

'வைக்கிறேண்டா உன் ஆணவத்துக்கு ஒரு வேட்டு..'

டப்பிங் பட வசனம் போல வீராவேசமாக மனதுக்குள் வெகுண்டவர்.. குரலில் நையாண்டியைக் கலந்து குழைத்து.. பார்த்தசாரதியின் காதில் அதை ஊற்றினார்..

"என்ன பார்த்தா இப்படிச் சொல்லிப்புட்ட..? நீ எனக்கு சம்பந்தியானா என்ன.. இல்ல என் ஊருக்காரனுக்கு சம்பந்தியானா என்ன..? சம்பந்தி.. சம்பந்திதான பார்த்தா..?"

பார்த்தசாரதி துணுக்குற்றார்.. அவருக்கு துரியோதனனைத் தெரியும்.. வேண்டுமென்றே வம்புக்கு வருகிற ஆள் துரியோதனன் அல்ல.. ஏதேனும் அவல் கிடைக்காமல் அவர் வெறும் வாயை மெல்ல மாட்டார்...

"உங்க ஊர்காரருக்கு.. நான் சம்பந்தியா...?"

"ஆமா.. அர்ஜீன் மனசுக்குப் பிடிச்ச பொண்ணு எங்க மதுரையில பெறந்த பொண்ணுதான்.. அது உனக்கும் தெரியும்தான..."

பார்த்தசாரதிக்கு சுரீர் என்றது.. அவர் சொன்ன பொய்யில் அவரே மாட்டிக் கொண்டதை உணர்ந்தார்..

‘அர்ஜீன் மனசில காதலிருக்கா..?’

அதுநாள்வரை அது அவருக்குத் தெரியாது.. பார்த்தசாரதி மின்னல் வேகத்தில் யோசித்தார்.. மதுரையில் கடையை வாங்கியபின்னால் அர்ஜீன் இந்தியாவுக்கு வந்தால் சென்னையில் தங்காமல் மதுரையிலேயே நிலை கொண்டு விடுவதின் மர்மம் என்னவென்று அப்போதுதான் அவர் புத்திக்கு உறைத்தது...

“அவனோட குடும்பம் இங்க இருக்கா.. இல்லை.. மதுரையில் இருக்கா..?”

வெளிநாடுகளில் சுற்றி விட்டு வரும் மகனுக்கு வாய்க்கு ருசியாக பிடித்ததைச் சமைத்துப் போட்டு சாப்பிட வைக்க முடியாமல் அவன் மதுரைக்கே ஓடி விடுவதில் வருத்தப்படும் சுந்தரி புலம்பிய புலம்பலில் உள்ளடங்கியிருந்த புதுப்புது அர்த்தங்கள் அப்போதுதான் திரை மறைவிலிருந்து வெளிவந்தன...

“என்ன பார்த்தா.. பேச்சயே காணோம்..?” துரியோதனனின் குரலில் விசமம் வழிந்தது...

“நத்திங்.. ஒன் இம்பார்டண்ட் மீட்டிங் இருக்கு.. அதைப்பற்றி யோசித்தேன்...”

“நினைச்சேன்.. நான் இந்தப் பேச்சை எடுத்தவுடனேயே உனக்கு முக்கியமான வேலை

வந்துரும்ன்னு.. எது எப்படியோ போகட்டும் பார்த்தா.. இனிமே நாம ஒன்னுக்குள்ள ஒன்னு.. நீ என் பொண்ண உன் மகனுக்கு கட்டாட்டியும்.. எங்க ஊருப் பொண்ண உன் மகனுக்கு கட்டி வைக்கிற.. அந்த வகையில் எனக்கு சந்தோசம்தான்..”

‘உனக்கு எதில சந்தோசம்ன்னு எனக்கு தெரியாதா...?’

“காவ்யா தங்கமான பொண்ணு...”

‘ஓ.. அந்தப் பெண்ணின் பெயர் காவ்யாவா..?’

“நடுத்தரக் குடும்பம்தான்.. ஆனாலும் அவளோட அப்பா ஸ்டேட் கவர்ண்மெண்டில வேல பாக்கிறாரு.. அண்ணனோ இன்னும் ஒருபடி மேல போயி.. ஸ்டேட் கவர்ண்மென்டில் பெரிய உத்தியோகமே பார்க்கிறான்.. பூர்விக வீட்ட வாடகைக்கு விட்டுட்டு.. சொந்தமா வீடு கட்டி அதில குடும்பத்தை குடி வைச்சிருக்கான்னா பாரேன்.. சொந்தமா அவனுக்கு கார்கூட இருக்குதுப்பா.. இந்த சின்ன வயசிலயே என்னா பொறுப்பு.. என்னா முன்னேற்றம்...”

‘கடுப்பக் கிளப்பாதேடா.. இங்க நான் ஒரு கோடிஸ்வரிய என் மகனுக்கு மனைவியாக்க முடிவு பண்ணியிருக்கேன்...’

“வசதி வாய்ப்பில குறைவில்லாதவன் கண்ணதாசன்.. அவன் தங்கச்சிக்கு நூறுபவுன் நகை போடுவான்...”

‘டேய்.. துரியோதனா.. இது வைரங்கள் கொட்டிக்கிடக்கிற வீடுடா...’

“லாரி நிறைய சீர் கொடுப்பான்...”

‘அதுக்குத்தானே நான் காத்திருக்கேன்...’

“எனக்கு இதில ரொம்ப சந்தோசம்...”

‘இருக்காதா.. பின்ன..?’

“என்னமோ போ பார்த்தா.. நீ எங்க ஊருக்கு சம்பந்தியாகிறதில எனக்கு அம்புட்டு மகிழ்ச்சி.. அந்தப் பொண்ணு நீ வாங்கியிருக்கிற கடையிலதான் வேலை பார்க்குது.. உன் மகன் இல்லாதப்ப.. கடை பொறுப்பு முழுசும் அதோடதுதானாம்.. சம்பளமே அதுதான் போடுதுன்னா பாத்துக்கயேன்...”

‘இவ்வளவு நடக்குதா..? இதை நான் கவனிக்காமல் போயிட்டேனே...’

“அழகா.. அம்சமா.. குடும்பக் குத்துவிளக்கா இருக்கும்...”

‘அது எதுக்கு.? எனக்கு நியான் விளக்கா இருந்தாலும்.. நேகாதான் என் வீட்டுக்கு மருமகளா வரனும்..’

“உன் மகனும் அதுவும் சுத்தாத இடமில்லயாம்.. இந்த மதுரையை உன் மகனுக்கு சுத்திக் காட்டினதே காவ்யாதானாம்...”

வார்த்தைக்கு வார்த்தை காவ்யாவின் பெயரை துரியோதனன் உச்சரிக்க உச்சரிக்க.. அந்த காவ்யாவை நேரில் பார்த்து அந்த விவகாரத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார் பார்த்தசாரதி..

“அம்புட்டுத்தான் நான் சொல்றது.. எனக்கென்ன வேணும்..? எங்க ஊரு பொண்ணு உன் வீட்டுக்கு மருமகளாகனும்.. வேறென்ன...”

போடா.. உனக்கு என்ன வேணும்ன்னு எனக்குத் தெரியாதா என்ற கோபத்துடன் செல்போனை அணைத்து விட்டார் பார்த்தசாரதி...

# 75

*இன்னல்களை முறியடித்து...*
*நீ எனைக் கவர்ந்து செல்ல ஆசைகொண்டேன்..*

“**வே**லைக்கு ஆகுமாப்பா...?”

கவலையுடன் கேட்டான் தேவராஜன்..

கடையை விற்க வேண்டிய நிலை வந்த போதுகூட இந்த அளவுக்கு அவன் கவலைப்பட்டதில்லை என்பதை நினைவு கூர்ந்தார் துரியோதனன்...

“இது வேலைக்காகலன்னா.. வேற எதுதான் வேலைக்கு ஆகப் போகுது..?” என்று கேட்டார் அவர்..

“அந்தப் பார்த்தசாரதி நீங்க சொல்வதைக் கேட்பாரா..?” சந்தேகத்துடன் கேட்டான் தேவராஜன்...

“நிச்சயமாக் கேட்க மாட்டான்...” ஆணித்தரமாகப் பதில் சொன்னார் துரியோதனன்...

“அப்புறம்.. எதை வைச்சுப்பா இது வேலைக்காகும்ன்னு சொல்றீங்க..?” சலிப்புடன் கேட்டான் தேவராஜன்..

“அவனப் பத்தி எனக்குத் தெரியும்டா.. என் பேச்சை அவன் மதிக்க மாட்டான்.. ஆனா மகனோட காதலை கண்டுக்குவான்.. அதை நிறைவேற விடமாட்டான்...”

“அப்படிங்கறிங்க..?”

“ஆமாம்கிறேன்...”

துரியோதனனின் கணிப்பு மிகச் சரியானதாக இருந்தது.. மறுநாள் காலை விமானத்தில் மதுரைக்கு வந்து இறங்கி விட்டார் பார்த்தசாரதி.. நேராக கடைக்கு வந்து நுழைந்தவரை வாசலிலேயே வழி மறித்தார் கந்தசாமி...

“கம்யூட்டர் வாங்க வந்திருக்கீங்களா...?”

“இல்லை.. விற்க வந்திருக்கிறேன்...”

கந்தசாமியிடம் நின்று பேசாமல் படியில் ஏறியபடி மிடுக்காக பேசியவரை ‘ஆ’வென்று பார்த்தார் கந்தசாமி...

‘கோட்டும்.. சூட்டுமா வந்து இறங்கியிருக்காரே.. இவரு யாரா இருக்கும்...?’

விற்பனை பிரிவில் இருந்த இளங்கோ.. டைகட்டியிருந்தான்.. பார்த்தசாரதியிடம் பவ்யமான மரியாதையுடன்...

“என்ன வேணும் சார்..?” என்று விசாரித்தான்...

பதிலுக்கு அவனை ஏற இறங்க பார்த்த பார்த்தசாரதி..

“எம்.டியோட ரூம் எது..?” என்று கேட்டார்..

“எம்.டி.யா..?” இளங்கோவுக்கு விளங்கவில்லை..

அவன் வேலை பார்ப்பதோ கம்யூட்டர் விற்பனை செய்யும் கடையில்..

அங்கே போய் எம்.டியைப் பற்றிக் கேட்டால் அவனுக்கு என்ன தெரியும்..?

கருப்பு பேனட்.. வெள்ளை சட்டை.. டை என்று அங்கே வேலை செய்பவர்களை உயர்தரத் தோற்றத்திற்கு அர்ஜீன் வந்துதான் மாற்றியிருந்தான்.. துரியோதனனின் பொறுப்பில் இருந்தபோது அவர் உடை விசயத்தில் தலையிட்டதே இல்லை..

அப்படியிருக்க.. அவன் எம்.டி.யை எங்கே கண்டான்..?

“எம்.டின்னா தெரியலையா..?” பார்த்தசாரதிக்கு கோபம் வந்தது...

“தெரியலைங்களே...” இளங்கோ நெளிந்த போது அங்கே வந்த பாவனா...

“வாட் இஸ் தி பிராப்ளம் இளங்கோ..?” என்று விசாரித்தாள்..

அவளின் நாகரிகமான தோற்றத்தை பார்த்தவருக்கு இவள்தான் அந்தப் பெண் காவ்யாவோ என்று தோன்றியது.. அதற்குள்..

“இவர் எம்.டி யோட ரூம் எதுன்னு கேட்கிறார் பாவனா...” என்று சொன்னான் இளங்கோ...

‘அப்ப.. இது அந்த காவ்யா இல்ல...’

பாவனா வியப்புடன் பார்த்தசாரதியைத் திரும்பிப் பார்த்தாள்..

“எம்.டி. ஊரில இல்லையே சார்.. ஹி இஸ் அவுட் ஆஃப் ஸ்டேசன்..” என்றாள்...

“ஐ நோ.. பட்.. நான் எம்.டியோட ரூமுக்கு போயாகனும்..” கண்டிப்புடன் பேசினார் பார்த்தசாரதி...

“வாட் ஃபார்..? அவர்தான் இல்லைன்னு சொல்கிறேனே...”

“லிஸன் யங் லேடி... ஐ ஆம் பார்த்தசாரதி.. ஃபாதர் ஆஃப் அர்ஜீன்...” என்றார் பார்த்தசாரதி..

“வாட்..” பாவனா விழிகள் விரிய பரபரத்தாள்..

“இளங்கோ.. இவர் நம்ம முதலாளியோட அப்பா...”

“முதலாளியோட அப்பாவா..?”

அந்த இளங்கோ பதட்டத்துடன் அவர் அருகே வந்து மரியாதையாய் நின்றபோது.. அவனுக்கு முதலாளி என்ற வார்த்தைதான் பரிச்சயம் என்பது பார்த்தசாரதிக்குப் புரிந்தது...

“முதலாளியோட ரூம் சாவி காவ்யா மேடத்துக்கிட்ட இருக்கு பாவனா...”

“நான் போய் வாங்கிட்டு வாரேன்...”

பாவனா விரைந்து ஓட.. அர்ஜீனின் அறைச்சாவி.. காவ்யாவின் பொறுப்பில் இருக்கிறதா.. என்ற கோபம் பார்த்தசாரதிக்குள் எழுந்தது...

‘கவனிக்காமல் விட்டு விட்டேனே...’

எத்தனையோ வெற்றிகளை ஈட்டியிருந்த பார்த்தசாரதியின் புருவங்கள் முடிச்சிட்டன... அவர் இதை எதிர்பார்த்திருக்கவில்லை.. அர்ஜீன் திருமணத்தை மறுத்து வந்தான் தான்.. நேகாவை மறுத்து வந்தான்தான்.. ஆனால்.. அதன் பிண்ணனியில் மதுரை மண்ணின் மகள் இருக்கக் கூடும் என்று அவர் நினைத்தும் பார்த்ததில்லை...

எத்தனையோ நாடுகளில் சுற்றி வந்த அர்ஜீனின் மனம் மதுரை மண்ணில் நிலை கொள்ளும் என்று அவர் கனவா கண்டார்...?

பாவனாவின் பின்னால்.. பதட்டமான முகத்துடன் வந்து நின்ற பெண்ணின் முகத்திலிருந்த அழகு அவரைப் பேசவிடாமல் செய்தது..

கொடி போன்ற உடலும்.. பேசும் விழிகளும்.. அந்த விழிகளில் கண்டிப்பும்.. பூப்போன்ற மென்மையும்.. நீண்ட கூந்தலுமாக தேவதை போல வந்து நின்றவளைப் பார்த்தபோது.. இவளிடம் அர்ஜீன் மயங்கிப் போனதில் ஆச்சரியம் ஏதுமில்லை என்று முடிவுக்கு அவர் வந்தார்...

“காவ்யா.. சார்தான் நம்ம எம்.டியோட அப்பா...”

“வணக்கம்...”

பாவனா அறிமுகப் படுத்தியதற்கு கை குவித்த காவ்யாவின் அமைதியான.. அழகான தோற்றத்தில் பார்த்தசாரதிக்குள் கோப அலை எழுந்தது..

அவருக்குத் தெரியும்.. சுந்தரிக்கு நேகாவைப் பிடிக்கவில்லை என்பது..

அப்படிப்பட்ட மனநிலையுடன் இருப்பவளின் முன்னால் அர்ஜீன் இப்படிப்பட்ட ஒரு பெண்ணைக் கொண்டு போய் நிறுத்தினால்... அவள்.. இதை.. இதை.. இதைத்தாண்டா நான் எதிர்பார்த்தேன் என்று பூரித்து விட்டு..

‘இவள்தான் என் மருமகள்..’ என்று அறிவித்து விட மாட்டாளா...?

ஆனந்தி எப்போதுமே அர்ஜீனின் பக்கம்தான்.. தம்பிக்கு எதிரான எதையும் அவள் சிந்தித்தும் பார்க்க மாட்டாள்.. சுந்தரியும் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து விட்டால் அர்ஜீனின் கூட்டணியில் பலம் அதிகரித்து விடும்.. பார்த்தசாரதி தனிமைப்பட்டு விடுவார்.. அந்த பயத்தை அவருக்கு அளித்த காவ்யாவின் மீது அவருக்கு கோபம் வருமா.. வராதா...?

“நீ யார்..?”

எடுத்த எடுப்பில் காவ்யாவின் மன தைரியத்தை உடைக்கும் வகையில் கடுமையாக கேள்வி கேட்டார் பார்த்தசாரதி...

காவ்யா.. ஓரக்கண்ணால் கடையில் உள்ளவர்களைப் பார்த்தாள்.. அவர்கள் மத்தியில் அவளுக்கிருந்த பிம்பம் சரிவதைப் போல அவள் உணர்ந்தாள்..

துரியோதனனிடம் கடை இருந்த காலத்திலிருந்து.. காவ்யாவிடம்தான் கடையின் முக்கிய பொறுப்புக்கள் இருந்து வந்திருக்கின்றன.. அர்ஜீன் வந்த பின்பு அவை அதிகரித்தன.. அதனால் சக ஊழியர்களின் மத்தியில் அவளுக்கென்று ஒரு செல்வாக்கு இருந்தது.. முதலாளியிடம் சொல்ல வேண்டிய கோரிக்கைகளை அவள் மூலமாகத்தான் அவர்கள் சொல்வார்கள்..

அப்படிப்பட்ட நிலையில் இருந்தவளை.. இருப்பவளை.. கடைக்குள் காலடி வைத்த மறு

நொடியிலேயே ‘நீ யார்..’ என்று முதலாளியின் தந்தை கேட்டால்.. அவளுக்கு எப்படியிருக்கும்..?

பதில் சொல்ல முடியாமல் அவள் தடுமாறி நின்றபோது பாவனா கை கொடுத்தாள்..

“இவள்தான் காவ்யா சார்... எம்.டி யோட செக்கரட்டரி...”

“ஓ..” இகழ்ச்சியாக உதட்டை மடித்த பார்த்தசாரதி..

“இந்தக் கடைக்கு ஒரு செக்கரட்டரி தேவையா..?” என்று பாவனாவிடம் கேட்டார்...

‘இதை உங்க மகனிடம்தான் நீங்க கேட்க வேண்டும்...’

அந்த இரு பெண்களும் ஒரு மனதாக இதை நினைத்தார்கள்.. அதை அவரிடம் சொல்ல முடியாத பாவனா...

“இந்த போஸ்டை எம்.டி தான் கிரியேட் பண்ணினார்..” என்று சொன்னாள்..

அவரிடம் போய் நீ இதைக் கேள் என்ற மறைமுக பதில் அதில் பொதிந்திருப்பதை உணர்ந்து கொண்ட பார்த்தசாரதியின் புருவங்கள் சுருங்கின...

“கிவ் மீ தி கீ...” அவர் பாவனாவிடம் கை நீட்டினார்..

“சார்..?...” பாவனா ஆச்சரியமாகி விட்டாள்...

சாவி காவ்யாவிடம்தான் இருக்கிறது என்று அவருக்குத் தெரியும்.. அவரிடம் அதைச் சொல்லி விட்டுத்தான் காவ்யாவை அழைத்து வருவதற்காக அவள் ஓடினாள்.. காவ்யாவும் வந்திருக்கிறாள்...

அப்படியிருக்கையில் சாவிக்காக காவ்யாவிடம் கைநீட்டாமல் பாவனாவிடம் அவர் கை நீட்டினால் இதை என்னவென்று அவள் சொல்லுவாள்..?

“கீ காவ்யாகிட்ட இருக்கு சார்...”

இது எனக்குத் தெரியாதா என்ற பாவனையில் அவர் முகத்தைச் சுளித்ததில் காவ்யா மனதில் அடி வாங்கினாள்.. இதுபோன்ற செய்கைகளினால் மற்றவர்களின் மனதை உடைக்கும் வித்தை அவருக்குத் தெரியும் என்பது அவளுக்குத் தெரியாது...

அவள் முகம் கன்ற சாவியை பாவனாவிடம் கொடுத்தாள்... கண்களில் கேள்வியுடன் அதை வாங்கிய பாவனா பார்த்தசாரதியிடம் அதை நீட்டினாள்...

“கம் வித் மி...”

பார்த்தசாரதி பாவனாவிடம் சொல்லிவிட்டு அறையை நோக்கி நடந்தார்...

“சார்...” பாவனா தயங்கினாள்...

“வாட்..?” பார்த்தசாரதி திரும்பிப் பார்த்தார்..

“காவ்யாதான் எம்.டியோட செக்ரட்டரி..”

"அது எனக்கும் தெரியும்.. நான் அர்ஜீனில்ல.. ஸோ.. எதிர் கேள்வி கேட்காமல் நான் சொன்னதைச் செய்.." கடுமையான குரலில் உத்தரவிட்டார் பார்த்தசாரதி...

வேறு வழியில்லாமல் பாவனா பார்த்தசாரதியை பின்தொடர்ந்து விட.. காவ்யா தேங்கி நின்றாள்...

அவளுக்கு மட்டும் உரிமையான பதவியின் உரிமை அவளுக்கு மறுக்கப்படுவதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.. கடையில் உள்ளவர்கள் தாழ்ந்த குரலில் தங்களுக்குள் பேசிக் கொள்வதை அவள் உணர்ந்தாள்...

அர்ஜீனின் வரவுக்கு முன்னாலிருந்த காவ்யாவாக இருந்திருந்தால் அவள் இந்தப் புறக்கணிப்பில் கொதித்திருப்பாள்.. போடா.. நீயுமாச்சு.. உன் வேலையுமாச்சு என்று தூக்கிப் போட்டு விட்டு.. திரும்பிப் பார்க்காமல் வெளியேறியிருப்பாள்...

இப்போது அப்படிச் செய்ய முடியாமல் காதல் அவளுக்கு கால் விலங்கையிட்டது...

வந்திருப்பது அவளது காதலனின் தந்தை.. வருங்கால மாமனார்.. அவரின் புறக்கணிப்பில் மனம் கொதிக்க அவளால் முடியுமா..?

காவ்யா உதட்டைக் கடித்துக் கொண்டு அலுவலகப் பகுதிக்கு போய்விட்டாள்.. இனிக் கடையில் அவளுக்கான

இடம் எதுவாக இருக்கக் கூடும் என்ற கேள்வி அவள் நெஞ்சில் எழுந்தது...

பார்த்தசாரதியின் பின்னால் போன பாவனா.. அர்ஜீனின் அறைக்கதவைத் திறந்து விட்டாள்.. உள்ளே பிரவேசித்த பார்த்தசாரதியின் பார்வை அறைமுழுவதும் சுழன்றது.. அறையின் ஒரு கோடியிலிருந்த காவ்யாவின் டேபிளையும்.. சீட்டையும் சுட்டிக் காட்டியர்...

“அது யாரோட டேபிள்..?” என்று கேட்டார்...

“காவ்யாவோட சீட் சார்..” தயக்கத்துடன் சொன்னாள் பாவனா...

“செக்ரட்டரியோட சீட் எம்.டியோட ரூமுக்கு வெளியில இருக்கனும்.. உள்ளே இருக்கக் கூடாது.. எம்.டியை அப்பாயிண்ட்மென்ட் இல்லாம யாராவது பார்க்க வந்தாங்கன்னா தடுத்து நிறுத்த செக்ரட்டரி வேண்டாமா..?” கோபத்துடன் கேட்டார் பார்த்தசாரதி..

‘ஆமாம்.. இது பெரிய மல்ட்டி இன்டர் நேசனல் கம்பெனி.. இங்கே எம்.டியை பார்க்க அப்பாயிண்மென்ட் வாங்கிக்கிட்டு வரிசைகட்டி நிக்கிறாங்க.. அதை சரிபார்த்து அனுப்புறதுக்கு செக்கரட்டரி வாசலில போயி உட்காரனும்.. கம்யூட்டர் விற்கிற கடைக்கு இத்தனை பில்ட் அப்பா..?’ மனதுக்குள் எரிச்சல் பட்டாள் பாவனா..

அவளுக்கு பார்த்தசாரதியின் முசுட்டு முகத்தைப் பிடிக்கவில்லை.. அவள் சிரித்துப் பேசி பழக்கப்பட்டவள்..

கலகலப்பான சூழ்நிலையில் வேலை செய்ய விரும்புபவள்.. அவளைப் பிடித்து வந்து உம்மணாம்மூஞ்சி பார்த்த சாரதியிடம் விட்டால் அவளுக்கு எரிச்சல் எரிச்சலாக வராதா..?

'இந்த மனிதருக்கு காவ்யாவக் கண்டவுடன் பிடிக்காமப் போயிருச்சு.. இவர் பாட்டுக்கு அவ சீட்டில என்னை உட்காரச் சொல்லிட்டா என் கதி என்னவாகிறது..?'

திகிலடைந்த முகத்துடன் பார்த்தசாரதியின் முகத்தை கவலையுடன் பார்த்தாள் பாவனா...

# 76

## *உன் கண்ணசைவில் எந்தன் மனம்.. கட்டுப்பட ஆசைகொண்டேன்...*

**அ**ப்படியொரு நிலைமை ஏற்பட்டால் வேலை வேண்டாம் என்று ஓடி விடச் சித்தமாகி விட்டாள் பாவனா...

'நானே வீட்டுக்குள்ள தனியா இருக்க முடியலைன்னு வெளியுலகத்த பார்க்கலாம்ன்னு வேலைக்கு வந்து

போகிறேன்.. இதில இந்தாளு முகத்த மட்டும் பார்த்துக்கிட்டு தனியா உட்காரனும்னா எனக்கு இந்த வேலையே வேண்டாம்டா சாமி.. இந்த மடம் இல்லைன்னா சந்த மடம்.. எந்த மடமும் கிடைக்கலேன்னா வீட்டில பார்த்து வைக்கிற மாப்பிள்ளைக்கு கழுத்தை நீட்டி ஜாம்.. ஜாம்ன்னு கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு ஓடிப் போயிரலாம்.. இந்த சம்பளம் இல்லைன்னா என் பாக்கெட் மணியில் துண்டு விழுகும்.. அவ்வளவுதானே... இதை வாங்கிக்கிட்டுப் போய் என் அப்பாம்மாவிடமா கொடுக்கிறேன்..?'

பாவனாவின் வீட்டிலும் சரி.. காவ்யாவின் வீட்டிலும் சரி.. அவர்களுடைய சம்பளத்தை எதிர்பார்க்க மாட்டார்கள்.. காவ்யா அவளுடைய சம்பளத்தை பேங்கில் சேர்த்து வைப்பாள்.. பாவனா சம்பளம் வாங்கிய முதல் வாரத்திலேயே அதைத் தண்ணீராய் செலவளித்து விட்டு.. செலவுக்கு பணம் வேண்டுமென்று அவள் அப்பாவிடம் கேட்டு வைப்பாள்..

அப்பேற்பட்ட பாவனா.. சிடுமூஞ்சியின் சிறைவலையில் மாட்டுவாளா..?

பார்த்தசாரதியின் உத்தேசத்தை அறியும் பொருட்டு அவர் முகத்தை உற்று நோக்கினாள் பாவனா.. நல்ல வேலையாக அவருக்கு அந்த உத்தேசமில்லை..

'கடையில வேலை பாக்கிறவங்களில யாரையாவது கூப்பிடு...' என்றுதான் பாவனாவுக்கு உத்தரவிட்டார்..

ஏன்.. எதற்கு என்று கேட்காமல்.. தப்பித்தோம்.. பிழைத்தோம் என்று அறைக்கு வெளியே ஓடி நிம்மதியாக மூச்சு விட்டவள் இளங்கோவை அழைத்தாள்..

“என்ன பாவனா..” இளங்கோ உடனடியாக ஓடி வந்தான்..

இந்த ஓட்டத்தை இதற்கு முன்னால் காவ்யா கூப்பிட்டால்தான் ஓடியிருக்கிறான் என்ற நினைவில் பாவனாவுக்கு என்னவோ போல இருந்தது...

ஒரு நிமிடத்தில் அங்கே நிலைமையே மாறுவதா..?

அலுவலகப் பகுதியில் குனிந்த தலை நிமிராமல் வேலை பார்த்துக் கொண்டிருந்த காவ்யாவை இரக்கத்துடன் பார்த்தாள் பாவனா...

“சார் கூப்பிடறாரு...”

“என்னையா..?”

“ம்ம்ம்...”

“எதுக்குன்னு தெரியுமா பாவனா..?”

இளங்கோ குழைந்தான்.. அவன் குழைவில் பாவனாவுக்கு கோபம் வந்தது.. பெரிய மனிதர்களின் அருகாமையில் நிற்கும் மேஜை நாற்காலிக்குக்கூட இவர்கள் அஞ்சுவார்களா..?

“நானும் உங்களைப் போல்தான் இளங்கோ.. எனக்கு மட்டும் புதுசாய் என்ன தெரியும்..?”

“இல்ல.. சாருக்கு பக்கத்தில நின்னுக்கிட்டு இருந்தீங்களே..”

“அதனால மட்டும் அவரு மனசில என்ன இருக்குன்னு தெரிஞ்சிருமா..? போங்க இளங்கோ.. போயி.. என்னன்னு கேளுங்க...”

“பயமாயிருக்கு பாவனா..”

“அது என்னத்துக்கு..”

“இவரு முதலாளியப் போல இல்ல..”

“முதலாளியோட அப்பாகிட்ட முதலாளியோட குணத்த எதிர்பார்த்தா எப்படி இளங்கோ..? இதுக்கு முன்னாலே இருந்த நம்ப பழைய முதலாளி துரியோதனன் கிட்ட அவரோட மகன் குணமா இருந்துச்சு..?”

“இங்க தலைகீழாயில்ல இருக்கு...”

“அதைப் பாத்தா வேலை செய்ய முடியாது இளங்கோ..”

“ஊஹீம்.. இவரப் பாத்தாலே கிடுகிடுன்னு நடுங்குது பாவனா..”

“ப்ம்ச்.. இதையெல்லாம் பாத்தா முடியுமா..? அப்படி இவரால உங்கள என்னதான் பண்ண முடியும்..?”

“வேலய விட்டு தூக்க முடியும்...”

“ஹ... இதென்ன கவர்ண்மென்ட் வேலையா..? போனாப் போகுதுன்னு வேற வேலையைத் தேடிக்க வேண்டியதுதானே..?”

“ஏன் சொல்ல மாட்டிங்க..? உங்களுக்கென்னங்க.. நீங்க பொம்பளை.. கட்டின பெண்டாட்டியக் காப்பாத்தனும்கிற பொறுப்பு உங்களுக்கிருக்கா...? நான் புதுசாக் கல்யாணமானவன்.. என் பெண்டாட்டி வேற முழுகாம இருக்கிறா.. இந்தச் சமயத்தில பார்த்துக்கிட்டிருக்கிற வேலையை ரோசப்பட்டு விட என்னால் முடியுமா..? உடனடியாக அடுத்த வேலை கிடைச்சிருமா..? உனக்கு வேலை தர்றேன் வாடான்னு வெத்தலபாக்கை வைச்சுக்கிட்டு யாராவது கூப்பிட்டுக்-கிட்டு இருக்காங்களா..?”

“இல்லைதான்..” என்று சொன்ன பாவனாவிற்கு இளங்கோவைப் பார்க்கப் பார்க்க.. ஐயோ பாவம் என்றிருந்தது...

பெண்ணென்று பூமிதனில் பிறந்து விட்டால் பெரும்பீழை இருக்கிறதென்றுதான் அவள் கேள்விப் பட்டிருக்கிறாள்.. ஆணாகப் பிறந்து விட்டவனுக்கு வரும் அல்லல்களைப் பற்றி அப்போதுதான் அவள் கேள்விப் படுகிறாள்..

‘ஆம்பளையாப் பொறந்தவனுக்கு ரோசமிருக்கக் கூடாதா..? அவன் பெண்டாட்டி பிள்ளைகளைக் காப்பாற்ற எதையும் தாங்கும் இதயமுடையவனாக மாறிவிட வேண்டுமா...?’

“பயப்படாதீங்க இளங்கோ.. அவரு எதையோ சொல்லத்தான் கூப்பிடறாருன்னு நினைக்கிறேன்.. வில்லங்கமா வேற எதுவும் இருக்காது...”

“அப்படிங்கறிங்களா..?”

“ஆமாம்கிறேன்...”

“தைரியமா போகலாமா..?”

“பயப்படாம போங்க...”

இளங்கோ புலிக்குகைக்குள் நுழைவதைப் போல பயந்து கொண்டே உள்ளே நுழைந்தான்.. பார்த்தசாரதி நிமிர்ந்து பார்த்தார்.. அவரின் பார்வையின் கூர்மையில் அவன் கதிகலங்கி விட்டான்..

“இன்னும் இரண்டு பேரைக் கூப்பிட்டுக்க.. அந்த டேபிள் சேரைத்தூக்கி ரூமுக்கு வெளியே போடு...”

பார்த்தசாரதியின் உத்தரவில் பாவனாவுக்கும்.. இளங்கோவுக்கும் தூக்கிவாரிப் போட்டது.. அவர்கள் இருவரும்.. ஒருவரையொருவர் மௌனப் பார்வை பார்த்துக் கொண்டார்கள்...

அறையை விட்டு வெளியே வந்த இளங்கோ பாவனாவிடம் “என்ன பாவனா.. இவரு இப்படிச் சொல்றாரு...?” என்று கேட்டான்...

பாவனாவின் மனதிலும் அந்த எண்ணம்தான் ஓடிக் கொண்டிருந்தது என்றாலும்.. அவள் மனதை மறைத்து தோள்களைக் குலுக்கினாள்..

"நல்லதுதானே இளங்கோ.. காவ்யாகிட்ட இதைச் சொன்னால் அவ ரொம்ப சந்தோசப்படுவா.. ஆக்சுவலா அவளுக்கு முதலாளியோட ரூமுக்கு அவசீட் மாறினதில இஷ்டமேயில்லன்னு நம்ம எல்லாத்துக்குமே தெரியுமே.."

"ஆமாமா..." முகம் தெளிந்தான் இளங்கோ...

அர்ஜீன் இல்லாத நாள்களில் காவ்யா பாவனாவின் பக்கத்திலிருக்கும் சீட்டில்தான் உட்காருவாள்.. அவளுக்கும்.. பாவனாவுக்குமான நட்பை அந்தக் கடையில் வேலை பார்க்கும் அனைவரும் அறிவார்கள்.. அர்ஜீன் வந்த பின்பு அவளின் சீட் இடம் மாறியதில் அவளுக்கிருந்த மனத்தாங்கலையும் அவர்கள் அறிவார்கள் என்பதினால் இளங்கோவும்.. மற்றவர்களும் உற்சாகத்துடன் காவ்யாவின் டேபிள் சேரைத் தூக்கி அர்ஜீனின் அறைக்கு வெளியே போட்டு விட்டார்கள்...

காவ்யா நடப்பதைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்.. அர்ஜீனின் அறைக்கு வெளியே அவளது டேபிளும்.. சேரும் இடம் பெயர்ந்தபோது அர்ஜீனின் வாழ்க்கையிலிருந்தே அவள் வெளியே தள்ளப்படுவதைப் போல மனம் துடித்தாள்...

"இனிமே நீங்க இங்கேயே பெர்மனன்டா உட்காந்துக்கலாம்.. சந்தோசம்தானே காவ்யா..?"

இளங்கோ கேட்டபோது அவளால் இல்லையென்றா சொல்ல முடியும்..? வரவழைத்துக் கொண்ட புன்சிரிப்போடு 'ஆமாம்' என்ற பாவனையில் அவள் தலையை அசைத்தாள்..

ஏகாம்பரம் எதையும் கண்டு கொள்ளாதவராக அவர் போக்கில் வேலையைச் செய்து கொண்டிருக்க.. காவ்யா கலங்கிய கண்களை யாருக்கும் தெரியாமல் இமைகளைச் சிமிட்டி அடக்கிக் கொண்டாள்...

பார்த்தசாரதி வன்மத்துடன் இளங்கோவை அழைத்தார்...

“கடையில நீ மட்டும்தான் சேல்ஸ் டிபார்ட்மென்டில் இருக்கயா..?”

“இல்லை சார்.. இன்னும் நாலஞ்சு பேரு இருக்காங்க...”

“சேல்ஸை அவங்க கவனிக்கட்டும்.. நீ வெளியே கிடக்கிற சேரில் உட்கார்...”

“நானா..?” விழி விரித்தான் இளங்கோ...

“நீதான்..” அழுத்தமாக சொன்னார் பார்த்தசாரதி...

“எனக்கு கம்யூட்டர் தெரியாது சார்..”

“பரவாயில்லை...”

“அக்கவுண்ட்ஸ் பார்க்கவும் தெரியாது...”

“நோ பிராப்ளம்...”

“இதையெல்லாம் காவ்யா மேடம்தான் பாப்பாங்க சார்...”

“மேடமா..?”

பார்த்தசாரதி முகத்தைச் சுளித்ததில்... தான் எதையும் தப்பாகச் சொல்லிவிட்டோமோ என்று பதறிப் போனான் இளங்கோ..

“மேடம் தான் சார்.. ஏன் சார்.. தப்பா ஏதாச்சும் சொல்லிட்டேனா...?”

தப்பாகத்தான் சொல்லி விட்டாய் என்று பார்த்தசாரதியால் எப்படிச் சொல்லமுடியும்..? அதனால்..

‘மேடமா..? அந்தளவுக்கு இந்தக் கடையில் அந்தப் பெண்ணின் ராஜாங்கம் கொடி கட்டிப் பறக்கிறதா..?’ என்று மனதுக்குள் பொருமியபடி பல்லைக் கடித்தார்...

“சின்ன வயசாத் தெரியுதே...”

“ஆமாம் சார்.. என்னைவிட ரொம்ப... ரொம்ப... சின்ன வயசு...”

இதைச் சொல்வதில் இளங்கோவுக்குள் பீறிட்ட உற்சாகத்தைக் கவனித்தபடி...

“அப்புறம் எதுக்காக மேடம்ன்னு கூப்பிடனும்..? பெயரைச் சொல்லியே கூப்பிட்டுப் பழகு...” என்று உத்தரவு பிறப்பித்தார் பார்த்தசாரதி...

“அதெப்படி சார்.. அவங்க முதலாளிக்கு செக்ரட்டரி முதலாளி இல்லாத சமயங்கள்ல.. அவங்ககிட்டத்தான் கடை பொறுப்பை ஒப்படைச்சிருக்காங்க...”

“யாரு..?”

“முதலாளிதான்...”

“நான் அவனைப் பெத்த அப்பன்.. நான் சொல்கிறேன்.. நீ இனிமே அந்தப் பெண்ணை மேடம்ன்னு கூப்பிட வேணாம்...”

“அவங்க பேரு காவ்யா சார்...”

இளங்கோ திடிரென்று சொல்ல.. சம்பந்தமில்லாமல் இவன் எதற்காக சம்பந்தமில்லாமல் அவள் பெயரைச் சொல்கிறான் என்று யோசித்தார் பார்த்தசாரதி...

“இருக்கட்டுமே...”

“இல்ல.. நீங்க வாய்க்கு வாய்.. அந்தப் பெண்.. அந்தப் பெண்ணுன்னு சொன்னீங்களா.. அதான்.. அந்தப் பெண்ணோட பேரு உங்களுக்குத் தெரியலையோன்னு”

“ஓ...”

காவ்யாவின் மீதான மற்றவர்களின் அக்கறையையும்.. அவர்களின் ஒற்றுமையையும் உணர்ந்து கொண்டார் பார்த்தசாரதி...

பாவனாவும் சரி.. இளங்கோவும் சரி.. காவ்யாவை விட்டுக்கொடுக்காமல் பேசினார்கள்.. பாவனா தனக்கு முக்கியத்துவம் கிடைத்தால் கூட அதை வேண்டாம் என்று காவ்யாவிற்காக புறக்கணிப்பவளாக இருந்தாள்...

‘இத முதல்ல உடைக்கனுமே...’

அர்ஜீன் வருவதற்குள் அந்தக் கடையில் காவ்யாவை தனிமைப்படுத்தி விடத் திட்டம் தீட்டினார் பார்த்தசாரதி..

‘நான் ஓட வைத்ததா இருக்கக் கூடாது.. தானா ஓடி விட்டதா இருக்கனும்.. பார்க்கலாம்.. இந்தப் பெண் எத்தனை நாள் தாக்குப் பிடிக்குதுன்னு...’

மனதின் கடுமையை முகத்தில் பிரதிபலித்தபடி..

“ஓபே மை ஆர்டர்..” என்றார்...

“சார்..?”

“என் ஆர்டரைக் கேட்டு.. அதுபடி நடன்னு சொன்னேன்...”

“ஆகட்டும் சார்..”

“இப்ப வெளியே கிடக்கிற நாற்காலியில நீ போய் உட்காருகிற...”

“சரிங்க சார்...”

மறுத்துப் பேசினால் வேலை போய் விடுமோ என்ற பயத்துடன் அறைக்கு வெளியே கிடந்த காவ்யாவின் நாற்காலியைக் கைப்பற்றி அதில் உட்கார்ந்தான் இளங்கோ..

“இவனுக்கு வந்த வாழ்வைப் பாத்தீங்களாடா...”

கடையின் வேலையாள்கள் கிசுகிசுக்க.. அந்த வாழ்வில் சந்தோசப்படாமல் அவர்களை ஏக்கத்துடன் பார்த்தான் இளங்கோ..

அர்ஜீனின் அறையில் டேபிளில் இருந்த லேண்ட் லைன் போன் ஒலித்தது.. எடுத்து காதுக்கு கொடுத்தார் பார்த்தசாரதி...

“ஹலோ...” என்று மறுமுனையில் சொன்னான் அர்ஜீன்...

# 77

*சின்னச் சின்ன வார்த்தைகளில்..*
*நீ என்மனதை உணர ஆசைகொண்டேன்..*

“**ஹ**லோ...”

கனத்த குரலில் பதில் சொல்லிவிட்டு.. மகனின் குரலில் வெளிப்படப் போகும் உணர்வுகளை அவதானிக்கக் காத்திருந்தார் பார்த்தசாரதி...

ஒரு நொடி மௌனம் சாதித்த மறுமுனையில்...

“டாடி...?” என்ற அதிர்ச்சியுடன் கேட்டான் அர்ஜீன்..

“யெஸ் மை டியர் சன்.. உன்னோட டாடியேதான்..” அவன் அதிர்ச்சியை ரசித்தபடி பதில் சொன்னார் பார்த்தசாரதி...

‘உன் காதல் விவகாரத்தை காதில் கேட்டதும் இப்படித்தானே எனக்கும் இருந்திருக்கும்...’

“அங்கே என்ன பண்றீங்க...?”

“இது என்ன கேள்வி அர்ஜீன்..? இங்கே என்ன பண்ணுவாங்க..? சூபர்வைஸ் பண்ணுவாங்க...”

“இது என்ன புதுசா...?”

“புதுசா நிறைய நடக்குதே.. அதில இதுவும் ஒன்னா இருக்கட்டுமே...”

“ஐ கான்ட் பிலிவ் திஸ்.. உங்க எக்ஸ்போர்ட் கம்பெனியை விட்டு ஓரடிகூட நீங்க வெளியில வைச்சதில்ல...”

“அந்தக் குறையிருக்கக் கூடாதுன்னுதான் இப்ப மதுரைப்பக்கமா காலடி வைச்சிருக்கேன்...”

“கடையைப் பார்த்துக்க ஆளிருக்கு டாடி.. நீங்க உங்க டயத்தை வேஸ்டா ஸ்பெண்ட் பண்றிங்க...”

“என் கம்பெனியைப் பார்த்துக்கவும் ஆளிருக்கு அர்ஜீன்.. இது நான் பிறந்து வளர்ந்த மதுரை.. இந்தக் கடை நான் வாங்கனும்னு நினைச்சு வாங்கின கடை.. அன்னைக்குத்தான் நண்பன்கிட்டயிருந்து கடையை பிடுங்கினதைப் போல ஆகிவிடக் கூடாதுன்னு கடையை டேக் ஓவர் பண்ண நான் வரலை.. இனிமே அந்தப்

பிரச்னை இல்லையே.. ஸோ.. இனி கடையை நானே பார்த்துக்கிறேன்..."

பார்த்தசாரதி.. நிதானமாக.. பிசிறில்லாத குரலில் பேசினார்.. அர்ஜீன் குறுக்கிடவில்லை.. அவர் பேசி முடித்ததும்... அவரைவிட நிதானமாக ஆனால் அழுத்தத்துடன் அவன் கேட்டான்..

"வாட் இஸ் தி பிராப்ளம் டாடி..? மிஸ்டர் தீனதயாளன் அவரோட மகள் நேகாவை பெண் தரேன்னு சொல்லிட்டாரா..?"

"அர்ஜீன்..."

"ரிலாக்ஸ் டாட்.. ஐ நோ யு.. நீங்க எதுக்காக மதுரை மேலே திடிர்ன்னு இன்ட்ரெஸ்ட் காட்டறிங்க டாட்..?"

"அதான் சொன்னேனே..."

"நீங்க பிறந்து வளர்ந்த ஊர்.. ஆசைப்பட்டு வாங்கின கடை.. லொட்டு.. லொசுக்கு.. இதையெல்லாம் நம்ப நானொன்னும் முட்டாளில்லை..."

"ஒரு உறையில் ரெண்டு கத்தி இருக்க முடியாது அர்ஜீன்..."

"புரியலை..."

"இந்தக் கடைக்கு நான்தான் பாஸ்..."

"ஓ..." ஒருமாதிரியான குரலில் சொன்னான் அர்ஜீன்..

"இது எப்பயிருந்து டாட்...?"

“எது..?”

“உன்னது.. என்னதுன்னு பிரிச்சுப் பேசறது.. இப்படிப் பேசுகிறவர்தான் உங்க எக்ஸ்போர்ட் கம்பெனியில எனக்கு உரிமையிருக்குன்னு சொன்னீங்களா...?”

“அர்ஜீன்.. அது வேற.. இது வேற...”

“இரண்டுமே புராப்பர்ட்டீஸ்தான்.. இதில எனக்கு உரிமையில்லாதாப்ப.. அந்தக் கம்பெனியிலயும் எனக்கு உரிமை வேணாம்...”

“அடம் பிடிக்காதே அர்ஜீன்.. உன் நல்லதுக்குத்தான் சொல்றேன்.. இந்தக் கடை உன் பொறுப்பில் இருக்கிறதாலேதான் நீ சென்னையில தங்க மாட்டேங்கிறன்னு சுந்தரி வருத்தப்படறா...”

“ஓஹோ.. அப்ப அம்மாவோட வருத்தத்துக்காகத்தான் நீங்க மதுரைக் கடையை கைப்பத்த போயிருக்கீங்களோ..”

“ஷ்யூர்.. இந்தக் கடையை உன் பொறுப்பில இருந்து நான் எடுத்துக்கிட்டா நீயும் ஃப்ரீயாகிடுவ...”

“அப்புறம்..?”

“நிம்மதியா உன் தொழிலையும் பார்ப்ப...”

“இப்ப நான் நிம்மதியில்லாம தொழிலைப் பார்க்கிறேன்னு யார் உங்களுக்குச் சொன்னது..?”

“கடல் தாண்டிப் பறந்து கம்யூட்டர் பிஸினெஸ் பண்றவன்கிட்ட மதுரையில இருக்கிற கடையைப் பார்த்துக்கடான்னு நான் சொன்னது தப்பு அர்ஜீன்...”

“ஸோ.. அந்தத் தப்பை சரிபண்ண நீங்க மதுரைக்கு போயிருக்கீங்க..?”

“யெஸ்...”

“உங்க டயத்தை வேஸ்ட் பண்ணாதீங்க டாடி.. நான் அந்தக் கடையை விட்டுக் கொடுக்கிறதா இல்லை...”

“இந்தக் கடையை உன் பெயருக்கு வாங்கியது நான்...”

“இன்னும் ஆறே நிமிசத்தில உங்க அக்கவுண்ட்டுக்கு கடைக்கான மொத்தப் பணமும் டிரான்ஸ்பர் ஆகிரும் டாடி.. இனி இந்தக் கடையில உங்களுக்கு உரிமையில்லை..”

“லுக் அர்ஜீன்.. இதை ஒரு சேலன்ஜீக்காக நான் வாங்கினேன்...”

“தெரியும்.. இப்ப இந்தக் கடையை விட்டுக் கொடுக்க மாட்டேன்னு நான் சொல்கிறதும் சேலன்ஜ்தான்...”

“என்னிடமே சேலன்ஜ் பண்றயா..?”

“நோ அதர் வே.. இதைப் பண்ணித்தான் ஆகனும்னா நான் என்ன செய்ய முடியும்..?”

“நீ என் மகன்டா...”

“யார் இல்லைன்னது..? அதுக்காக என் பெயரில வாங்கின கடையை சொல்லிக் காண்பிப்பிங்களா..? நான் உங்களைவிட அதிகமா சம்பாதிக்கிறவன் டாடி...”

“அர்ஜீன்..”

“என் பிஸினெஸ்ஸில உங்க பணம்ன்னு ஒரு ரூபாய் கூட கிடையாது...”

“நீ உன் டாடியிடம் பேசுகிறேன்னு நினைவில் வைச்சுக்கடா...”

“ஊஹீம்.. ஒரு கடைக்கு இரண்டு பாஸ் இருக்கக் கூடாதுன்னு சொன்ன பிஸினெஸ் மேன்கிட்டப் பேசுகிறேன்.. அந்தக் கடை என்னோட சொத்து...”

“இது துரியோதனனோட சொத்து அர்ஜீன்...”

“டாமிட்.. விற்ற கடைக்கு அவர் சொந்தம் கொண்டாட முடியாது.. கடையை அவர் விற்றாச்சு..”

“நான் வாங்கியாச்சு...”

“நோ டாட்.. நான் வாங்கியாச்சு.. உங்க செல்போனில இந்நேரத்துக்கு மெஸேஜ் வந்திருக்கனுமே...”

அர்ஜீன் சொல்லிக் கொண்டிருந்த போதே பார்த்தசாரதியின் செல்போனின் திரை ஒளிர்ந்து செய்தி வந்திருக்கிறது என்று அறிவித்தது...

புருவங்கள் முடிச்சிட எடுத்துப் பார்த்தார்.. அவரின் பேங்க் அக்கவுண்டில் அந்தக் கடைக்கான விலையைவிட அதிகமான பணம் வரவாகியிருந்ததை அது அறிவித்தது..

“வட்டியோட உங்க பணத்தை கொடுத்துட்டேன் டாடி.. இனி அந்தக் கடையில் உங்களுக்கு உரிமையில்லை.. கிளம்புங்க...” என்றான் அர்ஜீன்...

பார்த்தசாரதியின் முகம் கருத்து விட்டது... அர்ஜீனின் இத்தனை வேகமான செயல்பாட்டை அவர் எதிர்பார்த்திருக்கவில்லை..

’பெற்ற அப்பனிடமே கணக்குத் தீர்க்கிறான்...’ அவர் மனதுக்குள் பொருமினார்...

‘என்கிட்டடப் பேசிக்கிட்டே எப்படி சென்னைக்கு செய்தி அனுப்பினான்..?’ அவருக்குப் புரியவில்லை...

“லேப் டாப் எதுக்கிருக்கு..?” என்று கேட்டான் அர்ஜீன்...

“உங்ககிட்ட பேசிக்கிட்டே என் சென்னை கம்பெனிக்கு மெஸேஜ் அனுப்பினேன்.. உங்க அக்கவுண்டில பணத்த கிரெடிட் பண்ணிட்டாங்க...”

“இது தேவையில்லாத வேலை அர்ஜீன்...”

“இத்தனை நாளா இந்தக்கடை உங்களுக்கு தேவையில்லாம இருந்தது.. இப்பத் திடிர்ன்னு தேவையானதா மாறலையா..? அதைப் போலத்தான் இதுவும்...”

அர்ஜீன் விவரத்தை யூகித்து விட்டான் என்பதில் பார்த்தசாரதிக்குள் கோபம் மூண்டது...

அவருடைய மகன்.. அவர் வாங்கிப் போட்ட கடையை பொறுப்பில் எடுத்துக் கொள்ள வந்த இடத்தில் ஒரு மத்தியதரக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணிடம் மயங்கிப் போயிருக்கிறான்.. அதைக் கண்டு பிடித்து... சரி செய்ய வந்தவரிடம் மறைமுகமாக யுத்தம் புரிகிறானென்றால் அவர் அதைப் போய் எங்கே சொல்வார்..?

“எப்பவுமே இந்தக் கடை எனக்குத் தேவையானதாகத் தான் இருந்தது.. துரியோதனன் என் பிரண்ட்...”

“ஈஸிட்..?”

மகனின் கிண்டல் புரிந்தவராக பல்லைக் கடித்தார் பார்த்தசாரதி.. இதுபோன்ற உரையாடலை அவனுடன் உரையாடுவதில் அவருக்கும் சங்கடம் ஏற்படத்தான் செய்தது.. ஆனாலும் என்ன செய்வது..? அவருக்கு நேகா மருமகளாக வரவேண்டுமே.. அதற்காக காவ்யாவை அர்ஜீனின் வாழ்க்கையிலிருந்து விலக்கியாக வேண்டுமே..

“புரிஞ்சுக்க அர்ஜீன்..”

“யாரை...?”

“என் மனதை...”

“அதில் என்ன இருக்கு.. என்ன பிளான் இருக்குன்னு தான் எனக்குத் தெரியலையே டாடி...”

“ஆயிரம்தான் இருந்தாலும் துரியோதனன் என் பிரண்ட்...”

“அதுக்கு இப்ப என்ன செய்யனும்ங்கறிங்க...?”

“இந்தக் கடையை அவனுக்குத் திருப்பிக் கொடுத்து விடலாம்கிறேன்..”

“வாட்..?!...”

மறுமுனையில் அர்ஜீனின் அதிர்ச்சி வெளிப்பட்டது.. பார்த்தசாரதிக்கும் மனதில்லைதான்.. துரியோதனனை வென்று விட்டதற்கு அடையாளமாக நிற்கும் கடையை காலாகாலத்திற்கும் கையில் வைத்திருப்பதை விட்டுவிட்டு அதை துரியோதனனிடமே திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கனவிலும் அவர் நினைத்ததில்லைதான்.. வருடக் கணக்கில் அவர் மனதில் உறைந்திருந்த ரணத்தை ஆற்றி விட வந்த.. மருந்தான கடையை அந்த ரணத்தை உண்டாக்கியவனுக்கே தாரை வார்ப்பதில் அவருக்கு கடுகளவு கூட உடன்பாடில்லைதான்...

ஆனாலும் அவர் என்னதான் செய்வார்..?

இதற்காகவெல்லாம் அவர் பார்த்துக் கொண்டிருந்தால் அவரின் தற்போதைய கனவு என்னாவது..? நேகா அவர் வீட்டுக்கு மருமகளாக வர வேண்டியது அவசியமல்லவா..? அதற்காக காவ்யாவை

அர்ஜீனின் வாழ்க்கையை விட்டு அனுப்ப வேண்டியது அதை விட அவசியமல்லவா..?

"எஸ் அர்ஜீன்.. ஐ டிசைட் இட்.. என் பிரண்டுக்கு அவன் கேட்ட சொல்லினால் ஏற்படும் மனவலியை உணர்த்த வேண்டுமென்றுதான் நான் நினைத்தேன்.. அதனால் ஏற்படும் மனக்காயத்தைப் பற்றி அவன் தெரிந்து கொள்ள வேண்டுமென்றுதான் நான் நினைத்தேன்..."

"ஓ..."

அர்ஜீனின் இகழ்ச்சியான 'ஓ' பார்த்தசாரதியின் காதுகளில் ஒலித்தது...

அந்தக் கடை அவர்களின் கைக்கு வந்து பதினொரு மாதங்களுக்கு மேலாகி விட்டன... கிட்டத்தட்ட ஒரு வருடத்தை தொடப்போகும் அந்த நேரத்தில் பார்த்தசாரதி திடிரென்று நட்பிற்கான அதிகாரத்தை எழுதினால் அதை அவன் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை...

அர்ஜீன் அவனுடைய தகப்பனின் குணாதிசியத்தைப் பற்றி மிக நன்றாகவே அறிவான்.. அவர் வியாபாரத்தில் கை தேர்ந்தவர்.. வெற்றியின் அடையாளங்களை பக்கத்தில் வைத்திருக்க விரும்புகிறவர்.. அவராவது அந்த வெற்றியின் அடையாளத்தை விட்டுக் கொடுப்பதாவது.. அதையும் அவர் நட்பிற்காகவே விட்டுக் கொடுக்கிறேன் என்று சொன்னால் அதை நம்ப அர்ஜீன் ஒன்றும் அடி முட்டாளில்லையே..

அவருக்கு திடிரென்று ஞானோதயம் ஏற்பட்டு விட்டதென்று அவர் சொல்வதை அர்ஜீன் நம்பவில்லை..

“இத்தனை நாளா இந்த பிரண்ட்ஷிப் எந்த ஷிப்பில் மூழ்கி கடலில் கிடந்தது டாட்..?” என்றுதான் அவன் கேட்டான்...

“லுக் அர்ஜீன்.. எதையும் கிண்டல் பண்ணிலாம்ன்னு நீ நினைக்கிற விதத்தை நான் ரசிக்கவில்லை...”

“ஐ டோன்ட் கேர் ஃபார் தட்.. இந்த செகண்டில் அது என்னோட கடை.. என் கடையைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்.. நீங்க சென்னைக்கு ரிட்டர்ன் ஆகிருங்க...”

“ஹவ் இஸ் இட் பாஸிபிள்..? இதை என் மன நிம்மதிக்காக நான் வாங்கினேன்...”

“உங்க பெயரில் வாங்கலை.. அது என் பெயரில் வாங்கின கடை.. அதுக்கான பணத்தை வட்டியோட உங்களுக்கு செட்டில் பண்ணிட்டேன்...”

“அர்ஜீன்.. இந்தக் கடையை வாங்கறது நான்தான்னு தெரிஞ்சா துரியோதனன் எனக்கு கடையை விற்க மாட்டான்.. அந்த ஒரு காரணத்துக்காகவே நான் உன் பெயரில் கடையை வாங்கினேன்.. மறந்துராதே...”

அவர் எதற்காக கடையை துரியோதனனுக்கு தாரை வார்த்துக்கொடுக்க விரும்புகிறார் என்பதை புரிந்து வைத்திருந்த அர்ஜீனும்.. அவன் எதற்காக கடையை விட்டுத்தர மறுக்கிறான் என்பதை தெரிந்து வைத்திருந்த பார்த்தசாரதியும் மோதிக்கொண்டார்கள்...

# 78

*மந்திரத்தாலே எனை வென்றவனே-நீ*
*தந்திரத்தாலே பகைவெல்ல ஆசைகொண்டேன்..*

**அ**து தகப்பனுக்கும்.. மகனுக்குமான யுத்தமாக இருந்தது... இருவருமே ஒருவரின் மனநிலையைப் பற்றி மற்றொருவர் அறிந்திருந்தவராகவே இருந்தனர்... அர்ஜீன் கொதிப்பான மனநிலையில் இருந்தான்.. கனடாவிற்கு அவன் சென்றிருந்த வேலை முடிந்து விட்டது.. சென்னைக்கு திரும்பியதும் முதல் வேலையாக அவன் காதலைப்பற்றி வீட்டில் சொல்லி.. அவர்களை அழைத்துக் கொண்டு மதுரைக்குச் சென்று காவ்யாவை பெண் கேட்பதாக இருந்தான்.. அந்த நிலையில் இப்படியொரு நெருக்கடியை அவனுக்கு பார்த்தசாரதி கொடுத்துக் கொண்டிருந்தார்...

அவருடைய திட்டம் எதுவாக இருக்கக் கூடும் என்று உள்ளங்கை நெல்லிக்கனியைப் போல அவனுக்குத் தெள்ளத் தெளிவாக விளங்கியிருந்தது.. தீனதயாளனின் மகளான நேகாவை அவனுக்கு மனம் முடித்து வைத்துவிட வேண்டுமென்ற அவரின் ஆசையை பலசமயங்களில்

வெளிப்படையாகவே பார்த்தசாரதி தெரிவித்திருந்தார்.. நேகாவை புறக்கணிக்காமல் அவளிடம் பேசிப் பழகும்படி அர்ஜீனிடம் ஏறக்குறைய அவர் மன்றாடியிருக்கிறார்...

"நீ நேகாவை அவாய்டு பண்ணாதே அர்ஜீன்..."

"ஐ டோன்ட் கேர்..."

"இதையெல்லாம் நீ கேர் பண்ணித்தான் ஆகனும்.. அர்ஜீன்.."

"டாட்.. நீங்க என் பிஸினெஸ்ஸில் இன்டர்பியர் ஆனாலே என்னால அதை பொறுத்துக்க முடியாது.. அப்படியிருக்க.. என் பெர்ஸனல் லைஃபில் இன்டர்பியர் ஆகனும்னு நினைக்கறிங்களே..."

"அஃப் போர்ஸ்.. நான் உனக்கு டாடிடா.. உன் பியுச்சரை தீர்மானிக்க எனக்கு உரிமையில்லையா...?"

"இல்லை.."

"அர்ஜீன்..."

"என் பியுச்சரை இது வரைக்கும் நான்தான் தீர்மானிச்சிருக்கேன்.. இனியும் நான்தான் தீர்மானிப்பேன்.."

"அதுக்காக பெத்தவங்களை தூக்கி எறிஞ்சிருவியா...?"

"நான் அப்படிச் சொல்லலையே.. பெத்தவங்க பிள்ளைகளின் விருப்பத்துக்கு இம்பார்ட்டன்ஸ்

கொடுக்கனுமா.. வேண்டாமா..? ஆனந்தியக்காவை எந்த விசயத்திலாவது நீங்க ஃபோர்ஸ் பண்ணியிருக்கீங்களா..?"

பார்த்தசாரதி வாயடைத்துப் போவார்.. ஆனந்தி அவரின் செல்லமகள்.. அவளுடைய விருப்பத்திற்கு மாறாக எதையும் அவர் செய்ததில்லை.. அதைத்தான் அர்ஜீன் அவருக்கு நினைவு படுத்தினான்...

"அக்காவுக்கு வெளிநாட்டில பிஸினெஸ் பண்ற பணக்கார மாப்பிள்ளைகள் வந்தாங்க.. உங்களுக்கும் அவங்களில ஒருத்தருக்குத்தான் அக்காவைக் கொடுக்கனும்ங்கிற எண்ணமிருந்தது.. கொடுத்தீங்களா..?"

பார்த்தசாரதி.. என்ன பதிலைச் சொல்லுவாள்..? ஆனந்திதான் மறுத்து விட்டாளே...

"ஏன் டாட் பதில் சொல்ல மாட்டேங்கறிங்க.. நான் சொல்லவா...? அக்காவுக்கு அதில் விருப்பமில்லை.. அவங்க சென்னையிலே செட்டிலான சத்தியமூர்த்தி மாமாவை கை காட்டினாங்க.. உங்க எதிர்பார்ப்புக்கு சத்தியமூர்த்தி மாமா கிட்டக்கூட வரமுடியாது.. ஆனாலும் நீங்க அவருக்குத்தான் ஆனந்தியக்காவை மேரேஜ் பண்ணிக் கொடுத்தீங்க.. ஏன்..?"

ஏனென்ற கேள்விகளுக்கு முடிவு வந்தால் தேவையென்று பார்த்தசாரதிக்குத் தோன்றியது.. எந்த

வீட்டிலும் மகளைவிட.. மகனின் விவகாரத்தில் அதிகமாக தலையிடுவார்கள்.. இதை அர்ஜீனுக்கு அவர் எப்படி உணர்த்துவார்..?

“அக்காவுக்கு.. சத்தியமூர்த்தி மாமாவைத்தான் பிடித்திருந்தது.. நீங்க அவங்க விருப்பத்துக்கு மதிப்புக் கொடுத்தீங்க.. அதைப்போல என் விருப்பத்துக்கும் மதிப்புக் கொடுங்க.. எனக்கு அந்த நேகாவைப் பிடிக்கவில்லை...”

இதை பட்டவர்த்தனமாக அறிவித்திருந்தவன் அர்ஜீன்.. அவனுக்கு நேகாவைக் கண்டாலே ஆகாது.. அவளை வெளிப்படையாக புறக்கணிப்பான்.. அவனுடைய உதாசீனத்தில் அவள் முகம் சுருங்கும்போது பார்த்தசாரதி மனம் பதறுவார்.. அர்ஜீன் அலட்சியமாக அந்த இடத்தை விட்டு அகன்று விடுவான்...

“அர்ஜீன் அந்தப் பெண்ணோட கையில நேகா குருப்ஆஃப் கம்பெனிஸீஸ் இருக்கு...”

“என் கையில் என்னோட கம்பெனி இருக்குது டாட்..”

“அதுவும் இதுவும் சேர்ந்தா அதுக்கு எத்தனை வேல்யூன்னு நினைத்துப் பார்த்தியா..?”

“தேவையில்லை டாட்.. நான் உங்க கம்பெனியையே என் கம்பெனியோட இணைத்துப் பார்க்காதவன்...”

“அர்ஜீன்.. அர்ஜீன்.. நீ ஏன் என்னைப் புரிந்துக்கவே மாட்டேங்கிற..?”

பார்த்தசாரதி பதறும்போது அவரை நிதானமாக கூர்ந்து பார்ப்பான் அர்ஜீன்...

“நீங்க என்னைப் புரிஞ்சுக்கிட்டிங்களா..?”

காலம் காலமாக தகப்பன்களைப் பார்த்து மகன்கள் வீசியெறியும் கேள்வி இது.. தோளுக்கு மேல் வளர்ந்த மகன்களிடம் தோழமை பாராட்ட வேண்டும் என்ற எண்ணம் சில தகப்பன்களுக்கு வருவதேயில்லை.. அவர்கள் தங்கள் மகன்களைக் கட்டுப்படுத்த விரும்பும் போது அவர்கள் கட்டுக்களை அறுத்துக் கொண்டு சுதந்திரக் காற்றை சுவாசிக்க விரும்புகிறார்கள்.. அப்பாக்களுக்கும் மகன்களுக்குமான இடைவெளி அதிகரிக்கிறது.. அம்மாக்களுக்கும் மகன்களுக்குமான தோழமை அதிகரிக்கிறது...

ஒரு மகனின் முதல் விளையாட்டுத் தோழமையைத் தருவது அம்மாதான்...

அவன் முகம் பார்க்கும் குழந்தைப் பருவத்தில் அவன் முகம் நோக்கிக் குனிந்து.. அழகுகாட்டி சிரிக்க வைப்பது அவனுடைய அம்மாதான்.. அவளுக்கும்.. அவளுடைய குழந்தைக்குமான உலகமே தனியானது.. அந்தக் குழந்தையின் பாசையை அதன் அம்மாவே புரிந்து கொள்கிறாள்...

அவன் தவழும்போது அவளும் தவழ்கிறாள்.. தளர்நடை பயிலும் போது அவளும் கூட நடக்கிறாள்.. வளர்ந்த பின்னால் வெளியுலகைப் பற்றிய அவனுடைய பகிர்வுகளை பொறுமையாக கேட்டுக் கொள்கிறாள்.. அவனுடைய விருப்பத்துக்கு ஏற்ப வாழ்வை வடிவமைத்துக் கொடுக்கிறாள்...

பிள்ளைகள் அப்பாவைவிட அம்மாவிடம் நெருக்கமாக இருப்பதற்கான தாத்பர்யம் இதுதான்...

அர்ஜீன் சுந்தரியிடம்தான் எதையும் பகிர்ந்து கொள்வான்.. ஆனந்தியின் வார்த்தைக்குத்தான் கட்டுப்படுவான்.. பார்த்தசாரதியிடம் ஒரிரு வார்த்தைகளுக்கு மேல் பேசவே மாட்டான்...

அவனை அவர் புரிந்து கொண்டதைவிட.. அவரை அவன் நன்றாகவே புரிந்து வைத்திருந்தான்...

“எங்க கொள்ளுத்தாத்தா காலத்தில திருநெல்வேலியில இருந்தாங்களாம்.. அவர் என்னோட தாத்தாவுக்கு வசதியான வாழ்க்கையைத் தந்தாரு.. அவ்வளவுதான்.. என் தாத்தாகாலத்தில மதுரையில கடைவைச்சிருந்தாராம்.. அவரும் என் அப்பாவுக்கு வசதியான வாழ்க்கையைத் தந்தாரு.. அதுக்கு மேல எதுவுமில்ல.. என் காலத்திலதான் நான் என் பரம்பரையை கொடி கட்டிப் பறக்க வைச்சிருக்கேன்... என் பிள்ளைகளுக்கு கோடிஸ்வரனோட பிள்ளைகள்ங்கிற

அடையாளத்தைக் கொடுத்திருக்கேன்.. அவங்களுக்கு கோடிஸ்வர வாழ்க்கையைக் கொடுத்திருக்கேன்...”

மறந்தும் அதற்கு சுந்தரியின் பணமும்.. சொத்துக்களும் காரணமாக இருந்தன என்பதை அவர் சொல்ல மாட்டார்...

அவர் சொல்லிச் சொல்லி வளர்த்த வார்த்தைகளில் அர்ஜீன் ரோசப்பட்டான்.. அவரின் அடையாளத்தின் அடியில் வாழாமல் சுயமாய் வாழ ஆசைப்பட்டான்.. பிரிந்து தனித் தொழிலை ஆரம்பித்தான்.. அதற்காக வாங்கிய கடனை வட்டியுடன் திருப்பி அடைத்தான்.. அவன் காலில் அவன் நின்றான்.. தகப்பனைவிட அதிகமாக சம்பாதிக்க ஆரம்பித்தான்...

பார்த்தசாரதிக்கான முதல் தோல்வி அது..

அவரால் அர்ஜீனைக் கட்டுப் படுத்த முடியாமல் போவதை அவர் உணர்ந்தார்.. அவனுக்கு அவருடைய சொத்துக்களும்.. அடையாளமும் தேவையாக இருந்தால் தானே அவர் விருப்பப்படி அவனை ஆட்டி வைக்க அவரால் முடியும்..?

அதோடு.. சுந்தரியின் பணத்தில் கம்பெனியை ஆரம்பித்தவர் கம்பெனி வளர்ந்ததும் அந்தப் பணத்தை அவளிடம் திருப்பிக் கொடுக்கவில்லை.. ஆனால்.. அவர் பெற்ற மகன்.. அவரிடம் வாங்கிய பணத்தை வட்டியுடன் திருப்பிக் கொடுத்தான்...

அதில் அவர் அடிமனதில் காயம் ஏற்பட்டது.. அதை அறிந்தும் அறியாதவனைப் போல தன் போக்கில் தன் தொழிலைக் கவனிக்க ஆரம்பித்தான் அர்ஜீன்.. பார்த்த சாரதியின் மகன் அவன் என்ற அடையாளம் மாறி... அர்ஜீனின் தந்தை தான் அவர் என்ற அடையாளம் வந்து சேர்ந்தது.. அவரிடம் நின்றுகூடப் பேசாத தீனதயாளன் அவரின் பெண்ணை அர்ஜீனுக்கு கொடுக்க வேண்டும் என்று அவரிடம் வந்து நின்று பேசும் அளவிற்கு அர்ஜீன் உயரத்தில் இருந்தான்...

இவைகளில் ஒரு தந்தையாக பார்த்தசாரதிக்கு மகிழ்ச்சிதான்.. ஆனால்.. ஒரு தந்தையாக மகனின் திருமணத்தை முடிவு செய்ய முடியாமல் அவன் தள்ளி நிற்பதைத்தான் அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை...

தீனதயாளன் அவருக்கு சம்பந்தியாக ஆகி விட்டால் அவருடைய தொழில் வட்டாரத்தில் அவரின் பிம்பம் உயரத்தில் ஏறிவிடும்...

“யு நோ.. மிஸ்டர் தீனதயாளனோட டாட்டரை பார்த்தசாரதியின் சன்னுக்கு பேசி முடிச்சிட்டாங்களாமே..”

இந்த வார்த்தைகளை பொறாமையுடன் அவரைச் சுற்றியிருப்பவர்கள் சொல்லும் நந்நாளுக்காக அவர் ஏங்கினார்.. அந்த நாளை அவருக்குத் தருவேனா என்று அவர்மகன் அவருடன் மல்லுக்கு நின்றான்...

"நேகாவிடம் என்ன இல்லை அர்ஜீன்..? அழகில்லையா.. பணமில்லையா.. அறிவில்லையா..?"

இப்படிக் கேட்பவரை துளைக்கும் பார்வை பார்ப்பான் அர்ஜீன்..

"நீங்க என்ன அவளோட குவாலிபிகேஷனை பிட்டுப்பிட்டு வைக்கிற செக்ரட்டரியா..?"

"அர்ஜீன்..."

"ப்ளீஸ் டாட்.. நீங்க உங்க உயரத்தில இருந்து இறங்காதீங்க.. அவ்வளவுதான் நான் சொல்லுவேன்.."

"அவளை நீ மேரேஜ் பண்ணிக்கிட்டா இன்னும் உயரத்திற்கு நான் போவேண்டா..."

"அதை உங்க பிஸினெஸ்ஸை இம்ப்ரூவ் பண்ணிச் செய்து காட்டுங்க.. என் மேரேஜை யூஸ் பண்ணிச் செய்து காட்டனும்னு நினைக்காதீங்க.. வாழ்க்கை பிஸினெஸ்ஸில்லை.."

"அர்ஜீன்..."

"உங்களுக்கு மட்டும் அடக்க.. ஒடுக்கமாக.. காஞ்சிபுரத்தில் பிறந்து வளர்ந்த என் அம்மா வேணும்.. எனக்கு மட்டும் நேகாவைக் கை காட்டுவீங்களா..?"

"அர்ஜீன்..."

“நீங்க மட்டும் வாழ்க்கையை வாழ்க்கையாய் வாழ்ந்து பார்க்கனும்.. நான் மட்டும் நீங்களும்.. ஆனந்தியக்காவும் வாழ்கிற நிறைவான வாழ்க்கையை வேடிக்கை பார்க்கனுமா..?”

“அர்ஜீன்...”

“என் வாழ்க்கையை வாழப் போகிறவன் நான்.. எனக்கும் எனக்கு மனைவியாக வரப்போகிறவளைப் பற்றி சில எதிர்பார்ப்புகள் இருக்கு.. அவ என் மனசுக்குப் பிடிச்சவளா இருக்கனும்...”

“நேகாவை ஏண்டா உன் மனசுக்குப் பிடிக்கல..?”

இப்படிக் கேட்கிறவரை என்ன செய்தால் தேவலாம் என்ற கோபம் மனதில் மூள.. இமைக்காமல் அவரையே பார்த்தான் அர்ஜீன்...

மனது என்ன களிமண்ணா.. பிடித்து வைப்பரின் விருப்பத்துக்கு ஏற்ப உருமாறுவதற்கு..?

அது கட்டுக்கடங்காத கடல் போன்றது.. தளைகளால் பிணைக்க முடியாதது...

மனம் என்னும் மாயக்குதிரையை அடக்கி ஆள யாராலும் முடியாது...

அந்த மனதிற்கு யாரைப் பிடிக்கும்.. யாரைப் பிடிக்காது என்று அறுதியிட்டுச் சொல்ல முடியுமா..? யாராவது ஒருவரைக் கை காட்டி அவரைப் பிடிக்க வேண்டும் என்று கட்டாயப் படுத்த முடியுமா..?

ஒருவரைக் காட்டி.. மனமே.. மனமே.. இவரை உனக்குப் பிடிக்க வேண்டும் என்று கட்டாயப் படுத்த முடியுமா..?

மயிலே.. மயிலே என்றால் கூட அது இறகைப் போட்டு விடும்.. மனது அது போன்ற கெஞ்சல்களுக்-கெல்லாம் மசியாது..

அர்ஜீனின் மனதிற்கு நேகாவைப் பிடிக்கவில்லை.. அதை ஏனென்று பார்த்தசாரதி கேட்டால் அவன் எப்படி விளக்கம் சொல்வான்...?

# 79

## *உன் மனதுக்கு என்னைப் பிடித்துவிட...*
## *உளமாற ஆசைகொண்டேன்..*

**த**கப்பனும்.. மகனும் பிடிவாதத்தில் ஒருவருக்-கொருவர் சளைத்தவர்களல்ல.. பார்த்தசாரதி நேகாதான் அவருடைய மருமகள் என்ற விசயத்தில் பிடிவாதமாக இருந்தார்.. அர்ஜீனோ.. அவன் மனதுக்குப் பிடிக்காத பெண்ணை திரும்பிக்கூடப் பார்க்க மாட்டேன் என்பதில் பிடிவாதமாக இருந்தான்...

இரண்டு எதிர்மறைத் துருவங்களும் மோதிக் கொண்டிருந்தன..

“இது என்னோட பிரஸ்டிஜ் இஸ்யு..” என்றார் பார்த்தசாரதி...

“எது..?” அர்ஜீன் கேட்டான்..

“இந்தக் கடை..”

“எனக்கும் அப்படித்தான்..”

“அர்ஜீன் என் மனம் உறுத்துது..”

“எதுக்காக டாட்.. என்னடா நம்ம மகனை இந்த அளவுக்கு ஹர்ட் பண்றோமேன்னு உறுத்துதா..?”

“அது உனக்கு உறுத்தனும்.. பிகாஸ்.. நீதான் என்னை ஹர்ட் பண்ற...”

“ஓ... டாட்.. என் லைனில் நீங்கதான் கிராஸ் பண்றிங்க.. நான் உங்க லைனுக்கே வரலையே.. நான் பாட்டுக்கு என் வேலையைப் பார்த்துக்கிட்டு இருக்கேனே...”

“நானும் அதைத்தான் சொல்கிறேன்.. நீ பாட்டுக்கு உன் வேலையைப் பார்த்துக்கிட்டு இரு.. மதுரையில் உனக்கு என்ன வேலை..?”

பார்த்தசாரதியின் பிடிவாதத்தில் அர்ஜீன் பல்லைக் கடித்தான்.. அது நாள்வரை அவனும் பார்த்தசாரதியும் இந்த

அளவுக்கு பேசிக் கொண்டதில்லை.. எதைச் சொல்வதாக இருந்தாலும் ஊடே சுந்தரியையும்.. ஆனந்தியையும் வைத்து அவர்கள் மூலமாகவே பேசிக் கொள்வார்கள்..

முதன் முறையாக ஊடே சுந்தரியும்.. ஆனந்தியும் வராமல் அவர்கள் நேருக்கு நேராக மோதிக் கொண்டார்கள்..

"டாட்.. நான்.. எங்கே.. என்ன வேலை பார்க்கனும்னு நான்தான் முடிவு பண்ணனும்.. நீங்க முடிவு பண்ணக்கூடாது.. இது என்னோட லைஃப்..."

"இது நான் வாங்கின கடை..."

"என் பெயரில் வாங்கினீங்க.. பணத்தை நான் செட்டில் பண்ணிட்டேன்..."

"ஆனா.. இந்தக் கடையை என் பிரண்டுக்கே நான் திருப்பிக்கொடுக்கிறதா இருக்கேனே.. ஸோ.. உன் பணத்தை நீயே வைத்துக்க..."

"என் பெயரில் இருக்கிற கடையை நான் கையெழுத்துப் போடாம திருப்பிக்கொடுக்க முடியாது.. ஸோ.. நான் கடைக்காக கொடுத்த பணம் கொடுத்தது தான்.. திருப்பி வாங்கிக்கிறதாயில்லை..."

"இது சரியில்லை அர்ஜீன்.. என் பிரண்டின் மனசு புண்பட்டிருக்கு.. நான் அதை சரிபண்ணனும்..."

"நீங்க எதை சரிபண்ணனும்னு நினைக்கறிங்கன்னு எனக்கும் தெரியும்... நீங்க முதல்ல சென்னைக்கு கிளம்புங்க..."

அர்ஜீன் போனை வைத்து விட்டான்.. பார்த்தசாரதி கொதித்தார்.. அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே போனை வைத்து விட்ட அர்ஜீனின் செய்கையில் அவரின் கோபம் அதிகரித்தது...

‘இதெல்லாம் யாராலே...’

காவ்யாவினால் என்று தீர்மானித்தவர் இளங்கோவை கூப்பிட்டார்..

“அந்தப் பெண்ணைக் கூப்பிடு...”

“அவங்க பெயர் காவ்யா சார்..”

எந்தப் பெண்ணை என்று கேட்காமல் உடனடியாக இளங்கோ பதில் சொல்லியதிலிருந்து.. அவன் எந்த அளவுக்கு அவரை புரிந்து வைத்திருக்கிறான் என்பதை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது...

“அதை நான் கேட்டேனா..?”

அவர் எரிந்து விழுந்தார்.. இளங்கோ விரைவாக அந்த இடத்தைவிட்டு அகன்றான்.. அவன் போனபோது காவ்யாவுடன் செல்போனில் அர்ஜீன் பேசிக் கொண்டிருந்தான்...

“லேன்ட் லைனுக்கு போன் பண்ணியிருந்தேன்...”

“நான் அங்க இல்ல...”

“தெரியும்.. டாடிதான் போனை எடுத்தார்.. எப்ப வந்தார்..?”

“இப்பத்தான்...”

“உன்னிடம் பேசினாரா..?”

“இல்ல...”

அவர் அவளை உதாசீனப் படுத்தியதையும்.. அவளின் டேபிள் சேரை அர்ஜீனின் அறைக்கு வெளியே போட்டு அதில் இளங்கோவை உட்கார வைத்ததையும் அவள் அவனிடம் சொல்லவில்லை..

“ஏன் என்னவோ போல பேசற..?”

“ஒன்.. ஒன்னுமில்லயே...”

“இல்லை.. எதுவோ இருக்கு.. உன் வாய்ஸே சரியில்லை.. மறைக்காமல் சொல் காவ்யா.. அங்கே என்ன நடக்குது..?”

அர்ஜீன் போனில் கேட்டுக் கொண்டிருந்தபோதே இளங்கோ வந்து விட்டான்.. காவ்யா அவசரமாக போனை அணைத்து விட்டாள்...

“என்ன இளங்கோ..?”

“பெரியவர் உங்களைக் கூப்பிடறாரு...”

“எதுக்காம்...?”

“சொல்லலை...”

இளங்கோ அவளைப் பார்த்த பார்வையில் இரக்கமிருந்தது.. அதில் காவ்யாவின் மனம் வலித்தது.. கடைசியில் இளங்கோவின் இரக்கப் பார்வைக்கு ஆளாகும் அளவிற்கா அவளின் நிலை ஆகிவிட்டது...?

“வர்றேன்னு சொல்லுங்க...”

இளங்கோவுடன் சேர்ந்து போவதை தவிர்க்க விரும்பியவளாக டேபிளை சரிபண்ண ஆரம்பித்தாள் காவ்யா... அவளின் அந்தப்பதிலில் இளங்கோவின் முகத்தில் திருப்தி நிலவுவதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.. அவள் நிமிர்வாக பதில் சொல்வதாக அவன் நினைத்துக் கொள்வதையும் அவளால் புரிந்து கொள்ள முடிந்தது...

இளங்கோ சந்தோசத்துடன் போய்விட்டான்...

தன்னால் எதிர்க்க முடியாததை வேறு ஒருவர் எதிர்த்து நிற்கும்போது மகிழ்ச்சி கொள்வது மனித இயல்பு.. அதைத்தான் இளங்கோவும் செய்தான்...

அடுத்து என்ன செய்யலாம் என்ற தீவிர யோசனையில் இருந்த பார்த்தசாரதி நிமிர்ந்து பார்த்தார்.. இளங்கோவின் முதுகுக்குப் பின்னால் அவரின் பார்வை துழாவியது...

“வர்றேன்னு சொன்னாங்க சார்..”

அவரின் முகபாவத்தை அளவிட்டபடி சொன்னான் இளங்கோ...

'என்ன திமிர்...!' பார்த்தசாரதியின் கண்கள் சிவந்தன.

"நான் கூப்பிட்டேன்னு சொன்னீயா..?"

"சொன்னேன் சார்..."

'சொல்லியுமா வரலை...' உக்கிரமானார் பார்த்தசாரதி..

"ஓகே.. நீ போ..."

இளங்கோ வெளியேறிய சிறிது நேரத்தில் காவ்யா வந்தாள்.. காதலனைப் பெற்றவரின் முன்னால் நிற்கும் படபடப்பு அவள் முகத்தில் தெரிந்தது.. நடுங்கிய விரல்களை மடித்துக் கொண்டபடி.. மௌனமாக அவள் நின்றாள்...

பார்த்தசாரதி அவளை உறுத்துப் பார்த்தார்.. அந்தப் பார்வையில் அவள் நடுங்கினாள்..

"கூப்பிட்டா.. வர்றேன்னு சொன்னியாமே..."

பார்த்தசாரதியின் கோபத்தில் அவள் மென்று விழுங்கினாள்...

"டேபிளை சரிபண்ண வேண்டியிருந்தது சார்..."

"என் ஆபிஸில் இப்படியொரு லேபர் இருந்தால்.. உடனடியா அந்த லேபரின் சீட்டைக்கிழித்து விட்டுத்தான் நான் வேற வேலையைப் பார்ப்பேன்..."

'லேபர்' என்ற வார்த்தையில் மனதில் அடிவாங்கினாள் காவ்யா...

‘இருக்கட்டுமே..’ தனக்குள் சொல்லிக்கொண்டாள்..

‘நான் தொழிலாளிதானே...’ சமாதானப் படுத்திக் கொண்டாள்..

“ஐ ஆம் சாரி...”

அர்ஜீனின் தந்தை என்பதற்காகத்தான் அவள் அந்த ‘ஸாரி..’யைச் சொல்கிறாள் என்பதை உணர்ந்து கொள்ளாத பார்த்தசாரதி எகிறினார்...

“எனக்குப் பிடிக்காத வார்த்தைன்னு ஒன்று இருக்குன்னா அது இந்த ஸாரிதான்...”

இதற்கு என்ன பதிலைச் சொல்லுவது என்று தெரியாமல் காவ்யா மௌனமாக நின்றாள்...

“நீ இங்கே எத்தனை நாளா வேலை பார்க்கிற..?”

“நாளில்லை சார்.. வருசங்கள்..”

“ஓ.. துரியோதனன் காலத்தில இருந்தே.. இங்க நீ வேலை பார்க்கிறயா..?”

துரியோதனன் காலம் என்பது எந்தக்காலம்..? என்று கேட்க நினைத்தவள் பேசாமல் நின்றாள்...

என்னவோ மகாபாரத துரியோதனன் காலத்தைச் சொல்வதைப் போல அவர் சொல்லி வைத்ததில் அவளுக்கு கொஞ்சம் கூட உடன்பாடில்லை..

‘நானென்ன தொண்டுக் கிழவியா..?’

பார்த்தசாரதி அதைப் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்கிறவராகவே இல்லை.. அவளை உதாசீனமாக பார்த்தபடி..

"கடையை டேக் ஓவர் பண்ண நான் வந்திருக்கனும்.." என்றார்...

எதற்காக இதைச் சொல்கிறார் என்று காவ்யாவின் புருவங்கள் சுருங்கின.. பார்த்தசாரதி அதைத்தான் எதிர்பார்த்திருந்தார் போல.. அவளை வன்மமாக பார்த்தபடி..

"அப்படி வந்திருந்தேன்னா.. தேவையில்லாத ஆள்களை உடனடியா வடிகட்டியிருப்பேன்.." என்றார்..

காவ்யா துடித்துப் போய் நிமிர்ந்தாள்..

'இதற்கு என்ன அர்த்தம்..? நான் தேவையில்லாத ஆள்ன்னு இவர் நினைக்கிறாரா..? என்னை வடிகட்டி வீட்டுக்கு அனுப்பியிருப்பாரா..?'

அவளின் தன்மானம் சிலிர்த்தது.. அர்ஜீனுக்காக பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு நின்றாள்...

"கடையோட இன்சார்ஜ் நீதானாமே..."

"யார் சொன்னது..?"

"கடையில வேலை பார்க்கிற எல்லோருமே சொல்றாங்களே..."

"இருக்கலாம்..."

காவ்யாவிடம் தோன்றிய நிமிர்வைக் கவனித்தார் பார்த்தசாரதி.. அவளின் படபடப்பு அடங்கியிருந்தது.. விரல் நடுக்கம் நின்றிருந்தது.. அந்த நிமிர்வில் அவருக்குள் கோபம் எழுந்தது..

'என்ன தைரியம்...'

அவருக்கும் தெரியும்.. அது மதுரை மண்ணிற்கே உரிய தெனாவெட்டு என்பது.. அவரும் அந்த ஊரில் பிறந்து வளர்ந்தவர்தானே...

'எல்லாம் அவன் கொடுத்து வைத்திருக்கிற இடம்..'

மகனை மனதுக்குள் திட்டிக் கொண்டார் பார்த்தசாரதி...

"எங்க கடைக்கு இன்சார்ஜா இருக்க நீ யார்..?" எரிச்சலுடன் அவர் கேட்டார்...

"இந்தக் கேள்வியை என்னிடம் கேட்கக் கூடாது சார்.. உங்க மகனிடம் கேட்கனும்.. நான் இன்சார்ஜாய் இருக்கிறேன்னு தவ்வல.. இன்னும் சொல்லப் போனா.. இந்தக் கடையோட இன்சார்ஜா என்னைப் போட்டிருக்கிற விவரமே மத்தவங்க சொல்லித்தான் எனக்குத் தெரிஞ்சது..."

"செக்கரட்டரியாய் உன்னை செலக்ட் பண்ணியிருக்கானே.. உன் குவாலிபிகேசன் என்ன..?"

“பி.எஸ்.ஸி. கம்யூட்டர் சயின்ஸ்...”

“செக்கரட்டரி கோர்ஸ் படித்திருக்கிறயா..?”

“அது என்ன தேவைக்கு..?” எரிச்சலுடன் கேட்டாள் காவ்யா...

‘இந்த ஓட்டைக்கடையில வேலை பாக்குறதுக்கு எண்பத்திரண்டு கோர்ஸ படிச்சு முடிச்சிருக்கனுமாக்கும்..?’

“அப்புறம் எப்படி உன்னைப் போய் செக்கரட்டரியாய் போட்டான்..?” அவளைவிட எரிச்சல் பட்டார் பார்த்தசாரதி...

“என்னக் கேட்டா.. எனக்கென்ன தெரியும்..? இந்தப் பதவிக்கும் நான் தாவிக் குதிக்கல.. உங்க மகன்தான் செக்கரட்டரின்னாரு.. நான் சிவனேன்னு அக்கவுண்ட்ஸை மட்டும் பார்த்துக்கிட்டு இருந்த ஆளு சார்.. எனக்கெதுக்கு இந்தப் பொறுப்பு..?”

‘என்னடா இது...’ என்றிருந்தது பார்த்தசாரதிக்கு..

காவ்யாவை மனரீதியாக பலவீனமாக்க அவளிடமிருக்கும் பொறுப்புக்களை தட்டிப் பறிக்க அவர் முனைந்தால்.. அவரை முந்திக் கொண்டு அவள் அந்தப் பொறுப்புக்களை தட்டிக் கழிக்கிறாளே...

“ஆர் யு ஷ்யூர்..?”

“இதென்ன சார் வம்பாப் போச்சு.. எனக்கு இந்தப் பொறுப்பு வேணாம்.. நான் ஏற்கனெவே முதலாளியிடம் சொன்னதுதான்..”

“யார் உன்னோட முதலாளி...?”

“உங்க மகன்தான்...”

“அப்ப என்னைப் பார்த்தா உனக்கு முதலாளியாத் தெரியலையா..?”

பார்த்தசாரதி இழுத்த உறண்டையில் கனடாவிலிருந்த அர்ஜீனை மனதுக்குள் திட்டித் தீர்த்தாள் காவ்யா...

‘மத்தவங்க வீட்டில மாமியாதான் மருமககிட்ட பிரச்னை பண்ணுவான்னா.. எங் கதையே வேறாயிருக்கே.. இப்படியாப்பட்ட மாமனாருக்கா அவன் மகனாப் பிறந்து தொலைக்கனும்..?’

மனதுக்குள் காவ்யா அவரை அர்ச்சித்துக் கொண்டிருப்பதை அறியாதவராக பார்த்தசாரதி பல்லைக் கடித்துக் கொண்டிருந்தார்...

“இந்த விளையாட்டுக்கே நான் வரலை சார்.. இங்கே முதலாளி நீங்களா இருந்தா எனக்கென்ன..? இல்ல.. உங்க மகனா இருந்தா எனக்கென்ன..? வேலையைப் பார்க்கிறேன்.. சம்பளத்த வாங்கிக்கிட்டு நடையக் கட்டறேன்.. இதெல்லாம் எனக்குத் தேவையில்லாத பேச்சு...”

காவ்யா பிளந்து கட்டியதில் பார்த்தசாரதி வாயடைத்துப் போனார்.. அவருக்கு வாழைப் பழத்தில் ஊசி

ஏற்றித்தான் பழக்கம்.. இப்படி சிதறுகாய் போல நேருக்கு நேராக வெடித்துப் பழக்கமில்லை.. அந்த நிலையிலும்...

'என் மகனைக் காதலிக்கிறான்னு சொல்றாங்க... இவ கொஞ்சமாவது இவளோட காதலனோட அப்பாவாச்சேன்னு என்னை நினைத்துப் பார்க்கிறாளா..?' என்று நினைத்துப் பார்க்காமலிருக்க அவரால் முடியவில்லை...

# 80

*காதோரம் காதல் சொன்னவன் – தாலி*
*கட்டி விடவே ஆசைகொண்டேன்..*

"**எ**ன்னடி ஆச்சு..?" என்று விசாரித்தாள் பாவனா...

காவ்யாவே பார்த்தசாரதியை தலையால் தண்ணீர் குடிக்க வைத்துவிட்டு வந்து.. அந்த வெற்றியைக் கொண்டாட முடியாமல் தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்..

என்னதான் இருந்தாலும் பார்த்தசாரதி அர்ஜீனின் அப்பாவாயிற்றே என்ற எண்ணம் அவளுக்கு...

அவளுடைய வருங்கால மாமனாருடன் இப்படிப்பட்ட அறிமுகம் நேர்ந்ததில் அவள் மனதுக்குள்

வருத்தம் வந்திருந்தது.. அந்த வருத்தத்தில் பாவனாவிடம் சுள்ளென்று எரிந்து விழுந்தாள்...

"ஒன்னும் ஆகல.. இப்ப என்னத்த ஆகிருச்சுன்னு வந்து துக்கம் விசாரிக்கிற...?"

"ஏண்டி இப்படி கோவிச்சுக்கற...?"

"பின்னே..? கோவிச்சுக்காம உன்னக் கொஞ்சவா செய்வாங்க..?"

"விடுடி.. வா.. சாப்பிடப் போகலாம்..."

பாவனா தன்மையாகப் பேசியதில் காவ்யாவின் எரிச்சல் கொஞ்சம் குறைந்தது.. மறுத்துப் பேசாமல் எழுந்து கொண்டாள்.. சாப்பிடும் போது காவ்யா மௌனமாக இருந்ததில் பாவனாவுக்குள் கவலை எழுந்தது.. அதை வெளிக்காட்டி பரிவுடன் பேசுவதை காவ்யா விரும்ப மாட்டாள் என்ற நினைவில் அவள் பொதுவான நிலவரங்களைப் பேசிக் கொண்டிருந்தாள்.. இருவர் மனதிலும் ஒரே கேள்விதான் அரித்துக் கொண்டிருந்தது...

'இந்த பார்த்தசாரதி எதுக்காக வந்திருக்கிறார்..?'

அவர்கள் தங்களுக்குள் கேட்டுக் கொள்ளத் தயங்கிய கேள்வியை வெற்றிலையை குதப்பியவாறு அங்கே வந்த ஏகாம்பரம் எளிதாக கேட்டு விட்டார்...

"ஏம்மா பாவனா..?"

“நான் உங்களுக்கு அம்மாவா..? இப்படிக் கூப்பிடாதீங்கன்னு எத்தனை தரம்தான் சொல்லுறது..? வெறுமனே பாவனான்னு கூப்பிட்டா ஆகாதா சார்..?”

“விடும்மா.. இதெல்லாம் ஒரு பேச்சா..?”

“ஓ.. அப்ப.. வேற எதெல்லாம் பேச்சுன்னு நீங்களே சொல்லிருங்க சார்...”

“அட இத விடும்மா.. இப்ப எதுக்காக பெரிய முதலாளி மெட்ராஸில இருந்து வந்து இறங்கியிருக்காரு..?”

“மெட்ராஸா..? அது சென்னை சார்..”

“எங்க பாட்டன் காலத்தில இருந்து மெட்ராஸீன்னு சொல்லித்தான் எங்களுக்கும் பழக்கம்.. புதுசா வழக்கத்த மாத்த என்னால முடியாதும்மா...”

“என்னத்தையோ சொல்லித் தொலைங்க.. நீங்க அம்மான்னு சொல்றதையே கேட்டுக்கறேன்.. இதைக் கேட்க மாட்டேனா..? ஆனா அது என்ன பெரிய முதலாளி..? அப்ப அர்ஜீன் சார் என்ன சின்ன முதலாளியா..? கேட்டுக்கிட்டியா காவ்யா..?”

காவ்யா கேட்டுக் கொண்டுதான் இருந்தாள்.. ஏகாம்பரம் கேட்ட கேள்வியை மனதுக்குள் அசை போட்டுக் கொண்டுதான் இருந்தாள்.. இருந்தும் பதில் பேசவில்லை...

“இப்ப இதான் முக்கியமான பேச்சா..? எதுக்காக இவரு வந்திருக்காரு..?” ஏகாம்பரம் கேட்டார்..

“கடையைப் பாக்க வந்திருக்கலாம்...” என்றாள் பாவனா...

“பாத்தா அப்படித் தெரியலையே...” என்று சொன்னார் ஏகாம்பரம்...

“எடுத்தவுடனே பாத்தா அப்படித் தெரியாது சார்.. பார்க்கப் பார்க்கத்தான் அப்படித் தெரியும்...”

“விளயாட்டுப் புள்ளயாவே இருக்கியேம்மா...”

“உடனே பிளேகிரௌவுண்டுக்கு போன்னு பேக்-அப் பண்ணி அனுப்பி வைச்சிராதீங்க.. வேலயப் பாக்க விடுங்க...”

“இப்ப வேலயாம்மா பாக்கிற..? சாப்பிட்டுக்கிட்டுத் தான இருக்கிற..?”

“இதுவும் வேலதான் சார்.. இப்ப உங்களுக்கு என்ன வேணும்..? உங்க பாஷையில சொல்லப் போனா... பெரிய முதலாளி எதுக்காக மெட்ராஸில இருந்து வந்திருக்காருன்னு நாம பேசியாகனும் அவ்வளவுதானே..”

“ஆமாம்மா.. இந்தப் பக்கம் இருக்கிறது மூணே பேரு நாம பேசலன்னா வேற யாரு பேசறது...?”

“பேசிப்புட்டாப் போச்சு.. எத வைச்சு அவரு கடையப் பாக்க வந்ததைப் போலத் தெரியலைன்னு நீங்க சொல்றீங்க..?”

“யோசிம்மா.. வந்த மகராசன்.. முதமுதலா கடைக்குள்ள வந்திருக்காரு...”

“ஆமாமாம்.. ஆனா.. வலது கால எடுத்து வைச்சு வந்தாரா.. இல்ல.. இடது கால எடுத்து வைச்சு வந்தாரான்னு தான் தெரியல...”

தோழியின் வாடிய முகத்தைப் பார்வையிட்டபடி சொன்னாள் பாவனா...

“அதைச் சொல்லு..” ஆமோதித்தார் ஏகாம்பரம்...

“வந்தவரு கடையைச் சுத்திப் பாக்கனும்னுதான நினைக்கனும்..?”

ஏகாம்பரம் எடுத்துவிட்ட கேள்வியில் ‘ஆ’ வென்று பிரமிப்புடன் அவரைப் பார்த்தாள் பாவனா.. அவளின் அந்த போலி பிரமிப்பில் காவ்யாவுக்கு சிரிப்பு வந்தாலும் அவள் சிரிக்கவில்லை.. அவளால் சிரிக்க முடியவில்லை...

“எப்புடி ஏகாம்பரம் சார்..? எப்புடி இவ்வளவு பெரிய அறிவாளியா மாறினீங்க.. என்னமா யோசிக்கறிங்க.. உங்களைக் கொண்டாட உங்க வீட்டம்மாவுக்கு தெரியலையே... த்ச்சு.. த்ச்சு...”

“விடும்மா.. வீதியில போற நாய் கடைக்குள்ள வந்திரப் போகுது.. ஆமா.. இப்ப எதுக்காக சும்மா போகிற நாய சூச்சூன்னு கூப்பிட்டு வைக்கிற..?”

“இந்தக் கிண்டல்தான வேண்டாம்கிறது.. உங்களப் பாராட்டினா கேட்டுக்குவீங்களா.. அத விட்டுட்டு.. தெரு நாய வம்புக்கு இழுக்கனும்ங்கறிங்களே...”

“உன் பாராட்ட உங்கிட்டயே வைச்சுக்க.. நாம வந்திருக்கிற மனுசரைப் பத்திப் பேசலாம்.. வந்த மனுசர் கடையச் சுத்திப்பாக்கவும் செய்யல.. கணக்கு வழக்கையும் பாக்கல...”

“அதானே...”

“எத்தனை கம்யூட்டர் இருக்குது.. எத்தன விக்குது.. எவ்வளவு லாபம் வருதுன்னு பேசாம.. எதையெதையோ பேசிக்கிட்டு இருக்காரு...”

ஏகாம்பரத்தின் பார்வை காவ்யாவின் மீது படிந்ததில் அவள் தர்ம சங்கடமடைந்தாள்.. இவருக்கு தெரியாமல் இருக்காது என்ற நெருடல் அவள் மனதில் எழுந்தது...

ஏகாம்பரம் மௌனகுருவைப் போல இருந்தபடியே தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று அவதானிப்பதில் வல்லவர்.. யார் மனதில் என்ன இருக்கிறது என்பதை ஒரு பார்வையிலேயே கண்டு பிடித்து விடும் சூட்சும புத்தி படைத்தவர்...

அப்படிப்பட்டவர்.. அர்ஜீன் இல்லாத போது வருகை தந்திருக்கும் பார்த்தசாரதியின் முதல் நடவடிக்கையே காவ்யாவை பாதிப்பதாக இருப்பதைப் பற்றி யோசிக்காமலா இருந்திருப்பார்..?

‘என்னத்தையோ செஞ்சு தொலைக்கட்டும்..’ காவ்யாவுக்குள் கோபம் பொங்கியது..

அவளின் இருப்பிடம் அர்ஜீனின் மனதில்தான்.. அந்தக் கடையில் அவள் வேலை பார்த்தால்தான் அர்ஜீன் அவளைக் காதலிப்பான் என்று இருக்கிறதா என்ன..?

அவள் எங்கே இருந்தாலும் அவன் அவளைத் தேடி வருவான்.. அவள் அதற்காக கவலைப்பட வேண்டாம்..

பார்த்தசாரதி அதிகமாக அழும்பு பண்ணினால்.. ‘போய்யா நீயுமாச்சு.. உன் வேலையுமாச்சு..’ என்று போய் விட அவள் முடிவு செய்தாள்...

‘வீட்டுக்குப் போனதும்.. முதவேலயா சாமிக்கு முன்னால சீட்டுக் குலுக்கிப் போட்டுப் பாத்திரனும்...’

ஏகாம்பரத்தின் பார்வையைக் கவனித்த பாவனா பேச்சை மாற்றினாள்...

“விடுங்க ஏகாம்பரம் சார்.. அவருக்கு என்னவோ இளங்கோவப் பார்த்தவுடனே பிடிச்சுப் போச்சு...”

‘இல்லை பாவனா..’ காவ்யா மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்...

‘என்னைப் பார்க்கிறதுக்கு முன்னாலேயே அவருக்குப் பிடிக்காமல் இருந்திருக்கனும்.. அதான் இப்படி...’

இதற்காகத்தான் கண்ணதாசன் யோசித்துக் காதல் செய் என்று தலைப்பாடாய் அடித்துக் கொண்டானோ என்றிருந்தது காவ்யாவிற்கு...

பார்த்தசாரதியின் உதாசீனப் பார்வைகளையும்.. பேச்சையும் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அதற்கு மேலும் இடர் வந்தால் எப்படி அவள் தாங்கிக் கொள்வாள்...?

காதலுக்காக போராட வேண்டும்தான்.. ஆனால் சுயமரியாதையை விட்டுக் கொடுத்து எப்படி போராடுவது..? அர்ஜீனுக்காக உயிரை விடச் சொன்னால் காவ்யா சந்தோசமாக உயிரை விடுவாள்.. மரியாதையை விடச் சொன்னால் எப்படி அதைச் செய்வாள்..?

“பிடிச்சவங்களாப் பாத்து வேலைக்கு வைச்சுக்கனும்னு நினைக்கறதில தப்பில்லம்மா.. இது என்ன கவர்ண்மென்ட் ஆபிஸா..? கடைதான..? கடைய விக்கப் போறாங்கன்னு பேச்சு அடிபட்டப்பவே நாமள்ளாம் வெளியேற இருந்தவங்கதான..? அப்ப விட்டுப்புட்டு.. இப்பத் திடிர்ன்னு வந்து இத மாத்து.. அத மாத்துன்னு சொன்னா எப்புடி..?”

காவ்யாவின் இடமாற்றத்தை அவர் சொல்வதைப் புரிந்து கொண்ட காவ்யா உதட்டைக் கடித்தாள்.. தோழியை ஆறுதல் படுத்துவதைப் போல பார்த்து வைத்தாள் பாவனா...

“அதைத்தான் சார் நானும் யோசிக்கிறேன்.. துரியோதனன் சார்கிட்ட கடை இருந்தப்ப எப்படி

இருந்துச்சோ.. அப்படியே விட்டிருக்கலாம்.. அர்ஜீன் சார் வந்தவுடனே கடையோட வேலைகளை மாற்றினார்.. அதுகூட ஓகேதான்.. துரியோதனன் சார் உள்ளூர்காரர்.. கடை அவர் பொறுப்பில இருந்துச்சு.. மேற்பார்வைக்கு அவர் இருந்தார்.. அர்ஜீன் சார் அப்படியில்லை.. சென்னைக்காரர்.. ஆடிக்கொருதரம்.. அம்மாவாசைக்கு ஒருதரம்ன்னு வந்து போகிறவர்.. அவர் கடையோட பொறுப்பை நம்பிக்கையான ஒருத்தங்க கையில விட்டு வைக்கனும்னு நினைச்சதுதான் சரி.. பட்.. இப்ப திடிர்ன்னு எம்.டி.யோட அப்பாவந்து எல்லாத்தையும் மாத்தறதுதான் எனக்குப் பிடிக்கல...”

“எனக்கும்தான் பிடிக்கல.. ம்ஹீம்.. உனக்கும்.. எனக்கும் பிடித்து என்ன ஆகப்போகிறது.. நம்ம கருத்த யாரு கேக்கப் போறா..?”

“அதச் சொல்லுங்க...”

ஏகாம்பரம் அகன்றதும்.. எதுவும் பேசாமல் சாப்பாட்டில் விரல்களை அளைய விட்டுக் கொண்டிருந்த காவ்யாவிடம்...

“என்னன்னுதான் சொல்லித் தொலையேண்டி...” என்று எரிச்சல் பட்டாள் பாவனா...

“ம்ப்ச்.. ஒன்னுமில்ல..” விரக்தியாக சொன்னாள் காவ்யா...

“ஏய்ய்.. இந்த ஆளுக்கெல்லாமா நீ இம்பார்டன்ஸ் கொடுக்கிற..? நீ எதையும் சட்டை பண்ணாத ஆளாச்சேடி.. இவரெல்லாம் உனக்கு ஜீஜீபி காவ்யா..”

உண்மைதான்.. பார்த்தசாரதி மட்டும் அர்ஜீனின் அப்பாவாக இல்லையென்றால் காவ்யாவுக்கு அவர் வெறும் ஜீஜீபிதான்.. அப்படியில்லாமல் அவர் அர்ஜீனின் அப்பாவாக இருந்து தொலைக்கிறாரே.. அவரின் மகனிடம் மனதைப் பறிகொடுத்தவள் அவரை ஜீஜீபி என்று சொல்லிவிட முடியுமா..?

காவ்யா மீண்டும் “ம்ப்ச்..” என்றாள்...

“எதுக்குடி இத்தன உச்சுக் கொட்டற.. பிடிச்சா வேலையைப்பாரு.. பிடிக்கலைன்னா போய்யான்னு சொல்லிட்டு உன் வழியைப் பாத்து போய்கிட்டே இரு.. இத நான் உனக்குச் சொல்லனுமா...?”

அதுதான் பார்த்தசாரதியின் எண்ணமோ என்று காவ்யாவிற்குத் தோன்றியது.. அவளை கடையை விட்டு விரட்டியடிக்க நினைக்கிறாரா.. இல்லை..அர்ஜீனின் வாழ்க்கையிலிருந்து விரட்டியடிக்க நினைக்கிறாரா..?

பார்த்தசாரதிக்கு அவளைப் பிடிக்கவில்லை என்பதை நினைத்துப் பார்க்கவே அவளுக்குத் துன்பமாக இருந்தது.. அர்ஜீனைப் பெற்றவர்களின் விருப்பமின்றி அவளுடைய திருமணம் அர்ஜீனுடன் நடந்து விட முடியுமா..?

காவ்யாவிற்கு அழ வேண்டும் போல இருந்தது.. யாருக்காகவும்.. எதற்காகவும்.. கண்கலங்கியிராத காவ்யா.. அர்ஜீனால்.. அவன் காதலால் கண்கலங்கி நின்றாள்...

"ஏய்ய்.. காவ்யா.. அழுகிறயா..?"

"இல்லயே..."

சட்டென்று காவ்யா எழுந்து விட்டாள்... அவள் கைகழுவிவிட்டு வந்தபோது அவளிடமிருக்கும் ஃபைல்களை பார்த்தசாரதி கேட்பதாக இளங்கோ வந்து நின்றான்.. மௌனமாக எடுத்துக் கொடுத்தாள்.. மாலையில் வீட்டிற்குத் திரும்பியபோது அவள் மனம் பாறாங்கல்லாய் கனத்திருந்தது...

கண்ணதாசன் அப்போதுதான் அலுவலத்திலிருந்து வந்திருந்தான்.. குளித்து.. உடைமாற்றி.. காபி குடித்துக் கொண்டிருந்தான்.. காவ்யாவைக் கண்டதும் ஏதோ கேட்க முயன்றான்.. அவனைக் கவனிக்காமல் அவள் கடந்து சென்றதில் அவன் புருவங்கள் மேலேறின...

குளித்து உடைமாற்றி வந்தவள்.. யாரையும் கவனிக்காமல் பூஜையறையை நாடிச் செல்வதைக் கவனித்தவனின் நெற்றியில் சிந்தனை ரேகைகள் படிந்தன...

காவ்யா கண்மூடி தெய்வங்களிடம் வணங்கி நின்றாள்.. இரு சீட்டுக்களை சுருட்டிப் போட்டுக் குலுக்கினாள்.. ஒன்றை எடுத்தாள்.. பிரித்துப் படித்தாள்.. அவள் முகம் மாறியது...

# 81

## *விட்டுவிட்ட என் மனதை - நீ..*
## *தொட்டுவிட ஆசைகொண்டேன்...*

**க**ண்ணதாசன் அவளைக் கவனித்தபடியே இருந்தான்.. அவளோ அவனைக் கவனிக்காமல் மாடிக்குத் திரும்பிச் செல்லப் படியில் கால்வைத்தாள்...

“ராணி மங்கம்மாவுக்கு ரூமுக்கு வந்து காபி குடுக்கனுமோ.. இங்க நின்னு குடிச்சிட்டுப் போனா ஆகாதோ...” காபியை ஆற்றியபடி வந்த அன்னபூரணி அதட்டினாள்...

“அதுக்கு ஏம்மா திட்டற..? குடின்னு நீ குடுத்தா குடிக்க மாட்டேன்னா சொல்லப் போறேன்..?” காவ்யா சலித்துக்கொண்டே காபிக்காக கை நீட்டினாள்...

“குடின்னு விசத்தைக் குடுத்ததைப் போல பேசறா பாரு.. குடின்னு காபியத்தாண்டிம்மா குடுத்தேன்..” நொடித்தாள் அன்னபூரணி...

காவ்யா காபியை வாங்கி மடமடவென்று தொண்டையில் சரித்தாள்...

“இந்தா..” என்று காலி தம்ளரை நீட்டினாள்...

“அடியாத்தி..” முகவாயில் கை வைத்தாள் அன்னபூரணி..

“அம்மா.. உங்கையால போடற காபி தேவாமிர்தம் போல இருக்கும்மான்னு.. சொட்டுச்சொட்டா ரசிச்சுக் குடிக்கிற.. எம்மகளா இப்படி வெந்த தண்ணி.. வெறுந்தண்ணிய தொண்டைக் குழிக்குள்ள ஊத்தறதப் போல ஊத்திக்கிட்டது..? என்னடி இது அதிசயமா இருக்கு..”

“எனக்கு தலை வலிக்குதும்மா...”

காவ்யாவின் கெஞ்சலில் அவளை மாடிக்கு போக விட்டாள் அன்னபூரணி.. வாசல் பக்கமிருந்து..

“அக்கா..” என்று பக்கத்து வீட்டு சரோஜாவின் சப்தம் கேட்க.. அன்னபூரணி காவ்யாவை மறந்து போனவளாக.. அரட்டைக் கச்சேரியை ஆரம்பிக்க வாசல்பக்கம் போய் விட்டாள்...

கண்ணதாசன் எழுந்தான்.. காவ்யா கொண்டு போய்விட்ட சீட்டைத் தவிர்த்து.. தெய்வப்படங்களின் முன்னால் சுருட்டிக்கிடந்த இன்னொரு சீட்டை எடுத்தான்.. பிரித்துப் படித்தான்.. அதில் **வேலையை விடாதே..** என்று எழுதியிருந்தது..

‘அப்படின்னா..’ கண்ணதாசனின் புருவங்கள் சுருங்கின...

காவ்யா கொண்டு போன சீட்டில் இதற்கு எதிர்மறையாக **‘வேலையை விடு..’** என்றல்லவா எழுதியிருக்க வேண்டும்..?

தெய்வத்தின் முன்னால் சீட்டுக் குலுக்கிப் போட்டு வழிகேட்டும் அளவிற்கு காவ்யா எதனால் பாதிக்கப்-பட்டிருக்கிறாள்..?

கண்ணதாசன் அமைதியிழந்தவனாக தோட்டத்தில் உலாவ போய்விட்டான்...

இரவு உணவுக்கு காவ்யா கீழே வரவில்லை... அவள் அறைக்கு இட்லித்தட்டை சுமந்து கொண்டு போன அன்னபூரணி.. தலைவலியால் காவ்யாவின் முகமே வீங்கிக்கிடக்கிறது என்று சொன்னாள்.. தலைவலிக்கும்.. முக வீக்கத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்று அன்னையிடம் எப்படிச் சொல்வது என்று தெரியாமல் திகைத்தான்.. கண்ணதாசன்... அழுதால் மட்டுமே கண்வீங்கும்... இமைவீங்கும்.. அதனால் முகம் வீங்கும்...

இந்த அடிப்படையைக் கூட தெரியாத முட்டாளல்ல அன்னபூரணி.. மகள் அழுவதற்கு யாதொரு காரணமும் இல்லையென்று மனப்பூர்வமாக அவள் நம்புவதால் அதற்கு தலைவலியை பிணையாக்கியிருக்கிறாள்...

காவ்யா அழ மாட்டாள்.. அவளை அழவைக்க நினைப்பவர்களைத்தான் அழ வைப்பாள்.. அதுவரை அப்படித்தான் நடந்திருக்கிறது...

முதன்முறையாக அவன் தங்கை அழுதிருக்கிறாள்..

கண்ணதாசனால் தூங்க முடியவில்லை.. மூடிக் கிடக்கும் தங்கையின் அறைக்கதவைத் தட்டிக் காரணம் கேட்க முடியாமல் அவன் அறைக்குள் நடை பழகினான்...

காவ்யாவும்.. அவனும் அருகருகே நின்றிருந்த சிறுவயதுப் போட்டோ ஒன்று அவன் அறைச்சுவரில் மாட்டப் பட்டிருந்தது... நின்று அதைப் பார்த்தான்.. கள்ளங்கபடமில்லாமல் கன்னத்தில் குழி விழ சிரித்துக் கொண்டிருந்தாள் காவ்யா.. சின்னஞ்சிறு பிராயத்தில் அண்ணனுடன் போட்டி மனப்பான்மை இல்லாததால் அவள் உரிமையுடனும்.. பாசத்துடனும் கண்ணதாசனின் தோள்மீது தலை சாய்த்திருந்தாள்.. தங்கையின் தோளைச் சுற்றி.. பாசத்துடன் கை போட்டு அரவணைத்திருந்தான் கண்ணதாசன்...

அந்த நாள் திரும்பவும் வருமா..?

ஏக்கத்துடன் அந்தப் போட்டோவை கையில் எடுத்துப் பார்த்தான் கண்ணதாசன்...

*'ஒரு கொடியில்..*
*இரு மலர்கள்..*
*மலர்ந்ததம்மா.. மலர்ந்ததம்மா...*
*அண்ணன் தங்கை..*
*உறவு முறை..*
*வளர்ந்தம்மா.. வளர்ந்ததம்மா..'*

அவன் மனதில் பாடல் ஒலித்தது.. அவளும்.. அவனும்.. ஒரு கொடியில் பூத்த இரு மலர்கள்தான்.. அந்த இருமலர்களில்.. ஒரு மலரை அண்ணனிடமிருந்து விலகி நிற்கச் செய்தது எது..? அவள் மனதில் உள்ளதை அண்ணனிடம் சொல்லாமல் மறைக்க வைத்தது எது..?

கண்ணதாசன் பெருமூச்சு விட்டான்...

காதல் என்பது கூடப்பிறந்தவனைத் தள்ளி நிறுத்துமா..? காவ்யா அர்ஜீனிடம் வைக்கும் நம்பிக்கையில் கடுகளவுகூட அவள் அண்ணன்மீது வைக்கவில்லையா..?

*"தன் கண்ணனைத் தேடுகிறாள்...*
*மனக் காதலைக் கூறுகிறாள்..*
*இந்த அண்ணனை மறந்து விட்டாள்...*
*எனும் ஒருமொழி கூறாயோ..*
*இந்த மன்றத்தில் ஓடிவரும்..*
*இளந்தென்றலைக் கேட்கின்றேன்.."*

தெருவினில் பால் வண்டிக்காரனிடம் சைக்கிளில் எப்.எம்மின் பாடல் ஒலித்துக் கொண்டே கடந்தது.. கண்ணதாசன் நிம்மதியில்லாமல் படுக்கையில் சரிந்தான்...

**கா**வ்யாவின் முகம் கண்ணீரில் நனைந்திருந்தது.. கடவுள் முன்னால் குலுக்கிப் போட்டச் சீட்டில் வந்த உத்தரவில் அவள் மனம் குலுங்கியிருந்தது...

'வேலையை விடனுமா..?'

அந்த வேலையைச் செய்ய அவள் வீட்டில் போராடிய போராட்டம் அவளுக்கு நினைவுக்கு வந்தது.. கண்ணதாசன் அவளுக்கு வேறு இடத்தில் வேலை வாங்கிக் கொடுத்தும் அவள் போக மறுத்ததை நினைத்துப் பார்த்தாள்.. அவளையும்.. அர்ஜீனையும் சேர்த்து வைத்த அந்தக் கடையின் வேலையை அவள் விட்டுவிட வேண்டுமா..?

'வேற என்னதான் செய்வது..?'

உறக்கமில்லாமல் அவள் புரண்டு படுத்தபோது.. செல்போன் ஒலித்தது.. சட்டென்று எடுத்து காதுக்கு கொடுத்தாள்..

"காவ்யா.." என்றான் அர்ஜீன்...

அன்று மதியம்தான் அவன் அவளிடம் போனில் பேசியிருந்தான்.. இருந்தும்.. காலம்.. காலமாக பேசாததைப் போன்ற உணர்வுடன் காவ்யா தேம்பி விட்டாள்...

"ஏய்ய்.." மறுமுனையில் அவனின் பதட்டம் தெளிவாகத் தெரிந்தது...

"அழுகிறயா..?"

"இல்ல.." கண்ணீர் குரலில் பதில் சொன்னாள் காவ்யா...

"என்னடி நடந்தது..?" அழுத்தமான குரலில் கேட்டான் அவன்...

“ஒன்னுமில்ல..” தீனமான குரலில் பதில் சொன்னாள் காவ்யா..

“எல்லாம் எனக்குத் தெரியும்..” என்றான் அவன்..

“என்னது..?”

“ம்ம்ம்.. பாவனாவுக்கு போன் போட்டேன்...”

“நீங்க எதுக்காக அவளுக்கு போன் போடனும்..?” காவ்யா கோபப் பட்டாள்..

“யாருடி இவ.. நானென்ன அவகிட்ட காதல் வசனம் பேசவா போன் போட்டேன்..? அங்கே என்ன நடக்குதுன்னு தெரிஞ்சுக்கத்தான் போன் போட்டேன்...” அவன் விளக்கம் சொன்னான்..

“அதை எங்கிட்டக் கேக்க வேண்டியதுதான..?”

“நீ சொல்லிட்டுத்தான வேற வேலை பார்ப்ப.. இப்ப அழுகிறதைப் போல அழுதுகிட்டு உட்கார்ந்திருப்ப.. பதில் சொல்லியிருக்க மாட்ட...”

“உங்களுக்கு இது ஒருசாக்கு...”

“ஆமாண்டி.. அவ பெரிய அப்சரஸ்.. நான் மலர் விட்டு மலர் தாவும் வண்டு.. உன்கிட்ட இருந்து அவகிட்ட தாவிட்டேன்...”

“வண்டு ஒன்னும் தாவாது...”

“பின்னே...?”

“குரங்குதான் தாவும்...”

“என்னைக் குரங்குங்கிற...”

“புரிஞ்சுக்கிட்டாச் சரி...”

“நான் குரங்காவே இருந்துட்டுப் போறேன்.. இந்தக் குரங்குக்கு காவ்யாங்கிற குரங்குக் குட்டியத்தான் பிடிக்கும்...”

அவன் பதிலில் மனம் நனைந்தாள் காவ்யா.. அவளுக்கு பகல் பொழுதின் வருத்தங்கள் மறந்து போயின.. கடவுளின் முன்னால் வந்த சீட்டில் வேலையை விடச் சொல்லியிருந்ததையும் மறந்து போனாள்.. மனதுக்குள் அவன் மட்டுமே மத்தளம் வாசிக்க.. அவள் கன்னம் சிவக்க.. தலையணையில் முகம் புதைத்தாள்...

“ஒன்னும் கொஞ்ச வேணாம்...”

“இது ஒன்னுதாண்டி எனக்கு பூஸ்ட்.. போனிலகூடக் கொஞ்சலைன்னா எனக்கு வேலையே ஓடாதுடி...”

“ஆஹா.. இவர் சொல்ற பொய்யை நாங்க நம்பிட்டோம்...”

“நாங்கன்னா..? யார் யாரு..? நீயும்.. பாவனாவுமா..?”

“அடி வாங்கப் போறிங்க.. படவா..”

“நீதானடி சொன்ன..”

“என்னத்தச் சொன்னேன்..?”

“நாங்க நம்பிட்டோம்ன்ன...”

“உடனே பாவனாகூட கூட்டுப் போட்டுட்டிங்க...”

“அவகூட கூட்டுப் போட்டுட்டாலும்.. ம்ஹீம்...”

“இந்தப் பொய்யை வேற யார்கிட்டயாவது போய் சொல்லுங்க.. என்கிட்ட வேண்டாம்...”

“ஏண்டி..? நான் உனக்கு வேண்டாமா..?”

அவன் ஆழ்ந்த குரலில் கேட்டபோது.. அவள் அடிவயிறில் பட்டாம் பூச்சிகள் பறந்தன.. தொடாமலே.. தொடுகையை உணர்த்தும் அவன் குரலின் ஸ்பரிசத்தில் அவள் கிளர்ந்தாள்.. உடலும்.. மனமும் அவனைத்தேட.. இதமான இம்சையை உணர்ந்தாள்...

“காவ்யா...” அவன் கிசுகிசுப்பான குரலில் அழைத்தான்...

“ம்ம்ம்..” அவள் கிறங்கிப் போனவளாக முணுமுணுத்தாள்...

“ஏன் பேச மாட்டேங்கிற..?”

“சும்மாதான்..”

“இப்படியிருக்கிறவ.. என் டாடி வந்ததும் அவருக்குப் போய் பயந்து நடுங்கலாமா..? அவர் யாருடி..? உன் மாமனார்தானே...”

“அந்த பயபக்தியும்... மரியாதையும் மனசில இருந்ததினாலதான் அதிகம் பேசல... நானென்ன உங்ககிட்ட பொறுப்பைக் குடுங்க சாமின்னு கேட்டேனா..? எனக்கெதுக்கு உங்க கடையோட பொறுப்பு...?”

காவ்யா குமுறிவிட்டாள்.. அடக்கி வைத்திருந்த அவளின் மனக்குமுறல் வெளிப்பட்டு விட்டதில் அர்ஜீன் ஓர்நொடி மௌனித்தான்.. அவள் கொட்டட்டும் என்று காத்திருந்தான்.. அப்படி அவள் கொட்டினால்தான் அவள் மனதில் என்ன இருக்கிறது என்று அவனால் தெரிந்து கொள்ள முடியும்..

“உங்க காசு பணத்துக்கு நான் ஆசைப்பட்டேனா..? இல்ல உங்க காரப்பாத்து.. பங்களாவப் பாத்து மயங்கிப் போனேனா...? நடக்கிற வழியில வைரங்களா கொட்டிக் கிடந்தாக்கூட நாங்கத் திரும்பிப் பாக்க மாட்டோம்.. அது எங்க சொத்தில்லன்னு எங்க வழியப் பாத்து நடயக் கட்டுவோம்.. அப்படியாப்பட்ட பரம்பரையில வந்தவளப் பாத்து எங்க கடைக்கு இன்சார்ஜா இருக்க நீ யாருன்னு கேக்கிறாரு உங்க அப்பா...”

“அப்படியா கேட்டார்..? இதைப் பாவனா சொல்லலையே...”

“வேற எதைச் சொன்னா..?”

“டாடி வந்ததுமே உன் சேரையும்.. டேபிளையும் தூக்கி என் ரூமுக்கு வெளியே போட்டுட்டார்ன்னு சொன்னா.. இளங்கோவ அந்தச் சேரில உட்காச் சொல்லியிருக்காராமே..”

“இப்ப உங்களுக்குச் சந்தோசமா...?”

“காவ்யா...”

“குளுகுளுன்னு இருக்குமே.. மனசுக்குள்ள மத்தாப்பூ கொட்டுமே..”

“உளராதே...”

“கேட்டேனா.. இல்ல.. நான் கேட்டேனாங்கிறேன்.. நான்பாட்டுக்கு என் வேலையுண்டு.. வீடுண்டுன்னு இருந்தேன்.. எங்கிட்ட அத்தன பொறுப்பையும் குடுத்து.. சுமையை ஏத்தி விட்டுட்டு அக்கடான்னு நீங்க பாட்டுக்கு ஊரையும்.. உலகத்தையும் சுத்திக்கிட்டு இருந்தீங்க...”

பார்த்தசாரதியின் மீதிருந்த கோபத்தில் அர்ஜீனிடம் கொதிக்க ஆரம்பித்தாள் காவ்யா...

# 82

*விண் மீது நீ இருந்தாலும்...*
*என்மீது காதல்கொள்ள ஆசைகொண்டேன்..*

இது இயல்பான ஒன்று... ஒவ்வொரு வீட்டிலும் இதுபோன்ற நிகழ்வுகள் நிகழும்.. ஊரையாளும் ராஜாவாக இருந்தாலும் அவர் மனைவி குமுறும் போது குறுக்கிட மாட்டார்.. கை கட்டி.. வாய் பொத்தி அவள் வீசும் வார்த்தைக் கத்திகளை வாங்கிக் கட்டிக் கொள்வார்...

காயப்படும் ஆணுக்குத் தெரியும்.. அவனைச் சார்ந்திருக்கும் பெண்.. கத்திகளை வீசியெறிய அவளுடைய ஆணை மட்டும்தான் தேர்ந்தெடுப்பாள் என்பது...

அவளின் மனக்குமுறலை... அவளுடைய ஆணிடம்தான் அவளால் இறக்கி வைக்க முடியும்.. அவளின் அந்தக் கோபத்தை.. இயலாமையின் வெளிப்பாட்டை.. வலிக்கும் மனது வெளிப்படுத்தும் வலிகளை.. அவனே தாங்கிக் கொள்வான்...

சப்தம் போடும் ஒவ்வொரு மனைவியும்.. அவளுக்கு மட்டும் உரிமையான கணவனிடம் மட்டுமே சப்தம் போடுகிறாள்...

ஒரே அடியில் நூறு பேரை பந்தாடும் வல்லமையுள்ளவனாக இருந்தாலும்.. மனைவியின் சப்தத்திற்கு எதிர்சப்தம் போடாமல் அவள் கணவன் அதைக் கேட்டுக் கொள்கிறான்...

‘பாவம்.. என்ன விட்டா அவ கோபத்த எங்கே போய்கொட்டுவா..? அவ மனசுக்குள்ள இருக்கிற ஆத்தாமையை யார்கிட்ட காட்டுவா..? அவ கொஞ்சினா பதிலுக்கு கொஞ்சவும்.. அளுதா.. கண்ணீரைத் துடைச்சு விடவும்.. கோபப்பட்டு சத்தம் போட்டா.. வாயத் திறக்காம கேட்டுக்கவும் நான்தானே அவளுக்கிருக்கேன்..?’

மனைவி மீது அன்பு கொண்ட கணவனின் மனதில் இதுபோன்ற எண்ணம்தான் ஓடிக் கொண்டிருக்கும்.. அலைகடலைத் தாண்டி வியாபாரம் பண்ணும் அர்ஜுனின் மனதிலும் அதே எண்ணம்தான் ஓடியது...

‘பாவம்.. டாடி திடிர்ன்னு அங்கே போய் நின்றிருக்கிறதை என்னாலேயே டைஜஸ்ட் பண்ண முடியல.. அவ எப்படி டைஜஸ்ட் பண்ணிக்குவா..? அதிலயும் அவர் வேண்டும்ன்னே அங்கே போய் வம்பை ஆரம்பிச்சிருக்கிறதைப் போல தெரியுது.. பிளான் பண்ணி

காரியத்தில் இறங்கியிருக்கிறார்.. யாரோ என் காதலைப் பத்தி அவர்கிட்டப் போட்டுக் கொடுத்திருக்கனும்.. நேகாவை மனதில வைத்துக்கிட்டு மதுரைக்கு போயிருக்கிறார்.. இதை காவ்யாவிடம் சொல்லவும் முடியாது...'

அர்ஜீன் பொறுமையாக காவ்யாவின் கோபத்தை தாங்கிக் கொள்ள ஆரம்பித்தான்...

"உலகம் பொறந்தது எனக்காக.. ஓடும் நதிகளும் எனக்காகன்னு உலகத்த சுத்தி வர்ற மகராசன் கடைப் பொறுப்ப எந்தலையில கட்டி விட்டா அதுக்கு நான் பிணையா...?"

"இல்லைதான்..."

"உங்க கடைக்கு இன்சார்ஜா இருக்கிறேன்னு நான் தவ்வினேனா...?"

"தவ்வினயா.. அப்படின்னா..?"

"இது வேறயா..? தாவிக்குதிச்சேனான்னு கேட்டேன் சாமி..."

"அப்படிக் கேட்க வேண்டியதுதான..?"

"கேட்டுட்டாப் போச்சு.. உங்களுக்கு.. புரியற மாதிரி பேசனும்.. உங்கப்பாவுக்கு.. நான் எதைப் பேசினாலும் புரியுதே.. அது எப்படிங்க...?"

“அவர் மதுரையில பிறந்து வளர்ந்தவர்...”

“அப்படியா..? இருந்துமா என்னப் பாத்து அந்தக் கேள்வியக் கேட்டாரு..? என்னமோ உங்க கடைக்கு இன்சார்ஜா நான்தான் இருப்பேன்னு ஆளாப் பறந்து பொறுப்ப வாங்கிக்கிட்டதப் போலச் சொல்றாரே...”

“ஆளாப் பறந்தா..?”

“அடுத்தத ஆரம்பிச்சாச்சா..? இதிலயே இன்னைக்கு பொழுது ஓடிறப் போகுது.. ஆளாப் பறந்துன்னா.. எனக்குத்தான் வேணும்ன்னு ஆசைப்பட்டதா அர்த்தம்...”

“சேச்சே.. உன்னைப் போய் அப்படிச் சொல்வாங்களா..?”

“உங்கப்பா சொல்லிட்டாரே.. அதுக்கு என்ன பண்ணப் போறிங்க...?”

“இப்படியெல்லாம் காவ்யாவிடம் கேட்டிங்களான்னு சண்டை போடவா..?”

“எதுக்கு..? கல்யாணத்துக்கு முன்னாலயே உங்கள நான் முந்தானையில முடிஞ்சுக்கிட்டு சொல்லிக் கொடுக்கிறேன்னு பேரு வாங்கிக் கொடுக்கிறதுக்கா..?”

காவ்யாவின் பேச்சில் அவளின் சேலையின் முந்தானை நினைவுக்கு வர.. அதை முகர்ந்து பார்க்க ஆசைகொண்டான் அர்ஜீன்...

“அதை எப்பச் செய்வ காவ்யா..?”

அவன் குரலில் இருந்த குழைவில்.. கோபத்திலிருந்த காவ்யா திகைத்தாள்..

“எதை..?”

“உன் சேலை முந்தானையில் என்னை முடிச்சுப் போட்டு வைத்துக்கிறதை...”

அவனின் கிறக்கத்தில் அவளுக்கு பற்றிக் கொண்டு வந்தாலும்.. அவளின் காது மடல்கள் சூடாகின...

அவள் என்ன சொல்லிக்கொண்டிருக்கிறாள்.. அவன் என்ன கேட்கிறான் என்ற கோபம் வந்தாலும்.. அவனின் அந்த ஆசையில் அவள் உதட்டைக் கடித்தாள்...

“இங்க ஆடிக்காத்தில அம்மிக்கல்லு பறந்துக்கிட்டு இருக்கு.. இவரு என்னடான்னா.. முந்தானையில தொட்டி கட்டி அதில தூக்கம் போட ஆசைப்படறாரு...”

“ஏண்டி.. நான் ஆசைப்படக்கடாதா..? யார் மேல ஆசைப்படறேன்.. எம்மேல ஆசை வைச்சிருக்கிறவ மேலதான ஆசைப்படறேன்...?”

அர்ஜீனின் வெப்பமூச்சை செல்போன் சொல்லியதில் காவ்யா பேச்சிழந்தாள்.. ஆலிங்கனம் இல்லாத அந்த ஆலிங்கனத்தில் அவள் மனம் நழுவியது... எங்கிருந்தோ ஆசைகள் வந்து அவள் இதயத்தில் குடியேறி இம்சைகளை செய்ய ஆரம்பித்தன...

“இதுக்கொன்னும் குறைச்சலில்ல...” சரஸமாக அவள் குமைந்தாள்...

“ஏண்டி கோபிச்சுக்கற..?” அதே சரசத்துடன் அவன் சிரித்தான்...

“சிரிக்காதீங்க.. சொல்லிட்டேன்.. உங்க அப்பா என்னடான்னா பச்சை மிளகாயைக் கடிச்சிட்டதப் போல எரிஞ்சு விழறாரு.. பேசாம வேலையை விட்டுப்புடலாம் போல இருக்கு...” காவ்யாவுக்கு கண்ணீர் வந்து விட்டது...

“நோ.. நோ..” அவசரமாக சொன்னான் அர்ஜீன்...

“ஜஸ்ட் டூ டேஸ்.. நான் வந்த வேலை முடிஞ்சிரும்.. உடனே கிளம்பி பறந்து வந்துருவேன்.. அது வரைக்கும் பொறுமையாய் இரு...”

“முடியமான்னு தெரியலை...”

“முடியனும்...”

அர்ஜீன் என்னவோ எளிதாகச் சொல்லி விட்டான்.. அவன் கொடுத்த தைரியத்துடன் கிளம்பி அடுத்த நாளில் கடைக்குச் சென்றாள் காவ்யா.. அவளது தைரியத்தைப் பதம் பார்க்கும் ஆயுதம் ஒன்று அங்கே அவளுக்காக காத்திருந்தது...

**நேகா** சென்னையையே பட்டிக்காடு என்று நினைப்பவள்.. பழமை மாறாத மதுரை மாநகர்க்கு

கிளம்பிச் செல்லும் உத்தேசமே அவளுக்கில்லை.. பார்த்தசாரதியிடமிருந்து வந்த போன் அவளைக் கிளப்பி விட்டது...

“நீ வேலையில் பிஸின்னு எனக்குத் தெரியும் நேகா...”

பார்த்தசாரதி பீடிகை போட்டபோது அவளுக்கு எரிச்சல்தான் முதலில் வந்தது...

‘அதுதான் தெரியுதில்ல.. தெரிந்துக்கிட்டே எதுக்குப் பேசனும்..?’ என்றுதான் அவள் நினைத்தாள்...

“ஆனாலும் நேகா.. நீ மதுரைக்கு ஒரு டிரிப் வந்து விட்டுப் போகிறது பெட்டர்ன்னு என் மனதுக்குப் படுதும்மா...”

‘உங்க மனதுக்கு படுதுன்னா.. அதுக்கு நான் மதுரைக்கு கிளம்பி வரனுமா..? நல்லாயிருக்கே கதை..’

இதைச் சொல்லத்தான் அவள் வாய் திறந்தாள்.. அதற்குள் பார்த்தசாரதி முந்தி விட்டார்..

“இங்கே அர்ஜீன் ஒரு கடையை வாங்கியிருக்கான் நேகா...”

“கடையா..?” விளக்கெண்ணையை குடித்தவளைப் போல முகத்தை வைத்துக் கொண்டு கேட்டாள் நேகா...

அர்ஜீனின் பெயரைக் கேட்டதும் அவளுக்கு மறுக்க வேண்டும் என்ற எண்ணமில்லாமல் போய்விட்டது..

அர்ஜீன் சென்னையில் இல்லை என்பதை அவள் அறிவாள்.. அவனுடைய வியாபாரம் வெளிநாடுகளில் கொடிகட்டி பறப்பதையும் அவள் அறிவாள்.. அடிக்கடி அவன் வெளிநாட்டிற்கு பறந்து விடுவதையும் அவள் அறிவாள்.. இந்த முறை அவன் கனடாவில் இரண்டு மாதங்களுக்கும் மேலாக தங்கி விட்டதையும் அவள் அறிவாள்...

‘ஒருவேளை.. கனடாவில் இருந்து அர்ஜீன் நேராக மதுரைக்கு போய் விடுவானோ.. அங்கே எங்களை பழக விடலாம்ன்னு அங்கிள் நினைக்கிறாரோ...’

‘ஆம்’ என்று அவள் நினைவை உறுதி செய்தார் பார்த்தசாரதி...

“அர்ஜீனுக்கு இந்தக் கடைமேல ஒரு ஆர்வம்.. ஒரு பிஸினெஸ் விசயமா மதுரைக்கு வந்தவன்.. இந்தக் கடை விலைக்கு வருகிறதைக் கேள்விப்பட்டதும் வாங்கிப் போட்டுட்டான்...”

“ஐ ஸீ.. அது என்ன கடை அங்கிள்..?”

“கம்ப்யூட்டர் சேல்ஸ் கடை நேகா...”

“ஓ...”

அர்ஜீன் அப்படியொன்றும் குறைவாக எதையும் வாங்கி விடவில்லை என்ற நினைவுடன் உதடுகளைக் குவித்தாள் நேகா...

“அவன் இந்தியாவுக்கு வந்தால் சென்னையில் கூடத் தங்க மாட்டான்.. அர்ஜன்ட் வொர்க்கை முடிச்சுட்டு உடனடியாக மதுரைக்கு வந்து விடுவான்...”

அது எப்பேற்பட்ட தகவல் என்று நேகாவிற்குத்தான் தெரியும்.. அவளும் இரண்டு வருடங்களுக்கும் மேலாக சென்னைக்குள் அர்ஜீனை நெருங்கி விட வேண்டுமென்று பகீரத பிரயத்தனம் செய்து கொண்டிருந்தாள்.. நடக்கவில்லையே.. அதுவே மதுரையாக இருந்தால்.. அவளால் அர்ஜீனை நெருங்கிவிட முடியுமோ...?

முடியும் என்று சொன்னார் பார்த்தசாரதி..

“இந்த வீக் என்டில அர்ஜீன் கனடாவிலிருந்து ரிட்டர்ன் ஆகி விடுவான் நேகா.. வந்தவுடன் மதுரைக்குத் தான் அவன் வருவான்.. நீ இப்போதே கிளம்பி என் கெஸ்டா மதுரைக்கு வந்து ஸ்டே பண்ணிட்டா.. அவனைப் பார்க்கத்தான் நீ வந்திருக்கிறதா அவனுக்குத் தோன்றாது.. மதுரையைச் சுற்றிப் பார்க்க நீ வந்திருக்கிறதா நான் சொல்லிக்குவேன்...”

‘இதுகூட பெட்டர் ஐடியாவாத் தோணுதே...’ என்று யோசித்தாள் நேகா...

பார்த்தசாரதி சொல்வதைப் போல அர்ஜீன் மதுரையில் இருக்கும் போது அவள் போனால்.. அவனைப் பார்க்க அவள் வருகிறாள் என்றுதான் அவன் நினைத்துக் கொள்வான்..

அதுவே பார்த்தசாரதி சொல்கிறதைப் போல மறுநாளே அவள் கிளம்பிப் போனால்.. அர்ஜீன் மதுரைக்கு வருகின்றபோது அங்கே ஊரைச் சுற்றிப் பார்க்க வந்திருக்கும் விருந்தாளியாக அவள் அவனை எதிர் கொள்ளலாம்.. பின்னாளில்

'என்னைப் பார்க்கனும்னு பிளான் பண்ணித்தானே மதுரைக்கு வந்தீங்க...' என்று அவனிடமே கேட்கவும் செய்யலாம்...

நினைக்கும் போதே நெஞ்சம் இனிக்க.. அவள்...

"ஓகே.. அங்கிள்.." என்று சொல்லிவிட்டாள்...

"அப்ப.. நாளைக்காலையில் உன்னை ரிஸீவ் பண்ணிக்கவா..?" என்று பார்த்தசாரதி கேட்டதும்...

"நாளைக் காலையிலா..? அப்ப.. இன்றைக்கு நைட்டே என்னைக் கிளம்பச் சொல்கிறீங்களா..?" என்று நேகா கேட்டாள்...

"நோ நேகா.. பிளைட்டைப் பிடிச்சா மூன்று மணி நேரம்.. ஏர்லி மார்னிங் கிளம்பினா.. பிரேக் பாஸ்டுக்கு இங்கே வந்துவிட மாட்டாயா..?"

பார்த்தசாரதியின் கோரிக்கைப்படி நேகா காலை உணவுக்கே மதுரைக்கு வந்து விட்டாள்...

# 83

*என் விழியோர நினைவுகளில்..*
*நீ குடியிருக்க ஆசைகொண்டேன்...*

**நே**காவிற்காக.. பார்த்தசாரதி நண்பரின் கெஸ்ட் ஹவுஸை ரெடியாக வைத்திருந்தார்.. அதில் சமைத்துப் போட.. காரோட்ட என்று இரண்டு வேலையாள்கள் இருந்தார்கள்.. நேகா மதுரை விமான நிலையத்திலிருந்து வெளியே வரும்போதே அவளை அழைத்துச் செல்ல கார் தயார் நிலையில் காத்திருந்தது..

பார்த்தசாரதியின் ஏற்பாடுகளில் மனம் குளிர்ந்து விட்டாள் நேகா.. அவருக்கும் அதுதானே வேண்டும்.. சென்னையை விட்டு நகர விரும்பாத நேகாவை அவர் மதுரையில் பிடித்து வைத்தாக வேண்டுமே... அர்ஜீன் வருவதற்குள் காவ்யாவை ஒரு வழி பண்ண வேண்டுமென்றால் அதை அவர் தனித்துச் செய்ய முடியாதே...

காவ்யா மனதளவில் தைரியமானவளாக இருந்தாள்.. நீ என் காதலனின் அப்பாவா..? இருக்கட்டுமே.. நீ எனக்கு மரியாதை கொடுத்தால்.. நானும் உனக்கு மரியாதை

கொடுப்பேன்.. நீ திமிர் காட்டினால்.. நான் உன்னை விட அதிகமாக திமிர் காட்டுவேன் என்று பார்த்தசாரதிக்கு தெள்ளத் தெளிவாக உணர்த்தி விட்டாள்...

அந்த மனதைரியத்தை பார்த்தசாரதி உடைக்க வேண்டியிருந்தது.. அதை அவரால் செய்ய முடியாது.. யோசித்துப் பார்த்தார்.. நேகாவை வரவழைத்து விட்டார்...

அவளிடமும் அவர் அர்ஜீனின் காதல் விவகாரத்தை கொட்டிக் கவிழ்த்து விடுவதாக இல்லை...

அவருக்குத் தெரியும்... பெண்கள் சூட்சும புத்தி கொண்டவர்கள்.. நிச்சயமாக நேகா காவ்யாவை அடையாளம் கண்டு கொள்வாள்.. அதன் பிறகு ‘காதல் வாழ்க’ என்று அர்ஜீனின் பாதையிலிருந்து விலகிச் சென்று விடுவாளா.. என்ன..?

அவள் ஒருநாளும் அதைச் செய்ய மாட்டாள் என்பதை பார்த்தசாரதி உணர்ந்து வைத்திருந்தார்..

நேகா அர்ஜீனை விட்டுக் கொடுக்க மாட்டாள்.. இரண்டு வருடங்களுக்கும் மேலாக அவன் கவனத்தைக் கவர முயற்சி செய்பவள்.. அவ்வளவு எளிதாக விட்டு விலகி விட மாட்டாள்.. அர்ஜீனைத் தக்க வைத்துக் கொள்ள அவள் எதை வேண்டுமென்றாலும் செய்வாள்..

பார்த்தசாரதிக்கு அதுதான் வேண்டியிருந்தது.. சில வியாபார ஒப்பந்தங்களைப் பெற நேகா கையாளும் குறுக்கு

வழிகளைப் பற்றி அவர் அறிந்து வைத்திருந்தார்.. போட்டியாளர்களை பொய்யானவர்களாக அவள் உருவகப் படுத்தி ஒப்பந்தங்களைப் பெற்ற அநியாய வெற்றிக் கதைகள் அவர் செவிகளை எட்டியிருந்தன.. என்ன ஒன்று.. அவை அவர் செவிகளை எட்டுவதற்கு முன்னாலேயே அர்ஜீனின் செவிகளையும் எட்டித் தொலைத்திருந்தன..

“இப்படிச் செய்யலாமா..?” அவன் முகம் சுளித்தான்..

“பிஸினெஸ்ஸில் ஜெயிக்க எதையும் செய்யலாம்..” பார்த்தசாரதி நேகாவை ஆதரித்தார்..

“அதுக்காக தேர்ட் ரேட் வேலைகளில் இறங்கனுமா..?”

“எந்த வழியா இருந்தாலும் அதன் முடிவு வெற்றியா இருக்கனும் அர்ஜீன்.. நேகா அதைத்தான் செய்துகிட்டு இருக்கா..”

“இப்படிப்பட்ட வெற்றிகள் எனக்குப் பழக்கமில்லைாதவை டாடி...”

அர்ஜீன் நேகாவின் நிழலைக் கண்டால்கூட விலகிப் போவதற்கு இதுவும் ஒரு காரணம்..

அந்த நேகா மதுரைக்கு வந்து சேர்ந்தால்தான் அர்ஜீனின் காதலைச் சமாளிக்க முடியும் என்று

பார்த்தசாரதிக்கு தோன்றி விட்டது.. அவரும் வரவழைத்து விட்டார்..

நேகா பயண அயர்வு போக சிறிது நேரம் ஓய்வெடுத்தாள்.. குளித்து உடைமாற்றி அறையை விட்டு வெளியே வந்தபோது பார்த்தசாரதி அவளுக்காக காத்திருந்தார்..

“சாப்பிடப் போகலாமா நேகா..?”

“எங்கே அங்கிள்..? இங்கே ஒரு லேடி இருந்தாளே..”

“இருக்கிறாம்மா.. சிந்தாமணி...”

“அவ குக் தானே..”

“யெஸ்...”

“அவ பிரேக் பாஸ்டை ரெடி பண்ணலியா..?”

“பண்ணியிருக்கா.. பட்.. உனக்கு அது பிடிக்குமோ.. பிடிக்காதோன்னு யோசிச்சேன்.. இங்கே ஸ்டார் ஹோட்டல்ஸ் இருக்கு நேகா.. நாம அங்கே சாப்பிடப் போகலாம்...”

“குக் பிரிபேர் பண்ணினதை டேஸ்ட் பண்ணிப் பார்க்கிறேன் பிடிக்கலைன்னா அங்கே போகலாம்...”

பார்த்தசாரதி சந்தோசமாகி விட்டார்.. சிந்தாமணியின் கைச்சமையலின் ருசியை அவர் சாப்பிட்டுப் பார்த்திருக்கிறார்...

'ஸோ.. வெட்டியாய் டயத்தை வேஸ்ட் பண்ண வேண்டியதில்லை...'

நேகாவிற்கு சிந்தாமணியின் சமையல் பிடித்திருந்தது..

"எக்ஸலெண்ட்..." என்று பாராட்டியவள் சிந்தாமணியை அழைத்து ஆயிரம் ரூபாய் நோட்டொன்றை உறுவி நீட்டினாள்...

"எதுக்கும்மா..?" அவள் திகைத்தாள்..

"உன் சமையலின் ருசி என்னை இம்ப்ரெஸ் பண்ணிடுச்சு.. வைத்துக்க.."

"எனக்கு சம்பளம் கொடுக்கிறாங்கம்மா..."

"நான் பிரஸென்டா கொடுக்கிறேன்..."

சிந்தாமணி தயங்கியபடியே வாங்கிக் கொண்டாள்.. பணத்தைப் பார்த்ததும் விழுந்தடித்துக் கொண்டு அதை வாங்காமல் மிரண்டுபோன அவளின் மிரட்சியில் நேகாவின் புருவங்கள் உயர்ந்தன...

பணத்திற்கு ஆசைப்படாத எளிய மக்களும் இருக்கிறார்களா..?

"இங்கே அப்படித்தான்" என்றார் பார்த்தசாரதி...

"பட்.. அவளுக்கு நல்ல சேலரி கொடுக்கிறாங்க... நீ எதுக்காக பணம் கொடுக்கனும்..? வாய்க்கு ருசியா இருந்தா வாயாலே பாராட்டினாப் போதுமே.. வாய்க்கு ருசியா சமைத்துப் போடறதுதானே அவ டியுட்டி..?"

“நான் கொடுத்த பணம் அவ சமையலுக்காக இல்லை அங்கிள்...” என்றாள் நேகா...

“பின்னே..” பார்த்தசாரதி திகைத்தார்...

“நான் எந்த இடத்தில் இருந்தாலும்.. அந்த இடத்தில் என் விசுவாசிகள் தான் இருக்கனும்.. விசுவாசிகள் பணத்தினால்தான் உருவாகுவார்கள்.. இந்தச் சிந்தாமணியை என் விசுவாசியாக்க நான் எடுத்த முதல் ஸ்டெப் இது...” அலட்சியமாக சொன்னாள் நேகா...

“ஓ...” அவளின் ஆழ்ந்த திட்டத்தில் பார்த்தசரதி ஆச்சரியப்பட்டுப் போனார்...

அவர்முன் மகாபாரத இதிகாசம் விரிந்து நின்றது...

பாண்டவர்களிடம் பலம் இருந்தது.. பகவான் கிருஷ்ணன் அவர்களுக்கு பக்க துணையாக நின்றார்...

துரியோதனனின் பக்கமோ மாவீரர்களின் கூட்டம் நிறைந்திருந்தது... உடன்பிறந்த தம்பிகள் என்று தெரிந்திருந்தும் துரியோதனனுக்காக உயிரை விடத் துணிந்து கர்ணன் இருந்தான்... சொல்லிக் கொள்ள எத்தனையோ உயர் அடையாளங்கள் இருந்தாலும் நான் துரோணரின் சீடன் என்றுதான் அர்ஜீனன் சொல்லியிருக்கிறான்.. அந்த துரோணர் பெற்ற மகனான

அசுவத்தாமன் துரியோதனனின் மீது உயிரையே வைத்திருந்தான்.. தந்தையின் சீடன் என்ற பெருமையை மட்டும் சொல்லிக் கொள்ளும் அர்ஜீனனுக்கு எதிராக அவன் யுத்த களத்தில் நின்றான்.. இவ்வளவு ஏன்... பாண்டவர்களில் இளையவர்களும்.. பாண்டுவின் இளைய மனைவி மாத்ரியின் புத்திரர்களுமான நகுல, சகாதேரர்களின் தாய் மாமனான சல்லியன்.. அவனுடைய உடன்பிறந்த தங்கையான மாத்ரியின் புத்திரர்களுக்கு எதிராக துரியோதனனுக்கு ஆதரவாக களம் இறங்கினான்.. ஏன்..?

அவர்கள் அனைவரையும் தன்னிடம் நன்றிக்கடன் பட வைத்திருந்தான் துரியோதனன்.. அவனுக்கு விசுவாசிகளை உருவாக்கும் வித்தை தெரிந்திருந்தது...

அந்த வித்தையைக் கற்றிருந்தாள் நேகா.. என்ன ஒன்று.. துரியோதனன் உண்மையான அன்பையும்.. நட்பையும்.. பாசத்தையும் காட்டி விசுவாசிகளை உருவாக்கினான்.. நேகா அதையெல்லாம் கிலோ என்ன விலை என்று கேட்கக் கூடியவள்.. அவள் விசுவாசிகளை உருவாக்க பணத்தை மட்டுமே பயன்படுத்தினாள்...

“வெல்டன் நேகா..” மனதார பாராட்டினார் பார்த்தசாரதி...

நேகா.. அசுவராஸ்யமாக முகத்தை வைத்துக் கொண்டு லேப்டாப்பை கையில் எடுத்தாள்..

“இதை அப்புறம் பார்த்துக்கலாமே..” என்றார் பார்த்தசாரதி..

“மெயில் செக் பண்ணி.. பதில் மெயில் அனுப்பியாகனும் அங்கிள்.. இந்த ஊரில் சுத்திப் பார்க்க என்ன இருக்கு...?” தோள்களைக் குலுக்கினாள் நேகா...

இருந்தன.. நிறைய இருந்தன.. தொன்மையான ‘மீனாட்சியம்மனின் கோவில்’ மதுரையில்தான் இருந்தது.. ஒவ்வொரு தூணிலும் ஓராயிரம் சிற்பங்களைச் செதுக்கியிருக்கும் ‘ஆயிரம்கால் மண்டபம்..’ மதுரையில் தான் இருந்தது.. வெண்ணிற கடைசல்களுடன் கூடிய ‘திருமலை நாயக்கரின் மஹாலும்’ மதுரையில்தான் இருந்தது.. ஆறுபடை வீடுகளில் ஓர் படைவீடான ‘திருப்பரங்குன்றமும்’ மதுரையில்தான் இருந்தது.. தங்கைக்கு சீர் செய்யும் அண்ணனின் சந்தோசத்தையும்.. முக்கியத்துவத்தையும் உணர்த்த ஒவ்வொரு சித்திரை திருவிழாவிலும் வைகையாற்றில் இறங்கும் ‘அழகர்’ குடி கொண்டிருந்த ‘அழகர் கோவிலும்’ மதுரையில் தான் இருந்தது.. அருகிலிருந்த மலையின் சோலையில் ‘பழமுதிர் சோலையாக..’ மற்றொரு படைவீட்டில் முருகன் குடி கொண்டிருந்த தலமும் மதுரையில்தான் இருந்தது..

“என்ன நேகா இப்படிச் சொல்லிட்ட..? இங்கே மீனாட்சியம்மன் கோவில் இருக்கு.. அழகர் கோவில் இருக்கு.. திருப்பரங்குன்றம் முருகன் தெய்வானையை மேரேஜ் பண்ணிக்கிட்ட கோவில்.. பழமுதிர் சோலையில வள்ளியோட முருகன் நின்றிருக்கிற காட்சியைக் காணக் கண்கோடி வேணுமே...”

“இங்கே கோவில்களாத்தான் இருக்குமா...”

“இதுக்குப் பெயரே கோவில் நகரம்தானேம்மா..”

“தூங்கா நகரம்ன்னுதான மதுரையைச் சொல்லுவாங்க...?”

“கோவில் நகரம்ன்னும் சொல்வாங்க.. நீ சித்திரைத் திருவிழாவைப் பார்க்கனுமே..”

“அதை சித்திரை மாதம் பார்க்கிறேன் அங்கிள்.. இப்ப வேலையைப் பார்க்கிறேன்...”

“அதுக்கு முன்னாலே அர்ஜீன் வாங்கியிருக்கிற கடையை நீ பார்க்கனுமே...”

“ஓ.. அங்கிள்.. ஐ ஹேவ் நோ இன்ட்ரெஸ்ட்.. அந்தக்கடையைப் பார்க்கவா நான் வந்தேன்..?”

‘நீ சொன்னாலும்.. சொல்லாவிட்டாலும் அதைப் பார்க்கத்தான் நீ வந்திருக்கிறாய்...’ என்று நினைத்துக் கொண்ட பார்த்தசாரதி

“அது அர்ஜீனோட கடை நேகா.. நீ அவனுடைய வுட்பி.. அந்தக் கடையின் எம்.டியின் வுட் பிங்கிற ஹோதாவில நீ அங்கே போய் நின்றால் எவ்வளவு நன்றாயிருக்கும்..?” என்று கேட்டார்..

அந்த வார்த்தைகளில் லேப்டாப்பை மூடிவிட்டு நேகா எழுந்து கொண்டாள்...

“ஓகே.. போகலாம்...”

எதனை.. எதன்கண்ணால் முடிக்க வேண்டும் என்று வள்ளுவப் பெருந்தகை சொல்லிக் கொடுத்திருக்கிறார்...

பார்த்தசாரதியோ.. எவரை.. எந்த வார்த்தைகளால் முடுக்க வேண்டும் என்று கற்று வைத்திருந்தார்..

அர்ஜீனின் வருங்கால மனைவி.. அவனுடைய கடைக்கு வருகை தரப் போகிறாள்...

இந்த வார்த்தைகள் தரும் போதை நேகாவைக் கிளப்பிவிட்டு விடும் என்பதை அவர் தெளிவாக அறிந்து வைத்திருந்தார்.. அவற்றை பிரயோகித்தார்.. நேகா கிளம்பி விட்டாள்...

அதே வார்த்தைகள் காவ்யாவை நோக்கிப் பாயும் போது அவள் என்ன நிலைமைக்கு ஆளாவாள் என்பதை நினைத்துப் பார்த்த பார்த்தசாரதயின் இதழ்களில் குரூரப் புன்னகை தவழ்ந்தது...

நேகா கடைக்குள் கால் வைத்தபோது.. எதிர்பட்ட பாவனாவை அழைத்த பார்த்தசாரதி..

“உனக்கு ஆரத்தி எடுக்கத் தெரியுமா..?” என்றார்..

“தெரியாதே சார்..” அவள் விழித்தாள்..

“காவ்யாவுக்கு தெரியுமா..?”

“தெரிந்திருக்கலாம்.. அதுவும் எனக்குத் தெரியாது..”

“உனக்கு வேறு என்னதான் தெரியும்..?”

“கம்யூட்டர் தெரியும்.. கடையின் கணக்கு வழக்கைப் பார்க்கத் தெரியும்.. யு நோ.. அதற்காகத்தான் நான் சேலரி வாங்கறேன்...”

முகத்தில் அடித்ததைப் போல பாவனா பதில் சொல்ல நேகா முகம் மாறினாள்.. பார்த்தசாரதி அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.. அவருக்கு தேவையானது ஒன்றே.. ஒன்றுதான்...

“காவ்யா..” கடைக்குள் நுழைந்த காவ்யாவை நிறுத்தினார்..

“இவள் என் மருமகள் நேகா.. அர்ஜீனின் வருங்கால மனைவி.. இவளுக்கு ஆரத்தி எடுத்து கடைக்குள்ள கூப்பிட்டுக்கிட்டுப் போ..”

# 84

*நீ செல்லும் இடமெல்லாம் - உன்*
*நிழலாகிவிட ஆசைகொண்டேன்...*

**த**லைமேல் இடி விழுவது என்பது இதுதானோ... என்று ஸ்தம்பித்துப் போனாள் காவ்யா.. அவள் கண்களில் அதிர்ச்சி தெள்ளத் தெளிவாக தெரிந்தது.. அதை நேகா கண்டு கொண்டாள்.. முகம் மாறினாள்...

‘என்னை அர்ஜீனோட வுட் பின்னு சொன்னா... இவள் எதற்காக ஜெர்க் ஆகிறா..’ நேகா காவ்யாவை ஏற இறங்கப் பார்த்தாள்...

‘ஹீர்ரே..’ என்று மனதிற்குள் கூவிக் கொண்டார் பார்த்தசாரதி..

நேகா காவ்யாவை கண்டு கொண்டாள் என்பதை அவரும் கண்டு கொண்டார்...

‘இது.. இது.. இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்...’

கள்குடித்த நரியாக மாறினார் பார்த்தசாரதி... நேகா காவ்யாவை பார்வையிடுவதை அவர் பார்வையிட்டார்.. நேகாவின் முகச் சுளிப்பு அவளுக்கு காவ்யாவைப் பிடிக்கவில்லையென்று அறிவித்தது...

விரித்து விட்ட தலைமுடியும்.. ஜீன்ஜீம்.. முழுக்கை காட்டன் சர்ட்டும்.. இடுப்பில் ஸ்டைலான பெல்டுமாக இருந்தவளின் முகத்தில் தெரிந்த அலட்சியத்தில் காவ்யா வெகுவாக பாதிக்கப் பட்டாள்...

நேகா அழகுதான்.. பெண்மை மிளிராத.. வேறு வகையான அழகு அவளுடையது.. அவள் அல்ட்ரா மாடர்ன் அழகி.. வெளுப்பான சருமமும்.. கரிய நிறக் கண்களுமாக.. எதிராளியை ஒரே பார்வையில் அடித்துப் போட்டு விடும் அலட்சிய ஆற்றல் அவளுடையது...

காவ்யா இயற்கையான வனப்பின் வார்ப்பு.. நீண்ட கூந்தலும்.. மஞ்சள் நிறமும் அவளுக்கு இயற்கை தந்த நன்கொடை.. வட்ட முகமும்.. நீள்வடிவக் கண்களும் அவளுக்கு மதுரை மாநகர் தந்த சீதனம்.. என்னதான் துடுக்குத்தனமான பேச்சும்.. துடிப்பான சுபாவமும் அவளிடம் இருந்தாலும் அவளிடம் தெரிந்த பெண்மையின் மிளிர்வு.. அவளைத் தனித்து காட்டியது...

அந்த இயற்கையழகில் நேகா வெகுண்டாள்.. இது போன்ற அழகான ஒரு பெண்ணை அர்ஜீனின் கடையில் அவள் எதிர் பார்த்திருக்கவில்லை.. மதுரையில் அந்தக் கடையை வாங்கிய பின்பு அர்ஜீன் அதிகமாக சென்னையில் தங்குவதில்லை.. மதுரைக்கே பறந்து விடுகிறான் என்ற விவரம் அவள் அறிவுக்கு உறைத்தது...

‘ஓ.. இதான் ரீஸனா...’

காவ்யாவின் கண்களில் தெரிந்த அதிர்ச்சி.. நிச்சயமாக அவளுக்கும்.. அர்ஜீனுக்கும் இடையில் ஏதோ சம்பந்தம் இருக்கிறது என்பதை நேகாவுக்கு தெள்ளத் தெளிவாக உணர்த்த..

‘இவளெல்லாம் எனக்கு இணையா..?’ என்ற இகழ்ச்சிப் பார்வையுடன் பார்த்தசாரதியின் பக்கமாக திரும்பினாள் நேகா...

“என்ன அங்கிள்.. நீங்க ஆரத்தி எடுக்கச் சொன்னா.. இந்தப் பெண் அசையா மரமாய் நிற்கிறா..? அர்ஜீன் கடையில வேலை செய்கிற லேபருக்கு.. ஓபிடியன்ட்ன்னா என்னன்னு சொல்லிக் கொடுக்கலையா...?” என்று மிதப்பாக வினவினாள்...

‘லேபரா...’ வெகுண்டு போய் நிமிர்ந்தாள் காவ்யா...

‘ஆஹா.. களை கட்டுதே..’ மனதுக்குள் மகிழ்ந்து போனார் பார்த்தசாரதி...

“என்னத்தைச் சொல்ல நேகா.. கடையை டேக் ஓவர் பண்ண நான் வந்திருக்கனும்.. அப்படி வந்திருந்தா இப்படிப்பட்ட லேபர்ஸை விட்டு வைச்சிருக்க மாட்டேன்.. கடையில வேலை செய்கிற அத்தனை பேரையும் டோட்டலா மாத்தியிருப்பேன்...” உண்மையாகச் சொன்னார் பார்த்தசாரதி...

அதில் காவ்யாவின் முகம் கன்றியது.. நேகாவிற்கோ மகா சந்தோசமாக இருந்தது.. பார்த்தசாரதிக்கு காவ்யாவை பிடிக்கவில்லை என்பதை அவள் புரிந்து கொண்டாள்.. அந்த ஒன்றிற்காகவே பார்த்தசாரதியின் மீது அவளுக்குள் பாசம் பொங்கியது...

“யு ஆர் அப்சல்யூட்லி கரெக்ட் அங்கிள்..” மனதார பாராட்டினாள் நேகா...

“எப்பவுமே நம்ம கடையில வேலை செய்கிறவங்க நம்ம ஆர்டரை ஒபே பண்றவங்களா இருக்கனும்.. அது நாம செலக்ட் பண்ற லேபரா இருக்கிறதுதான் பெட்டர்.. மத்தவங்க அப்பாயிண்ட்மென்ட் பண்ணின ஆளா இருந்தா.. நம்ம மேல இவங்களுக்கு எப்படி பயம் வரும்..?”

‘பயமா..? எதுக்காக பயப்படனும்..? யாருக்காக பயப்படனும்..?’

காவ்யா பல்லைக் கடித்தபடி பாவனாவை பார்த்தாள்.. பாவனாவுக்கும் அதே நினைவுதான் என்பது பதிலுக்கு அவள் பார்த்த பார்வையிலிருந்தே தெரிந்தது...

“யு ஆர் கரெக்ட் நேகா..” பதிலுக்கு நேகாவை பாராட்டினார் பார்த்தசாரதி..

“அட்மினிஸ்ட்ரேசன் வியூ உங்கிட்ட பெட்டரா இருக்கு.. இதைத்தான் அர்ஜீனிடம் நான் சொன்னேன்..

அவன் நேட்டிவிட்டி.. அது.. இதுன்னு கதையளக்கிறான்..” அலுத்துக் கொண்டார்...

“என்னடி இது.. முதல்ல இவ அவரப் பாராட்டினா.. பதிலுக்கு அவரு இவள பாராட்டறாரு.. இதுக ரெண்டும் ஒன்னுக்கொன்னு பாராட்டிக்கிறதைக் வேடிக்கை பாக்கவா நாம வந்திருக்கோம்...?” காவ்யாவின் காதோரமாக கிசுகிசுத்தாள் பாவனா...

கடையில் இருந்த அனைவரும்... வாசலில் நடந்த இந்த நாடகத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்... அதை ஜாடையாக கவனித்த காவ்யாவிற்கு அப்படியே திரும்பிப் போய் விடலாமா என்று தோன்றியது...

‘வேலையை விட்டு விடு..’

முதல்நாள் மாலையில் பூஜையறையில் குலுக்கிப் போட்ட சீட்டில் வந்த கடவுளின் கட்டளை அவளுக்கு நினைவுக்கு வந்தது...

‘போய்த்தான் ஆகனுமா..?’ துக்கத்துடன் அவள் கேட்டுக் கொண்டாள்...

“பொறுமையா இருடி.. நான் வரும் வரைக்கும் அங்கேயிருந்து நீ நகரக் கூடாது..” அர்ஜீனின் கட்டளை அவள் மனதில் ஒலித்தது...

கடவுளின் கட்டளையா..? காதலனின் கட்டளையா..?

இரண்டுக்கும் இடையில் மனதில் போராடியபடி கடைக்கு வந்தவளுக்கு ஏன் அந்தக் கட்டளையை கடவுள் அவளுக்குத் தந்தார் என்ற காரணம் புரிந்தது..

'அவனன்றி ஒர் அணுவும் அசைவதில்லை..' மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் காவ்யா...

காரணகாரியம் இன்றி எதுவும் நடப்பதில்லை... அழகர் கோவிலுக்குப் போ என்று உத்தரவு கொடுத்த கடவுள் எதற்காக வேலையை விட்டுப் போ என்ற உத்தரவை அவளுக்கு கொடுக்க வேண்டும்..?

"இப்ப என்ன செய்யலாம் அங்கிள்.. இந்தப் பெண் எனக்கு ஆரத்தி எடுக்கப் போகிறாளா.. இல்லையா..?" ஆணவத்துடன் கேட்டாள் நேகா...

'அதுக்குத்தான நான் காத்திருக்கேன்..' பல்லைக் கடித்தாள் காவ்யா...

"காவ்யா.." உத்தரவாக அவளைப் பார்த்தார் பார்த்தசாரதி...

"எனக்கு ஆரத்தின்னா என்னன்னே தெரியாது சார்.." காவ்யா ஒரே போடாக போட்டுவிட்டாள்...

பாவனாவது ஆரத்தி எடுக்கத் தெரியாது என்று தான் சொன்னாள்.. காவ்யா அதையும் தாண்டி.. அப்படி ஒன்று இருக்கிறதா என்ற பாவனையில் கேட்டு வைக்க.. பற்களை நறநறத்தார் பார்த்தசாரதி...

‘மதுரையில் பிறந்து வளர்ந்தவளுக்கு ஆரத்தின்னா என்னன்னே தெரியாதா..?’

சங்கம் வளர்த்த மதுரை.. தமிழகத்தின் பாரம்பர்யத்தின் பெருமைகளையும்.. கலாச்சாரத்தையும் கட்டிக்காப்பது.. தென் தமிழகம் என்ற பெயர் கொண்டது.. அந்த ஊரைச் சேர்ந்த பெண்ணுக்கு.. ஆரத்தி எடுப்பது என்றால் என்னவென்று தெரியாது என்று சொன்னால் அதைக் கைக்குழந்தை கூட நம்பாது.. பேரன்.. பேத்தி எடுத்த தாத்தாவான பார்த்தசாரதி எப்படி நம்புவார்..?

“ஏம்மா.. உனக்கு ஆரத்தின்னா என்னன்னு தெரியாதா..?” அவர் அதட்டினார்...

‘அடக்கி வாசிங்க மாமனாரே.. எந்தக் காட்டு சிறுக்கியையோ கொண்டு வந்து என் முன்னே நிப்பாட்டிட்டு.. இவதான் உன் காதலனுக்கு பொண்டாட்டியா வரப் போறா.. ஆரத்தி எடுன்னு எங்கிட்டயே சொல்றீங்களே.. உங்களுக்கு எவ்வளவு தெனாவெட்டு இருக்கனும்..? இருக்கு மாமனாரே.. உங்க வீட்டில மருமகளா.. உங்க மகனுக்கு பொண்டாட்டியா.. வலது கால எடுத்து வைச்சு நான் உங்க வீட்டுக்குள்ள நுழையனும்.. அப்புறம் இருக்கு உங்களுக்கு..’ மனதுக்குள் கருவிக் கொண்ட காவ்யா...

“எனக்குத் தெரியாதே சார்..” என்று கண்களை விரித்துவிட்டு..

"உனக்குத் தெரியுமாடி பாவனா.." என்று தோழியிடம் கேட்க வேறு செய்தாள்..

"கொஞ்சம்.. கொஞ்சம்.. தெரியும்டி.." பாவனா உடனடியாக கூட்டுச் சேர்ந்தாள்...

"ஏய்.. ஏய்.. எனக்குச் சொல்லுடி..."

"வட்டமா தட்டிருக்கனும்.."

"அப்புறம்..?"

"தட்டுக்குள்ள தண்ணியிருக்கனும்.."

"அப்புறம்..?"

"தண்ணி சிகப்பா.. இல்லயில்ல.. மஞ்சளா.. அதுவுமில்ல.. பச்சையா இருக்கனுமுன்னு நினைக்கிறேன்.."

"சிகப்பா.. மஞ்சளா.. இல்ல பச்சையா..? ஏதாவது ஒரு கலரைச் சொல்லு.."

"எனக்கே ஐடியா இல்லைடி.. ஏன் இளங்கோ.. நீங்கதான் புதுசா கல்யாணமானவரு... உங்க கல்யாணத்தில ஆரத்தி எடுத்திருப்பாங்கள்ல..? நீங்களே சொல்லுங்க.. அது சிகப்பா.. மஞ்சளா.. இல்ல பச்சையா..?"

'இந்த விளையாட்டில என்னை இழுக்காதீங்கம்மா.. நான் புதுசா கல்யாணமானவன்.. இந்த வேலயக் காட்டித்தான் பொண்ணக் கட்டியிருக்கேன்.. அதுக்கு

வேட்டு வைச்சிராதீங்க..' கண்களால் அலறிய இளங்கோ.. பாவனா கேட்டது காதில் விழுகாததைப் போல.. அவசர வேலையாக உள்ளே செல்வதைப் போல கடையின் பின்பக்கமாக இருந்த அலுவலகப் பகுதிக்குள் ஓடி ஒளிந்து கொண்டான்...

"பாவம்.. அவரே கன்பியூஸ் ஆயிட்டாருடி காவ்யா.."

"இளங்கோவுக்கே தெரியலைன்னா யாருக்குத் தெரியும்..?"

"ஏகாம்பரம் சாரைக் கேட்டுப் பார்க்கலாமா..?"

"பாவம்.. அவரே கை நடுங்கின கேஸ்.. அவர் ஆரத்தி எடுத்தா கை நழுவி தட்டு கீழே விழுந்துராதா..? இட்ஸ் டூ பேட் காவ்யா..."

பாவானாவின் வார்த்தைகளில் நேகாவிற்கு கோபம் வந்தது.. என்னதான் ஆரத்தி விசயத்தில் அவளுக்கு ஈடுபாடு இல்லையென்றாலும்.. முதன் முதலாக அர்ஜீனின் கடைக்கு வந்திருப்பளை.. ஆரத்தி எடுக்கும் போது தட்டு கீழே விழுந்து விடும்என்ற சொல்லை அவள் விரும்பவில்லை..

'கொஞ்சமாவது முதலாளியின் வுட்பிங்கிற பயமிருக்கா..? இதுகளை வேலையை விட்டு வீட்டுக்கு அனுப்பினால்தான் சரிப்படும்..' அவளுக்கு கோபம் வந்தது...

அவளுக்கென்ன தெரியும்.. அந்த இரண்டு பெண்களும் அந்தக் கடையின் வேலை போவதைப் பற்றிய கவலையற்றவர்கள் என்பது...

நேகா பார்த்தசாரதியைக் குறிப்பாக பார்த்தாள்.. என்னதான் முயற்சி செய்தாலும் காவ்யா அவளுக்கு ஆரத்தி எடுக்க மாட்டாள் என்று அவருக்குத் தெளிவாகத் தெரிந்து விட்டது.. அதே சமயத்தில் பார்த்தசாரதி வாய் விட்டுச் சொன்ன பின்பு ஆரத்தியுடன்தான் அந்தக் கடையில் காலடி எடுத்து வைக்க வேண்டுமென்று நேகா தீர்மானித்து விட்டாள்...

"அங்கிள்.. கெஸ்ட் ஹவுஸீக்கு காரை அனுப்பி சிந்தாமணியை வரச் சொல்லுங்க..."

"எதுக்காக நேகா..."

"அவ வந்து ஆரத்தி எடுக்கட்டும்.. அதுக்கு பிரிப்பேரா வரச் சொல்லுங்க..."

"குட்..."

பார்த்தசாரதி நேகாவை சிலாகித்தபடி.. டிரைவரை அழைத்து விவரம் சொன்னார்.. அடுத்த சில நிமிடங்களில் ஆரத்திக்கான தட்டு.. மஞ்சள்.. வெற்றிலை.. கற்பூரம் சுண்ணாம்புகளோடு சிந்தாமணி வந்து சேர்ந்து விட்டாள்...

அவள் ஆரத்தி கரைத்து.. நேகாவுக்கு ஆரத்தி எடுத்தபோது.. நேகா விழியுயர்த்தி காவ்யாவைப்

பார்த்தாளே ஒரு வெற்றிப் பார்வை.. பார்த்தசாரதியால் முடியாததை அந்த ஒரு பார்வையில் சாதித்து விட்டாள் நேகா... காவ்யாவின் மனதில் பலத்த அடி விழுந்தது...

“வலது காலை எடுத்து வைச்சு வாங்கம்மா...”

சிந்தாமணியின் ஆரத்தியுடன் வலதுகாலை எடுத்து வைத்து கடைக்குள் நுழைந்து விட்டாள் நேகா...

# 85

*என்ன என்ன ஆசைகளோ - என்று..*
*எனை நீ கேட்க ஆசைகொண்டேன்...*

**நே**காவின் ஓர் பார்வையில் நிலைகுலைந்து விட்டாள் காவ்யா.. அவளுடைய அர்ஜீனின் கடையில் அவளின் வருங்கால மனைவியாக ஆரத்தியுடன் நுழைந்து விட்டாள் நேகா.. காவ்யாவுக்கு அதற்கு மேல் அந்தக் கடையில் வேலை பார்க்க விருப்பமில்லை...

‘இதற்குமேல் என்ன இருக்கிறது..?’ அவள் விரக்தியானாள்...

வந்த முதல் நாளிலேயே பார்த்தசாரதி அவளை நின்றால் குற்றம்.. உட்கார்ந்தால் குற்றமென்று.. குற்றம் கண்டுபிடித்து ஒருவழி பண்ணிவிட்டார்... அதைத் தனியாக எதிர்கொள்வதில் காவ்யாவிற்கு ஒரு சிரமமும் இருக்கவில்லை...

ஆனால்.. அதே உதாசினத்தை நேகாவின் முன்னால் அவர் தொடர்ந்தால் காவ்யாவினால் அதைத் தாங்கிக் கொள்ள முடியுமா...?

காவ்யா விடுவிடுவென அலுவலகப் பகுதிக்குச் சென்றாள்.. அவள் பொறுப்பில் முதல்நாள் பார்த்தசாரதியிடம் கொடுத்தது போக மீதிமிருந்த ஃபைல்களை எடுத்தாள்... அடுக்கினாள்...

“என்ன செய்கிற..?” பாவனா விசாரித்தாள்...

“இந்த வேலையே வேண்டாம்டி.. வீட்டப் பாத்து நடயக்கட்டப் போறேன்.. வேலையை விட்டுட்டேன்னு சொன்னா எங்க அம்மா மகிழ்ந்து போயிரும்.. என்னால முடியலை பாவனா...”

“என்னால் மட்டும் முடியுதா..?” நிதானமாக கேட்டாள் பாவனா...

“மரியாதைதாண்டி முக்கியம்.. அதுக்கு வேட்டு வந்தா அந்த வேலை நமக்கெதுக்கு..? ஆனா.. இப்ப நீ வேலையை விட்டுப் போகக் கூடாது காவ்யா...”

“ஏண்டி..?”

“இப்ப நீ வேலையை விட்டுப் போனா.. எங்கிருந்தோ ஒருத்தி வந்தா.. அவ முதலாளியோட வருங்காலப் பெண்டாட்டின்னு ஆபிசுக்குள்ள காலை வைச்சா.. அது பொறுக்காம காவ்யா வேலையை விட்டுப் போயிட்டான்னு கதைகட்டி விடுவாங்கடி.. அது உனக்குத் தேவையா..?”

“யாருடி கதை கட்டுவா..?”

“வேற யாரு...? எல்லாம் நம்ம கடையில வேல பாக்குறதுகதான் கதையைக் கட்டும்க...”

“அதுக கதைய என் அண்ணன் முடிச்சிரும்...”

“முடிச்சு என்ன பண்ண..? கதை.. கதையாத்தான இருக்கும்..? அதனால பொறு...”

“எது வரைக்கும்..?”

“அர்ஜீன் சார் வரும் வரைக்கும்..”

அர்ஜீன் அதைத்தான் செல்போனில் பாவனாவிடம் சொல்லியிருந்தான்.. அவனுக்கும்.. காவ்யாவுக்குமான காதலை பாவனாவிடம் அவன் சொல்லியபோது பாவனாவின் மனதுக்குள் பொறாமை வரத்தான் செய்தது.. ஆனால் பாவனாதான் கிட்டாது என்று ஆனதும் அதைச் சுத்தமாக மறந்து விடுகிறவள் ஆயிற்றே.. அதனால் அந்தப் பொறாமையை அவள் மறந்துவிட்டாள்.. காவ்யாதான்

அர்ஜீனின் காதலி என்பதை மட்டும் நினைவில் வைத்துக் கொண்டாள்...

"எப்படி சார்.. அவதான் ரோசக்காரியாச்சே.. உங்க அப்பா வந்த செகண்டிலருந்து அவளை இன்சல்ட் பண்ணிக்கிட்டே இருக்காரே.. எப்படி அவ வேலையை விடாம இருப்பா..?"

"இருக்கனும் பாவனா.. அப்பா என் காதலை கண்டு பிடித்துட்டாருன்னு தோணுது.. அதான்.. நான் இல்லாத சமயத்தில் அங்கே வந்திருக்கார்..."

"எனக்கும் அவர் ஸ்மெல் பண்ணிட்டாருன்னு தான் தோணுது.. பட்.. நான் காவ்யாவோட பெஸ்ட் பிரண்டு.. உங்களுக்கும்.. அவளுக்கும் நடுவில ஏதோ பிலிம் ஓடுதுன்னு எனக்குத் தெரியும்.. ஆனா.. அது காதல்தான்னு காவ்யா என்னிடம் வாய்திறந்து ஒரு வார்த்தை சொல்லலை.. அவ பக்கத்திலேயே இருக்கிற எனக்கே இது கன்பர்மா தெரியாதுங்கிறப்ப.. எங்கேயோ சென்னையில பிஸினெஸ்ஸில பிஸியா இருக்கிற உங்க அப்பாவுக்கு எப்படி இது தெரிந்தது..?"

"அதுதான் எனக்கும் தெரியலை..."

"யாரு போட்டுக் கொடுத்திருப்பாங்க..?"

"போட்டுக் கொடுக்கனும்னா.. எனக்கும்.. காவ்யாவுக்குமான காதலைப் பற்றி அவங்களுக்குத் தெரிந்திருக்கனுமே.. அதுதான் யாருக்கும் தெரியாதே..."

“அப்படின்னு காதலிக்கிறவங்கதான் நினைச்சுக்கிட்டு இருப்பாங்க.. ஆனா.. எங்கேயாவது.. எப்படியாவது.. விசயம் கசிஞ்சுரும்...”

“நோ சான்ஸ்...”

“நல்லா யோசிச்சுப் பாருங்க சார்.. உங்க ரெண்டு பேரோட காதலைப் பற்றி யாருக்குமே தெரியாதா..?”

மறுமுனையில் யோசித்த அர்ஜீன்...

“ஒரே.. ஒருவருக்குத் தெரியும்.. பட்.. அந்த நபர் போட்டுக் கொடுக்கிற வேலையையெல்லாம் செய்ய மாட்டார்..” என்று சொன்னான்...

“நீங்க யாரைச் சொல்றீங்க..?” என்று கேட்டாள் பாவனா...

“கண்ணதாசன்...” என்றான் அர்ஜீன்...

“காவ்யாவின் அண்ணனா..?” வியப்புடன் கேட்டாள் பாவனா...

“யெஸ்.. அவனுக்கு விவரம் தெரியும்.. நான் கனடாவுக்கு கிளம்பி வருகிறதுக்கு முதல்நாள் அவன் ஹோட்டல் ரூமுக்கு வந்து என்னைப் பார்த்தான்.. சண்டை போட்டான்...”

“இத்தனை நடந்திருக்கா.. காவ்யா என்கிட்டச் சொல்லவேயில்லை...”

"நான் அவளிடம் இதைச் சொல்லலை.. நீங்களும் சொல்லிராதீங்க..."

"ஓகே சார்.. உங்களுக்காக ரகசியத்தைக் காப்பாத்திட்டாப் போச்சு..."

"உங்க பிரண்டுக்காக ரகசியத்தைக் காப்பாத்துங்க.."

"விட மாட்டிங்களே..."

"அவளை விடறதா இல்லைங்க..."

"வைச்சுக்கங்க.. யார் வேணாம்ன்னது..? கண்ணதாசன் போட்டுக் கொடுத்திருக்க மாட்டார்தான்.. அவருக்கு அதுபோல தேர்ட் ரேட் வேலையையெல்லாம் செய்யத் தெரியாது.. ஹி இஸ் எ பெர்பெக்ட் ஜெண்டில்மேன்.."

"ஷ்யூர்..."

"வேற யாரு செய்திருப்பா..?"

நெற்றியில் ஒற்றை விரலைத் தட்டி யோசித்த பாவனாவின் சிந்தனையில் மின்னல் வெட்டியது...

"சார்..." என்று பரபரத்தாள்..

"சொல்லுங்க.." செல்போனின் மறுமுனையில் கேட்டான் அர்ஜீன்..

"நீங்க கனடா போன ரெண்டு நாளில.. நம்ம கடைக்கு தேவா வந்திருந்தார் சார்.."

“தேவான்னா யாரு..? மியுசிக் டைரக்டர் தேவாவா..?” அர்ஜீன் புரியாமல் கேட்டான்...

‘ம்ஹீம்.. அந்த தேவாங்கு மியுசிக் போட்டாலும்.. கழுதையில.. விளங்கிரும்..’ பாவனாவிற்கு சுவரில் முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது...

“அவருக்கு மியுஸிக் போடவே டயம் பத்தாது.. நம்ம கடைக்கு எதுக்காக வரப் போகிறார் சார்..? இந்த தேவா வேற...”

“யார்..?”

“தேவராஜன்.. துரியோதனன் சாரின் மகன்...”

இதைக் கேட்டதும் அர்ஜீன் கோபமாவான் என்று பாவனாவிற்குத் தெரியும்.. அவள் நினைத்ததைப் போலவே அர்ஜீனின் குரல் கோபத்துடன் ஒலித்தது...

“அவன் எதுக்காக அங்கே வந்தான்..?”

“தெரியல.. பட்.. அவன் காவ்யாவ மிரட்டறதைப் போல ஏதோ சொன்னான்...”

“என்ன சொன்னான்னு ரிமம்பர் பண்ண முடியுமா..?”

“ம்ம்ம்.. ஏதோ ஏர் போர்ட்டுன்னான்.. ரோடுன்னான்.. காருன்னான்.. கோர்வையா அவனும் சொல்லலை.. நானும் கவனிக்கலை.. பட்.. அவன் சொன்னதைக் கேட்டதும் காவ்யா பயந்ததப் போல ஆகிட்டா...”

அர்ஜீனுக்கு புரிந்து விட்டது.. அவனும் காவ்யாவும்.. மதுரை விமான நிலையத்திற்கு போகும் சாலையில் காரை நிறுத்தி பேசிக் கொண்டிருந்ததை தேவராஜன் கவனித்திருக்க வேண்டும்..

'அவன் அதைச் சொல்லி காவ்யாவ மிரட்டினானா..?'

"ராஸ்கல்.." அர்ஜீன் பல்லைக் கடித்தான்...

"எதையோ சொல்லி அவன் காவ்யாவ மிரட்டறான்னு எனக்குப் புரிஞ்சு போச்சு.. காவ்யா வேற என்னைக்கும் இல்லாம அன்னைக்கு ரொம்ப டிஸ்டர்ப் ஆகிட்டா.. நோ அதர் வே.. நான் அவனைச் சத்தம் போட்டுட்டேன்.. அதைக் கேட்ட ஏகாம்பரம் சார் அவனை பிடிபிடின்னு பிடிச்சுட்டார்.. இளங்கோ வெளியிலேயே போகச் சொல்லிட்டார்..."

"தட்ஸ் குட்..."

"அதுக்கும்.. உங்க அப்பாவோட திடிர் எண்ட்ரிக்கும் ஏதோவது கனெக்சன் இருக்குமோன்னு என் மனசில ஒரு டவுட் வருது..."

"மே.. பி..."

"என்ன செய்யலாம்...?"

"இந்த வீக் எண்டில நான் கனடாவை விட்டு கிளம்பிடுவேன்.. நெக்ஸ்ட் வீக்.. நான் மதுரைக்கு வந்து விடுவேன்.. அதுவரைக்கும் காவ்யாவ தாக்குப் பிடிக்கச் சொல்லுங்க..."

“அவ வேலையை விடற மூடில இருக்கா சார்...”

“அதை மட்டும் அவ செய்திரவே கூடாது...”

“ஏன் சார்..? எனக்கென்னவோ காவ்யா வேலையை விட்டுப் போகிறதுதான் சரின்னு தோணுது.. எப்படியும் நீங்க வந்தவுடன் அவ வீட்டிலே மேரேஜ் பத்திப் பேசப் போறிங்க.. ஆல்ரெடி அவ அண்ணனுக்கும் உங்க லவ் மேட்டர் தெரியும்.. அப்புறமும் எதுக்காக சார் அவ உங்க அப்பாவோட இன்சல்ட்டை தாங்கிக்கிட்டு இருக்கனும்..? இதனால அவங்க இரண்டு பேர் மனசிலயும் வெறுப்பு வளர்ந்துவிடும் இல்லையா..? பியுச்சரில இது நினைவுக்கு வந்து காவ்யா உங்களுடன் சண்டை போடலாமில்லையா..?”

“மே பி.. பட்.. அதைத் தாண்டி வேற ஒன்று இருக்கு பாவனா..”

“என்ன சார்..?”

“கண்ணதாசன் என் காதலை நம்பலை.. என் காதலால் அவனோட தங்கைக்கு வருத்தம்தான் வரும்ன்னு அவன் நினைக்கிறான்.. அது உண்மைன்னு சொல்கிறதைப் போல.. நான் இல்லாத நேரத்தில என் டாடி அவளை இன்சல்ட்டா பேசறார்ன்னு காவ்யா வேலையை விட்டா அவன் சொன்னது உண்மைன்னு ஆகிடும்.. அதுக்கப்புறம் அவன் முகத்தில் நான் விழிக்கவே முடியாது...”

"ஏன் சார்..? அவர் முகம் அழகான முகம்தானே சார்.."

"அதையும் பார்வையிட்டாச்சா..."

"ஆச்சு.."

"அங்கே எப்படி..? பதில் பார்வை வந்ததா..?"

"ஊஹீம்.. கல்லையும் மண்ணையும் பார்க்கிறதைப் போல என்னையும் பார்த்துட்டுப் போயிட்டார்..."

"ஹ.. ஹா..."

"அவருக்கு கண்ணதாசன்னு பெயர் வைத்திருக்கக் கூடாது சார்.. கல்தாசன்னு பெயர் வைத்திருக்கனும்..."

"அவனுக்கு பெயர் வைக்கிறபோது நீங்க பிறந்திருக்க மாட்டிங்க.. அதனாலதான் உங்களைக் கேட்காம பெயர் வைத்துட்டாங்க.. விட்டிருங்க.. பிழைத்துப் போகட்டும்.."

"எனக்கும் அந்த நினைவுதான்.. அதான்.. பிழைச்சுப் போகட்டும்ன்னு நானும் விட்டுட்டேன்..."

"ஹ.. ஹா..."

"உங்களுக்கென்ன சார்.. ஆண்பிள்ளை.. சிரிக்கறிங்க.. இங்கே காவ்யாவால சிரிக்க முடியுதா..?"

அர்ஜீன் பதில் சொல்லும்போது அவன் குரலில் வலியும்.. குற்ற உணர்வும் தெரிந்தன...

“புரியுதுங்க.. நான் இதை எதிர்பார்க்கலை.. என் காதலை வீட்டில் சொல்ல எனக்கு நேரமில்லை.. நான் கனடாவுக்கு கிளம்பி வருகிறதுக்கு முதல்நாள்தான் அவ காதலையே ஒப்புக்கிட்டா.. அதுவரைக்கும் ஒப்புக்கவே இல்லை.. போக்குக் காட்டினா...”

“என்னவோ சார்.. காரணங்கள் எதுவா இருந்தாலும் இப்ப காவ்யா இருக்கிறது நெருக்கடியான சூழல்சார்..”

“ஜஸ்ட் ஒன் வீக்... அவளைச் சமாளிக்கச் சொல்லுங்க... நான் வந்துட்டா எல்லாப் பிராப்ளமும் சால்வ் ஆகிடும்...”

“நான் ஒன்னு சொல்லாமா..?”

“சொல்லுங்க...”

“நீங்க ஏன் உங்க அப்பாவிடம் இதப் பத்திப் பேசக்கூடாது..”

“நான் பேசலைன்னு நீங்க நினைக்கறிங்களா..?” ஆழ்ந்த குரலில் கேட்டான் அர்ஜீன்...

“உங்க பேச்சுக்கு அவர் கட்டுப்படலையா..?”

“மகன் பேச்சுக்கு எந்த அப்பாவும் கட்டுப்பட மாட்டாங்க பாவனா.. அவரிடம் வெளிப்படையாய் நான் எதையும் பேசலை.. காவ்யாவப் பத்தி போனில் நான் பேசமுடியாது.. நேரில் வரனும்.. நான் வந்தால் எல்லாம் சரியாகிவிடும்..”

அவனின் அந்த அதீத நம்பிக்கையை பார்த்தசாரதி அறிந்து வைத்திருக்க வேண்டும்.. அதனால்தான்.. அவன் வருவதற்கு முன்பாகவே காவ்யாவை வெளியேற்றும முயற்ச்சியில் அவர் இறங்கிவிட்டார்...

விதி வலியது...!

எது நடக்கக் கூடாது என்று அர்ஜீன் நினைத்தானோ.. அதுதான் நடக்க வேண்டும் என்று விதி தீர்மானித்து விட்டால் யாரால் அதைத் தடுக்க முடியும்...?

## 86

*இருள் நீக்கும் விடியலாக...*
*நீ வரவே ஆசைகொண்டேன்...*

**நே**காவை அர்ஜீனின் அறைக்கு அழைத்துச் சென்றார் பார்த்தசாரதி..

“இதுதான் அர்ஜீனின் ரூம்.. இது அர்ஜீனின் சீட்..”

மனிதர்களை அறிமுகப் படுத்துவதைப் போல பார்த்தசாரதி அறிமுகப் படுத்திக் கொண்டிருந்த போது.. அவரே எதிர்பாராத வகையில் அர்ஜீனின் சீட்டில் உட்கார்ந்து விட்டாள் நேகா...

அந்தச் சுழல் நாற்காலியில் சுழன்று திரும்பியவளின் கண்களில் தெரிந்த மயக்கத்தில்.. அந்த நாற்காலியை அவள் அர்ஜீனின் மடியாக நினைத்திருக்க வேண்டும் என்பது புரிந்து போக...

“ஹௌ ஸ்வீட்..” என்று மகிழ்ந்து போனார் பார்த்தசாரதி...

அவரின் அந்த மகிழ்வில் முகத்தை பெருமிதமாக வைத்துக் கொண்டாள் நேகா.. அவளுக்கு எதிரேயிருந்த விருந்தினர் நாற்காலிகளில் ஒன்றில் அமர்ந்தார் பார்த்தசாரதி...

“அந்தப் பெண் யார் அங்கிள்...”

நேகா டேபிளில் கைகளை ஊன்றிக் கேட்டபோது பார்த்தசாரதிக்கு தூக்கிவாரிப் போட்டது.. அவள் காவ்யாவைப் பற்றித்தான் கேட்கிறாள் என்பதை அவர் அறிவார்.. இருந்தும் அறிந்தும் அறியாதவரைப் போல முகத்தை வைத்துக் கொண்டு..

“எந்தப் பெண் நேகா..? கடையில் இரண்டு பெண்கள் வேலை பார்க்கிறாங்களே..” என்று கேட்டு வைத்தார்...

“ஆரத்தி எடுக்கச் சொல்லி செகண்ட்டா ஒரு பெண்ணிடம் கேட்டிங்களே.. அவதான்...” என்றாள் நேகா...

“ஓ.. அந்தப் பெண்ணா.. அது காவ்யாவாச்சே..” என்று பேச்சை வளர்த்தார் பார்த்தசாரதி..

‘பெயரைக் கேட்டேனா..’ பல்லைக் கடித்தாலும்.. காவ்யாவைப் பற்றிய முதல் தகவலை மனதுக்குள் சேகரித்துக் கொண்டாள் நேகா...

“அவ அர்ஜீனின் செகரட்டரியாம்..” குண்டைத் தூக்கிப் போட்டார் பார்த்தசாரதி...

“வாட்..?” நேகாவின் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் மின்சாரம் பாய்ந்திருந்தது..

அவள் விழிகள் அந்தக் கடையைச் சுற்றிச் சுழன்றன..

‘இந்தக் கடைக்கு ஒரு செக்ரட்டரியா..?’

அவளின் விழிகள் கேட்ட கேள்வியை புரிந்து கொண்ட பாவனையுடன் உடனடியாக பதிலைச் சொன்னார் பார்த்தசாரதி..

“யெஸ் நேகா.. இந்தக் கடையின் அக்கவுண்ட்ஸைப் பார்த்துக்கிட்டிருந்த அந்தப் பெண்ணை அர்ஜீன் கடையை வாங்கியதும் செக்கரட்டரியாக்கியிருக்கிறான்...”

“வாட்...?” அடுத்த ஆயிரம் வாட்ஸ் நேகாவின் முகத்தில் பாய்ந்தது...

அடுத்த ‘யெஸ்..’யை போட்டார் பார்த்தசாரதி...

“யெஸ் நேகா.. இந்தக் கடையில அக்கவுண்ட்ஸ் பார்த்துக்கிட்டு இருந்த பெண்ணை செக்ரட்டரியாக்கியது மில்லாம.. அவளை அர்ஜீன் இல்லாதப்ப இந்தக் கடையோட இன்சார்ஜாவும் ஆக்கியிருக்கிறான்...”

“வாட்..?” மொத்தமாக அத்தனை வாட்ஸ் மின்சாரமும் நேகாவின் முகத்தில் பாய... கவலைக்கிடமான முகபாவனையுடன் பார்த்தசாரதியை வெறித்தாள் நேகா..

“யெஸ் நேகா.. அர்ஜீன் இல்லாத நேரங்களில் அவன் இடத்தில் இருந்து இந்தக் கடையை நிர்வாகம் பண்ணுவது காவ்யாதான்..”

அந்தச் செய்தி சொல்லிய செய்தியை விரைவாக புரிந்துகொண்டாள் நேகா...

‘இங்கே இந்தக் கதை ஓடுதா..’

அந்த நேரம் பார்த்து உள்ளே வந்த கந்தசாமி.. நேகாவைப் பார்த்தபடி.. பார்த்தசாரதிக்கு வணக்கம் வைத்தார்...

“வணக்கமுங்க ஐயா...”

இப்படியொரு வணக்கத்தை எதிர்பார்த்திராத பார்த்தசாரதி முகம் சுளித்தார்.. அவரும் நேகாவும் வந்தபோது கந்தசாமி வாசலில் இல்லை.. அவர் டீ குடிக்கப் போயிருந்ததாக இளங்கோதான் சொல்லியிருந்தான்.. பார்த்தசாரதி அலட்டிக் கொள்ளவில்லை.. அந்தக் கடைக்கு கந்தசாமியைப் போன்ற காவலாளியே தேவையில்லை என்பதுதான் அவர் கருத்தாக இருந்தது..

‘பாத்தா செக்யூரிட்டி மாறியா இருக்கான்..? அப்படியே அசப்பில பாத்தா ஐயனாரு கோவில் சிலை போல இருக்கான்...’

இப்படித்தான் அவர் நினைத்தார்.. அதற்கு முன்னாலும் அவர் வருகின்ற சமயங்களில் கந்தசாமி வாசலில் இல்லாத நிகழ்வுகள் இருந்ததுண்டு.. அப்போதெல்லாம் தேடிவந்து கந்தசாமி வணக்கம் சொன்னதில்லை...

'இப்ப மட்டும் என்ன வந்துச்சு..?' என்று அவர் யோசித்தபோது..

"இதான் நம்ம ஐயாவைக் கட்டிக்கப் போற பொண்ணுங்களா..?" என்று கேட்டு அவர் சந்தேகத்தை நிவர்த்தி செய்தார் கந்தசாமி...

நேகாவின் முகம் மலர்ந்தது.. ஆயிரமாயிரம் வாட்ஸ் மின்சாரங்களின் பாய்ச்சலில் அரண்டு போயிருந்தவளின் முகம் தெளிந்ததில் கந்தசாமியின் விசாரிப்பை மனதுக்குள் சிலாகித்துக் கொண்டார் பார்த்தசாரதி...

"ஆமாம் கந்தசாமி... இவங்கதான் உங்க முதலாளியம்மா..." என்று ஐஸ்மழையில் நேகாவை நனைய வைத்தார் பார்த்தசாரதி..

"கடையில இருக்கிற பயலுக சொன்னானுக.. அதான் பாத்துப்புட்டுப் போகலாம்ன்னு வந்தேன்.. ஐயா கட்டிக்கப் போகிற பொண்ணுன்னா ஏப்ப.. சாப்பையாவா இருப்பாங்க..? அப்படியே திருவாரூர் தேர் போலல்ல முதலாளியம்மா இருக்காங்க..."

கந்தசாமியின் மனம் நிறைந்த பாராட்டில் மகிழ்ந்து விட்டாள் நேகா...

"இவர் யார் அங்கிள்...?"

"நம்ம கடையோட செக்யூரிட்டி..."

"ஹௌ நைஸ்.. செக்ரட்டரி விசயத்தில சொதப்பினாலும்... செக்யூரிட்டி விசயத்தில உங்க சன்னோட செலக்சன் ஸோ.. குட் அங்கிள்..."

"ஷ்யூர்.. ஷ்யூர்.."

நேகாவின் பாராட்டுதலில் கொஞ்சம்கூட மனம் ஒட்டாமல் தலையை ஆட்டிவைத்தார் பார்த்தசாரதி...

'இந்த கந்தசாமியை செக்யூரிட்டியாய் போட்டிருக்கிறது குட் செலக்சனா...'

நேகா ஜால்ராக்களை எந்த அளவுக்கு விரும்புகிறாள் என்பதை அந்த நொடியில் புரிந்து கொண்டார் பார்த்தசாரதி...

எப்பேற்பட்ட கெட்டிக்காரரும்.. புத்திசாலியும் விழுந்து விடும் ஒரே இடம் முகஸ்துதிதான்.. நேகாவும் அந்த ரகம்தான் என்று கண்டு கொண்டார் பார்த்தசாரதி...

'ஆஹா... என்னோட வருங்கால மருமகளிடம் எதையாவது சாதிக்கனும்னா இந்த டெக்னிக்கை நான் யூஸ் பண்ணலாம் போல இருக்கே...'

அவர் நினைத்துக் கொண்டிருந்த போதே... அந்த அறையைச் சுற்றி யதார்த்தமாக பார்வையை ஓடவிட்ட கந்தசாமி.. அதைவிட யதார்த்தமாக...

"அந்த மூலையில இருந்த காவ்யாம்மாவோட மேசையும் நாற்காலியும் எங்கேய்யா..?" என்று கேட்டு வைத்தார்...

'இது வேறா..' என்று தோன்றிய போதும்.. எல்லாம் நல்லதிற்கே என்றும் பார்த்தசாரதிக்கு தோன்றி வைத்தது...

நேகாவைக் கிளப்பிவிட இது போதாதா என்ற நினைவுடன் வருங்கால மருமகளாய் அவர் வரித்திருக்கும் நேகாவைப் பார்த்தார்...

அப்போதுதான் ஆயிரமாயிரம் வாட்ஸ் மின்சாரத்தின் தாக்குதலில் இருந்து விடுபட்டிருந்த நேகா.. மீண்டும் அந்த மின்சாரப் படுகுழியில் வீழ்ந்து வைத்தாள்..

"வாட்..?" அவள் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் மின்சாரம் பாய்ந்தது...

அதையுணராத கந்தசாமி.. அவள் விளக்கம் கேட்பதாக நினைத்துக் கொண்டுவிட்டார்...

"ஆமாங்கம்மா.. ஐயா.. இதோ.. இங்கன நீங்க உக்காந்திருக்கிற நாற்காலியில உக்காந்திருப்பாரு.. காவ்யாம்மா.. அதோ.. அங்கன மேசை.. நாற்காலியப்

போட்டு உக்காந்திருப்பாங்க.. அந்த மேசை நாற்காலியயும்.. கம்யூட்டர் பொட்டியையும் காணோமே," என்றவர்.. ஏதோ நினைவுக்கு வந்தவராக..

"அதத்தான் ரூமுக்கு வெளியே தூக்கிப் போட்டு நம்ம இளங்கோ உக்காந்திருக்காப்புலயா...?" என்று பார்த்தசாரதியிடமே கேட்டார்...

வேறு சமயமாக இருந்திருந்தால் கந்தசாமி கேட்ட கேள்விக்கு அவரை உண்டு இல்லையென்று பண்ணியிருப்பார் பார்த்தசாரதி.. ஆனால்.. நேகாவிற்கு அந்த விவரத்தை அவர் சொல்லாமலேயே தெரிய வைத்து விட்டதால் கந்தசாமிக்கு மானசீக மன்னிப்பை வழங்கி விட்டார்...

நேகாவின் பார்வை பார்த்தசாரதியின் மீது கேள்வியாகப் படிந்தது.. அவர் இமை மூடித்திறந்து 'ஆமாம்' என்பதை உணர்த்தினார்..

"என்னமோ போங்கய்யா.. இன்னைக்கு பொழுது.. நல்ல பொழுதா எனக்கு விடிஞ்சுக்கு.. அதனாலதான்.. ஐயாவக் கட்டிக்கப் போற அம்மாவோட முகத்தப் பாக்க முடிஞ்சிருக்கு..."

புல்லரித்தபடி.. வருங்கால முதலாளியம்மாவைப் பற்றிய அவரின் அபிப்பிராயத்தை மற்றவரிடம் ஒலிபரப்ப ஓடிவிட்டார் கந்தசாமி...

மதுரையை விட்டுக் கிளம்புவதற்கு முன்னால் கந்தசாமிக்கு விலையுயர்த்த பரிசு ஒன்றை வாங்கிக் கொடுத்து விட வேண்டும்.. என்று மனதுக்குள் முடிவு செய்து கொண்டாள் நேகா...

அப்படிப்பட்ட நல்ல காரியத்தை அவள் அப்போதே செய்திருப்பாள்.. ஆனால்.. அதற்காக நேரம் ஒதுக்குவதற்கு முன்னால் காவ்யாவைப் பற்றி விசாரிப்பதற்கு அவள் நேரம் ஒதுக்க வேண்டியிருந்தது...

“நைஸ் மேன்..! இல்லையா அங்கிள்..”

அவள் பார்த்தசாரதியிடம் சிலாகித்தபோது அவர் இல்லையென்றா சொல்லுவார்..?

“ஆமாம்மா..” என்று சொல்லி வைத்தார்...

நேகா கம்யூட்டரை உயிர்ப்பித்தாள்... அதன் சின்னத்திரையை பார்த்தபடி.. அசுவராஸ்யமான குரலுடன்..

“அந்தப் பெண்.. என்னமோ ஒரு பெயர் சொன்னீங்களே..” என்று பெயர் நினைவில் இல்லாததைப் போல பாவனை பண்ணினாள்...

பார்த்தசாரதிக்கா அது புரியாது..? அவருக்குத் தெரியும்.. இனி வரும் நாள்களில் தூக்கத்தில்கூட நேகா ‘காவ்யா’ என்ற பெயரை மறக்க மாட்டாள் என்பது..

அவர் இதுபோன்ற எத்தனை பாவனைகளைப் பண்ணியிருப்பார்..? எத்தனை பாவனைகளைப் பார்த்திருப்பார்..?

‘இந்த தில்லாலங்கடி வேலையை என்கிட்டயே என் மருமக காட்டுதே..’ என்ற நினைவுடன்..

“யாரைக் கேட்கிற நேகா..?” என்று அவருக்கும் தெரியாததைப் போல பாவனை செய்தார்...

நேகாவுக்கு அந்தப் பாவனையைப் பிடித்திருந்தது.. காவ்யாவின் பெயரை உடனடியாக பார்த்தசாரதி சொல்லியிருந்தால்.. இவரும் காவ்யாவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறாரோ என்று நினைத்திருப்பாள்...

பார்த்தசாரதி அதைச் செய்யாமல் அவளைவிட செமத்தியாக நடித்து வைத்ததில் அவள் மனம் மகிழ்ந்து போனாள்...

“அதான் அங்கிள்.. உங்க சன் யாரோ ஒரு பெண்ணிடம் கடையோட பொறுப்பை ஒப்படைச்சிருக்கிறதா சொன்னீங்களே...” என்று பாவனையைத் தொடர்ந்தாள்..

“ஓ.. அந்தப் பெண்ணைச் சொல்கிறாயாம்மா.. அது பேரெல்லாம் யாருக்கு சட்டுன்னு நினைவுக்கு வருது..? காவ்யாவோ.. என்னவோன்னு ஒரு பெயர்...”

சற்று நேரத்திற்கு முன்பு.. அவர்தான்.. காவ்யாவின் பெயரை நேகாவிடம் சொன்னார்.. இருந்தும் அதை மறந்தவள் போல அவள் நடிகையர் திலகமானாள்.. அவளையே தூக்கிச் சாப்பிடுவதைப் போல அவர் நடிகர் திலகமானார்..

சும்மாவா.. உலகமே ஒரு நாடகமேடை என்று அறிஞர் அண்ணா சொன்னார்..?

அவர் ஆயிரம் சொன்னார்.. அதில் இந்த ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்ட பார்த்தசாரதியும்.. நேகாவும் வெளுத்து வாங்கினார்கள்..

# 87

## *நல்லவரம் நீ கொடுக்க...*
## *நங்கையிவள் ஆசைகொண்டேன்...*

**நே**காவுக்கும் அவரின் வரவழைக்கப்பட்ட மறதி புரிந்துதான் இருந்தது.. இருந்தும் அவளுக்காக அவர் வரவழைத்துக் கொண்ட அந்த மறதியை அவள் வெகுவாக ரசித்தாள்...

“காவ்யா..? என்னவொரு பெயரோ..” நேகா முகம் சுளித்தாள்..

‘நேகாங்கிற பெயருக்கு இது என்னம்மா குறைச்சல்..?’

நினைத்துக் கொண்டதைக் கேட்காமல் ‘ஆமாம் சாமி’ போட்டு தஞ்சாவூர் தலையாட்டி பொம்மையானார் பார்த்தசாரதி...

“என்ன படிச்சிருக்காளாம்..?”

“டிகிரின்னு நினைக்கிறேன்...”

“அவ ஃபைலில் பார்த்தீங்களா...”

“ஊஹீம்.. அவ்வளவு இம்பார்டன்ஸை அவளுக்கு கொடுப்பேனா..? நேரடியாக் கூப்பிட்டு.. நிற்க வைத்து கேள்வி கேட்டேன்...”

அந்தப் பதிலில் திருப்தியானாள் நேகா.. பார்த்தசாரதிக்கு அதுதானே வேண்டும்..?

“தட்ஸ் குட்.. அர்ஜீனுக்குத்தான் யாரை எங்கே வைக்க வேண்டும்ன்னு தெரியலை.. உங்களுக்கு அது தெரிந்திருக்கே...”

“அவனுக்கும் தெரியும் நேகா...”

“அப்புறம் இது எப்படி அங்கிள்...?”

நேகா ஜாடையாக குறிப்பு காட்டியதில் முகம் மாறினார் பார்த்தசாரதி.. அர்ஜீனால்தானே இந்தச் சின்னப் பெண்ணுக்கெல்லாம் இதுபோன்ற கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கிறது என்று மனதுக்குள் அவனைத் திட்டியபடி...

“அவன் ஜென்டில் மேன் நேகா.. தனியா மதுரைக்கு வந்தவன்.. வந்தவனின் பணத்தையும்... அழகையும் பார்த்துட்டு... அவனுக்கு யாராவது தூண்டில் வீசினா..

அவன் பாவம் என்ன செய்வான்...?” என்று மகனுக்கு பரிந்து பேசுவதைப் போல.. அவனின் காதலுக்கு சப்பைக் கட்டு கட்டினார் பார்த்தசாரதி...

“ஓ...”

உதடுகளைக் குவித்த நேகாவிற்கு பார்த்தசாரதியின் இந்தப் பதிலையும் பிடித்திருந்தது...

உண்மையில் அவள்தான் அர்ஜீனுக்கு தூண்டில் போட்டுக் கொண்டிருந்தாள்.. என்னதான் அவள் தூண்டில் மேல் தூண்டிலாக வீசிக் கொண்டிருந்தாலும்... ஒரு சந்தர்ப்பத்தில் கூட அர்ஜீன் அவளிடம் சிக்கியதேயில்லை..

அப்படிப்பட்ட நேகாவிடம் தூண்டிலைப் பற்றிப் பார்த்தசாரதி பேசினார்.. அவளும் கேட்டுக் கொண்டாள்.. என்றால் இதுதான் காலம் செய்யும் கோலம் என்பது...

“ஐ ஸீ... அந்தப் பெண்ணுக்கு எவ்வளவு சேலரி கொடுக்கிறார்..?”

பார்த்தசாரதி சொன்னார்... கம்யூட்டரின் திரையிலிருந்து பார்வையை அகற்றாமல்...

“இதே சேலரியைத்தான்.. இந்தக் கடையின் பர்ஸ்ட் ஓனரும் கொடுத்தாரா அங்கிள்..?” என்று கேட்டாள்...

இல்லை.. துரியோதனன் இவ்வளவு அதிகமான சம்பளத் தொகையை கொடுத்திருக்கவில்லை... கடை அர்ஜீனின் கைக்கு மாறியவுடன் அவன் சம்பளத்-

தொகையை அதிகப் படுத்தியிருந்தான்.. துரியோதனன் கொடுத்துக் கொண்டிருந்த சம்பளத்தொகையை விட இரண்டு மடங்கு அதிகமான சம்பளத் தொகை காவ்யாவுக்கு கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது...

எல்லோருக்கும் சம்பளத் தொகையை கூட்டியிருந்தாலும் காவ்யாவுக்கு அதிகப் படுத்தி-யிருந்ததைப் போல இருமடங்கு அதிகமாக யாருக்கும் அவன் அதிகப்படுத்தவில்லை...

நேகாவின் புத்திசாலித்தனத்தை மனதுக்குள் மெச்சிக் கொண்டார் பார்த்தசாரதி.. பேச்சு சரியான திசையில் பயணிப்பதில் அவருக்குள் சந்தோசம் பெருகியது...

"நோ.. நேகா.. துரியோதனன் கொடுத்ததைவிட அதிகமான சேலரியை அர்ஜீன் கொடுக்கிறான்..."

"ஈஸிட்..? எல்லோருக்கும் சேலரியை ரெய்ஸ் பண்ணியிருக்காரா.. இல்லை.. இந்தப் பெண்ணுக்கு மட்டும் ரெய்ஸ் பண்ணியிருக்காரா..?" மீண்டும் தன் புத்திசாலித்தனத்தை நிருபித்தாள் நேகா...

"டோட்டலா கடையில வொர்க் பண்ற எல்லோருக்குமே சேலரியை ரெய்ஸ் பண்ணியிருக்கான் தான்.. பட்.." வேண்டுமென்றே இழுத்தார் பார்த்தசாரதி...

"பட்...?"

"இந்தப் பெண்ணுக்கு மட்டும் சேலரியை டபுள் மடங்காக்கியிருக்கான்.." மென்று விழுங்குவதைப் போல பாவனை செய்தார் பார்த்தசாரதி...

'நினைத்தேன்..' என்ற பாவனை நேகாவின் முகத்தில் வெளிப்பட்டது...

"நீங்க எதுக்காக அவளோட டேபிஸ் சேரை ரூமை விட்டு வெளியே தூக்கிப் போடச் சொன்னீங்க அங்கிள்..? ஐ திங்க்.. இதை அர்ஜீன் சொல்லி நீங்க செய்திருக்க மாட்டிங்க..."

"நீ நினைக்கிறது சரிதான் நேகா... நான் வந்தவுடன் கேள்விப்பட்டது.. அவ்வளவு நல்ல செய்திகளா இல்லை.."

"என்ன கேள்விப்பட்டிங்க..?"

"அர்ஜீனின் ரூம் சாவி அந்தப் பெண்ணின் கையில்தான் இருக்குமாம்.. இவ அர்ஜீன் இல்லாதப்ப ஆபிஸ் செக்சனில் உட்கார்ந்து வேலை செய்வாளாம்.. அர்ஜீன் வந்துட்டா இந்த ரூமில் உட்கார்ந்துதான் வேலை செய்வாளாம்..."

பார்த்தசாரதி சொல்லச் சொல்ல.. அதைக் கேட்டுக் கொண்டிருந்த நேகாவின் முகம் பயங்கரமாக மாறியது.. ஒன்றும் அறியாத மனிதரைப் போல ஒப்பித்து முடித்த பார்த்தசாரதி...

"அதான்.. நான் வந்தவுடன் அர்ஜுனின் ரூம் சாவியை அவளிடமிருந்து பிடுங்கிக்கிட்டு.. அவளோட டேபிள் சேரை ரூமை விட்டு வெளியே கடாசினேன்.." என்றார்...

"குட் ஜாப்.." மெச்சினாள் நேகா...

"நீங்க கரெக்டான ஸ்டெப்பைத்தான் எடுத்திருக்கீங்க அங்கிள்.. இவளைப் போல இருக்கிறவங்களையெல்லாம் இப்படித்தான் நோஸ் கட் பண்ணி.. உன் லெவல் இதுதான்னு உணர வைக்கனும்..."

"யு ஆர் கரெக்ட் நேகா..."

"அவளோட வேலை என்னன்னு சொல்லுங்க அங்கிள்..."

"எதுக்கும்மா..?"

"அப்படி என்னதான் கிழிக்கிறான்னு பார்க்கலாமே.."

அதில் ஆர்வமில்லாததைப் போலக் காட்டிக் கொண்டாள் நேகா.. பார்த்தசாரதிக்குத் தெரியும்.. அவள் அதில் ஏதாவது ஒரு ஓட்டையைக் கண்டு பிடித்து விடுவாள் என்று.. காவ்யாவின் வேலையைப் பற்றிய விவரங்கள் அடங்கிய ஃபைலை அவர் கொடுத்தார்...

அதைப் பற்றி ஆர்வமில்லையென்று சொன்ன நேகா அதை வாங்கி ஊன்றிப் படிக்க ஆரம்பித்தாள்.. படிக்கப் படிக்க அவள் முகத்தில் வெளிச்சம் பரவியதில் பார்த்தசாரதியின் முகமும் ஒளிர்ந்தது...

நேகா.. காவ்யாவைத் துரத்துவதற்கான வழியைக் கண்டுபிடித்து விட்டதை அவர் புரிந்து கொண்டார்...

**கோ**விலின் முன்னால் காரை நிறுத்திவிட்டு இறங்கிய கண்ணதாசனின் மனதில் பாரம் நிரம்பியிருந்தது.. காவ்யாவின் சோர்ந்த முகமும்.. கலங்கிய விழிகளும் தொடர்கதையாகிக் கொண்டிருப்பதின் மர்மத்தை அவன் கண்டு கொண்டபோது அவன் மனதின் பாரம் அதிகமாகியது..

"முதல்ல முதலாளியோட அப்பா வந்தார் சார்.. காவ்யாமேடத்தோட மேஜையும்.. நாற்காலியும் முதலாளியோட ரூமில இருந்து வெளியே வந்திருச்சு.. இந்த இளங்கோப்பயலுக்கு அடிச்சயோகத்தப் பாருங்களேன்.. இவன் முகரைக்கு.. இவனப் போயி அதில உட்கார வைச்சிட்டாரு அவரு.."

தங்கராஜ் சொன்னபோது கண்ணதாசன் பல்லைக் கடித்தான்...

தங்கராஜின் காட்டில் மழை பெய்து கொண்டிருந்தது.. அவன் பாலுக்கும் காவலானான்.. பூனைக்கும் தோழனானான்.. தங்கையைப் பற்றிய விவரங்களைக் கேட்ட கண்ணதாசனுக்கும் விசுவாசியானான்.. காவ்யாவை நோட்டம் விட்டுக் கொண்டிருக்கும் தேவராஜனுக்கும் அவளைக் காட்டிக் கொடுத்தான்..

இருவருமே அவனை நன்கு கவனித்தார்கள்.. கண்ணதாசன் உணவை மட்டுமே வாங்கிக் கொடுப்பான்.. தேவராஜன் உணவோடு சேர்த்து பாட்டில்களையும் வாங்கிப் பரிசளித்தான்.. இருபக்கமும் வஞ்சனை செய்யாமல் கொட்டிக் கவிழ்த்துக் கொண்டிருந்தான் அவன்..

“அதுக்கப்புறமா... முதலாளியைக் கட்டிக்கப் போகிறேன்னு சொல்லிக்கிட்டு.. பரட்டைத் தலையும்.. பேண்ட்.. சர்ட்டுமோ ஒரு பொண்ணு வந்து இறங்குச்சு..”

“என்ன சொன்ன..?” கண்ணதாசன் பதறிப் போனான்...

“ஆமாம் சார்.. அப்படி ஒரு பொண்ணு வந்து இறங்கியிருக்கு...”

“பொண்ணு வந்திருக்கிறது சரி.. அதை அர்ஜீன் கட்டிக்கப் போறாருன்னு யாரு உனக்குச் சொன்னது..?”

“அவரோட அப்பாதான் சொன்னாரு சார்..”

“என்னது..?” மீண்டும் அதிர்ச்சியானான் கண்ணதாசன்...

“என்ன சார் தெரியாத மாதிரி கேட்கறிங்க.. அந்தப் பொண்ணுக்கு ஆரத்தி எடுன்னு உங்க தங்கச்சிகிட்டத் தான முதலாளியோட அப்பா சொன்னாரு..”

“இது வேறயா..?”

“ஆமாம் சார்...”

“காவ்யா ஆரத்தி எடுத்தாளா..?”

அந்தச் சமயத்தில் தங்கையின் மனது என்ன பாடுபட்டிருக்கும் என்று பரிதவித்துப் போனான் கண்ணதாசன்...

“அப்படின்னா என்னான்னு அவங்க கேட்டுட்டாங்க சார்...”

தங்கராஜின் பதிலில் ‘அதானே பார்த்தேன்..’ என்ற புன்னகை கண்ணதாசனின் இதழ்களில் உதயமானது..

‘என் தங்கச்சியாவது.. அவ காதலிக்கறவனை கட்டிக்கப் போறதா சொல்றவளுக்கு ஆரத்தி எடுக்கிறதாவது...’

“அப்புறம்..?”

“அப்புறம் என்ன சார்.. அந்தப் பொண்ணு எதுக்கும் அசராத பொண்ணு போல.. எங்கேயோ போன் போட்டுச்சு.. கார அனுப்பி ஒரு பொம்பளயக் கூப்பிட்டுக்கிட்டு வந்துச்சு.. அந்தப் பொம்பள ஆரத்தி தட்டோட வந்து இந்தப் பொண்ணுக்கு ஆரத்தி எடுத்துச்சுன்னா அந்தப் பொண்ணு எப்பேற்பட்ட கில்லடியாயிருக்கும்ன்னு பாத்துக்கங்களேன்..”

‘அதுதானா...’ கண்ணதாசனின் மனம் கனத்தது...

அவன் தங்கை இரவுகளில் துக்கத்தை தொலைப்பது அதனால்தானா..? கலங்கிய விழிகளின் கண்ணீர் உதிர்ந்து விடாமலிருக்க இமைகளைச் சிமிட்டி அதை அடக்கி வைத்துக் கொண்டிருப்பது இதனால் தானா...?

அவளிடமும் கேட்க முடியாமல்.. அவளின் கண்ணீரையும் பார்க்க முடியாமல் கோவிலுக்கு வந்திருந்தான் கண்ணதாசன்...

கோவில் பிரகாரத்திற்குள் காலடி வைத்தவன் அண்ணாந்து கோபுரத்தைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கொண்டிருந்த போது அவன் மேல் மோதினாள் ஒரு பெண்..

# 88

*என் விழியோர நினைவுகளில்..*
*நீ குடியிருக்க ஆசைகொண்டேன்...*

**மோ**தின வேகத்தில் நிலைகுலைந்து கீழே விழ இருந்தவளைத் தாங்கிப் பிடித்து நிறுத்தினான் கண்ணதாசன்..

எதிர்பாராத வகையில் ஒரு ஆணின் மேல் மோதிவிட்டோமே என்ற பதட்டத்துடன் இமைகள் படபடக்க நிமிர்ந்து பார்த்தவளின் முகத்தைப் பார்த்ததும்..

'இவளா..?' என்ற நினைவுடன் கரம் விலக்கினான்..

அவளுக்கும் அதே நினைவுதான் என்பது தடுமாறி நின்றவளின் இமைகள் படபடத்ததிலிருந்து அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது...

கண்ணதாசன் படிக்கும் காலத்திலும் சரி.. வேலை பார்த்துக் கொண்டிருக்கும் காலத்திலும் சரி.. பெண்களிடம் அதிகமாக பேச மாட்டான்.. உண்டு.. இல்லை.. என்பதோடு நிறுத்திக் கொள்வான்.. அப்படிப்பட்ட கண்ணதாசன் கோவிலில் அவன்மீது மோதி நின்ற தேன்மொழியோடு எப்படிப் பேசுவான்..?

துரியோதனனின் மகளான தேன்மொழியை சில தூரத்துச் சொந்தங்களின் திருமண விழாக்களின் போது அவன் சந்தித்திருக்கிறான்.. அப்போது அவளிடம் அவன் பேசியதில்லை.. அவள் துரியோதனனின் மகள் என்பது மட்டுமே அவனுக்குத் தெரியும்.. மற்றபடி தள்ளிநின்று பார்த்ததுதான்....

காவ்யாவைப் பெண் கேட்டு வந்தபோது துரியோதனன் பேசிய பேச்சுக்களின் நினைவிலும்.. தேவராஜன் காவ்யாவிற்கு தொல்லை கொடுக்கிறான் என்ற நினைவிலும்.. முகம் மாறிய கண்ணதாசன்.. அவர்கள் வீட்டுப் பெண்ணின் அருகில் நிற்பது கூடத் தவறு என்று லேசான முகச் சுளிப்புடன் விலகி நடக்கப் போனான்...

“ஒரு நிமிசம்...”

தேன்மொழியின் குரல் அவனைத் தடுத்து நிறுத்தியது...

‘இவ எதுக்காக என்னை நிக்கச் சொல்றா...?’

யோசனையுடன் நின்று அவள் முகம் பார்த்தான்.. நேருக்கு நேரான அவன் பார்வையைச் சந்திக்க முடியாமல் வெட்கி அவள் தலைகுனிந்த விதம் அவனை வசீகரித்தது...

‘துரியோதனனுக்கு இப்படியொரு பெண்ணா...’

அவன் மனதில் ஆச்சரியம் எழுந்தது.. பெண்மையின் வார்ப்பாக.. தளிர்கொடி போல நின்று கொண்டிருந்தவளிடம் தென்பட்ட ஓர்விதமான மென்மை அவனை ஈர்த்தது...

“என்ன..?”

எந்தப் பெண்ணிடமும் தானாகப் பேசியிராத கண்ணதாசன்.. தேன்மொழியிடம் தானாக வாய்திறந்து ஒற்றைச் சொல்லை உதிர்த்து விட்டான்...

“ஸாரி...”

அந்த ஒற்றைச் சொல்லை சொல்வதற்குள்.. முகம் வியர்த்து உடல் நடுங்கி.. கால் விரலில் தரையில் கோலமிட ஆரம்பித்து விட்டாள் தேன்மொழி....

அவளின் அந்த வெட்கத்தை வெகுவாக ரசித்தான் கண்ணதாசன்.. அவன் மனதிலிருந்த பாரம் வடிவதைப்

போல இருந்தது.. கோவில் கோபுரத்தில் கூடு கட்டியிருந்த புறாக்களின் கலவையொலியும்.. அந்தி நேரத்து கோவிலின் ஆன்மிகச் சூழலும்.. அவன் மனதில் நிம்மதியை வரவழைத்தன...

அவன் லேசாகச் சிரித்தான்.. அந்தச் சிரிப்பில் அவள் முகம் ஒளிர்ந்ததில் அவனுக்குள் ஓர்விதமான ரசாயன மாற்றம் உருவானது..

அதற்கு முன்னால் அவளைப் பார்த்த சூழ்நிலைகளிலும் அவனைப் பார்க்க நேரும் தருணங்களில்.. அவள் முகத்தில் இதே ஒளிர்வு வந்ததை அவன் கண்டிருக்கிறான்.. அதனாலேயே.. அவளை ஓர் நொடி அதிகமாகப் பார்த்து விட்டு விலகி வந்து விடுவான்.. அதே ஒளிர்வை அன்றும் கண்டதில் அவன் கண்கள் இடுங்கின.. அவள் முகத்தை கூர்மையாக அவன் பார்த்தான்...

“எதுக்காக இந்த ஸாரி..? ம்ம்ம்...?”

அவன் புருவங்களை உயர்த்திக் கேட்ட விதத்தில் தேன்மொழியின் மனது சிக்கித் தவித்தது...

“இல்ல.. நீங்க பாட்டுக்கு சாமி கும்பிட வந்தீங்க.. நான்தான் மடச்சீ மாதிரி தெரியாம உங்கமேல மோதி வைச்சிட்டேன்.. அதான்.. ஸாரி.. சொல்லலாமுன்னு..”

வார்த்தைகள் தந்தியடித்தாலும்.. ஊடே நிறுத்தினால்.. எங்கே அவன் நிற்காமல் நகர்ந்து

விடுவானோ என்ற பதட்டத்துடன் அவள் அவசரகதியுடன் கோர்வையாகச் சொல்லியதில் அவன் மனம் இன்னும் கொஞ்சம் லேசானதாக மாறியது...

“மெல்ல.. மெல்ல.. எதுக்காக இந்தப் பதட்டம்..? நீங்க தெரியாமத்தான் மோதினீங்க.. அது எனக்கும் தெரியும்.. நான் உங்களையொன்னும் கோவிச்சுக்கலையே..” இதமாக அவன் பேசினான்..

அந்த அளவுக்கு நீளமாக அவன் பேசியதில் பிரமித்து இமை கொட்டினாள் தேன்மொழி...

பெண்களையே திரும்பிப் பார்த்தறியாத கண்ணதாசன் அவளை மதித்து இவ்வளவு வார்த்தைகளைப் பேசிவிட்டானா..?

தன்னையுமறியாமல் தன் கையை அவள் கிள்ளிப் பார்த்து விட்டாள்.. அது வலித்ததில்..

“ஸ்.. ஆ...” என்று கையை உதறியவளை விசித்திரமாகப் பார்த்தான் கண்ணதாசன்...

“என்ன ஆச்சு..? உங்க கையை நீங்களே கிள்ளிக்கறிங்களே...”

“இல்ல.. இது கனவா.. இல்ல நிஜமான்னு சந்தேகம் வந்தது...” தயங்கியபடி சொன்னாள் தேன்மொழி...

அவள் சொன்னதில் புருவங்களை உயர்த்தியனுக்கு அவள் எதைச் சொல்கிறாள் என்பது புரிந்து விட சிரிப்பு வந்தது...

"ஹா.. ஹா..." என்று வாய்விட்டுச் சிரித்தான்...

"உங்களுக்குச் சிரிக்கக் கூடத் தெரியுமா..?" வியப்புடன் அவள் கேட்டாள்...

"அது சரி.. ஐந்தறிவு ஜீவனுக்கும்.. ஆறறிவு மனிதனுக்கும் இருக்கிற ஒரே வித்தியாசம் சிரிப்புத்தான்.. உங்களுக்கு என்னைப் பார்த்தா எப்படித் தெரியுது..?" அவன் மிரட்டுவதைப் போலக் கேட்டதில் அவள் மிரண்டு போனாள்...

"கோவிச்சுக்கிட்டிங்களா...?"

அவளின் மிரட்சியில் அவன் முகத்தில் மென்மை வந்தது....

"இல்லை..." என்றவன் திரும்பிப் பார்த்தான்..

அவர்களைக் கடந்து போனவர்கள்.. நின்று பேசிக் கொண்டிருந்த அவர்களைத் திரும்பிப் பார்த்துவிட்டுப் போவதை அவனால் கண்டு கொள்ள முடிந்தது...

அது மதுரை..! வயதுப் பெண்களுடன் தனியாக நின்று ஒரு வாலிபன் பேசிக் கொண்டிருப்பதை இயல்பாக எடுத்துக் கொள்ளாத நகரம்...

அங்கும் காதல் உண்டு.. சந்திப்புகள் உண்டு.. அவை ரகசியமாக நடைபெறும்.. பலர் பார்க்கப் பேசிப் பழகுவது அந்த நகரத்தில் பிறந்து வளர்ந்தவளுக்கு சாத்தியப்படாது..

அவர்களைச் சுற்றி வருபவர்களில் யாராவது ஒருவர் அவர்களுக்குத் தெரிந்தவர்களாக இருந்து விடுவார்கள்.. எவர் கண்ணிலும் தென்பட்டு விடாமல் தப்பி காதல் செய்வது குதிரைக் கொம்பிற்கு நிகரானது...

‘மத்தவங்க தப்பா நினைச்சிரப் போறாங்க...’

கண்ணதாசன் கிளம்புவதற்கு அறிகுறியாக தலையை அசைத்தான்...

‘கிளம்ப போறானா..?’

இனிய கனவு கலையப் போகும் நிகழ்வைத் தாங்கிக் கொள்ள முடியாதவளாக தேன்மொழி பதறினாள்.. அவளிடம் அவன் சிந்திய சிரிப்பும்.. வார்த்தைகளும் அவள்மீது மல்லிகை மொட்டுக்கள் கவிழ்ந்ததைப் போல கமழ்ந்து கொண்டிருக்க அவற்றின் வாசத்திலிருந்து விடுபட முடியாமல் அவள் திணறினாள்...

அவளின் முகத்தில் பிரதிபலித்த அந்த உணர்வுகளின் கலவை கண்ணதாசனை நகர விடாமல் கட்டித் தேக்கியது.. அவள் முகம் பார்த்து தயங்கி அவன் நின்றான்...

“எதுவும் சொல்ல வேண்டியிருக்கா..?” மென்மையாக வினவினான்..

அவள் என்னவென்று சொல்லுவாள்..? சொல்லத் தெரியாத சொல்ல முடியாத உணர்வுகளின் மொழியை உணர்த்த வாய் வார்த்தைகள் உண்டா...?

அவனை அவளுக்குப் பிடிக்கும்... ஆர்ப்பரிக்கும் அவளுடைய சொந்த பந்தங்களின் மத்தியிலே சிரிப்பதற்குக் கூடக் கூலி கேட்கும் அவனின் கறாரான இயல்பிலும்.. தோற்றத்திலும்.. மனதைப் பறி கொடுத்தவள் அவள்.. ஆனாலும் கூட அதைப்பற்றி அவள் யோசித்ததில்லை.. அவன் எங்கேயென்று அவள் மனம் தேடியதில்லை.. அவனுடன் பேச வேண்டுமென்று விழைந்ததில்லை.. அவனைப் பற்றிய கனவுகளை அவள் கண்டதில்லை...

தேன்மொழி வாழ்க்கையின் நிதரிசனத்தை உணர்ந்தவள்.. தேவராஜனுக்கு தங்கையாக பிறந்து விட்டவள்.. அவளுக்கு விவரம் தெரிந்த நாளிலிருந்து தேவராஜனைப் பற்றியே அவள் குடும்பம் பேசியிருக்கிறது.. கவலைப்பட்டிருக்கிறது.. நாள்களைக் கடத்தியிருக்கிறது..

அவனுக்கு அடுத்து தேன்மொழி என்ற ஒருத்தி இருக்கிறாள்.. அவளுக்கும் மனம் என்ற ஒன்று இருக்கிறது.. அவளுக்கும் திருமணவயது வந்து விட்டது என்ற எண்ணமே அவள் குடும்பத்திற்கு வந்ததில்லை.. தேவராஜன் வரவிட்டதில்லை...

அவனைப் பற்றி மட்டுமே அவன் குடும்பத்தை நினைக்க வைத்தவன் அவன்.. இப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்தவளின் வாழ்க்கை யாரோடு நிர்ணயிக்கப்படும்

என்று தெரியாத சூழ்நிலையில்.. கண்ணதாசனைப் பற்றி அவள் கனவு காண முடியுமா..? அப்படி அவள் கனவு கண்டால் தான் அதைச் சிதைப்பதற்கென்று அவளுக்கு ஒரு அண்ணன் வாய்த்திருக்கிறானே....

சும்மா இருந்த துரியோதனனை கொம்பு சீவி விட்டு கண்ணதாசனின் தங்கையை பெண் கேட்க அவன் அனுப்பி வைத்தபோதே.. இனி மறந்தும் கூட கண்ணதாசனைப் பற்றி சாதாரணமாகக் கூட அவள் நினைத்தும் பார்க்க முடியாது என்பதை உணர்ந்து விட்டாள் தேன்மொழி...

கண்ணதாசன் அவளுக்கு எட்டாக் கனி...!

அப்படிப்பட்ட எட்டாக்கனியை கிட்டத்தில் பார்த்தவளுக்கு.. அவளுக்குத் தெரிந்த சில விவரங்களை அவனுக்குத் தெரியப் படுத்தாமல் போகவிட மனமில்லை...

கண்ணதாசனின் சிரிப்புக்குப் பின்னால் தெரிந்த மெலிதான முக வாடலில் மனம் வாடினாள் தேன்மொழி....

ஒருவேளை.. அவள் சொல்லப் போகும் விவரங்கள் அவனுக்கு உபயோகமாக இருந்து விட்டால்.. அது போதும் என்ற எண்ணம் அவளுக்கு...

“ம்ம்ம்..” தேன்மொழி தலையசைத்தாள்...

“என்ன சொல்லனும்..?” அதே மென்மையுடன் கேட்டான் கண்ணதாசன்...

‘உன் கைபிடிக்கும் வரம் வேண்டும்…’ என்று சொல்லத் தோன்றியது தேன்மொழிக்கு…

அவள்தான் அந்த வரம் வாங்கிப் பிறக்கவில்லையே.. அதனால் விரக்தியாகச் சிரித்தபடி…

“எனக்குத் தெரிஞ்ச சில விசயங்களைச் சொல்லனும்…” என்றாள்…

கண்ணதாசன் யோசனையுடன் அவள் முகம் பார்த்தான்.. அதில் தெரிந்த உண்மையில் அவன் மனம் லயித்தது.. துரியோதனனுக்கு இப்படியொரு மகளா என்ற நினைவுடன்..

“இங்கே பேசவேணாம்.. எல்லோரும் நம்மையே பாக்கிறாங்க.. சாமி கும்பிட்டுட்டு வாங்க.. அதோ.. அந்த மண்டபத்தில் உக்காந்து பேசலாம்..” என்று சுட்டிக் காட்டினான்…

அவன் விரல் நீட்டிய திசையில் திரும்பிப் பார்த்தாள் தேன்மொழி.. அந்த மண்டபம் பிரகாரத்தின் சுற்றுப் பாதையிலிருந்து விலகி அமைந்திருந்தது.. அங்கே உட்கார்ந்து பேசினால் மற்றவர்களின் கண்களில் பட முடியாது என்பது புரிந்ததில் அவள் தலையை ஆட்டினாள்.. கண்ணதாசன் விலகி நடந்தான்.. சன்னதிக்குள் நுழைந்த போது திரும்பிப் பார்த்தான்.. விட்டால் அவள் போய் விடுவாளோ என்ற பதட்டத்துடன் நிழலாக அவனைத்

தொடர்ந்து வந்து கொண்டிருந்தவளைப் பார்த்தபோது அவன் முகத்தில் யோசனை வந்தது...

பெருமாளையும்.. தாயாரையும்.. சேவித்துவிட்டு.. அவன் சுற்றுப் பிரகாரத்தில் நடக்க ஆரம்பித்தான்.. அவன் சொன்ன மண்டபத்தில் போய் பெரிய தூண்களின் மறைவில் அமைந்திருந்த படிக்கட்டில் அமர்ந்தான்.. சற்று நேரத்தில் தேன்மொழி அங்கே வந்து விட்டாள்...

இருள் பரவ ஆரம்பித்த அந்த பின் மாலைப் பொழுதில் கோவில் மண்டபத்தின் படிக்கட்டில் அவனருகே அவள் அமர்ந்தாள்...

# 89

*கல்லாக உன் மனமிருந்தாலும்...*
*அதன் கருத்தினில் பதிய ஆசைகொண்டேன்...*

**அ**துவரை தங்கையைத் தவிர வேறு எந்தப் பெண்ணிடமும் தனித்து அமர்ந்து பேசியிராத கண்ணதாசனுக்கு என்னவோ போல இருந்தது.. தேன்மொழி கேட்டுக் கொண்டவுடன் சம்மதித்து தனித்து வந்து அமர்ந்தது தவறோ என்று அவன்

சங்கடப்பட்டான்.. ஆனாலும் மென்மை தவழும் அவள் விழிகளின் இறைஞ்சுதலைத் தட்டிக் கழிக்க அவனால் முடியவில்லையே...

மெலிதான இருள் படலத்தில்.. கோவிலின் விளக்குகளின் வெளிச்சத்தில்.. ஒரு தேவதையைப் போல அவள் ஒளிர்ந்தாள்... அவள் தலையில் சூடியிருந்த மல்லிகையின் மணம்.. கோவிலுக்கே உரிய தெய்வீக மணத்துடன் கலந்து அவன் நாசியில் நுழைந்தது...

'இது ஒரு புது அனுபவம்...'

அவன் மனது சிலிர்த்தது.. தங்கை.. அவள் மனதின் ஏக்கம்.. அவள் முகத்தின் சிரிப்பு என்று தங்கையைத் தவிர வேறு எண்ணமில்லாமல் வாழ்ந்து கொண்டிருப்பவனின் மனதில் புதிதான உணர்வலைகள் படிந்தன...

"ஏதோ பேசனும்னு சொன்னீங்களே.." அவன் மௌனத்தைக் கலைத்தான்...

"ம்ம்ம்.." அவள் நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள்...

அவன் விழிகளைச் சந்தித்ததும் அவள் முகத்தில் படர்ந்த அந்த வெட்கத்தை அவனுக்குப் பிடித்திருந்தது.. முகம் சிவக்க.. பார்வையை அவள் தாழ்த்திக் கொண்டதில் அசையாத அவன் மனமும் அசைந்தது....

"அப்பா உங்க வீட்டுக்கு வந்திருப்பார்.." தயக்கத்துடன் பேசினாள் தேன்மொழி...

மென்மை படர்ந்திருந்த கண்ணதாசனின் முகம் இறுகியது...

"ம்ம்ம்.." பதில் சொல்ல அவன் விரும்பாததை அவனது முணுமுணுத்தல் தெரிவித்தது...

"அம்மாவுக்கும்.. எனக்கும் அதில் துளிக்கூட இஷ்டமில்ல..." மெல்லிய குரலில் சொன்னாள் தேன்மொழி....

இதை எதற்காக அவனிடம் சொல்கிறாள் என்ற கேள்வி அவனுக்குள் எழுந்தது...

துரியோதனன் கண்ணதாசனின் தங்கையை அவர் மகனுக்காக பெண் கேட்டு வந்தால்.. அவன் அவர்மீது தான் கோபம் கொள்ள முடியும்.. அதைத்தாண்டி அவர் வீட்டுப் பெண்கள் மீது எதற்காக கோபம் கொள்ளப் போடகிறான்..?

"நாங்க.. உங்களைத் தப்பா நினைக்கலையே..."

கண்ணதாசன் கவனமாக 'நான்' என்ற வார்த்தையைத் தவிர்த்து.. 'நாங்க' என்ற வார்த்தையைப் பிரயோகித்தான்.. அதை உணர்ந்து கொண்ட தேன்மொழியின் மனம் வலித்தது.. ஒரு நொடியில் அருகில் அமர்ந்திருக்கும் அவன்.. வெகு தூரத்தில் விலகிப் போவதைப்போல அவள் மனதில் துயரம் எழுந்தது...

“நீங்க நினைக்க மாட்டிங்க.. ஆனாலும் நான் இதைச்சொல்லித்தான் ஆகனும்.. இதைச் சொன்னாத்தான் எனக்கு நிம்மதி..”

“பெரியபேச்சையெல்லாம் பேசறிங்க.. பொண்ணுன்னு இருந்தா ஆயிரம் பேரு கேட்டுத்தான் வருவாங்க.. பிடிச்சாக் கொடுக்கப் போறோம்.. பிடிக்கலைன்னா முடியாதுன்னு சொல்லப் போறோம்.. இதில உங்க நிம்மதி கெட என்ன இருக்கு..?”

“அப்படியில்லைங்க.. என் கண் முன்னால நடந்ததை உங்ககிட்ட சொல்லிடனும்னு என் மனசு துடிக்குது.. அதைத்தான் நான் செய்யறேன்...”

“இதைச் சொல்லத்தான் நீங்க நினைச்சீங்கன்னா.. இந்தப் பேச்சை இதோட விட்டிருங்க.. உங்க அப்பாவும்.. அண்ணனும் போடற ஆட்டத்துக்கு.. பாவம்.. வீட்டுக்குள்ள இருக்கிற நீங்களும் உங்க அம்மாவும் என்ன பண்ணுவீங்க...?”

“அப்பா தானா ஆடலை.. அண்ணன் ஆட வைக்குது...”

“அதுவும் எனக்குத் தெரியும்..”

“உங்களுக்குத் தெரியாத விசயம் நிறைய இருக்கு.. அப்பா இப்படி அண்ணன் பேச்சைக் கேட்டு ஆடறவரில்ல...”

“இப்ப ஆடறாரே...”

“அது அண்ணன் செய்ற சூழ்ச்சி.. உங்களுக்கு ஒன்னு தெரியுமா..? உங்க தங்கச்சி வேலை பாக்கிற கடையை வாங்கியிருக்கிறவரு எங்க அப்பா கூடப் படிச்சவரு..”

“என்னது...?!...”

கண்ணதாசன் ஆச்சரியத்துடன் தேன்மொழியைப் பார்த்தான்.. இந்த விவரம் அவனுக்குப் புதிதுதான்...

“அர்ஜீனையா சொல்கிறீங்க..?”

“அவரோட அப்பாவைச் சொல்றேன்..”

“இது எனக்குத் தெரியாதே...”

“யாருக்கும் தெரியாது.. ஏன்.. என் அப்பாவுக்கே கடையை வித்து ஒப்படைக்கிற வரைக்கும்.. அதை வாங்கியிருக்கிறது அவர் கூடப் படிச்ச பார்த்தசாரதிதான்னு தெரியவே தெரியாது.. தெரிஞ்சிருந்தா அவரு அந்தக் கடையை பார்த்தசாரதிக்கு கொடுத்திருக்கவே மாட்டாரு..”

“ஏன்..?” புருவங்களை உயர்த்தினான் கண்ணதாசன்...

“அதையேன் கேக்கறிங்க.. அப்பாவும் அவரும் படிச்ச காலத்தில அந்தப் பார்த்தசாரதியோட தாத்தா நடத்திக்கிட்டு இருந்த கடையை வித்துட்டாங்களாம்...”

“அதுக்கும்.. இதுக்கும் என்ன சம்பந்தம்..?” கண்ணதாசனுக்கு புரியவில்லை..

“சும்மாயிருக்காம எங்க அப்பா அதைச்சொல்லிக் காட்டியிருக்காரு..”

“ஓ...” கண்ணதாசனுக்கு இப்போது எல்லா விவரமும் புரிந்து விட்டது..

“கெட்டிக்காரத்தனமா மகன் பெயரில பார்த்தசாரதி கடையை வாங்கிட்டார்.. அது தெரியாம எக்கச்சக்கமான லாபம் வருதுன்னு அப்பாவும் கடையை வித்துட்டார்...”

“ம்ம்ம்...”

“மத்தவங்க கொடுக்கிறதா இருந்த விலையை விட இவங்க நான்கு மடங்கு அதிகமாக் கொடுத்தப்ப.. வெளியூர்காரன்.. வெளிநாட்டில சுத்திக்கிட்டு இருக்கிறவன்.. உள்ளூர் விலை நிலவரம் தெரியாம கடையை வாங்குறான்னு அப்பா சந்தோசப்பட்டார்.. ஆனா அதிகவிலையைக் கொடுத்து.. வேற எதையும் விசாரிக்க விடாம பார்த்தசாரதி பணத்தால அடிச்சுட்டாருங்கிற விவரம் அவருக்குப் புரியல...”

“ம்ம்ம்...”

“அவரோட மகன்கிட்ட கடையோட பொறுப்பை ஒப்படைக்கிறப்ப அவரு பழசை நினைவு படுத்தி..

கஷ்டம் வந்ததால.. நீங்க கடையை வித்திருக்கீங்களே.. இதே நிலைமையிலதான அன்னைக்கு எங்க அப்பாவும் இருந்தாரு.. அதைச் சொல்லிக்காட்டின உங்களால மட்டும் கடையை விக்காம இருக்க முடிஞ்சுச்சான்னு கேட்டிருக்காரு..."

"ம்ம்ம்..."

"அப்பாவுக்கு மனசு தாங்கல.. வித்த கடையை திரும்பவும் கைப்பத்தவும் முடியல.. தினமும் அதையே சொல்லிச்சொல்லிப் புலம்பிக்கிட்டே இருந்தாரு.. அப்பத்தான் அண்ணன் வலையை விரிச்சுச்சு.. அப்பாவும் மாட்டிக்கிட்டாரு.. இல்லைன்னா அப்பா இது போலல்லாம் செய்கிற ஆளில்ல.. நாலு பேருக்கு நாயம் சொல்கிறவரு.. நாலையும் யோசிச்சு செய்கிறவரு..."

கண்ணதாசன் பதில் சொல்லவில்லை.. தெளிந்த நீரோடையைப் போல மனதிலிருந்த விவரங்களைக் கொட்டிக் கொண்டிருந்த தேன்மொழி அதைப் பொருட்படுத்தவுமில்லை...

"மகாபாரத கதையையெல்லாம் இது எங்கே தெரிஞ்சுவைச்சிருந்துச்சுன்னு தெரியல.. மகாபாரதத்தில தன்ன தோக்கடிச்ச அர்ச்சுனனுக்கு துருபதராஜா பொண்ணக் கொடுத்து மருமகனாக்கிக்கிட்டதப் போல..

இந்த அர்ச்சுனனுக்கும் நம்ம தேன்மொழியக் கட்டிக் கொடுத்து மருமகனாக்கிங்க.. அப்பத்தான் அந்த பார்த்தசாரதிகிட்ட நீங்க தோத்துப் போனதில உங்க மனசு வருத்தப்படாம இருக்கும்ன்னு கிளப்பி விட்டிருச்சு...”

“என்னது..?..!” அதிர்ச்சியுடன் நிமிர்ந்தான் கண்ணதாசன்...

அந்த அதிர்ச்சி எதற்காக என்ற யோசனையில் ஆழ்ந்தாள் தேன்மொழி.. அவளை அர்ஜீனனுக்கு திருமணம் செய்து கொடுக்க வேண்டுமென்று தேவராஜன் சொன்னதினால் அதிர்ச்சியடைந்தானா.. இல்லை.. அவனுடைய தங்கையின் காதலனுக்கு தேன்மொழியைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று எப்படி தேவராஜன் சொல்லலாம் என்று அதிர்ச்சியடைந்தானா என்று அவளுக்கு விளங்கவில்லை...

அது.. இது.. என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாத ஆழ்மன உணர்வுகளை யாரால் வரையறுக்க முடியும்..?

அது என்னவென்று தேன்மொழியால் கண்ணதாசனிடம் கேட்டுவிட முடியுமா..?

அவள் சங்கடத்துடன் தலைநிமிர முடியாமல்.. கைவிரலால் மண்டபத்தின் படிமீது கோலமிட்டபடி பேச்சைத் தொடர்ந்தாள்...

“அண்ணன்தான் கூறுகெட்டுப் போயி யோசனை சொல்லிக் கொடுத்துச்சுன்னா.. அப்பாவும் புத்தியைக் கடன் கொடுத்திட்டாரு...”

“அப்புறம்..?”

“அப்புறம் என்னத்தைன்னு சொல்றது..? அப்பா அந்த பார்த்தசாரதிக்கு போன் போட்டாரு..”

அதற்கு மேல் பேச தேன்மொழியும் சிரமப்பட்டாள்.. கேட்பதற்கு கண்ணதாசனும் சிரமப்பட்டான்.. அனுமார் கடலை ஒரே தாண்டாக தாண்டிக் கடந்ததைப் போல.. அந்தப் பேச்சையும் ஒரு தாண்டாக.. தாண்டி விட்டாள் தேன்மொழி...

“அந்தக் கதை ஊத்திக்கிச்சு.. இப்படி ஒரு ஆகாவழிப் பாதையைக் காட்டிக் கொடுத்தியேன்னு அண்ணனைத் தூக்கிப் போட்டு மிதிக்கறதுக்குப் பதிலா அது சொல்லக் கேட்டுக்கிட்டு அடுத்த ஆகாவழிக் கதையை அப்பா ஆரம்பிச்சாரு..”

கண்ணதாசன் புருவங்களை உயர்த்தினான்.. தேன்மொழி தயங்கினாள்.. காவ்யாவைப் பற்றிய செய்தியை கண்ணதாசனிடம் எப்படிச் சொல்வது என்ற சங்கடம் அவளுக்குள் வந்தது...

கண்ணதாசனுக்கு காவ்யாவின் காதலைப் பற்றித் தெரியும் என்பது அவளுக்குத் தெரியாதே...

“இப்ப நான் சொல்லப் போறதைக் கேட்டு உங்களுக்கு அதிச்சியாயிருக்கலாம்..” அவள் பீடிகை போட்டாள்...

“நிறைய அதிர்ச்சிகளைப் பாத்துட்டேன்.. அதனால.. என் அதிர்ச்சியைப் பத்திக் கவலைப்படாம.. நீ சொல்ல வந்ததைச் சொல்லு...” என்றான் கண்ணதாசன்..

“என்னடா.. இவ பேசனும்னு சொல்லிட்டு.. நம்ம தங்கச்சியப் பத்திப் பேசறாளேன்னு நீங்க தப்பா நினைச்சிரக் கூடாது..”

“தங்கச்சியா..?”

காவ்யா இதில் எங்கே வந்தாள் என்ற நினைவுடன் தேன்மொழியைக் கூர்மையாகப் பார்த்தான் கண்ணதாசன்..

“காவ்யாவ எனக்குப் பிடிக்கும்..”

குழந்தைத்தனத்துடன் சொன்ன தேன்மொழியை கண்ணதாசனுக்குப் பிடித்தது.. அவனுடைய தங்கை என்பதினால் காவ்யாவிடம் தேன்மொழிகாட்டும் நேசத்தை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது...

“அவளோட சொந்த விசயத்தப் பத்தி போட்டுக் கொடுக்கிறதுக்காக நான் இதச் சொல்லல.. என் அண்ணனால அவளுக்கு வந்துகிட்டு இருக்கிற ஆபத்த பத்தித்தான் நான் சொல்றேன்...”

“உன் அண்ணனால எந்தங்கச்சிக்கு ஆபத்தா..? கையைக் கால முறிச்சிர மாட்டேன்..? அவளுக்கு அண்ணன்காரன்னு நான் ஒருத்தன் எதுக்கு இருக்கேன்..?”

“கோபப் படாதீங்க.. ப்ளீஸ்...”

கண்சிவந்த கண்ணதாசன் தேன்மொழியின் வேண்டுதலில் நிதானித்தான்...

“கோபப்படலை.. சொல்லு..” என்றான் கண்ணதாசன்..

“உங்க தங்கச்சிக்கும் பார்த்தசாரதியோட மகனுக்கும் காதலாம்..” பயந்தபடியே சொன்னாள் தேன்மொழி...

அவள் எதிர்பார்த்ததைப் போலவே அவளை முறைத்தான் கண்ணதாசன்.. காவ்யாவின் காதல் கதை ஊர் முழுவதும் கொட்டிக் கிடக்கிறதே என்றிருந்தது அவனுக்கு...

“பாத்தீங்களா.. நீங்க கோவிச்சுக்கிட்டிங்க.. நான் காவ்யாவப்பத்திக் குத்தமாகச் சொல்லலை.. அவகாதலப் பத்தி என் அண்ணனுக்கு தெரிஞ்சிருக்குன்னு சொல்ல வர்றேன்...”

“தெரிஞ்சிருந்தா.. அவன் கிழிச்சிருவானா..? ஆமா.. எந்தங்கச்சி காதலிக்குது.. போய் அவன்கிட்டச் சொல்லு... காவ்யாவோட அண்ணன் படிச்சுட்டு ஆபிசரா வேல பாத்தாலும்.. அடிப்படையில மதுரைக்காரன்தான்னு

சொல்லு... அவனப் போல முதுகுக்கு பின்னால ஒளிஞ்சுகிட்டு.. போட்டுக் கொடுத்து பொழப்பு நடத்தாம வேட்டியை மடிச்சுக் கட்டிக்கிட்டு வீரமா களம் இறங்கறவன்தான் இந்தக் கண்ணதாசன்னு போய் சொல்லு..."

அவன் பொங்கினான்.. அவன் கோபத்தில் தேன்மொழி திகிலடைந்தாள்...

# 90

*கொந்தளிக்கும் மனதினையும்...*
*நீ குளிரவைக்க ஆசைகொண்டேன்...*

"**எ**ன்ன நினைச்சுக்கிட்டு இருக்கான் உன் அண்ணன்..? சீவிப் புடுவேன் சீவி.. யாருகிட்ட..? வெள்ளையும்.. சொள்ளயுமா டை கட்டி உத்தியோகம் பார்த்தா.. அவனத் தூக்கிப் போட்டு மிதிக்க மாட்டேன்னு கனவு கண்டுக்கிட்டு இருக்கானா..?"

கோபத்துடன் கண்ணதாசன் எழுந்து கொள்ளப் போனான்.. சட்டென்று அவன் கைபிடித்து தடுத்தாள் தேன்மொழி.. அவன் கையை இறுக்கிப் பற்றியிருந்த

அவளின் விரல்களின் நடுக்கத்தில் ஆவேசம் குறைந்தவனாக படிக்கட்டில் அமர்ந்தான் கண்ணதாசன்.. அவன் கையிலிருந்து விலகிய தேன்மொழியின் விரல்கள் நடுங்கிக் கொண்டேயிருந்தன...

"இந்த அளவுக்கு கோபப் படுவீங்கன்னு எனக்கும் தெரியும்.. ஆனா.. எனக்கு வேற வழியில்ல.. எதுக்காக என் அண்ணனுக்கு காவ்யாவ பொண்ணு கேட்டு எங்கப்பா உங்க வீட்டுக்கு வந்தாருன்னு நினைக்கறிங்க.. எல்லாம் என் அண்ணனோட தூபம்தான்..."

"அவன் தூபம் போட்டா.. உன் அப்பாவுக்கு எங்கே போச்சு புத்தி..?"

"அதைத்தான் புல் மேய பத்தி விட்டுட்டாரே.. அதப் பத்தி பேசி என்ன பிரயோசனம்..? பார்த்தசாரதிய பழிவாங்கனும்னு கிளப்பினது போதாதுன்னு பார்த்த சாரதியின் மகனப் பழிவாங்கனும்னு அண்ணன் அப்பாவ கிளப்பி விட்டிருச்சு..."

"அர்ஜீன் என்ன பண்ணினான்..?"

"என்னக் கட்டிக்க மாட்டேன்னு சொல்லிட்டாராம்.."

தேன்மொழியின் முகம் கன்றிச் சிவந்தது.. அதை அனுதாபத்துடன் பார்த்தான் கண்ணதாசன்.. ஏனோ அவனுக்கு அந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும் போலத் தோன்றியது..

"நான் ஒன்னு கேட்பேன்.. தப்பா நினைச்சுக்க மாட்டியே..."

'உன்னைப் போய் தப்பா நினைப்பேனா..?' என்ற குதூகலத்துடன்...

"கேளுங்க.." என்றாள் தேன்மொழி...

"அர்ஜீனைக் கல்யாணம் பண்ணிக்கனும்னு நீ நினைச்சியா..?"

'என்ன கேள்வி கேட்டு விட்டாய்...'

அடிபட்ட மனத்தின் ஊமைக் காயத்துடன் அவனையே இமைக்காமல் துயரத்துடன் பார்த்தாள் தேன்மொழி...

தேவராஜனைப் போன்ற சுயநலக்காரன் ஒருவனுக்கு தங்கையாக பிறந்து விட்ட கொடுமையினால்தானே.. அவளது மனதுக்குப் பிடித்தவனிடமிருந்து இப்படிப்பட்ட வார்த்தைகளை அவள் கேட்க நேரிடுகிறது...?

அவளின் பார்வையைத் தாங்க மாட்டாமல் உதட்டைக் கடித்த கண்ணதாசன்...

"ஸாரி.." என்றான்...

"பரவாயில்ன்னு நான் சொல்லமாட்டேன்.. மனுசரை எடைபோடத் தெரிஞ்ச உங்களுக்கு மனசைப் படிக்கத் தெரியலையே..."

“கேக்கனும்னு தோணுச்சு.. கேட்டுட்டேன்...”

“இனிமே இப்படிக் கேக்காதீங்க.. யாரையும் கல்யாணம் பண்ணிக்கனும்னு நான் நினைக்கலை.. இது என் அம்மாவுக்கும்.. அந்தக் கடவுளுக்கும் தெரியும்..”

“விட்டுரு.. ப்ளீஸ்...”

“ம்ம்ம்.. பார்த்தசாரதியோட மகனைப் பழிவாங்க.. அவர் காதலிக்கிற காவ்யாவ நாம பொண்ணு கேட்டு நம்ம வீட்டு மருமகளாக்கிக்கனும்னு அண்ணன் தூண்டிவிட்டுச்சு...”

“என்ன ஒரு கேவலமான எண்ணம்.. இவனுக்கு என் தங்கச்சி மேல நோக்கமிருந்தா.. அதுக்கு எதையெதையோ காரணம் காட்டி.... சுத்தி விடுவானா..?”

“அது எதையும் செய்யும்.. அப்பா பொண்ணு கேட்டு வந்து நீங்க கொடுக்காததில கோபப்பட்டு.. அப்பாவ தூண்டிவிட்டுருச்சு.. அவரு காவ்யாவோட காதலப் பத்தி பார்த்தசாரதிக்கு போன் போட்டுச் சொல்லிட்டாரு...”

“என்னது..?!” அதிர்ந்தான் கண்ணதாசன்...

‘கடைசியில இந்த வேலய இவனுக செய்திருக்கானுகளா..?’

திடிரென்று பார்த்தசாரதி மதுரைக்கு வந்து குதித்திருப்பதின் மர்மம் என்னவென்று அவனுக்கு அப்போதுதான் பிடிபட்டது...

‘வந்தவன் சும்மாவும் வந்து தொலைக்காம.. எவளோ ஒரு பிடாரியையும் வரவழைச்சு வைச்சிருக்கானே...’

காவ்யாவின் கண்ணீருக்கான காரணத்தைத் தெரிந்து கொண்டவனின் மன உளைச்சல் அதிகமானது.. அதுவரை இருளில் தேடிக் கொண்டிருந்த பகைவர்களின் முகத்திரை அறுபட்டதில் கண்ணதாசனுக்குள் இருந்த இன்னொரு கண்ணதாசன் உறுமினான்...

“போய் சொல்லி வை தேன்மொழி.. நான் ஒன்னும் வளையல் மாட்டி.. பொட்டு வைச்சுக்கிட்டு நிக்கிற பொம்பளயில்ல.. பத்துப் பேரு எதுத்து வந்தாலும்.. வெட்டிச் சாய்க்கிற ஆம்பளை...”

“இதை நீங்க சொல்லித்தான் நான் தெரிஞ்சுக்கனுமா..? எனக்கே தெரியுமே...”

“பெரிய மனுசன் செய்கிற வேலையை உங்கப்பா செய்யலை..”

“அவரை பெரிய மனுசனா இருக்கிறதுக்கு அண்ணன் விடலை...”

“தென்னை மரத்தில தேள் கொட்டினா பனை மரத்தில எதுக்காக நெறி கட்டனும்..?”

“கூடாதுதான்...”

“உங்கப்பாவுக்கும்.. அவரோட சிநேகிதனுக்கும் பகையிருந்தா நேரடியா மோதிப் பாக்கனும்.. அத விட்டுட்டு என்தங்கச்சி பேச்ச எதுக்காக இழுக்கனும்..?”

“தப்புத்தான்...”

“இருக்கட்டும்... இவங்க காவ்யாவ என்ன பண்ணிருவாங்கன்னு நானும் பார்க்கிறேன்...”

“அண்ணன் இதோட நிக்காதுன்னு நான் நினைக்கிறேன்...”

தேன்மொழி கவலை தோய்ந்த குரலில் கூற.. அவளை புதிய சொந்தத்துடன் பார்த்தான் கண்ணதாசன்..

அவள் நினைத்திருந்தால் இந்த விவரங்களை மூடி மறைத்திருக்கலாம்.. கண்ணதாசனைப் பார்த்தும்.. பாக்காததைப் போல போயிருக்கலாம்.. இதைச் சொல்ல வேண்டுமென்ற அவசியம் அவளுக்கில்லையே...

இருந்தும் அவள் சொன்னாள்.. அவள் மட்டும் அந்த விவரங்களைச் சொல்லாமல் இருந்திருந்தால்.. காவ்யாவுக்கு நேர்ந்திருக்கும் சிக்கலின் பிண்ணனி என்னவென்று கண்ணதாசனுக்கு தெரியாமலே போயிருக்கும்...

தேன்மொழி.. தந்தையென்றும் பார்க்கவில்லை.. தமையனென்றும் நினைக்கவில்லை.. எது உண்மையோ.. அந்த உண்மையை கண்ணதாசனுக்குச் சொல்லி.. அவன் தங்கையைக் காத்துக் கொள்ளச் சொன்னாள்.. அதனால் அவளின் குடும்பத்தை அவன் குறைவாக நினைப்பானென்று அவள் நினைக்கவில்லை...

தந்நலம் கருதாத அவளின் அந்தத் தன்மையில் மனம் நெகிழ்ந்தான் கண்ணதாசன்...

“தேன்மொழி...”

முதல் முறையாக அவளைப் பெயர் சொல்லி அழைத்தான் அவன்.. பிரமிப்புடன் அவனை ஏறிட்டுப் பார்த்த அவள் விழிகளில் நீர்முத்துக்கள் நிறைந்திருந்தன...

“தேங்க்ஸ்...”

இதற்குத்தான் அவளை அழைத்தானா..? அவளின் விழியின் நீர்முத்துக்கள் உதிர்ந்து அவள் கன்னங்களில் உருண்டோடின...

சட்டென்று முகம் திருப்பி... கன்னங்களைத் துடைத்து தன்னைச் சரிப்படுத்திக் கொண்டாள் தேன்மொழி...

‘இத்தனைக்குப் பின்னாலும்.. இவன் மனசில் என் நினைப்பு வரும்ன்னு நான் நினைக்கிறதுதான் முட்டாள் தனம்...’

காவ்யாவின் வாழ்வுடன் விளையாடிக் கொண்டிருப்பவர்களின் வீட்டைச் சேர்ந்த பெண்ணை கண்ணதாசன் நினைத்தும் பார்க்க மாட்டான்.. தெரிந்தேதான் தேன்மொழி அவளுக்குத் தெரிந்த விவரங்களைச் சொன்னாள்...

‘இதனால் இவன் தங்கச்சியைக் காப்பாத்திக்க முடிஞ்சா அதுவே எனக்குப் போதும்..’

காதல் என்பது.. தியாகங்கள் எனப்படும் கற்களால் கட்டப்பட்ட கோட்டையானது..

தேன்மொழியொன்றும் கண்ணதாசனைக் காதலித்து விடவில்லை.. ஆனால்.. அவள் மனதில் அவனுக்கான ஏக்கத்தின் உணர்வலைகள் ததும்பிக் கொண்டிருந்தன...

அவள் அவனைக் காதலிக்காமல் காதலித்தாள்.. அதை அவள் உணர்த்திருக்கவில்லை.. அவன் உணர்ந்து கொண்டான்...

மாலை விடைபெற்று முன்னிரவு ஆரம்பித்து விட்ட அந்த வேளையில் கோவிலில் ஜன நடமாட்டம் குறைந்திருந்தது.. கோபுரத்தின் உச்சியில்.. வானத்தில் பவனியை ஆரம்பித்து விட்ட நிலவு தெரிந்தது...

“நேரமாகிருச்சு...” தேன்மொழி எழுந்து கொண்டாள்..

“வீட்டுக்குப் போகனும்.. அம்மா தேடும்..”

கண்ணதாசன் அவளைத் தடுக்கவில்லை... அவனும் எழுந்து கொண்டதில் அவள் மனதில் ஏமாற்றம் கவிந்தது...

அவன் கிளம்பும்போது அவன் கைபிடித்து அவள் தடுத்தாளே.. அந்தத் தவிப்பும்.. பதட்டமும்.. அவனுக்கில்லையா..?

தேன்மொழியின் விழிகளில் மறுபடியும் நீர்முத்துக்கள் வரவா என்று கேட்டன.. இமைகொட்டி அவைகளை மறுத்து வழியனுப்பி வைத்தாள் அவள்...

“நன்றி..” கரம் குவித்தாள்...

“நான் உனக்குத் தேங்க்ஸ் சொன்னா அதில் ஒரு அர்த்தமிருக்கு.. நீ எனக்கு நன்றி சொல்றதில என்ன அர்த்தமிருக்கு..?”

“என் வார்த்தைய மதிச்சு.. இவ்வளவு நேரத்தையும் எனக்காக செலவளிச்சீங்களே.. அதுக்காக நன்றி சொன்னேன்...”

தேன்மொழி படிகளில் இறங்கினாள்.. ஏதோ அவனைவிட்டு அகன்று செல்வதைப் போல உணர்ந்தான் கண்ணதாசன்...

“நில்லு தேன்மொழி...”

அவனின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு அவள் நின்றாள்.. அவன் படிகளில் இறங்கி அவளருகில் வந்து அவள் முகம் பார்த்தான்...

“உங்கப்பாவும்.. அண்ணனும்தான் எனக்கு எதிரிக.. நீயில்லை..”

அவனின் அந்தவார்த்தையில் அவளுக்குள் ஓர்விதமான உற்சாகம் பரவியது.. அவள் முகம் மலர்ந்தது...

“இன்னைக்கு நீ செய்திருக்க இந்த உதவியை என் வாழ்நாள் பூராவும் நான் நினைப்பில வைச்சிருப்பேன்..”

அவளுக்கு அதுவே போதுமானதாக இருந்தது.. அவளின் உதவிகளை அவன் நினைவில் வைத்திருக்கும் போது.. அதைச்செய்த அவளை நினைவில் வைத்திருக்க மாட்டானா..?

பூவோடு சேர்ந்து நாரும் மணம் பெறும்.. அவளது உதவிகளின் உதவியால் அவளும் அவன் நினைவில் வருவாள்..

‘இதுக்கு மேல என்ன வேணும் பெருமாளே...’

அவள் மனநிறைவுடன் அவனைப் பார்த்து தலையசைத்தாள்.. விடைகொடுக்காமல் இருக்க முடியாது என்பதை அவனும் உணர்ந்தான்.. அவள் வேறு... அவன் வேறு.. இருவருமே.. அவரவருக்கான வாழ்க்கைக்குத் திரும்பியாக வேண்டும்.. இருவரின் வீட்டிலும் அவர்களை எதிர்பார்த்து அவர்களின் குடும்பத்தினர் காத்திருப்பார்கள்..

அவனும் பதிலுக்கு தலையசைத்தான்.. கோவிலின் வாசலைத் தொட்டபோது அவள் திரும்பிப் பார்த்தாள்.. அவளைப் பின் தொடராமல் மண்டபத்திலேயே நின்று விட்ட கண்ணதாசன் தெரிந்தான்...

அவனால் அவளின் நற்பெயருக்கு ஊறு வந்து விடக்கூடாது என்ற அவனின் கவனத்தில் அவள் மனம் மயங்கியது...

‘இப்படிப்பட்ட ஒருவன்கூட வாழக் கொடுத்து வைக்குமா..?’

அவள் மனம் ஏங்கியது.. அப்போதுதான் ஒன்றை அவள் உணர்ந்தாள்.. அவளை ‘வாங்க.. போங்க...’ என்று அழைத்து பேச்சை ஆரம்பித்தவன்.. பேச்சின் ஊடே அவளை ‘வா.. போ..’ என்று அழைத்து விட்டான்...

‘அவன் அதை உணர்ந்திருப்பானா...?’

அந்த நினைவு தந்த உற்சாகத்துடன் தேன்மொழி வீட்டுக்குச் சென்று விட்டாள்.. அவள் போன வெகு நேரம் கழித்து.. மண்டபத்தின் மறைவை விட்டு வெளியே வந்த கண்ணதாசனும் அதை உணர்ந்திருந்தான்..

‘எப்படி அவளை இயல்பாக ‘வா.. போ’ன்னு பேசினேன்..?’

அவன் மனதில் ஆச்சரியம் வந்தது...

# 91

*கன்னி மன ஆசைகளை...*
*நீ கண்டுகொள்ள ஆசைகொண்டேன்...*

**அ**ர்ஜீனின் போன் வந்தபோது காவ்யா சத்தமில்லாமல் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்...

“சொல்லுங்க..” என்றவளின் குரல் மாறுபாட்டில்.. அவளின் கண்ணீரை அவன் உணர்ந்து விட்டான்..

“காவ்யா... அழுகிறயா..?” பதட்டமாக கேட்டான்...

“இல்ல..” அவள் கேவினாள்..

“ஏய்ய்.. என்னடி..?”

“உங்களுக்கு கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறத ஏன் என்கிட்டச் சொல்லல...?”

“பைத்தியம் போல உளராதே.. எனக்காவது.. மேரேஜ் பிக்ஸ் ஆகியிருக்கிறதாவது.. கனவு.. கினவு.. கண்டயா..?”

“கனாக் காண நீங்க சொன்னதப் போல எனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு...?”

“என்ன பேச்சுன்னு இதைப்பேசற காவ்யா..? திடிர்ன்னு இது என்ன புதுக்கதை...?”

“கதையை நான் சொல்லல.. கதை வசனத்த எழுதி.. படம் போட்டுக் காட்டிக்கிட்டு இருக்கிறது உங்க அப்பாதான்..”

“டாடியா..?”

“ஆமாம்.. இங்கே நேகான்னு ஒருத்தி வந்திருக்கிறா.. அவதான் அவரோட வருங்கால மருமகளாம்.. அவர் மகனோட வருங்காலப் பெண்டாட்டியாம்...”

“அவர் மகனா..? என்னையா சொன்னாரு..?”

“நீங்கதானே அவர் மகன்..? இல்லைன்னா வேற யாரும் இருக்காங்களா..? உங்களத் தவிட்டுக்கு கிவிட்டுக்கு வாங்கி விட்டிருக்கிறாரா..?”

“காவ்யா...”

“எரியுதில்ல.. இப்படித்தான எனக்கும் இருந்திருக்கும்..? எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகனும்..”

“என்ன உண்மை...?”

“அந்த நேகா யாரு..?”

“அவ சென்னையில இருக்கிறவ.. நேகா குருப் ஆஃப் கம்பெனிஸீக்கு எம்.டி...”

“அதாவது முதலாளி...”

“யெஸ்.. அதுக்கென்ன..?”

“அதானே பார்த்தேன்.. இனம்.. இனத்தோடதான சேரும்..? முதலாளி.. முதலாளியம்மா கூடத்தான கூட்டுச் சேர்வீங்க...?”

“அடி வாங்கப் போறடி.. அவ யாருன்னு கேட்ட.. பதில் சொன்னேன்.. அதில இத்தனை குதர்க்கமா..?”

“எப்பக் கல்யாணம்..?”

“யாருக்கு..?”

“உங்களுக்கு..”

“அதை நீதான் சொல்லனும்..”

“நானென்ன ஜோஸியரா.. உங்க கல்யாணத்துக்கு நாள் குறிச்சுத் தர..? விட்டா உங்க கல்யாணத்துக்கு அட்சதை தூவ என்ன முதவரிசையில உக்கார வைச்சுருவீங்க போல இருக்கே..”

“நீ எதுக்குடி பர்ஸ்ட் ரோவில உட்காரனும்..? கல்யாணப்பெண்ணா என் பக்கத்தில இல்ல உட்காரனும்..”

அவன் பேச்சில் காவ்யாவிற்கு நின்று விட்ட கண்ணீர் மீண்டும் வர ஆரம்பித்தது...

“இந்த ஆசை வார்த்தைக்கெல்லாம் நான் மயங்கின காலம் மலையேறிப் போயாச்சு...”

“எந்த மலையேறி போயிருக்கு காவ்யா.. என்கிட்டச் சொல்லு.. இமய மலைன்னாலும் தேடிப் பிடிச்சுக் கொண்டு வர்றேன்.. அவங்கவங்க காதலிக்காக தாஜ்மஹாலைக் கட்டறாங்க.. நான் இதைக்கூட என் காதலிக்காக செய்ய மாட்டேனா..?”

“காதல் இங்கே.. கல்யாணம் அங்கேயா..?”

“எங்கே..?”

“அதான்.. அந்த நேகாகூட..”

“ம்ப்ச்.. என்னடி நீ.. டாடி எதுக்காக அப்படிப் பேசிவைத்தார்ன்னு எனக்கே தெரியலை...”

“நிஜமாவே உங்களுக்கும்.. அவளுக்கும் கல்யாணம் நிச்சயமாகலையா..?” காவ்யாவின் குரலில் நம்பிக்கை துளிர் விட்டது...

“இல்லை...” ஆணித்தரமான குரலில் மறுத்தான் அர்ஜீன்...

“அப்புறம் எப்படி உங்க அப்பா அவளுக்கு என்னை ஆரத்தி எடுக்கச் சொன்னாரு..?” காவ்யாவின் கேள்வியில்...

“என்னடி சொல்கிற..?” என்று அதிர்ந்தான் அர்ஜீன்..

“நடந்ததைச் சொல்றேன்.. உங்கப்பா அவளுக்கு என்னை ஆரத்தி எடுத்து கடைக்குள்ள கூப்பிட்டுக்கச்

சொன்னாரு.. கடையில் வேலை பாக்குறவங்க முன்னாலே இதைச் சொல்லி வைச்சாரு.. எல்லாரும் உங்களுக்கு பொண்டாட்டியா வரப் போகிறவ எப்படியிருக்கான்னு பார்க்க முண்டியடிச்சுக்கிட்டு முன்னால வந்து அவ முகத்தப் பார்த்துட்டுப் போனாங்க...”

“காவ்யா.. நீ ஆரத்தி எடுத்தியா..?”

“அத வேற நான் செய்யனுமா..?”

“ஏய்ய்.. தெரிஞ்சுக்கனும்னு கேட்டேண்டி..”

“கேப்பீங்கங்க.. நீங்க இத மட்டுமா கேப்பீங்க.. இன்னமும் கேப்பீங்க.. எங்க தாத்தா அடிக்கடி சொல்வாரு...”

“என்னத்தைச் சொல்வார்..?”

“ஏரோட்டறவன் இளிச்சவாயனா இருந்தா.. மாடு அவனை மச்சான்னு கூப்பிடுமாம்.. அந்தக் கதைதான் என் சொந்தக்கதையாய் போயிருச்சு...”

அவள் சொன்னதற்கு என்ன அர்த்தம் என்று அர்ஜீனுக்கு சுத்தமாக விளங்கவேயில்லை.. அவள் இதற்கு முன்னாலும் இதைப் போலச் சொல்லியிருக்கிறாள் என்று அவனுக்குத் தோன்றியது.. அப்போதும் அவன் அர்த்தம் புரியாமல்தான் விழித்திருக்கிறான் என்பதை அவன் நினைவு கூர்ந்தான்...

அவன் ஏரையும் கண்டதில்லை.. வயலையும் கண்டதில்லை.. இரண்டையும் காணாதவன்.. உழவு மாட்டை எங்கே கண்டிருக்கப் போகிறான்..? அது தெரியாமல் அவனிடம் சொலவடைகளை உளுந்த வடைகளைப் போல கொட்டித்தீர்க்கும் காவ்யாவின் பேச்சுக்கு எதிர் பேச்சுப் பேச முடியாமல் அவன் திணறினான்...

“மாட்டுக்கும்.. மச்சானுக்கும் எதை வைத்துடி முடிச்சுப் போடற...?”

“ஆமாம்.. இங்கே.. மூன்று முடிச்சை இவர் யார் கழுத்தில போடுவாருன்னு தெரியாம நான் திணறிக்கிட்டு இருக்கேன்.. இந்த லட்சணத்தில.. மாட்டுக்கும்.. மச்சானுக்கும்.. நான்தான் முடிச்சுப் போட்டேனாம்.. போவிங்களா...”

“அதெல்லாம் உன்னை விட்டுப் போகிறதா இல்லை...”

“இந்த வித்தாரப் பேச்சுக்கெல்லாம் குறையில்ல.. இப்படிப் பேசிப் பேசித்தான என்னை மயக்கி வைச்சீங்க...”

“இப்ப மட்டும் மயக்கி வைக்கலையா...”

“எனக்கு நல்லா வந்திரும வாயில.. காதலிச்சுட்டோ மேன்னு பாக்கறேன்.. அவளுக்கு நான் ஆரத்தி

எடுக்கனுமா..? உங்க மனசில அப்படியொரு ஆசையிருக்கா..?"

"அடிப்பாவி.. நான் எதைச் சொன்னா.. நீ எதில் வந்து நிற்கிற..? எனக்கு உன்மேல் மட்டும்தாண்டி ஆசை..."

"உங்க ஆசையெல்லாம் பாத்தாச்சு மச்சான்.. அடக்கி வாசிங்க.. ஆசையாம் ஆசை.. ஆசையிருக்கிறவர்தான் எவளோ ஒருத்திக்கு நான் ஆரத்தி எடுக்கலையான்னு கேப்பாரா...?"

"எடுத்தியான்னுதான் நான் கேட்டேன்..."

"தானிக்கு பேரு ஏமி..? அப்பாவுக்கும்.. மகனுக்கும் ஒன்னு போல மனசிருக்கிறப்ப.. எதுக்காக எங்கிட்ட நீங்க நடிக்கனும்...?"

"நடிக்கிறேனா..? நானா...?"

"இப்படிக் கேட்டா.. நான் ஏமாந்துருவேனா..? அவளுக்கு நான் ஆரத்தி எடுக்கனுமா..? அந்தக் குறை வேற உங்களுக்கு இருக்கா..? இது எனக்குத் தெரியாமப் போச்சே.. தெரிஞ்சிருந்தா அவளுக்கு ஆரத்தி எடுத்து.. பாதபூஜை பண்ணியிருப்பேனே..."

"சீச்சீ.. என்ன வார்த்தை பேசற..? யாருக்கு.. யார் பாதபூஜை செய்கிறது..? அவளுக்கு நீ செய்கிறதா..? அறிவைக் கடன் கொடுத்திருக்கியா காவ்யா..?"

அர்ஜீனின் அந்த கோபத்தில் காவ்யாவின் மனபாரம் கரைந்து கொஞ்சமாக குறைந்தது....

“நிஜமாகவே.. அவளை உங்க அப்பா உங்ககூட சேர்த்து வைத்துப் பேசறதைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா...?” அவள் மெல்லிய குரலில் கேட்டாள்..

“தெரியும்...” அவன் நிதானமான குரலில் சொன்னான்...

“நினைச்சேன்...” அவள் குரலில் மனவலி இருந்தது..

“நான் நினைச்சது உன்னை மட்டும்தான்.. டாடியிடம் நேகாவை மேரேஜ் பண்ணிக்கிறதுக்கு நான் ஓகே சொன்னதில்ல...”

“ஆனா.. அவரு.. அவளத்தான் அவரோட மருமகளா ஓகே பண்ணியிருக்காரு.. அது உங்களுக்குத் தெரியுமா..?”

“இதில் நீ பயப்பட எதுவுமில்லை காவ்யா... உன் அர்ஜீன் சுதந்திரமானவன்... அவன் வாழ்க்கையை அவன்தான் தீர்மானிப்பான்... அதை முடிவு பண்ணுகிற அதிகாரம் அவனுக்கு மட்டும்தான் உண்டு.. அந்த அதிகாரத்தை யார் கையிலும் அவன் கொடுத்ததில்லை...”

அர்ஜீனின் நிச்சயமான பேச்சில் காவ்யாவின் மனபாரம் இன்னும் கொஞ்சம் குறைந்தது...

“ஆனா.. அந்த அர்ஜீனின் கடையில்தான் அர்ஜீனோட வருங்காலப் பொண்டாட்டின்னு சொல்லிக்கிட்டு ஒருத்தி உள்ளே நுழைஞ்சிருக்கா..”

“அர்ஜீன் இல்லாத நேரத்தில் நுழைஞ்சிருக்கிறா.. இதை நீ புரிஞ்சுக்கனும்... நீ மட்டும் என் காதலை சீக்கிரமா ஏத்துக்கிட்டு இருந்திருந்தா இந்தப் பிரச்னையே வந்திருக்காது..”

“கடைசியில் என்மேல பழி போடறிங்களா..?”

“யெஸ்.. இப்பப் பாரு.. எப்படியெல்லாம் சிக்கல் வந்து நிற்குதுன்னு.. நான் கனடாவில் இருக்கிறேன்.. டாடி மதுரைக்கு வந்து கலகம் பண்ணிக்கிட்டு இருக்கிறார்...”

“கனடாவில இருக்கிறவரால அவங்கப்பாவ கண்ட்ரோல் பண்ண முடியலையாக்கும்..?”

“முடியும்டி.. நிச்சயமாய் முடியும்.. பட்.. எதைச் சொல்லி கண்ட்ரோல் பண்ணுவேன்..? நேகாவைப் பத்திப் பேசினா அது அவரோட ஆசைம்பார்.. உன்னைப் பத்திப் பேசலாம்ன்னா.. உன் வீட்டுக்கு இன்னும் விவரம் தெரியாது.. உன் அப்பாம்மாவிடம் பேசாம்.. எப்படி டாடியை நான் கண்ட்ரோல் பண்ண முடியும்..? நீயே சொல்லு..”

“இது பேச்சில்ல...”

“ஓகே.. இப்பவே டாடிக்கு நான் போன் போட்டுப் பேசறேன்.. காவ்யாதான் என் வொய்ஃப்.. அவ முன்னாலே நேகாவை என் வுட்பின்னு சொல்லாதீங்கன்னு சப்தம் போடறேன்.. உடனே அவர் என்ன செய்வார் தெரியுமா..? உன் வீட்டுக்குப் போவாரு.. உன் அப்பாம்மாவிடம் வாய் வளர்ப்பாரு.. நம் காதலைப் போட்டு உடைப்பாரு.. நான் பக்கத்தில் இல்லாத சிச்சுவேசனில் நீ தனியாய் எல்லாத்தையும் சமாளிக்கனும் தேவையா..? சொல்லு..”

அர்ஜீன் பேசுவதிலும் உண்மை இருக்கிறது என்று காவ்யாவுக்குப் புரிந்தது... அவள் வீடு அப்படிப்பட்டது.. காதல் என்ற வார்த்தையை சிவதாணுவும்.. அன்னபூரணியும் ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள்.. அடுத்த முகூர்த்தத்திலேயே அவளுக்கு மாப்பிள்ளை பார்த்து திருமணத்தையும் முடித்து வைத்து விட்டுத்தான் வேறு வேலை பார்ப்பார்கள்...

“நான் வேலையை விட்டுர்றேனே...” நலிந்த குரலில் அனுமதி கேட்டாள் காவ்யா...

“வேணாம்டி...” அர்ஜீன் வற்புறுத்தினான்...

“எதுக்காக அந்தக் கடையில நான் இருக்கனும்னு நீங்க ஆசைப்படறிங்க..? என்னால உங்க அப்பா பண்ற இன்சல்ட்ட பொறுத்துக்க முடியும்.. ஏன்னா.. அவரு உங்க அப்பா.. ஆனா.. என் கண்முன்னாலேயே

இன்னொருத்தி உங்களுக்கு பொண்டாட்டியாகப் போகிறவன்னு சொல்லிக்கிட்டு நடமாடினா... அதை என்னால பொறுத்துக்க முடியாது.. அவ உங்களப் பத்தி உரிமையாப் பேசறதை காது கொடுத்துக் கேட்கவும் முடியாது...”

அவளின் அந்தக் கோபத்தில் அர்ஜீனுக்கு அவள் மீதான மையல் அதிகமாகியது.. அவன்மீது அவள் கொண்டிருக்கும் ஆசையின் வெளிப்பாட்டில் அவள்மீது அவன் அதிகமாக ஆசைகொண்டான்...

*“உன்மேல கொண்ட ஆசை...*
*உத்தமியே மெத்தையுண்டு...*
*சத்தியமாச் சொல்லுறேண்டி...*
*தங்க ரத்தினமே..!*
*தாள முடியாது கண்ணே..*
*பொன்னு ரத்தினமே...”*

அவள் காதோரமாக ஒலித்த அவன் பாடலில் அவளுக்குள் ஆசை அலைமோதியது....

# 92

*நீ சொல்லித்தந்த பாடங்களைச்..*
*சொந்தம் கொள்ள ஆசைகொண்டேன்...*

‘**அ**ர்ஜீனா பாடுவது...?’ காவ்யாவுக்கு ஆச்சரியமாகி விட்டது...

அவன் பாடி அவள் கேட்டதில்லை.. அவளைப் பாடச் சொல்லித்தான் அவன் கேட்பான்.. தமிழ் பாடல்களில் அவ்வளவாக பரிச்சயம் இல்லாதவனுக்கு காவ்யாதான் பாடல்களை பரிச்சயம் பண்ணி விட்டாள்... அந்த ரசனையில் காவ்யாவைப் பாடச் சொல்லி அவன் கேட்பான்.. அந்த அர்ஜீன்.. மிகப் பழமையான ஓர் பாடலை அர்த்தத்தை உணர்ந்து.. புரிந்து பாடியதில் அவள் ஆச்சரியம் கொண்டாள்..

“நீங்களா பாடுறது..?”

அவளுக்கு நேகாவை மறந்து விட்டது.. பார்த்தசாரதியை மறந்து விட்டது.. அவளிருக்கும் இக்கட்டான சூழலை மறந்து விட்டது.. அவள் நினைவில் இருந்ததெல்லாம் அவள் காதோரமாக ஒலித்த அவனது ரகசியக் குரல்தான்..

"உன்மேல கொண்ட ஆசை..."

அவன் மீண்டும் பாடினான்.. அவள்மீது அவன் கொண்ட ஆசையை அவன் தாபத்துடன் பாடியதில் அவளின் அந்தரங்க மனம் சொக்கிப் போனது.. அந்த மணித்துளிகளை பொக்கிசமாக நெஞ்சில் பூட்டி வைத்துக் கொண்டது...

"உத்தமியே மெத்தை உண்டு..."

ரகசியக் குரல் கிளப்பிவிட்ட ரகசிய ஆசைகளின் ஆளுகைக்கு ஆட்பட்ட காவ்யாவின் உடலெங்கும் உணர்வலைகள் பொங்கி எழுந்தன.. கிளர்ச்சியில் கிளம்பிய கிறக்கத்தில் அவள் இமைமூடி.. தலையணையில் முகம் பதித்தாள்.. புரண்டு படுத்த போது உணர்ந்த மெத்தையின் சுகத்தில்.. அவன் சொல்லிய மெத்தையின் நினைவு அவளுக்கு வந்தது....

'மெத்தையிருந்தால் என்ன செய்வதாக உத்தேசமாம்...' ரகசியப் புன்னகை வெட்கத்துடன் கலந்து.. அவள் இதழ்களில் வழிந்து சிதறியது..

*"சத்தியமாச் சொல்லுறேண்டி*
*தங்க ரத்தினமே..."*

அவன் சத்தியமாகத்தான் சொன்னான்.. அவள் மேலுள்ள ஆசையை அளவிட முடியாது என்ற சத்தியத்தைச் சொன்னான்.. ஆசையின் அலைகளால்

அடித்துச் செல்லப்படும் அவன் நிலையை சத்தியம் பண்ணித்தான் சொன்னான்...

காவ்யா அவன் வார்த்தைகளில் மூழ்கி முத்தெடுத்தாள்.. கம்யூட்டரில் கலந்து தொழில் செய்யும் ஒருவன்.. அவன் ஆசைப்பட்ட பெண்ணிடம் சத்தியம் செய்து தன்னை நிரூபிக்கும் அந்த அற்புத கணத்தில் உறைந்து கரைந்து மெழுகாய் உருகி நின்றாள்...

*"தாள முடியாது கண்ணே...*
*பொன்னு ரத்தினமே..."*

தாபத்தில் தோய்ந்து வந்த அர்ஜீனின் குரலில் ஒலித்த அந்த ஏக்கத்தில் தன்வயமிழந்தாள் காவ்யா.. அந்தத் தாபத்தில் எழுந்த தாபத்தில் உறக்கத்தைத் தொலைத்து புரண்டு படுத்தாள்...

தாள முடியாது என்று அவன் சொன்னதை தாள முடியாதவளாய் உதடுகளைக் கடித்து தன் உணர்வுகளை அடக்க முயன்றாள்...

அவளால் முடியவில்லை.. அவன் விரல்கள் அவள்மேல் படர்ந்து பரவுவது போன்ற பிரமையில் அவள் உலுக்கி விழித்தாள்... தண்ணீர் பாட்டிலை தேடியெடுத்துக் குடித்தாள்...

"காவ்யா..." போனில் அழைத்தான் அர்ஜீன்...

“ப்ளீஸ்.. பாடாதீங்க...” இறைஞ்சினாள் காவ்யா...

“ஏண்டி.. என் பாட்டு அவ்வளவு மோசமாயிருக்கா..”

“இல்ல.. என்னாலதான் அதக் கேட்க முடியல...”

“அதுதான் ஏன்..?”

“ஏன்னா.. அது அப்படித்தான்..”

“இந்தப் பாட்டை எவ்வளவு கஷ்டப்பட்டு கத்துக்கிட்டேன் தெரியுமா..?”

“தெரியுது...”

“மதுரையில்தான் இந்தப் பாட்டைக் கேட்டேன்.. நீ உன் காதலை ஒப்புக் கொள்ளாத பீரியடில.. நீ கிளம்பிப் போகிறதைப் பார்க்கிறதுக்காக நான் கடைக்கு வெளியில் வந்து நிற்பேன்...”

“ம்ம்ம்...”

காவ்யாவின் மனம் அந்த நாள்களுக்குப் போனது.. அவளுக்கும் அது தெரியும்.. அவள் கண்களிலிருந்து மறையும் வரை பார்த்தபடி அர்ஜீன் கடை வாசலில் நிற்பதைப் பார்த்தபடி அவள் ஸ்கூட்டியைக் கிளம்பிக் கொண்டு போவாள்...

அவளுக்காக அவன் நிற்பதில் ஒர் ரகசியசந்தோசம் அவளுக்குள் உண்டாகும்.. அந்த சந்தோசத்தின் தித்திப்பை அந்த நொடியிலும் அவள் உணர்ந்தாள்...

"அப்பத்தான் இந்தப் பாட்டைக் கேட்டேன்..."

"நம்ம கடைக்கு மூணாவது கடை 'சிடி' விக்கிற கடை.. அங்கே எப்பப் பாத்தாலும் பழைய பாட்டாத்தான் போட்டுக்கிட்டு இருப்பாங்க..."

"எனக்கு அதெல்லாம் தெரியாது.. இந்தப் பாட்டில் நான் இம்ப்ரெஸ் ஆகிட்டேன்.. அப்படியே என் மனசை சொல்கிறதைப் போல இந்தப் பாட்டு இருந்துச்சு..."

அர்ஜீனின் குரல் தாபத்துடன் குழைந்து ஒலித்தது.. காவ்யா பதில் சொல்ல முடியாத வெட்கத்தோடு.. தலையணையில் முகம் புரட்டினாள்...

"அன்னைக்கு நைட்டே இந்தப் பாட்டைத் தேடிப் பிடிச்சு டவுன்லோடு பண்ணிட்டேன்.. தினமும் கேட்டதில இந்தப் பாட்டு மனதில் பதிஞ்சிருச்சு..."

"மனசில பதிஞ்சா.. பொத்தி வைச்சுக்க வேண்டியதுதானே..? எங்கிட்ட பாட்டுக் கச்சேரி நடத்தனும்னு சட்டம் கிட்டம் இருக்கா..?"

"என மனதில் இருக்கிற ஆசையை உன்னிடம் பாடாம.. வேற யாரிடம்டி நான் பாடுவேன்..?"

ஏன்.. அந்த நேகாவிடம் பாட வேண்டியது தானே என்று காவ்யா கேட்கவில்லை...

அவளுக்குத் தெரியும்.. அவனால் அந்தப் பாடலை நேகாவிடம் பாடமுடியாது என்று...

“காவ்யா...”

“ம்ம்ம்...”

“எனக்கு உன் மனது புரியுதுடி...”

“புரிஞ்சு என்ன செய்ய..? என்னமோ இந்த வேலையை நம்பித்தான் நான் பொழப்பை நடத்தறதைப் போல வேலய விடவேண்டாம்னுல்ல வியாக்கினம் பேசறிங்க...?”

“அதுக்காகச் சொல்லலை காவ்யா.. நீ அங்கே இருக்கிறது அவசியம்டி...”

“யாருக்கு அவசியம்..?”

“எனக்கு அவசியம்டி...”

“எதுக்கு சாமி..? உங்க ஆசைக்காதலி நேகாவுக்கு சாமரம் வீசிவிட ஆள் வேண்டும்ன்னா என்ன இருக்கச் சொல்றீங்க..?”

“என் ஆசைக்காதலி அவளில்லை..”

அழுத்தமாகச் சொன்னான் அர்ஜீன்.. அந்த அழுத்ததில் காவ்யாவின் காயப்பட்ட மனது இதம் கண்டது...

“என் வாழ்நாளில் நான் ஆசைப்பட்டது ஒருத்தியின் மீது மட்டும்தான்.. அந்த ஒருத்தி.. நீ மட்டும்தான்...”

‘இது போதும்...’

காவ்யாவின் கண்கள் குளமாகின... இந்த வார்த்தைகள் போதுமென்று அவள் மனம் சொல்லியது.. அந்த வார்த்தைகளின் தாலாட்டில்.. அவள் இமை மூடினாள்...

“அங்கே நீயிருக்கனும்.... வேலையை விடக் கூடாதுன்னு நான் சொல்கிறதுக்கு ஒரு காரணமிருக்குடி.. அதை இப்போச் சொல்ல என்னால் முடியாது... நம்ம மேரேஜீக்குப் பின்னாலே ஓர்நாளில் விலாவாரியா உனக்குக் கதை சொல்கிறேன்...”

“என்ன கதையாம்...”

“அதைச் சொல்ல மாட்டேன்.. கடையை உன் பொறுப்பில்தான் விட்டுட்டு வந்திருக்கேன்.. நான் வருகிற வரைக்கும் கடையைப் பத்திரமா பார்த்துக்கிறது உன் கடமையில்லையா..?”

அர்ஜீனின் கேள்வி காவ்யாவைக் கட்டிப் போட்டாலும் அவள் சிணுங்கினாள்...

“அதைப் பத்திரமா பார்த்துக்கத்தான் உங்க வருங்காலப் பெண்டாட்டி வந்திருக்காள்ல..?”

“அவ கெஸ்டா வந்திருக்கலாம்.. ஒருநாளும் அவ முதலாளியா வர முடியாது...”

“ஊஹீம்..? கெஸ்டா வந்திருக்கிறவ முதலாளியோட ரோல் சேரில ஏன் உட்காருகிறாளாம்...?”

அந்தத் தகவல் அர்ஜீனுக்குப் புதிதாக இருந்திருக்க வேண்டும்...

“என்ன சொன்ன..?” என்று அவன் அவசரமாக கேட்டான்...

“அந்த வயித்தெரிச்சல திரும்பவும் சொல்ல என்னால முடியாது...” கடுப்புடன் பேசினாள் காவ்யா...

“என் சேரிலயா நேகா உட்கார்ந்திருக்கிறா..?”

“ஆமான்னு சொன்னா என்ன பண்ணுவீங்களாம்..? உங்க அப்பாவக் கூப்பிட்டு சத்தம் போட்டிருவீங்களோ...?”

“ஷ்யூராய்.. அதைச் செய்வேன்.. எனக்கு இது தெரியாது காவ்யா.. டாடிதான் என் சீட்டில் உட்கார்ந்திருக்கிறார்ன்னு நினைச்சேன்.. அவ எதுக்காக என் சீட்டில் உட்கார்ந்திருக்கிறா..?”

“என்னக் கேட்டா..? எனக்கென்ன தெரியும்..? ஒரு வேளை உங்க சீட்டில உக்காந்தா உங்க மடிமேல உக்காந்திருக்கிறதைப் போல அவளுக்கு நினைப்பு வருதோ என்னவோ...”

“ஏய்ய்ய்....”

அர்ஜீனுக்கு சிரிப்பு வந்து விட்டது.. அவனின் அந்தச் சிரிப்பில் காவ்யாவுக்கு கோபம் கோபமாக வந்தது.. அந்த கோபத்தில்...

“சிரிக்கறிங்களா..? ஏன் சிரிக்க மாட்டிங்க.. உங்களைச் சொன்னா சிரிப்பு வரத்தான் செய்யும்.. இதுவே உங்க இடத்தில என்னை வைச்சுப் பாருங்க.. அப்ப சிரிப்பு வருதான்னு பார்ப்போம்...” என்று சொல்லி விட்டாள்...

மறுமுனையில் பேச்சில்லை.. போனை துண்டித்து விட்டானோ என்று செல்போனைப் பார்த்தாள்.. அவன் லைனில்தான் இருந்தான்...

‘கோபமாக்கும்..? இப்படித்தானே எனக்கும் இருந்திருக்கும்..?’

அவனைச் சமாதானப் படுத்த முனையாமல் அவள் மௌனமாக இருந்து விட்டாள்.. சில நொடிகள் கழித்துப் பேசிய அர்ஜீனனின் குரலில் உக்கிரம் இருந்தது...

“நீ திருந்தவே மாட்டயாடி...”

காவ்யாவுக்கு தூக்கிவாரிப் போட்டது.. யாரை.. யார் திருந்தச் சொல்வது.. என்ற கோபம் கொப்பளித்தது...

“திருந்தனுமா..? நானா..? எதுக்கு..? இன்னொருத்தியோட வருங்கால புருசனை விழுந்து

விழுந்து காதலிக்கிறேனே.. அந்தத் தப்பைத் திருத்திக்கச் சொல்கிறீங்களா..? சொல்லுங்க.. வேணும்ன்னா அதைத் திருத்திக்கறேன்..."

"ஸோ.. அதைத் தப்புன்னு சொல்ற..." அர்ஜீன் ஒரு மாதிரியான குரலில் வினவினான்...

"நான் சொல்லலை.. நீங்க சொல்றீங்க..."

"அந்தத் தப்பைத் திருத்திக்க ரெடியா இருக்க...?"

"அதையும் நான் சொல்லலை.. நீங்கதான் நான் திருந்தவே மாட்டேனான்னு ஆதங்கப்பட்டிங்க..."

"ஸோ.. நான் ஆதங்கப்பட்டா நீ என்னை விட்டுப் போயிருவ...?"

அர்ஜீன் அழுத்தமான குரலில் பேசினான்.. காவ்யா உதட்டைக் கடித்துக் கொண்டு மௌனம் சாதித்தாள்...

"என்னை விட்டுப் போய் என்னடி பண்ணுவ..?"

காவ்யாவுக்கு எரிச்சல் வந்து விட்டது.. இவன் எதற்காக இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கிறான் என்று பற்றிக் கொண்டு வந்தது...

"என்னவோ பண்ணுவேன்..? உங்களுக்கு என்ன..?"

"இன்னொருத்தனை மேரேஜ் பண்ணிக்குவியா..?"

“அது உங்க புத்தி.. என்புத்தியில்ல...”

“உன் புத்தி என்ன புத்தி..? இந்தப் புத்திதானே கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே வேற ஒன்றைச் சொல்லுச்சு...”

“சொல்ல வைச்சது யாரு..? நீங்க தானே...”

“நான் சொல்ல வைத்தா.. நீ எதை வேண்டும்னாலும் சொல்லிருவியா..? பல்லைக் கழட்டிருவேன்...”

“எதுக்கு சாமி..? இவ பல்லில்லாத பொக்கை வாய் கிழவின்னு சொல்லி என்னைக் கழட்டி விட்டுட்டு அந்த நேகா பின்னாடி போறதுக்கா..?”

இவளை என்னதான் செய்வது என்று பல்லைக் கடித்தபடி.. அர்ஜீன் போனில் அழுத்தமான முத்தமொன்றைக் கொடுத்து விட்டு அணைத்து விட்டான்.. காவ்யாவின் கோபம் காற்றோடு போனது... அவள் இதமான இம்சையினை உணர்ந்தாள்...

# 93

*வானில் வந்த வெந்நிலாவில்..*
*நீ என்முகம் காண ஆசைகொண்டேன்...*

**கோ**பத்தை முத்தத்திலும் வெளிப்படுத்த முடியும் என்பதை அன்றுதான் கண்டாள் காவ்யா.. அர்ஜீனின் அழுத்தமான முத்தத்தின் ஒலி காற்றோடு கலந்து அவள் காதுகளில் கேட்டுக் கொண்டிருந்தது.. புரண்டு படுத்து ஜன்னல் வழியே தெரிந்த வானத்தைப் பார்த்தாள்.. வட்டநிலா பவனி வந்து கொண்டிருந்தது...

*"அன்றொரு நாள்..*
*இதே நிலவில்...*
*அவன் இருந்தான்..*
*என் அருகே...*
*நான் அடைக்கலமானேன்..*
*அவன் மடியில்..*
*நீயறிவாயே...*
*வெந்நிலவே...!"*

மெல்லிய குரலில் சப்தம் எழும்பாமல் பாடினாள்.. மீண்டும் அவன் மடியில் அடைக்கலமாகும் நாள்

என்று வந்து சேரும் என்ற ஏக்கப் பெருமூச்சு அவளுக்குள் எழுந்தது...

**பா**வனா அவசரகதியில் இயங்கிக் கொண்டிருந்தாள்.. சேலையை மடிப்புக் கலையாமல் பின் பண்ணியவள்.. கூந்தலை கிளிப்பிற்குள் அடக்கி விட்டாள்.. நெற்றியில் ஸ்டிக்கர் பொட்டை வைத்தபோது செல்போன் ஒலித்தது..

"இந்த நேரத்திலதான் அழைக்கனுமா..?" வாய் விட்டு அலுத்துக் கொண்டபடி போனைக் கையில் எடுத்தாள்... திரையைப் பார்த்தாள்.. அதில் அர்ஜீனின் நம்பர்கள் ஒளிர்ந்தன...

'அர்ஜீனா...?..!'

அவசரமாக போனை காதுக்கு கொடுத்து..

"ஹலோ..." என்றாள்...

கடைக்கு கிளம்ப வேண்டிய அவசரம் அப்போது அவள் மனதில் இல்லை.. அர்ஜீனின் நம்பர் அவள் செல்போனில் ஒளிர்ந்ததும் அத்தனையும் அவளுக்கு மறந்து விட்டது..

"அர்ஜீன் பேசறேன்.."

"தெரிகிறது சார்.. சொல்லுங்க..."

"நேகா என் ஆபிஸ் ரூமில் உட்கார்ந்திருக்கிறாளா..?"

"அது உங்களுக்குத் தெரியாதா..?" பாவனா ஆச்சரியப்பட்டாள்...

“ஹலோ.. நான் இருக்கிறது கனடாங்க...”

“நான் மட்டும் என்ன.. மதுரையிலதான் நீங்க இருக்கீங்கன்னா சொன்னேன்..?”

“அப்புறம் எப்படிங்க.. மதுரையில் நடக்கிறது எனக்குத் தெரியும்ன்னு நீங்க நினைக்கறிங்க..?”

“விட்டா.. உங்க வுட்பி.. கடைக்குள்ள என்ட்ரி ஆனது கூட உங்களுக்குத் தெரியாதுன்னு சொல்லிருவீங்க போல...”

“என் வுட்பிதான் மதுரையிலேயே பிறந்து வளர்ந்தவளாச்சே...”

“ஹை... இப்படிக் குல்லாப் போட்டுத்தான் காவ்யாவ ஏமாத்திக்கிட்டு இருக்கீங்களா..?”

“ஏமாத்தலைங்க.. இதுதான் உண்மை...”

“அதுசரி.. இங்கே என்னன்னா.. சென்னையில இருந்து அல்ட்ரா மாடர்ன் பொண்ணு ஒன்னு வந்து நின்னிருக்கு.. உங்க அப்பா என்னடான்னா அவளை உங்களோட வுட்பிங்கிறார்.. அவரோட வருங்கால மருமகள்ங்கிறார்.. போதாக்குறைக்கு அந்தப் பெண்ணுக்கு ஆரத்தி எடுத்து உள்ளே கூப்பிடுன்னு காவ்யாகிட்டயே சொல்றார்.. ஐ திங்க்.. உங்க அப்பா ஒன்னும் இன்னொஸென்ட் இல்லை சார்.. அவர் வேணும்னே காவ்யாவை டார்ச்சர் செய்கிறார்...”

“இது அவளுக்குத் தெரியலையே...”

“எவளுக்கு...?”

“காவ்யாவுக்கு..”

“அதானே பார்த்தேன்.. எங்கே நேகான்னு சொல்லிருவீங்களோன்னு நினைச்சேன்.. நடக்கலை.. அப்பாவுக்கு பிள்ளை தப்பாம பிறந்திருக்கீங்க...”

“எதிலங்க..?”

“காவ்யாவ வறுத்தெடுக்கறதிலதான்...”

“ஏங்க.. நான் என்னங்க பண்ணினேன்..?”

“இப்ப காவ்யாவுக்கு என்ன தெரியனும்ங்கறிங்க...”

“இதான் உங்க கோபமா..? டாடிதான் வேண்டும்ன்னே டார்ச்சர் பண்றார்ன்னு தெரியுதில்ல.. இவ அதை எதிர்த்து நிற்கனுமா.. வேண்டாமா..? அதை விட்டுட்டு.. வேலையை விடப் போறேன்னு சின்னக் குழந்தை போல அடம் பிடித்தா என்னங்க அர்த்தம்..? கொஞ்சமாவது நான் என்ன சொல்கிறேன்.. எதற்குச் சொல்கிறேன்னு காது கொடுத்துக் கேட்க வேண்டாமா..?”

“அவ என்ன சொல்கிறான்னு நீங்க காது கொடுத்துக் கேட்கறிங்களா சார்...?” அமைதியாக வினவினாள் பாவனா...

“பாவனா..?” அர்ஜீன் திகைத்தான்...

“பின்னே என்ன சார்..? பெண் மனசு என்ன பாடுபடும்ன்னு உங்களுக்கு எப்படி சார் புரியும்... அவளோட காதலனோட வருங்காலப் பெண்டாட்டின்னு ஒருத்தி வந்து நிற்பா.. அவளுக்கு ஆரத்தி எடுத்து உள்ளே கூப்பிடுன்னு ஒன்றும் தெரியாதவரைப் போல உங்க அப்பா சொல்லுவார்.. அவ அதைப் பொறுமையாக் கேட்டுக்கிட்டு ஆரத்தியும் எடுத்துட்டு.. நீங்க சொல்கிறதையும் காது கொடுத்துக் கேட்டுக்கனுமா..? நல்லா இருக்குசார் உங்க நியாயம்...”

“பாவனா..”

“உங்க அப்பாவும் இன்னொஸென்ட் இல்ல.. உங்க வுட்பியும் இன்னொஸென்ட் இல்ல...”

“அவ என் வுட்பி இல்லை...” எரிச்சலோடு சொன்னான் அர்ஜீன்...

“அதை காவ்யாகிட்டச் சொல்லுங்க... நம்புவா... நான் நம்ப மாட்டேன்.. இங்கே திட்டம் போட்டு காய் நகர்த்திக்கிட்டு இருக்கார் உங்க அப்பா.. அவரோட ஒரே குறிக்கோள்.. காவ்யாவ கடையை விட்டுத் துரத்துகிறதாகத்தான் இப்ப இருக்கு.. அவராத் துரத்த முடியாதுங்கிறதால.. காவ்யாவா ஓடிப்போயிரனும்னு

பிளான் பண்ணி வேலை செய்துக்கிட்டு இருக்கார்.. இதில நீங்க நியாயம் பேசறிங்க...”

“ஜஸ்ட் ஒன்வீக்.. அதுவரைக்கும் அவ தாக்குப் பிடிக்கக்கூடாதா..?”

“ஒரு வாரம்...! ஏழு நாள்கள்...! நூற்றி அறுபத்தியெட்டு மணி நேரம்..! உங்க அப்பாவும்.. அந்த நேகாவும் சேர்ந்து போடற கூட்டுச் சதியை காவ்யா தாங்கி நிற்கனும்.. ம்ஹீம்.. அவ இடத்தில் இருந்து பார்த்தாத்தான் அந்த துன்பம் என்னன்னு தெரியும்.. தள்ளி நின்னு வியாக்கினம் பேசினா வேலைக்கு ஆகாது... ”

“நான் வந்துக்கிட்டே இருக்கிறேன் பாவனா...”

“வாங்க சார்.. நீங்க வருவதற்குள் காவ்யா என்ன பாடுபடப் போறாளோ எனக்கே தெரியலை...”

“நீங்க கூட இருக்கீங்களே...”

“என்னால் என்ன செய்ய முடியும்..? மிஞ்சிப் போனா.. அவ கன்னத்தில வழிகிற கண்ணீர் துளிகளைத் துடைத்து விட முடியும்.. வேற எதையும் பிளந்து விட முடியாது...”

“நீங்க கோபமாய் பேசறிங்க...”

“வேற என்னதான் செய்கிறது..? கண் முன்னாலே அவ படற சித்திரவதைகளைப் பார்த்துக்கிட்டு இருக்கேனே.. அவ என்ன சார் தப்பு செஞ்சா..? உங்க

மேல ஆசை வைச்சிருக்கா.. அதுக்காக இப்படியா பாடாய் படுத்துவாங்க...?"

"நான் டாடியிடம் பேசறேன்..."

அர்ஜீன் போனை அணைத்து விட்டான்.. பாவனா தோள்களைக் குலுக்கிக் கொண்டு.. விட்ட வேலையைத் தொடர்ந்தாள்...

**பா**ர்த்தசாரதி நேகாவுடன் பேசியபடி காலை உணவை ரசித்துப் புசித்துக் கொண்டிருந்த போது அவரின் செல்போன் அலறியது.. நேகா செல் போனைக் கவனித்தாள்.. அவள் கண்களில் மின்னல் வெட்டியது.. அந்த மின்னல் வெட்டை கண்டு கொண்ட பார்த்தசாரதி...

"அர்ஜீன் கூப்பிடுகிறானாம்மா..?" என்று வினவினார்...

"அப்படித்தான் நினைக்கிறேன் அங்கிள்..." நேகா பார்த்தசாரதியின் போனை அவர் பக்கமாகத் தள்ளினாள்...

"ஹாய் அர்ஜீன்..."

அர்ஜீனிடம் பேசுவதைக் கவனிக்கும் நேகாவின் முகத் தோற்றத்தை அவதானித்தபடி குரல் கொடுத்தார் பார்த்தசாரதி...

"நேகாவுக்கு அங்கே என்ன வேலை..?" மறுமுனையில் கடுமையாகக் கேட்டான் அர்ஜீன்...

'அதுக்குள்ள செய்தி போயிருச்சா...'

காவ்யாவின் மீதான கோபத்தை பல்லைக் கடித்து வெளிப்படுத்தினார் பார்த்தசாரதி...

எதிர் நேகா இருக்கிறாள் என்ற உணர்வுடன்...

"ஓ.. ஐ நோ இட் வெரி வெல் மைடியர் சன்..." என்று சம்பந்தமில்லாமல் பேசினார்...

"வாட்ஸ் தி மேட்டர்..? எதிரில் அவள் இருக்கிறாளா..?" அர்ஜீன் கேட்டான்...

'கெட்டிக்காரன்..' மகனின் யூகத்தில் பார்த்த சாரதியின் இதழ்களில் மெச்சுதலான புன்னகை வந்தது..

"வாட் இஸ் திஸ் டாட்..? இந்த நேரத்தில் அவ கூட என்ன பேசிக்கிட்டு இருக்கீங்க...?"

"நாங்க பிரேக் பாஸ்ட் எடுத்துக்கிட்டிருக்கோம் அர்ஜீன்..."

பார்த்தசாரதியின் புத்திசாலித்தனமான 'நாங்க' என்ற வார்த்தைப் பிரயோகத்தில் நேகா முகம் மலர்ந்தாள்.. மறுமுனையில் அர்ஜீன் அவளை விசாரிக்கிறான் என்று நினைத்துக் கொண்டாள்....

“ஹவ் இஸ் ஹி அங்கிள்..?” இவள் நலம் விசாரித்தாள்...

பார்த்தசாரதி என்ன சொல்லுவார்..? அர்ஜீன் ஒன்றும் நேகாவை நலம் விசாரிக்கவில்லை என்று அவரால் எப்படிச் சொல்ல முடியும்..?

“ஹி இஸ் ஃபைன் நேகா..” என்று சமாளித்தார்...

“எப்ப ரிட்டர்ன் ஆகிறாராம் அங்கிள்..?” அக்கறையாக நேகா விசாரித்தாள்...

“நான் எப்ப வேண்டும்னாலும் ரிட்டர்ன் ஆவேன்.. அதில் அவளுக்கென்ன அக்கறை டாடி..? ஐ டோன்ட் லைக் இட்...”

நேகாவின் விசாரிப்பு காதில் விழுந்ததில் அர்ஜீன் மறுமுனையில் வெடுவெடுத்தான்...

“நெக்ஸ்ட் மன்த்தா..? ஓகே அர்ஜீன்...”

பார்த்தசாரதி அவன் சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் சம்பந்தமில்லாமல் சரடு விட்டார்...

“நெக்ஸ்ட் மன்த்தாகிடுமா..?” நேகா ஏக்கப்பட்டாள்...

“அதில் அவளுக்கென்ன பிரச்னை டாட்..?” அர்ஜீன் எரிமலையானான்...

“ஓகே அர்ஜீன்.. நேகாவிடம் கன்வே பண்ணி விடுகிறேன்...”

பார்த்தசாரதி அலட்டிக் கொள்ளாமல் கயிறு திரித்துக் கொண்டேயிருந்தார்..

“கொலைவெறியைக் கிளப்பாதீங்க டாட்.. என் கடைக்குள் எதற்காக அவள் நுழைந்திருக்கிறாள்..? முதலில் அதற்கான விளக்கத்தைச் சொல்லுங்க...” அர்ஜீன் கறாராக விளக்கம் கேட்டான்...

“ஆகட்டும் அர்ஜீன்.. சுற்றிக் காட்டறேன்...” பார்த்தசாரதி அயராமல் வாக்குக் கொடுத்தார்...

“சுற்றிக் காட்டறிங்களா..? எதை..?” அர்ஜீன் மறுமுனையில் உக்கிரமாக...

“வாவ்..! எனக்கு ஊர் சுற்றிக்காட்டச் சொல்லி அர்ஜீன் சொல்கிறாரா..? கிரேட்..” என்று எதிரே உட்கார்ந்து குதுகலித்தாள் நேகா...

பார்த்தசாரதிக்கு இருவரையும் சமாளிக்க வேண்டியிருந்தது.. அர்ஜீனைச் சமாளிப்பதைப் பற்றி அவர் அலட்டிக் கொள்ளவே இல்லை.. நேகாவிற்கு விளக்கம் சொல்லத்தான் அவர் படாதபாடு பட வேண்டியிருந்தது..

“யெஸ் நேகா.. ஏன் இன்னும் உனக்கு ஊரைச் சுற்றிக் காட்டலைன்னு அர்ஜீன் கோபப்படறான்...”

மறுமுனையில் அர்ஜீனின் காது இருப்பதை மறந்து அவர் வாய்விட...

“டாட்..” என்ற அர்ஜீனின் குரலில் ஆசிடின் வீச்சுத் தெரிந்தது....

“அவளை ஊரைப் பார்த்து அனுப்பி வைக்கலேன்னு தான் நான் கோபப்படறேன்.. அவளுக்கு ஊர் சுற்றிக் காட்டலைன்னு நான் கோபப்படறேன்னு நீங்க கப்ஸா விட்டுக்கிட்டு இருக்கீங்களா..? அவ ஊர் சுத்தினா எனக்கென்ன.. சுத்தாட்டித்தான் எனக்கென்ன..?”

“அதுக்கென்ன அர்ஜீன்.. நாயக்கர் மஹாலை முதலில் காட்டிடறேன்..”

“வேண்டாம் டாடி... அவளைத் திருப்பி அனுப்பிட்டு நீங்களும் சென்னைக்கு போய் சேருங்க..”

“அழகர் கோவிலுக்குத்தானே அர்ஜீன்... அழைச்சுக்கிட்டுப் போனாப் போகுது...”

“அதுக்குப் பதிலா அவளை சென்னைக்கு அழைச்சுக்கிட்டுப் போங்க...”

“என்ன அர்ஜீன் இப்படிச் சொல்லிட்ட..? மதுரைன்னா மீனாட்சி சொக்கநாதர் கோவில் கொண்டிருக்கும் இடம்ன்னு உலகத்துக்கே தெரியுமே.. அங்கே கூப்பிட்டுக்கிட்டுப் போகாம இருப்பேனா...?”

# 94

*ஊனோடு கரைந்த உயிராய்...*
*உன்னோடு கலக்க ஆசைகொண்டேன்...*

இப்படியாகத்தானே.. அர்ஜீனைத் தலையால் தண்ணீர் குடிக்க வைத்தார் பார்த்தசாரதி.. அவன் ஒன்றைச் சொல்ல.. இவர் வேறொன்றைச் சொன்னார்..

“என் ரூமில் அவளுக்கென்ன வேலை...?” என்று அவன் கோபப் பட்டால்...

“கெஸ்ட் ஹவுஸில்தான் தங்க வைத்திருக்கேன் அர்ஜீன்...” என்று கனகாரியமாக பதில் சொன்னார்...

“என் சீட்டில் உட்கார்ந்திருக்கிறாளாமே...”

“சிந்தாமணின்னு ஒரு ஹவுஸ்கீப்பர்.. எல்லா வேலைகளையும் கச்சிதமா பண்ணுகிறவ.. அவ நேகாவை நல்ல படியா கவனிச்சுக்கிறா அர்ஜீன்...”

“அவ எக்கேடு கெட்டா எனக்கென்ன..?”

“அதெல்லாம் ஒரு குறையும் வராது அர்ஜீன்...”

“அவ வீட்டில் அவளை தண்ணீர் தெளித்து விட்டு விட்டாங்களா...?”

“நீ சொல்லனுமா அர்ஜீன்.. பத்திரமா பார்த்துக்குவேன்...”

“தீனதயாளன் இந்த லட்சணத்தில்தான் பெண்ணை வளர்த்து வைத்திருக்கிறாரா..?”

“ஊஹீம்.. நேகா போரடிக்குதுன்னு சொல்லவே-யில்லை...”

“மிஸஸ் தீனதயாளன் கொஞ்சம் நல்ல மாதிரின்னு நினைச்சேனே... அந்தம்மாவும் மகளை ஏன்னு கேட்கலையா...?”

“திருப்பரங்குன்றதுக்குத்தானே.. அது ஆறுபடை வீடுகளில் ஒருபடை வீடாச்சே... கட்டாயம் காண்பிப்பேன்...”

“இப்படிச் சட்டமா அடுத்த ஊரில வந்து உட்கார்ந்து.. அடுத்தவனுக்கு வுட்பின்னு சொல்லிக்கிட்டு அவன் கடையில் நுழைந்து.. அவன் சீட்டிலேயே உட்காருகிறாளே.. அவளுக்கு வெட்கமாக இல்லை..?”

“அழகர் கோவிலுக்குப் போயிட்டு பழமுதிர் சோலையைப் பார்க்காம வருவோமா அர்ஜீன்.. அதுவும் ஆறுபடை வீடுகளில் ஒன்றாச்சே...”

“என் வுட்பி அவன்னு எந்த தைரியத்தில் சொல்லிக்கிட்டு அலைகிறா...? அது யார் கொடுத்த தைரியம்...?”

“இட்லியும்.. வெண்பொங்கலும் அர்ஜீன்...”

“அவளைத் துரத்த முடியுமா.. முடியாதா..?”

“நேகாவுக்கு பீட்ஸாவைவிட இந்த பிரேக் பாஸ்ட்தான் ரொம்பவும் பிடிக்குதாம் அர்ஜீன்...”

“நான் கேட்டேனா..?”

“மதியம் லன்ச்சுக்கு ஹோட்டலுக்குத்தான் போறோம் அர்ஜீன்...”

“அதுக்குப் பதிலா சென்னைக்குப் போய் தொலைங்க டாடி...”

“கட்டாயம் அர்ஜீன்.. நைட் டின்னருக்கு செஞ்சுதரச் சொல்றேன்.. நேகாவுக்கு மாறுதலா இருக்கும்...”

“முடியல...”

“கவலைப்படாத அர்ஜீன்.. நான் எதுக்கு இருக்கிறேன்... நான் பார்த்துக்கிறேன்...”

“கிழிச்சீங்க.. இதுக்கு நீங்க பதில் சொல்லியே ஆகனும்...”

“நேகாகிட்டச் சொல்லிடறேன் அர்ஜீன்...”

“நான் கொஸ்டின் கேட்டா.. அவகிட்ட ஆன்சர் பண்ணுவீங்களா...?”

“ஷி இஸ் ஸோ இன்டலிஜென்ட் அர்ஜீன்...”

“அதான் தெரியுதே.. நீங்க கோட்டைப் போட்டா அவ ரோட்டைப் போடறாளா..? நான் இல்லாத தைரியமா..?”

“அதைத்தான் நானும் நினைத்தேன் அர்ஜீன்.. நீ சொல்லிட்ட...”

“எதை நினைச்சீங்க..? என் லைஃபில் எப்படி இன்டர்பியர் ஆகிறதுன்னு நினைச்சீங்களா..?”

“எப்படி இவ்வளவு இன்டலிஜெண்டா என் வருங்கால மருமகள் இருக்கிறாள்ன்னு...”

“அதுக்கு நான் அவளை மேரேஜ் பண்ணனும்.. அப்பத்தான் அவ உங்களுக்கு வருங்கால மருமகள்.. அது நடக்கவே நடக்காது...”

“நேகா அப்படி நினைக்கலை அர்ஜீன்.. சிட்டி எதுவாக இருந்தால் என்ன அங்கிள்.. அங்கே அர்ஜீனின் கடை இருக்கேன்னு சொல்லிக்கிட்டு கிளம்பி வந்துட்டா...”

“உங்களுக்கு என்னைப் பத்தித் தெரியும் டாடி.. நான் யாருக்காகவும் என் லைஃபை விட்டுக் கொடுக்கவே மாட்டேன்...”

“மதுரை மல்லிகையா.. சிந்தாமணிகிட்டச் சொல்லிட்டாப் போச்சு.. தினமும் வாங்கிக் கொடுத்துருவாளே...”

“அதை வாங்கி என்ன பண்ண..? அந்த நேகாவுக்கு என்ன ஆறடி கூந்தலா இருக்கு..? தலைவாரிப் பின்னல் போட்டு பூவை வைச்சுக்கப் போகிறாளா..? எனக்கு நல்லா வந்திரும் வாயில...”

அர்ஜீன் எரிச்சல் பட்டான்.. இவன் இப்படியெல்லாம் பேச மாட்டானே.. எங்கிருந்து இத்தனை அழகான தமிழ் வார்த்தைப் பிரயோகங்களைக் கற்றான் என்று பார்த்தசாரதி யோசித்தபடி நேகாவைப் பார்த்தார்.. அவள் வெட்டி விடப்பட்டு முதுகில் படர்ந்திருந்த முடியை சீர் செய்தபடி அவரைப் பார்த்து புன்னகைத்தாள்.. அந்த முடியில் பின்னல் போடுவதே சிரமம் என்பதை உணர்ந்தவருக்கு அர்ஜீனின் பேச்சில் சிரிப்பு வந்தது.. அதை தன் சிரிப்புக்கு பதில் சிரிப்பாக நினைத்துக் கொண்டாள் நேகா....

“உன் அக்கவுண்டைசைத்தானே.. நேகாவிடம் சொல்லி சரிபார்க்கச் சொல்கிறேன் அர்ஜீன்...”

“அதில் கையை வைத்தீங்க.. நான் சும்மாயிருக்க மாட்டேன்...”

“நேகா குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்டிக்கு இதெல்லாம் ஜீஜீபி அர்ஜீன்...”

“அந்த ஜீஜீபி வேலையையெல்லாம் என்னிடம் காட்ட வேண்டாம் டாடி.. நான் பொல்லாதவன்...”

“அவளுக்கு அது தண்ணீர் பட்டபாடு அர்ஜீன்...”

“எந்தத் தண்ணீர் டாடி.. பார்ட்டிகளில் கண்ணாடி கிளாஸை கையில் பிடிச்சுக்கிட்டு நாசுக்காய் ஷிப் பண்ணிக்கிட்டே ஒரு பாட்டிலையே காலி பண்ணுவாளே.. அந்தத் தண்ணியா...”

அதுவரை மகனின் கேள்விகளை கண்டு கொள்ளாமல் தன்போக்கில் பதில் சொல்லிக் கொண்டிருந்த பார்த்தசாரதி.. இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறினார்...

நேகாவுக்கு அந்தப் பழக்கம் இருந்தது.. அவள் பார்ட்டிகளில் கலந்து கொள்ளும் போது.. இயல்பாக குடிக்க ஆரம்பித்து விடுவாள்...

இருந்தாலும் மகனிடம் புறமுதுகு காட்டி விடாமல் அதே பாணியிலேயே பதில்களைச் சொல்ல ஆரம்பித்தார் பார்த்தசாரதி...

“வைகையில் தண்ணீர் இன்னும் வரலையாம்...”

“வந்தா என்ன செய்யப் போறிங்க.. ஆற்றுக்குக் குறுக்கே அணை கட்டப் போறீங்களா..? அதை ஆல்ரெடி.. ஆண்டிபட்டியிலே கட்டி முடிச்சிட்டாங்க.. வைகை டேமைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லையா...?”

“வைகை டேமுக்குத்தானே.. நேகாவைக் கட்டாயம் கூப்பிட்டுக்கிட்டுப் போறேன் அர்ஜீன்...”

“செய்யுங்க... அழைச்சுக்கிட்டுப் போய், டேம் உச்சியிலே நிறுத்தி, அப்படியே தண்ணீருக்குள் தள்ளி விட்டுட்டு வந்திருங்க.. இந்த உலகம் உருப்பட்டிரும்...”

“நயாகரா ஃபால்ஸைவிட நம்ம ஊர் வைகை டேம்தான் அழகுன்னு இப்பத்தான் நேகா சொன்னா...”

“கடுப்படிக்காதீங்க டாடி.. என் ஆபிஸ் ரூமில் என் பெர்மிசன் இல்லாம அவ எப்படி நுழையலாம்..? நுழைந்ததுமில்லாம என் சேரில் எப்படி உட்காரலாம்...?”

“சொன்னேனே.. அதையும் சொன்னேனே...”

பார்த்தசாரதி இப்படிச் சொல்லியதும்..

‘ஆஹா.. முதல்முறையாக டாடி என் கொஸ்டினுக்கு ரெஸ்பான்ஸ் பண்றாரே..’ என்று மகிழ்ந்து போய் விட்டான் அர்ஜீன்...

ஒரு நொடிக்கு மேல் அந்த மகிழ்ச்சியை நீடிக்க விடாமல் பொட்டென்று போட்டு உடைத்தார் பார்த்தசாரதி...

“சென்னை வீடும் உன்வீடு போலதாம்மா.. நீ வீட்டுக்கு வந்து பூஜை ரூமில விளக்கேற்றினா சுந்தரி மகிழ்ந்து போய் விடுவான்னு சொன்னேனே..” என்று அவர் தொடர்ந்து சொல்ல..

“நீங்க திருந்தவே மாட்டிங்களா டாடி..” என்று வெறுத்துப் போய் விட்டான் அர்ஜீன்...

“அவ வீட்டுக்குள்ள வந்தாலே அம்மாவுக்கு ஆகாது.. இதில பூஜை ரூமில விளக்கேற்ற வைத்து விட்டுத்தான் வேற வேலை பார்ப்பாங்களா..? எடுத்துக் கட்டிப் பேசறதுக்கும் ஒர் அளவு வேண்டாமா..?”

“உண்மைதான் அர்ஜீன்..” பார்த்தசாரதி ஒப்புக் கொண்டதில்..

‘ஆஹா.. என் தந்தை மனம் திருந்தி விட்டாரே..’ என்று அர்ஜீன் மனம் மகிழ்ந்து விடவில்லை...

அவனுக்குத் தெரியும்.. அதற்கும் ஏட்டிக்குப் போட்டியான பதில் ஒன்றைத்தான் பார்த்தசாரதி சொல்லி வைப்பார் என்று...

பார்த்தசாரதியும் அதைத்தான் செய்தார்...

“ஆனந்தியும் இதைத்தான் சொன்னா...” என்றார்..

“இப்ப எதுக்காக சென்னையில ‘தேமே’ன்னு இருக்கிற அக்காவை வம்புக்கு இழுக்கறிங்க..?” கடுப்பாகிப் போனான் அர்ஜீன்...

“நேகாவைப் பார்த்தா மகாலட்சுமியையே நேரில் பார்த்ததைப் போல இருக்குன்னு சொன்னா...”

ஓரக்கண்ணால் நேகாவின் முகத்தைப் பார்த்தபடி பார்த்தசாரதி சொன்னார்.. அவர் எதிர்பார்த்ததைப் போலவே நேகா முகம் மலர்ந்தாள்..

“ஏன் டாடி.. யாரை.. யார்கூட இணை சேர்க்கிறதுன்னு ஓர் அளவுகோல் இல்லையா..? அவளைப் போய் மகாலட்சுமிகூட இணை சேர்க்கறிங்களே.. உங்களுக்கு மனச்சாட்சியே கிடையாதா..?” அர்ஜீன் பொங்கி விட்டான்...

“கிடையாது அர்ஜீன்...”

இப்போதும் பார்த்தசாரதி உண்மையை ஒப்புக் கொண்டு விட்டாரென்று அர்ஜீன் ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை.. அவனுக்குத்தான் தெரியுமே... அவர் அடுத்து ஓர் வெடிகுண்டைத் தூக்கி வீசப் போகிறாரென்று...

“நேகாவுக்கு சுத்தமாக ஹெட் வெயிட் கிடையவே கிடையாது...” பார்த்தசாரதி புளகாங்கிதப் பட்டார்...

இந்த மனிதரை என்ன செய்தால் தேவலாம் என்ற கொலைவெறிக்கு ஆளாகிப் போனான் அர்ஜீன்...

அவனும்தான் எவ்வளவு நேரத்துக்கு பெற்ற தந்தையாயிற்றே என்று பொறுத்துப் போவான்.. பொறுமைக்கும் ஓர் அளவுகோல் வேண்டாமா..? காவ்யா

அடிக்கடி சொல்வதைப் போல.. கேட்கிறவன் எளிய மனிதனாக கேணையனாக இருந்தால் கேழ்வரகில் நெய் வடிகிறது என்று சொல்லி விடலாமா..?

அர்ஜீன் எளிய மனிதனும் அல்ல.. கேணைக் கிறுக்கனும் அல்ல... அவன் வானத்தை வில்லாய் வளைக்கும் திறமை வாய்ந்தவன்.. தந்தையின் கையை எதிர்பார்க்காமல் வளர்ந்து.. தன் காலில் நின்று.. தந்தையை மிஞ்சிக் காட்டிய அசகாய சூரன்...

அவனிடம் போய் இப்படி அள்ளி விடுகிறோமே என்று பார்த்தசாரதி நினைத்துப் பார்க்க வேண்டாமா..?

உடலை விட்டு நிழல் பிரிந்தாலும் பிரியலாம்.. நேகாவை விட்டு அவளின் தலைக்கனம் பிரியவே பிரியாது என்ற உண்மையை இந்த உலகம் அறிந்து வைத்திருந்ததைப் போல நன்றாக அறிந்து வைத்திருந்தவன் அர்ஜீன்...

அவனிடம் போய் பார்த்தசாரதி இப்படி அள்ளி விட்டால் அவனது பொறுமை காற்றில் பறக்குமா.. பறக்காதா..?

“நீங்க உங்க லிமிட்டை கிராஸ் பண்றீங்க டாடி...”

“இல்லையே.. நேகாவுக்கு உன் கடையைப் பிடித்திருக்கே...”

“நீங்க என் டாடிங்கிறதுக்காக நான் மற்றதை வேண்டும்னா விட்டுக் கொடுப்பேன்.. என் வாழ்க்கையை விட்டுக் கொடுக்க மாட்டேன்...”

“நேகாவுக்கு உன் பிஸினெஸ்ஸை பிடிக்கும்டா..”

“நான் உங்க மகன்ங்கிறதுக்காக என் வாழ்க்கையை நீங்க தீர்மானிக்கக் கூடாது...”

“நேகாவுக்கு நம்ம வீட்டை பிடிக்கும் அர்ஜீன்...”

“டாடி.. மகன்ங்கிற உறவை காப்பாற்றனும்கிற நினைப்பிலதான் நான் இந்த அளவுக்குப் பொறுமையாய் போகிறேன்.. உங்க இடத்தில் வேற யாராவது இருந்திருந்தா.. நான் அப்ரோச் பண்ணுகிற முறையே வேறாயிருக்கும்...”

இந்த வார்த்தைகளில் பார்த்தசாரதி துணுக்குற்றார்.. மகன் விலகிப் போய் விடுவானோ என்ற பயம் அவர் நெஞ்சில் எழுந்தது.. எதிரேயிருந்த நேகாவைப் பார்த்தார்.. அவளுக்கு பின்புறமாக அவளின் கம்பெனிகள் பிரம்மாண்டமாக அவர் மனக் கண்ணுக்குத் தெரிந்ததில் அந்தத் துணுக்குறல் விலகி ஓடிப் போனது...

‘என்ன செய்வான்..? மிஞ்சிப் போனா கோபப் படுவான்.. விலகிப் போனா இழுத்துப் பிடிக்கத்தான் சுந்தரியும்.. ஆனந்தியும் இருக்காங்களே...’ என்று மனம் தெளிந்தார்...

“இந்த உறவை காப்பாத்திக்கனும்னு நீங்க நினைக்கிறதைப் போல எனக்குத் தெரியலை...”

அர்ஜீன் போனை வைத்து விட்டான்.. பார்த்தசாரதி திகைத்து விட்டார்...

# 95

*உனக்குள்ளே நான் உறைந்திருப்பதை - நீ அறிந்து கொள்ள ஆசைகொண்டேன்...*

**அ**துவரை அர்ஜீன் அப்படிப்பட்ட வெளிப்படையான உதாசீனத்தை அவரிடம் காட்டியதில்லை... அவனும்.. அவரும்.. எதிர் மறையான துருவங்கள்தான்... அவரின் செயல்பாடுகளும்.. அவனின் செயல்பாடுகளும் வேறுபட்டவைதான்... ஆனாலும் அவரிடம் அவன் நேரடியாக மோதியதேயில்லை... பிடிக்கிறதோ... பிடிக்கவில்லையோ.. அவர் பேசும்போது அவன் குறுக்கே பேசியதில்லை...

அப்படிப்பட்டவன் பார்த்தசாரதியுடன் பேசிக் கொண்டிருக்கும்போதே போனை கட் பண்ணி விட்டான்..

சும்மாவும் துண்டிக்காமல் ஓர் எச்சரிக்கையோடு துண்டித்து விட்டான்...

ஒரு தந்தை என்ற முறையில் பார்த்தசாரதியின் தன்மானம் அடிவாங்கியது...

'இத்தனை நாளா இப்படியில்லையே.. இப்ப இப்படின்னா.. இதெல்லாம் யாரால் வந்தது..? அந்தக் காவ்யாவினால் வந்தது..'

அவர் பக்கமிருந்த அநியாயத்தை மறந்து அவர் காவ்யாவின் மீது பழியை எளிதாகத் தூக்கிப் போட்டுப் பல்லைக்கடித்தார்...

"அர்ஜீன் என்ன சொன்னார் அங்கிள்..?"

நேகாவின் விழிகளில் மனதுக்குப் பிடித்தவன் என்ன சொன்னான் என்பதை அறிந்து கொள்ளும் ஆவல் மின்னியது...

'இப்பேற்பட்ட கோடிஸ்வரி.. அவனுக்காக ஏங்குகிறா.. அதைப் புரிஞ்சுக்காம அவன் சாதாரணமா கடையில வேலை பார்க்கிற பொண்ணு பின்னால சுத்தறானே..' பார்த்தசாரதி ஆதங்கப்பட்டார்..

'அவனைப் போல நேகாவும் வெளிநாட்டில் பெரிய படிப்பையெல்லாம் படிச்சிருக்கா... அல்ட்ரா மாடர்ன் பொண்ணு.. பாக்க அழகாவும் இருக்கா.. இவகிட்ட இல்லாத

எதை அந்த காவ்யாகிட்ட அவன் கண்டு விட்டான்..' பார்த்தசாரதிக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது...

அவருக்குத் தெரியாது.. நேகாவிடம் இல்லாத பல தன்மைகள் காவ்யாவிடம் இருக்கின்றன என்பது...

அச்சம்.. மடம்.. நாணம்.. பயிர்ப்பு என்று பெண்களுக்கு உரிய பிரத்யேக குணங்கள் காவ்யாவிடம் நிறைந்திருந்தன.. அவள் துடுக்குத்தனமாக பேசினாலும்.. அதை பெண்மையின் மிளிர்வோடு பேசினாள்... அவள் கண்களில் அர்ஜீனை மட்டும் தேடும் பிரத்யேகமான காதல் இருந்தது.. அப்படியொரு காதலை வேறு எந்தப் பெண்ணின் விழிகளிலும் அவன் பார்த்ததில்லை...

அதைப் பற்றியெல்லாம் பார்த்தசாரதி எங்கே கண்டார்..? அவர் சுந்தரிதான் மனைவியென்று அவளைப் பெண் பார்ப்பதற்கு முன்பே தீர்மானித்து விட்டவர்...

சுந்தரி அழகானவள்.. பண்பானவள்.. குத்துவிளக்கைப் போல அமைதியாக சுடர் விடும் தன்மையானவள்.. அதிர்ந்து பேசியறியாதவள்.. குணவதி..

இதையெல்லாமா அவர் கண்டார்..? அவர் கண்டதெல்லாம் அவள்.. அவளுடைய பெற்றோரின் சொத்துக்களுக்கு ஒரே வாரிசு என்பது மட்டும்தானே..

அவள் எப்படியிருந்தாலும் அவர் அவள் கழுத்தில் தாலியைக் கட்டியிருப்பார்.. அவருக்குத் தேவையானது

பணம் மட்டும்தான்.. அது சுந்தரியைப் பெற்றவர்களிடம் கொட்டிக் கிடந்தது.. அவரும்.. சுந்தரியைத் திருமணம் செய்து அந்தச் சொத்துக்களுக்கு அதிபதியானார்... அவரின் அதிர்ஷ்டமோ.. இல்லை.. அவரைப் பெற்றவர்கள் செய்த புண்ணியமோ.. சுந்தரியைப் போன்ற சாத்வீகமான அழகி, அவருக்கு மனைவியாக வாய்த்து விட்டாள்... பூர்வ ஜென்ம புண்ணியத்தில் அப்படிப்பட்ட மனைவி வாய்த்து விட்ட அதிர்ஷ்டத்தைப் பெற்றவருக்கு அர்ஜீனின் மனநிலையை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்..?

அவருக்கு மட்டும் நேகாவைப் போன்ற குணமுடைய மனைவி வாய்த்திருந்தால்.. அவர் மகனின் வாழ்க்கையுடன் விளையாடத் துணிந்திருக்க மாட்டார்... இதை உணராத பார்த்தசாரதி மகனின் கோபமான பேச்சிற்காக மனதுக்குள் கோபப்பட்டார்....

அவரின் மனப்போராட்டத்தை அறியாமல் அவர் முகம் நோக்கிக் கொண்டிருந்த நேகாவிற்கு பதில் சொல்லியாக வேண்டும் என்ற உணர்வினால் தந்நிலைக்கு திரும்பிய பார்த்தசாரதி...

“உன்னைப் பற்றித்தான் விசாரித்தான் நேகா...” என்று பொய் மூட்டையை அவிழ்த்து விட்டார்...

“ஈஸிட்..? அப்ப போனை என் கையில் கொடுத்திருக்கலாமே அங்கிள்..” நேகா பரபரத்தாள்...

‘கிழிஞ்சது போ..’ என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டார் பார்த்தசாரதி...

‘அவன் உன்னைப்பற்றிப் பேசினதை மட்டும் நீ கேட்டிருந்தா.. அவ்வளவுதான்.. அது தெரியாம அவன்கூடப் பேசனும்னு ஆளாப் பறக்காதே..’

“அர்ஜீனிடம் நான் பேசவா அங்கிள்..?” நேகா போனைக் கையில் எடுக்க பார்த்தசாரதி பதறிப் போனார்...

“வேண்டாம் நேகா.. வேண்டாம்...”

“ஏன் அங்கிள்..?” விசித்திரமாக அவரைப் பார்த்தாள் நேகா...

“உனக்கு அவனோட போன் நம்பர் தெரியாதில்ல நேகா.. அதுக்கத்தான் நான் சொன்னேன்..” அபத்தமாக உளறிக் கொட்டி கிளறி மூடினார் பார்த்தசாரதி...

“எந்தக் காலத்தில இருக்கீங்க அங்கிள்..? அர்ஜீனோட போன் நம்பரை நான் தெரிஞ்சு வைச்சுக்காம இருப்பேனா..?”

“நான் உனக்கு அவன் நம்பரைக் கொடுக்கலையே நேகா...”

“குட் ஜோக்..! இந்த நேகாவை என்னன்னு நினைச்சீங்க...? அர்ஜீனைப் போன்ற ஒரு பிஸினெஸ்

மேக்னெட்டின் போன் நம்பரைத் தெரிந்து வைத்துக்-காமலிருக்கும் சின்னப் பப்பான்னா நினைச்சீங்க...? நான் நினைச்சா.. கடலுக்கடியில் மறைந்திருக்கிறதைக் கூட வெளியில் கொண்டு வந்து விடுவேன்.. இந்த செகண்டில உங்க சன் எங்கே.. எந்த ஹோட்டலில்.. எந்த ரூமில் இருக்கிறார்ங்கிற விவரம் எனக்குத் தெரியும்.. அது உங்களுக்குத் தெரியுமா...?"

'ஏன் தெரியாது...?' என்று நினைத்துக் கொண்டார் பார்த்தசாரதி...

நேகாவின் வழிமுறைகளைப் பற்றி அவருக்கு நன்றாகத் தெரியுமே.. அந்த வழிமுறைகளைப் பற்றி அர்ஜீனும் தெரிந்து வைத்திருப்பதால்தானே நேகா என்ற பெயரைக் கேட்டவுடன் காத தூரம் ஓடுகிறான்...

இப்படிப்பட்டவள் எப்படி காவ்யாவை மோப்பம் பிடிக்காமல் விட்டு விட்டாள் என்று எரிச்சல்பட்டார் பார்த்தசாரதி...

அப்படி அவள் தெரிந்து வைத்திருந்தால் பார்த்தசாரதிக்கு வேலையில்லாமல் பண்ணியிருப்பாளே.. காவ்யாவை கடையை விட்டு ஓட்டி விட்டிருப்பாளே...

அவள் ஏன் அதைச் செய்யவில்லை..?

அந்தக் கேள்வி அவள் மனதிலும் எழுந்திருக்க வேண்டும்.. சிந்தனையுடன் ஜன்னல் திரையை விலக்கி

தோட்டத்தைப் பார்த்தவள் தனக்குத்தானே பேசிக் கொள்பவளைப் போல பேசினாள்..

“கனடாவில் இருக்கிறவரைக் கண்காணிக்கனும்னு தோணிச்சு.. இதோ இருக்கிற மதுரையில் என்ன நடக்குதுன்னு கண்காணிக்கனும்னு தோணலையே.. எதையும் ஈஸியா நினைச்சிரக் கூடாதுங்கிறதுக்கு இது ஒரு லெசனா அமைஞ்சு போச்சு...”

“லீவ் இட் நேகா.. அதுதான் நீ வந்திட்டயே.. கடையில் முன்னே.. பின்னே இருந்தாலும் அர்ஜீன் வருகிறதுக்குள்ள சரி பண்ணிரமாட்டியா என்ன..?”

“ஷ்யூர் அங்கிள்.. எனக்கு வேறென்ன வேலை...”

நேகா கையிலிருந்த போனை நோண்ட ஆரம்பித்தாள்... பார்த்தசாரதிக்கு ‘பகீர்’ என்றது...

‘இவ பாட்டுக்கு என் மகனுக்கு போனைப் போட்டு பேசி வைச்சுட்டா என்ன செய்கிறது..? அவன் வள்ளுன்னு விழுந்து வைப்பானே...’ பதறிப் போய் விட்டார்...

“யாருக்கு நேகா போனை போடற..?” என்று கேட்டவரை அதிருப்தியுடன் நோக்கினாள் நேகா...

அவள் அந்தக் கேள்வியை விரும்பவில்லை என்பதை அவள் முகபாவமே சொல்லியது...

“அர்ஜீனுக்குத்தான் அங்கிள்..”

உன்னிடமெல்லாம் இவ்வளவு பேசியதே அதிகம் என்பதைப் போல அவள் செல்போனின் எண்களை அழுத்த ஆரம்பிக்க...

“வேண்டாம் நேகா.. வேண்டாம்..” என்று மீண்டும் பதற ஆரம்பித்தார் பார்த்தசாரதி...

‘இவருக்கு என்ன ஆனது...’ முகம் சுளித்தாள் நேகா...

“வாட்ஸ் யுவர் பிராப்ளம் அங்கிள்..? நான் அர்ஜீனுக்கு போன் போட்டால் உங்களுக்கு என்ன வந்தது...?”

என்ன சொல்லி இவளை சமாளிப்பது என்ற பெருங்கவலையில் ஆழ்ந்தார் பார்த்தசாரதி.. அவரது கவலையை அறிந்தவளைப் போல அவருக்கு வழி காண்பித்தாள் நேகா...

“அர்ஜீனை நாலு கேள்வி கேட்கனும் அங்கிள்.. அந்தப் பெண் இருக்கிறாளே.. அவள் பெயர் என்ன..?”

மறந்து விட்டவளைப் போல நேகா நெற்றிப் பொட்டில் ஒற்றைவிரலால் தட்ட...

‘என்கிட்டயேவா..’ என்ற பார்வையை பார்த்தார் பார்த்தசாரதி...

அவருக்குத் தெரியும்.. தூக்கத்தில்கூட நேகா காவ்யாவின் பெயரை மறக்க மாட்டாள் என்று...

இருந்தும் அவள் அலப்பறையைப் பண்ண.. அதையும் ‘சிவனே’ என்று சகித்துக் கொண்டு...

“காவ்யான்னு ஞாபகம்..” என்று பார்த்தசாரதியும் நெற்றிப்பொட்டை ஒற்றை விரலால் பதம் பார்த்தார்...

“யெஸ்... யெஸ்.. அவளைப் போல பாஸின் ஆர்டரை ஓபே பண்ணாத ஆள்களையெல்லாம் அர்ஜீன் எதற்காக வேலையில் வைத்திருக்கிறார்.. தூக்கிக் கடாச வேண்டியது தானே...”

‘ஆஹா.. வழி கிடைத்து விட்டது...’

என்னவோ புதையல் கிடைத்து விட்டது என்பதைப் போல மனம் மகிழ்ந்து போனார் பார்த்தசாரதி...

“இதைப் போல எதையாவது நீ சொல்லி விடுவாய்ன்னுதான் நான் உன்னை பேச வேண்டாம்ன்னு சொன்னேன் நேகா...”

“வாட்..?”

“யெஸ் நேகா.. அர்ஜீனுக்கு ஒரு பழக்கம் இருக்கிறது.. அவன் செலக்ட் பண்ணி வேலையில் உட்கார வைத்திருக்கும் ஆள்களை மற்றவர்கள் குறை சொன்னால் கேட்டுக்க மாட்டான்...”

நேகாவின் முகத்தில் நெருப்பின் நிழல் தெரிந்தது.. அவள் வெகுண்டாள்.. கடையில் வேலை பார்க்கும் பெண்ணிற்காக... நேகாவையே அர்ஜீன் தூக்கி எறிவானா..?

“நான் சொன்னால் கூடவா அங்கிள்..?” நேகாவின் கேள்வியில் ஆணவம் இருந்தது..

‘முக்கியமா நீ சொன்னால்தான் அவன் ருத்ர அவதாரம் எடுப்பான்..’ என்று நினைத்துக் கொண்ட பார்த்தசாரதி..

“நான் சொன்னாலும் அப்படித்தான்..” என்று அவளுக்குச் சமாதானம் சொன்னார்...

“அது எப்படி அங்கிள்.. நீங்களும்.. நானும்.. ஒன்றாகிவிட முடியுமா..?” நேகாவின் குரலில் சவால் இருந்தது...

‘நேரம்தான்..’ நொந்து போனார் பார்த்தசாரதி..

இருந்திருந்து.. மருமகளாக வரப் போகிறவளிடமிருந்தா அவர் குட்டு பெற வேண்டும்..?

‘இவள் கூட இணை சேர்ந்து கூட்டுசதி பண்ண நினைத்ததற்கு கிடைக்கும் பரிசு இதுதான் போல...’ தனக்குள் சொல்லிக் கொண்டார்...

“லுக் நேகா.. அர்ஜீன் அவனுடைய வொர்க்கர்ஸை ரொம்பவும் நம்புவான்.. அவங்களைப் பற்றி நாம கம்ப்ளெயின்ட் பண்ணுவதை விரும்ப மாட்டான்.. அதே நேரத்தில் அவனிடம் இன்னொரு பழக்கமும் இருக்கு..”

“என்ன அங்கிள்...?”

"அவன் நம்புகிற வொர்க்கர்.. அவனுடைய நம்பிக்கைக்கு பாதகமா எதையாவது செய்துட்டா.. அவன் அவர்களை மன்னிக்கவே மாட்டான்.. கிட்டச் சேர்த்துக்கவும் மாட்டான்..."

அவரின் வார்த்தைகளில் நேகாவின் கண்கள் மின்னின.. ஏற்கனெவே அவள் கண்டு பிடித்து வைத்திருந்த வழியும்.. இந்த வழியும் ஒன்று படுவதை அவள் உணர்ந்தாள்..

பார்த்தசாரதிக்குத் தெரியும்.. அவர்கிழித்து விட்ட கோட்டில் நேகா ரோட்டைப் போட ஆரம்பித்து விடுவாள் என்பது..

# 96

*நான் சொன்ன வார்த்தைகளை – நீ*
*நினைத்துப் பார்க்க ஆசைகொண்டேன்...*

**நா**யக்கர் மஹாலை திருமலை நாயக்கரின் மனைவியைவிட அலட்சியமான தோரணையுடன் பார்த்தபடி நடந்து கொண்டிருந்தாள் நேகா... அவளுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த பார்த்தசாரதி

செல்போனை காதுக்கு கொடுத்தபடி.. நேகாவைக் கவனிக்காமல் யாருடனோ மும்முரமாக பேசிக் கொண்டிருந்தார்.. அதில் நேகாவுக்கு உடன்பாடில்லை..

'நான் வந்திருக்கேன்.. என்னைக் கவனிக்காம செல்போனில் பேசிக்கிட்டு இருக்கே.. இந்தக் கிழத்துக்கு மருமகளானவுடன் நான் யாருன்னு காண்பிச்சே ஆகனும் போல இருக்கே...'

அவள் எரிச்சல் கலந்த அசுவராஸ்யத்துடன் நாயக்கர் மஹாலின் தூண்களை பார்வையால் அளவிட்டபடி நடந்தாள்.. ஒரு தூணின் மறைவிலிருந்து வெளிப்பட்ட தேவராஜன் சட்டை காலரை உயர்த்தியபடி அவளை ஒரு மார்க்கமாகப் பார்த்து

"வணக்கங்க.." என்றான்...

நேகா அவன் பார்வையை ரசிக்கவில்லை.. அவளை இளைஞர்கள் ஆவலுடன் பார்ப்பதை அவள் ரசிப்பவள் தான்.. அப்படி யாரேனும் பார்க்காமல் போய்விட்டால் உடனடியாக கண்ணாடியின் முன்நின்று முகம் பார்ப்பவள்தான்.. அப்படி மற்றவர்கள் பார்க்க வேண்டுமென்பதற்காகவே கவர்ச்சியாக உடையணிந்து செல்பவள்தான்...

ஆனாலும்.. தேவராஜனைப் போன்ற ஒருவன் அவளை பார்வையிடுவதை அவள் ரசிக்கவில்லை.. எனவே

முகம் சுளித்தபடி.. அப்படியொருவன் அங்கே நிற்காததைப் போன்ற பாவனையுடன் நகர்ந்தாள்...

“மாடம்..” என்று அவள் பின்னே வந்தான் தேவராஜன்..

“மாடமா..?” நேகா திகைத்தாள்...

அவளுக்கு என்ன தெரியும்..? அவளை மரியாதையுடன் மேடம் என்று அழைப்பதாக அவன் நினைத்துக் கொண்டிருக்கிறான் என்பது..?

“உங்களத்தான் மாடம்..” திரும்பவும் அவளை மாடமாக்கினான் தேவராஜன்..

“ஹீ ஆர் யு மேன்..?” நேகா அதட்டினாள்..

அப்படியொரு அதட்டலை எந்தப் பெண்ணிடமும் கண்டறியாத தேவராஜன் பின்வாங்கினான்...

“என்னா மாடம் கோவிச்சுக்கறிங்க.. நான் உங்க நண்பேன் மாடம்...”

“நண்பனா..? யு மீன் பிரண்ட்..?” நேகா மிடுக்காக வினவியபடி அவனை ஏற இறங்க பார்த்தாள்..

“ஆமா மாடம்..” தேவராஜன் குதூகலமாக சொன்னான்..

“யாருக்கு யார் பிரண்ட்.? நீ...? எனக்கு பிரண்டா..?” நேகா ஆணவத்துடன் கேட்டாள்...

அவளைத் தவிர வேறு யாராவது இதைச் சொல்லியிருந்தால் போடி நீயுமாச்சு.. உன் பிரண்ட்ஷிப்பு மாச்சு என்று தேவராஜன் தன் வழியில் போயிருப்பான்..

அப்படிப் போக முடியாமல் காவ்யாவின் காதலைக் கெடுக்கும் கடமை அவனைத் தடுத்தது...

“இப்ப என்ன மாடம்.. நான் உங்கள பிரண்டுன்னு சொல்லக்கூடாது.. அவ்வளவுதான.. சொல்லலை.. போதுமா..?”

“போதாது...”

“இன்னும் என்ன வேணும்..?”

“இந்த இடத்தைக் காலி பண்ணிட்டு வெளியே போகனும்...”

“அதெப்படி மாடம்.. உங்கள எப்படியாவது தனியாப் பார்த்துப்புடனும்னு இவ்வளவு நாளா.. நீங்க போற பக்கமெல்லாம் தொடுத்து வந்துக்கிட்டு இருக்கேன்.. இன்னைக்குத்தான் தனியா நீங்க ஆப்பிட்டுக்கிட்டு இருக்கீங்க...”

இவன் இந்த அளவுக்கு அவளை ஃபாலோ பண்ணியிருக்கிறானா..? நேகாவுக்கு சுர்ரென்ற கோபம் ஏற்பட்டது.. அவள் இயல்பாக ஜீன்ஸ் பேன்ட் பாக்கெட்டில் கைவிட்டு துப்பாக்கியை எடுத்தாள் அதைக்கண்டு மிரண்டு பின் வாங்கிய தேவராஜனின் நெற்றிப் பொட்டில் வைத்தாள்.. அவன் அலறினான்..

“சுட்டாராதீங்க மாடம்.. நான் கல்யாணம் ஆக வேண்டிய காளைப் பருவத்தில இருக்கிறவன்.. இன்னும் வாழவே ஆரம்பிக்கல.. கருணை காட்டுங்க...”

“உனக்கு நான் கருணை காட்டறதா..? நெவர்.. எவ்வளவு தைரியமிருந்தா நீ என்னை ஃபாலோ பண்ணியிருப்ப...? என் கால் தூசிக்கு இணையாவாயா நீ..?”

“இணையாவேன்னு நான் சொன்னேனா..?”

“பின்னே.. எதுக்காக என் பின்னாலே வருகிற...?”

“ஒரு தகவல் சொல்லத்தான்...”

“தகவலா..? நீ எனக்குச் சொல்கிறயா..?”

“ஆமாம் மாடம்...”

“நீயெல்லாம் தகவல் சொல்ல.. கேட்டுக்கிற நிலைமையில் நான் இல்லை.. புரிஞ்சுதா..? திரும்பிப் பார்க்காம ஓடு பார்க்கலாம்...”

“நீங்க சுட்டுப் போட்டாலும் சரி.. நான் சொல்ல வந்ததை சொல்லாமல் போகிறதாயில்ல...”

“நீ சொல்கிறதை நான் கேட்டுக்கொள்கிறதா இல்லை...”

“அது உங்களோட வருங்காலப் புருசன் அர்ஜீனனோட காதல் விவகாரமா இருந்தக்கூட நீங்க கேட்டுக்க மாட்டிங்களா...?”

தேவராஜன் நிதானமாக குண்டைத் தூக்கி போட நேகாவின் முகம் மாறியது...

"வாட்..?" அவள் துப்பாக்கியை கீழே இறக்கினாள்...

தேவராஜன் நிம்மதியாக ஆசுவாசப் பெருமூச்சை விட்டான்...

"யார் நீ..." நேகா கடுமையாக வினவினாள்...

"என்னமோ பேயைக் கேக்கிறதப் போலக் கேட்டு வைக்கறிங்க.. நான் மனுசன்தாங்க.. இந்த ஊரில உங்கள கட்டிக்கப் போகிற அர்ஜீன மகாராஜா ஒரு கடையை வாங்கிப் போட்டிருக்கானே.. அந்தக் கடையை என்கிட்ட இருந்துதான் வாங்கினான்.. அந்தக் கடையோட பழைய முதலாளி நான்தான்..."

"ஓ..."

அவனை ஊடுறிவிப் பார்த்த நேகாவின் பார்வையில் நம்பாத தன்மை தெரிந்தது...

"அந்தக் கடையின் ஓல்டு ஓனரின் பெயர் துரியோதனன்னு அங்கிள் சொன்னாரே.."

"சொல்லிட்டாரா..? உங்க அங்கிள் சொல்ல வேண்டியதைச் சொல்ல மாட்டார்.. தேவையில்லாததைத் தான் சொல்லி வைப்பார்.. அந்த துரியோதனன் வேற யாருமில்லேங்க.. என்னப் பெத்த அப்பன்தான்..."

“ஓ.. அப்படிப் போகுதா ஸ்டோரி..? உங்க அப்பாவோட புராப்பர்டிக்கு நீங்க உரிமை கொண்டாடறிங்களா...?”

“அப்பன் சொத்து புள்ளக்குத்தான மாடம்..?”

“அர்ஜீன் அப்படியில்லை.. அங்கிளோட கம்பெனிப் பக்கம் அவர் போனதே இல்லை.. தனியாய் கம்யூட்டர் கம்பெனி ஆரம்பித்து ஓஹோன்னு இருக்கிறார்.. ஹி இஸ் எ கம்ப்ளீட் மேன்...”

தேவராஜனுக்கு அவள் சொன்னது முழுவதுமாக புரியவில்லை என்றாலும்.. அவள் அர்ஜீனை உயர்த்தி.. தேவராஜனை தாழ்த்திப் பேசுகிறாள் என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது...

“ஐஞ்சு விரலும் ஒன்னு போலவாங்க இருக்குது..? இப்ப என்னயே எடுத்துக்கங்க.. வீட்டில பாத்த பொண்ணத்தான் கட்டுவேன்.. அர்ஜீன் அப்படியா..? வீட்டுக்குத் தெரியாம மதுரைக் கடையில வேல பாக்குற பொண்ண கணக்குப் பண்ணிட்டானே...”

நேகாவிற்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது.. அர்ஜீனுக்கு காவ்யாவின் மீது ஒர் மயக்கம் இருக்கிறது என்றுதான் அவள் நினைத்திருந்தாள்... அந்த நினைவையே அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை..

அப்படியிருக்கையில் காவ்யாவை அர்ஜீன் காதலிக்கிறான் என்பதை எப்படி அவள் தாங்கிக் கொள்வாள்..?

"உளராதே..." என்று வெடுவெடுத்தாள்...

"உளரலை மாடம்.. இது உண்மை.. வேணும்னா உங்க வருங்காலப் புருசனுக்கு போனைப் போட்டு கேட்டுப் பாருங்க.. அவன் இல்லேன்னு சொல்ல மாட்டான்..."

'அதனால்தான் அவள் ஆரத்தி எடுக்க மாட்டேன்னு சொன்னாளா..?' நேகாவின் இதயத்தில் நெருப்பு பரவியது...

"இது எத்தனை நாளா நடக்குது..?" நேகா விசாரணையை ஆரம்பித்தாள்..

"அர்ஜீன் இந்த மதுரக்குள்ள வந்த நாள் முதல் இந்த நாள்வரை நடக்குது மாடம்.." குஷியாகப் பதில் சொன்னான் தேவராஜன்...

"இது யார் யாருக்குத் தெரியும்..?"

"யாருக்குத் தெரியும்..? எனக்குத் தெரியும்.. எனக்குத் தெரிஞ்சது என் அப்பாவுக்கும் தெரியும்.. அம்புட்டுத்தான் எனக்குத் தெரியும்...."

"கடையில வேலை செய்கிறவங்களுக்குத் தெரியாதா...?"

“அந்தப் பாவனாவுக்கு தெரிஞ்சிருக்கலாம்...”

“பாவனாவா..?”

“அதான்.. காவ்யாகூட பசை இல்லாமலே ஒட்டிக்கிட்டு அலைவாளே.. அவள்தான் பாவனா.. அவ காவ்யாவோட உயிர்தோழி...”

“ஈஸிட்..?”

“ஆமா மாடம்...”

“வெல்.. இது உனக்கு எப்படித் தெரியும்..?”

“அதையேன் மாடம் கேக்கறிங்க.. எங்க சொந்தக்காரன் ஒருத்தன் பிளேனில வந்து இறங்குனான்.. அவனக் கூப்பிட்டுக்கிட்டு வர நான் போனேன்.. போறப்ப பாத்தா அர்ஜீனோட காரு ஏர் போர்ட்டுக்கு போற பாதையில ஏர் போர்ட்டுக்கு பக்கமா ஒதுங்கி மரத்தடியில நிக்குது... காருக்குள்ள யாருன்னு எட்டிப் பாத்தா.. அர்ஜீனும் காவ்யாவும் இருக்காங்க.. அவங்க எப்படி இருந்திருப்பாங்கங்கிறத வயசுப் பொண்ணான உங்ககிட்ட.. வாலிபப் பயலான நானு எப்படி மாடம் சொல்ல முடியும்..”

‘வயது பெண்ணும்.. வாலிப பயலுமா..?’ நேகா பல்லைக் கடித்தாள்...

இதுபோன்ற தலைப்புக்களை அவள் ஒரு மாதிரியான பலான திரைப்படங்களின் சுவரொட்டிகளில்

பார்த்திருக்கிறாள்.. அவற்றையே அவளிடம் ஒருவன் சொல்வானென்று அவள் நினைத்தும் பார்த்ததில்லை...

'பேசாம துப்பாக்கியைத் தூக்கிடலாமா..'

மனதில் எழுந்த எண்ணத்தை உடனடியாக கைவிட்டாள் நேகா.. அவளுக்கு அவனிடமிருந்து சில விவரங்களைக் கறக்க வேண்டியிருந்தது...

"அப்புறம்..?"

"அப்புறம் என்னங்க.. சப்புறம்தான்.. நானும் ஏர்போர்ட்டுக்கு போயி ரெண்டு மணி நேரமா காத்திருந்து.. பிளேனில பகுமானமா வந்து இறங்கின எங்க சொந்தக்காரப் பயல கூப்பிட்டுக்கிட்டு திரும்பி வந்தா.. அப்பவும் அந்தக் கார் மரத்தடியிலதான் ஒதுங்கி நிக்குது.. எங்க சொந்தக்காரப் பய கூடச் சொன்னான்.. ஏண்டா தேவராஜீ.. காருக்குள்ள இருக்கிற மனுசங்கதான் காரை விட்டு இறங்கி.. மரத்து மறைவில ஒதுங்குவாங்கன்னு கண்டிருக்கோம்.. இங்கே என்னடான்னா.. மனுசக்கழுதைக காரை விட்டு இறங்காம உள்ளே உக்காந்திருக்குதுக.. காரு மட்டும் மரத்தடியில ஒதுங்கி நிக்குதேன்னு கேட்டான்.. நான் என்னத்தைச் சொல்ல..?"

தேவராஜன் சொல்லச் சொல்ல.. நேகாவின் முகம் இறுகி பயங்கரமாக மாறியது...

# 97

*ஓர் பார்வை நான் பார்த்தால் - உன்..*
*உயிர்துடிக்க ஆசைகொண்டேன்...*

**நே**கா உறங்காமல் உலாவிக் கொண்டிருந்தாள்.. அவள் மனதில் காவ்யாவின் முகம் எழுந்தது.. இயற்கையான மஞ்சள் நிறத்தின் பொழிவைத் தாங்க முடியாமல் இமை சிமிட்டி அவள் முகத்தைத் துரத்தியடித்தாள் நேகா...

'அந்தக் காவ்யா எனக்குப் போட்டியா..?'

அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. நேகா யார்..? மிகப் பெரிய தொழில் சாம்ராஜ்யத்தின் மகாராணி.. அந்த காவ்யா யார்..? சாதாரணமாக ஒரு கடையில் வேலை பார்ப்பவள்.. அவள் நேகாவிற்கு போட்டியாக நிற்பதா..?

"ஓட வைக்கிறேன்.." வாய் விட்டுச் சொன்னாள் நேகா...

"அவளை ஓட வைக்கிறேன்.. அவள் கடையை விட்டும் ஓட வேண்டும்.. அர்ஜூனின் வாழ்வை விட்டும் ஓட வேண்டும்..."

அந்த நொடியில் நேகாவின் முகத்தைப் பார்க்க நேர்ந்தவார்கள்.. அந்த இடத்திலேயே ரத்த வாந்தி எடுத்து மோட்சம் அடைந்து விடும் அபாய நிலைக்கு ஆளாகி விடுவார்கள்...

அப்படிப்பட்ட பயங்கரம் அவள் முகத்தில் சூழ்ந்திருந்தது...

மறுநாளில் இருந்து நேகாவின் கவனம் முழுவதும் காவ்யாவின் மீதே இருந்தது.. நிமிடத்திற்கு ஒருமுறை அவள் காவ்யாவை வரச் சொன்னாள்...

"கூப்பிட்டிங்களா...?"

பல்லைக் கடித்தபடி வந்து நின்றவளிடம் பதில் சொல்லாமல் தோரணையாக சுழல் நாற்காலியில் சுழன்றபடி அலட்சியமாக உதாசீனப் பார்வை பார்த்தாள்...

அந்தப் பார்வை எவர் மனதையும் தளர வைக்கும் இகழ்ச்சிப் பார்வை.. ஆனால் காவ்யா மனம் தளரவில்லை.. அர்ஜீனின் வருங்கால மனைவியென்று நேகாதான் சொல்லிக் கொள்கிறாள் அர்ஜீன் சொல்லவில்லை என்ற ஒன்றே அவளுக்குப் போதுமானதாக இருந்தது.. இயல்பாகவே நிமிர்வைச் சொந்தம் கொண்டவளுக்கு நேகாவின் உதாசீனத்தை உதாசீனப்படுத்துவது மிக எளிதாக கை வந்தது...

அலட்டிக் கொள்ளாமல் நேர்பார்வை பார்த்தபடி நிற்கும் காவ்யாவிடம் தோற்றுப் போனதைப் போல உணர்ந்தாள் நேகா.. அவளின் முதல் அஸ்திரமே புஸ்வாணமாகப் போனதில் அவளுக்குள் எல்லையற்ற கோபம் ஏற்பட்டது..

அதவரை அந்த அஸ்திரம் தோற்றுப் போனதில்லை.. எப்பேற்பட்டவராக இருந்தாலும்.. நேகாவின் அந்த உதாசீனப் பார்வையில் மனம் தளர்ந்து போயிருக்கிறார்கள்.. காவ்யா அந்த உதாசீனத்தையே உதாசீனம் செய்ததில் நோகவின் மனம் தளரட்டுமா என்று கேட்டு வைத்ததில் நேகா கொதிகலனாகி விட்டாள்...

பார்வை அஸ்திரம் பலனற்றுப் போனதில் அடுத்ததாக வார்த்தை அஸ்திரத்தை பிரயோகிக்க முடிவு செய்தாள் நேகா...

“கூப்பிட்டாத்தான் வருவியா..?”

‘வா.. போன்னு கூப்பிடறாளா..? என்ன தெனாவெட்டு..’ காவ்யா சிலிர்த்தெழுந்தாள்...

“பாருங்க.. எனக்கு மரியாதை கிடைத்தாத்தான் மரியாதை கொடுப்பேன்.. இது என் பழக்கம்...”

“உன் பழக்கத்தை தூக்கி குப்பையில் போடு.. அதையெல்லாம் எதுக்காக என்னிடம் சொல்கிற...?”

“நீ ‘வா..போ’ ன்னு கூப்பிட்டா.. நானும் உன்னை அப்படியே கூப்பிட வேண்டியிருக்கும்.. பரவாயில்லையா..?”

காவ்யா நிதானமாக கேட்டதில் நேகாவின் முகம் மாறிவிட்டது... அவளால் இந்த அணுகுமுறையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. காவ்யாவை விட அதிகமாகப் படித்த.. அனுபவம் நிறைந்த.. லட்சக் கணக்கில் சம்பளம் வாங்குகிற நபர்களெல்லாம் நேகாவின் முன்னால் கை கட்டி நின்றிருக்க.. மிகச் சாதாரணமான பெண்ணான காவ்யா.. நிமிர்ந்து நின்று நேகாவை மிக எளிதாக ஏக வசனத்தில் பேசுகிறாள்...

“ஏய்ய்...” ஒற்றைவிரலை உயர்த்தி ஏறக்குறைய அலறினாள் நேகா...

அவளின் கூச்சலில் வாசல் பக்கமாக சென்றிருந்த பார்த்தசாரதி அலறியடித்துக் கொண்டு ஓடிவந்தார்...

“என்ன நேகா..? என்ன நடந்தது...?”

‘சொல்லேன் பார்க்கலாம்...’ என்ற சவாலை கண்களில் பிரதிபலித்தபடி அலட்சியமாக நின்ற காவ்யாவைப் பார்த்ததும் நேகா தன்னை அடக்கிக் கொண்டாள்...

எந்தவித பக்கபலமும் இல்லாத காவ்யா அலட்சியமாக நேகாவை எதிர்கொள்ளும் போது.. நேகா

மட்டும் சின்னக்குழந்தை புகார் செய்வதைப் போல.. காவ்யாவைப் பற்றி பார்த்தசாரதியிடம் சொல்லி பக்கபலம் தேடிக் கொள்வதா..?

“நத்திங் அங்கிள்...” சமாளித்தாள் நேகா...

“என்னவோ கோபமாய் சத்தம் போட்டயே...” சந்தேகத்துடன் காவ்யாவைப் பார்த்தார் பார்த்தசாரதி...

“என்னை ஏன் சார் பாக்கறிங்க..? சத்தம் போட்டது அவங்க.. நானில்லை...” கிண்டலாகச் சொன்னாள் காவ்யா...

அவளின் கிண்டலில் பார்த்தசாரதிக்குள் கோபம் கிளர்ந்தது.. அவர் நேகாவின் முகத்தைப் பார்த்தார்.. அவள் முகத்திலும் கோபச்சிகப்பு இருந்தது...

“அது ஒன்றுமில்லை அங்கிள்.. இந்தப் பெண்ணுக்கு வேலை செய்யத் தெரியவில்லை.. அதைப் பற்றிக் கேள்வி கேட்டால் தெளிவான பதில் வரவில்லை.. அதான் கோபப்பட்டுட்டேன்...”

நேகா மிகக் கவனமாக.. காவ்யாவை பன்மையிலும் விளிக்காமல்.. ஒருமையிலும் குறிப்பிடாமல் பொதுவாகப் பேசித்தப்பித்தாள்.. அவளின் அந்த வார்த்தை ஜாலத்தை மெச்சி.. மனதுக்குள்...

‘சபாஷ்...’ போட்டுக் கொண்டாள் காவ்யா...

'இவகிட்ட திறமையிருக்கு.. அதைத்தாண்டி உடம்பு முழுக்க திமிர் இருக்கு.. அதுதான் இவள வாய்க் கொழுப்போட பேச வைக்குது... ஆனா.. அது யாரு கிட்ட..?'

"ம்ப்ச்.. எனக்கும் இதுதான் பிராப்ளம் நேகா... அர்ஜீன்பாட்டுக்கு.. இந்த மாதிரியான ஆளுகளாப் பார்த்து செலக்ட் பண்ணி வைச்சிருக்கான்.. இவங்ககூட மல்லுக்கு நின்று நம்ம பிளட்பிரசர்தான் எகிறுது..."

"அதைச் சொல்லுங்க..."

பார்த்தசாரதியின் முகச் சுளிப்போடு நேகாவின் முகச்சுளிப்பும் சேர்ந்து கொண்டதில் காவ்யாவின் ரத்த அழுத்தம் எகிறவா என்று கேட்டது...

'ஊஹீம்...'

மானசீகமாக ஒற்றை விரலை உதட்டின் மீது வைத்து எச்சரித்து அதைக் கட்டுக்குள் கொண்டு வந்த காவ்யா.. மிக பவ்யமாக பார்த்தசாரதியைப் பார்த்து...

"மன்னிக்கனும் சார்..." என்றாள்...

"எதுக்கு..?" பார்த்தசாரதி நேகாவைப் பார்த்தார்...

"இதுமட்டும் தான் வாயில் வருது அங்கிள்.. மற்றபடி வேலையைப் பற்றிய விவரம் வருவதில்லை..." நேகா கிடைத்த சந்தர்ப்பத்தை பயன் படுத்திக் கொண்டாள்..

“வேலையைப் பற்றி யாரும் விவரம் கேக்கறதைப் போல தெரியலையே...” என்று பதிலுக்குப் பதில் கொடுத்த காவ்யா பார்த்தசாரதியைப் பார்த்து...

“இங்கே வேலை செய்கிற யாரையும் உங்க மகன் செலக்ட் பண்ணல.. நாங்க ஏற்கனெவே துரியோதனன் சார்கிட்ட கடையிருந்தப்ப இங்கே வேலை செய்துக்கிட்டு இருந்தவங்கதான்.. எங்களை செலக்ட் பண்ணினது துரியோதனன் சார்தான்...” என்று சொன்னாள்...

‘என்னதிமிர்..’ நேகா பல்லைக் கடித்தாள்..

அவள் கம்பெனியில் அவள் என்ன பேசினாலும் எதிர்த்து ஒரு சொல்லைக்கூட உதிர்க்க மாட்டார்கள்.. இங்கே என்ன நடக்கிறது..? ஒரு துக்கடா கடையில் வேலை பார்க்கும் சாதாரணப் பெண் அவளை எதிர்த்து நின்று பதில் சொல்கிறாள்..

“வாட் இஸ் திஸ் அங்கிள்..?” நேகா பார்த்தசாரதியிடம் கேட்டாள்...

‘அதையேண்டி உன் வருங்கால மாமனார்கிட்டக் கேட்கிற..? பெரிசா கம்பெனி வைச்சு நடத்துறவன்னு பீத்திக்கறியே.. உனக்கு இது என்னன்னு தெரியாதா..?’ காவ்யா கடுப்புடன் நேகாவை முறைத்தாள்...

“இங்கே என்னதான் நடக்குது அங்கிள்..?”

'இதுவரைக்கும் மனுசங்க நடந்தாங்க.. நீ வந்த பின்னால நாலு கால் ஜீவனும் சேர்ந்து நடக்குது...'

"என் கம்பெனியில் இப்படியில்லை..."

'இந்தக் கடையிலயும் இத்தன நாளா இப்படியில்ல.. நீ வந்த பின்னாலதான் இந்த லட்சணமா இருக்கு...'

"திஸ் இஸ் டூ பேட்.."

'உன்னைச் சொல்லிக்கிறியா..?'

"ஐ கான்ட் டாலரேட் திஸ் அட்மாஸ்பியர்..."

'அப்படின்னா உன் ஊரப் பாத்து ஓடிப் போயிரேன்.. அதான் உனக்கும் நல்லது.. மத்தவங்களுக்கும் நல்லது..'

"என் லெவலுக்கு இதைப்போல ஆள்களுடன் பேச்சே வைத்துக்க கூடாது..."

'நானா பேசனும்னு தாவிக்கிட்டு வந்தேன்..? நீதானே முணுக்குன்னா முந்நூறு தரம்ன்னு என்னக் கூப்பிட்டு விடற..?'

"எப்படித்தான் இப்படியொரு அட்மாஸ்பியரை கிரியேட் பண்ணி வைத்திருக்கீங்களோ..."

'அதை கனடாவில இருக்கிற உன் ஆசை அத்தான்கிட்டக் கேளு.. இப்ப ஆளை விடு..'

காவ்யா வெளியே போகத் திரும்பினாள்.. நேகா கண்கள் இடுங்க அவளைப் பார்த்து சொடக்குப் போட்டு அழைத்தாள்..

“ஏய்ய்ய்... உன்னைத்தான்...”

அந்த அழைப்பில் பார்த்தசாரதி மகிழ்ந்து போனார்.. பார்த்தசாரதி கூட இருந்த மமதையில் காவ்யாவை அப்படி அழைத்து விட்ட நேகாவிற்கு தாமதமாகத்தான் தன் தவறு புரிந்தது...

‘இவ சும்மாவிட மாட்டாளே.. அங்கிள் முன்னாலே என்னை ஏகவசனத்தில் பேசித் தள்ளி விடுவாளே...’

அதுதான் நடந்தது.. சும்மா போன சிங்கத்தை நேகா சொடக்குப் போட்டு சொரிந்து விட்டாள்.. சிங்கம் கர்ஜனையோடு திரும்பி விட்டது...

“ஏய்ன்னு யாரைக் கூப்பிட்ட...?”

நேகாவை நேருக்கு நேராகப் பார்த்து அவள் கேட்டதில் பார்த்தசாரதிக்கே பயம் வந்துவிட்டது...

“சும்மாவும் கூப்பிடாம சொடக்குப் போட்டுக் கூப்பிடற.. சொடக்குப் போடற விரல ஒடிச்சுப் போட்டிருவேன்.. இதையெல்லாம் உன் வருங்கால மாமனார் வீட்டில போய் வைச்சுக்க... எங்கிட்ட வைச்சுக்காத.. உன்னைத்தான்னா.. என்ன நினைப்பில

உன்னைத்தான்னு சொல்ற.. நானென்ன உனக்கு வடிச்சுக் கொட்டற சிந்தாமணியா..? உன்னைத்தான்னு கூப்பிடற.. வேணாம்.. சொல்லிட்டேன்.. இந்த வேலையை சம்பளத்துக்காக நான் பார்க்கலை.. எனக்கொரு அடையாளம் வேணும்ங்கிறதுக்காக பாக்கிறேன்.. அதுக்காக ஏளனமா பேசினா.. அப்படிப் பேசற வாயை பேச முடியாம செஞ்சிருவேன்... இது மதுரை.. அடக்கி வாசி..”

“நான் யார்ன்னு தெரியாம வாய் விடாதே...”

“நீ யாராக வேணும்னாலும் இருந்துக்க.. இந்தக் கடையோட நிகழ்கால முதலாளியோட வருங்காலப் பொண்டாட்டியாவே இருந்துட்டுப் போ.. அதைப்பத்தி எனக்குக் கவலையில்லை.. எனக்குத் தேவையானது ஒன்னுதான்.. அது மரியாதை..! அதை நீ கொடுத்தாத்தான் பதிலுக்கு உனக்கு அதைக் கொடுப்பேன்.. இல்லேன்னா நீ கொடுத்ததைத்தான் திருப்பிக் கொடுப்பேன்.. ஜாக்கிரதை..”

காவ்யா விர்ரென்று வெளியே போய் விட்டாள்.. நேகாவினால் பார்த்தசாரதியின் முகத்தைப் பார்க்க முடியவில்லை... அவமானத்தினால் சிறுத்து விட்ட அவளின் முகத்தை பார்த்தசாரதி சந்தோசமாகப் பார்த்தார்... அவருக்கு இனி என்ன நடக்குமென்று தெரிந்துவிட்டது..

இனி.. அவருக்கும்.. காவ்யாவுக்கும் இடையில் யுத்தம் நடக்கப் போவதில்லை.. நேகாவுக்கும் காவ்யாவுக்கும் இடையினில்தான் யுத்தம் நடக்கப் போகிறது...

# 98

*ஊர் பார்க்க என் கழுத்தில்...*
*உன் தாலி விழ ஆசைகொண்டேன்...*

*"வெற்றிமீது வெற்றி வந்து..*
*என்னைச் சேரும்...*
*அதை வாங்கித்தந்த பெருமையெல்லாம்..*
*உன்னைச் சேரும்.."*

**ச**ந்தோசமாக பாடிக் கொண்டிருந்தார் பார்த்சாரதி... அந்த நள்ளிரவு நேரத்தில் ஹோட்டல் அறையின் முகட்டுப் பகுதியைப் பார்த்து மக்கள் திலகத்தைப் போல கையைக் கையை ஆட்டிக் கத்திக் கொண்டிருந்தவரை யாராவது பார்த்தால் நிச்சயமாக அவரின் மனநிலையைப் பற்றிச் சந்தேகம்தான் படுவார்கள்....

பார்த்தசாரதிக்கும் அந்த பயம் இருந்திருக்க வேண்டும்.. அதனால்தான்.. அவர் பாட்டு என்று சொல்லிக்

கொண்டு கத்துவதற்கான இடமாக அவரது பூட்டிய ஹோட்டல் ரூமையும்.. நேரமாக நள்ளிரவு நேரத்தையும்.. தேர்ந்தெடுத்திருந்தார்...

அந்த அளவுக்கு அவரை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தி விட்டாள் நேகா... காவ்யாவிடம் வாய் கொடுத்து அவள் வாங்கிக் கட்டிக்கொண்டதில் பார்த்தசாரதிக்கு ஏற்பட்டிருந்த மகிழ்ச்சியைப் பற்றி மட்டும் அவளுக்கு தெரிந்திருந்தால்... அவரின் மருமகளாக வர வேண்டுமா என்று அர்ஜீனின் மீதான அவளின் ஆசையை மறுபரீசீலனை செய்திருப்பாள்...

அப்படித் தெரியவிட்டு காரியத்தைக் கெடுத்துக் கொள்ள பார்த்தசாரதி என்ன முட்டாளா..?

அவர் கோபமாகச் சென்ற காவ்யாவின் முதுகை முறைத்தார்.. அவள் சென்ற பின்பு... அவள் சென்ற திசைப் பக்கமாக திரும்பி.. சப்தம் போட்டார்....

“என்ன தைரியமிருந்தா.. இவ என் மருமகளை இந்தப் பேச்சு பேசுவா.. இப்பவே எனக்கு இரண்டில் ஒன்று தெரிந்தாகனும்...”

அறைவாசலில் இருந்த இளங்கோ.. என்னவாக இருக்கும் என்று அறியும் ஆவலுடன் எட்டிப் பார்த்தான்.. காவ்யா வந்த போதும்.. சப்தம் போட்டபோதும் அவன்

அவனுடைய நாற்காலியில் உட்கார்ந்திருக்கவில்லை.. தங்கராஜீடன் டீ சாப்பிட என்று வெளியே போய்விட்டு வந்தவனுக்கு நடந்த சண்டையைப் பற்றிய விவரம் எதுவும் தெரியாது...

அதைத் தெரியப் படுத்திவிட முனைந்த பார்த்தசாரதியை...

“உஸ்ஸ்..” என்று ஒற்றை விரலை வாயில் வைத்து அடக்கினாள் நேகா...

‘இந்தப் பெண்ணின் வயதென்ன.. என் வயதென்ன.. என்னைப் பார்த்து உஸ்ஸீன்னு அடக்குதே...’

பார்த்தசாரதிக்கு அவளின் அந்தச் செய்கையினைப் பிடிக்கவில்லைதான்.. ஆனாலும் அவரால் அதை வெளியில் சொல்லிவிட முடியுமா..?

‘உனக்கு காவ்யாதான் லாயக்கு..’ என்று எரிச்சல்பட்டவராக வாய்மூடிக் கொண்டார்...

“என்ன காரியம் செய்கிறிங்க அங்கிள்..?”

“ஏம்மா..? அந்தப் பெண்ணைக் கூப்பிட்டு கண்டித்து வைக்க வேண்டாமா..? அவள் என்ன பேச்சு பேசிவிட்டுப் போகிறா...”

“இதை அவ இருந்தபோதே நீங்க செய்திருக்கனும்.. அவ பேசினபோதே கண்டித்திருக்கனும்.. அவள் போன

பின்னால் சப்தம் போட்டு விவரம் தெரியாதவங்களுக்கு அவ என்னைப் பேசின விவரத்தைத் தெரியப்படுத்தக் கூடாது...”

“அதுக்கில்லம்மா...”

“எதுக்கா இருந்தாலும் தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கிற வேலை வேண்டாம் அங்கிள்...”

“அவளைச் சும்மா விடச் சொல்கிறியா..?”

“யார் அப்படிச் சொன்னது..?”

“நீ சொல்கிறதுக்கு அதுதானே அர்த்தம்..?”

“புரியாம பேசாதீங்க அங்கிள்.. அவள் பேசினதுக்கான பதிலடியை.. எப்போ.. எப்படிக் கொடுக்கனும்னு எனக்குத் தெரியும்.. வெயிட் அன்ட் ஸீ...”

அதற்குப் பின்னால் நேகா அந்த சம்பவத்தைப் பற்றி எதையும் பேசவில்லை.. அமைதியான முகத்துடன் இருந்தவளின் மனதில் புயலடிக்கிறது என்பதை பார்த்தசாரதி அறிந்திருந்ததால் அவரும் எதையும் பேசாமல் மௌனம் காத்தார்.. வழக்கத்தை விடச் சீக்கிரமாகவே நேகா கிளம்பி விட்டாள்... பார்த்தசாரதி என்ன... ஏதென்று கேட்காமல் கூடக் கிளம்பி.. அவளை கெஸ்ட் ஹவுஸில் விட்டுவிட்டு ஹோட்டல் ரூமுக்குப் போய்

சேர்ந்தார்... சென்றவரைத் தேடி சில விருந்தாளிகள் வந்துவிட.. பொறுமை காத்து.. நள்ளிரவில் மனம் விட்டுப் பாடி (?) முடித்தார்...

காவ்யா என்ற முள்ளை அர்ஜீனின் பாதையிலிருந்து எப்படி வெளியில் தூக்கிப் போடுவது என்ற கவலை இனி அவருக்கு இல்லை...

அதை நேகா பார்த்துக் கொள்வாள் என்ற நிம்மதியுடன் அன்று இரவு அயர்ந்து உறங்கினார் பார்த்தசாரதி...

**அ**ர்ஜீன் அவசர கதியில் இயங்கிக் கொண்டிருந்தான்.. அவன் நினைத்ததைப் போல உடனே கிளம்ப முடியாமல் புதுஒப்பந்தம் ஒன்று வந்து நின்று விட்டது... அதன் முதற்படியாக பேச்சுவார்த்தையை ஆரம்பித்து வைத்தவனுக்கு சீக்கிரமாக மதுரைக்கு சென்றாக வேண்டுமே என்று மனம் துடித்தது..

இரவுகளில் அவனிடம் செல்போனில் பேசும் காவ்யாவின் குரலில் தெரிந்த கலக்கத்தில் அவனால் நிம்மதியாக வேலையில் ஈடுபட முடியவில்லை.. ஒவ்வொருநாளும்.. ஒவ்வொரு நிகழ்வைப் பற்றிக்கூறி.. காவ்யா கண்ணீர் வடித்தாள்.. வேலையை விட்டு விடுகிறேன் என்று மன்றாடினாள்..

“பெறுத்துக்க காவ்யா..” என்றான் அர்ஜீன்..

"எது வரைக்கும்.." அவள் விம்மினாள்...

"நான் வரும் வரைக்கும்..."

"எப்ப வருவீங்க..?"

"இதோ.. ஜஸ்ட் டூ டேஸ்.. இந்த வீக் என்டில வந்து விடுவேண்டி..."

"இதையே எத்தனை நாளாச் சொல்லுவீங்க..?"

காவ்யாவின் குற்றச்சாட்டிற்கு பதில் சொல்ல அவனால் முடியவில்லை...

அவள் சொல்வதிலும் உண்மை இருக்கிறதே.. கிளம்ப அவன் தயாராக இருந்தபோது திடிரென்று புது ஒப்பந்தம் முளைக்கும் என்று அவன் கனவா கண்டான்..?

"நினைத்துப் பார்க்கலைடி.."

"யாரை..? என்னையா..?"

"அடச்சீ.. உன்னை நினைக்காத நேரமில்லை..."

"பேசியே மயக்கிருங்க..."

"மயங்கிக் கிடப்பவன் நான்தான்..."

"இந்த வித்தாரப் பேச்சுக்கொன்னும் குறைச்சலில்லை..."

"நம்புடி.. திடிர்ன்ன புது காண்ட்ராக்ட் வந்து நிற்குது.. அதை முடிக்காம வரமுடியுமா..?"

"அதுக்குள்ள நான் முடிஞ்சுருவேன் போல இருக்கே..."

"காவ்யா...."

அர்ஜீன் அதிர்ந்து போனான்.. எந்த அளவுக்கு மனம் நொந்திருந்தால்.. இந்த அளவுக்கு காவ்யா வேதனைப் படுவாள்...? அவள் சந்திக்கும் துன்பங்களெல்லாம் அவனுக்காகவல்லவா..?

காதலியை தனியே இன்னல் படு என்று விட்டு விட்டு வந்திருக்கும் குற்ற உணர்வில் வேலைகளை விரைவாக முடிக்க முயன்றான் அர்ஜீன்.. வழக்கத்தை விட அதக நேரம் உழைத்தான்.. தூக்கத்தை குறைத்தான்...

"உங்க ஹெல்த் ஸ்பாயிலாயிடும் சார்..."

அவனுடைய கனடா கிளையின் உதவியாளர் கவலைப்பட்ட போது தோள்களைக் குலுக்கிச் சிரித்தான்...

இரவு.. பகல் பாராமல் புயல் வேகத்தில் அவன் வேலைகளை முடித்ததில் அவன் கனடாவை விட்டுக் கிளம்பும் நாள் வந்து விட்டது...

"நாளைக்கு கிளம்புகிறேண்டி..."

காவ்யாவிடம் போனில் சொன்னபோது அவன் மனம் வேலைப் பளுவிலிருந்து மீண்டு விட்டுச் சிறகடித்தது...

அவன் கிளம்பிவிட்டான் என்ற நிம்மதியுடன் காவ்யாவும் கடைக்குப் போய் வந்தாள்...

தங்கையின் முகத்திலிருந்தே அவளது மனதை படித்துக் கொண்டிருந்த கண்ணதாசன்...

"எதுவும் பிரச்னையில்லையே..?" என்று விசாரித்தான்...

"இல்லைண்ணே..." முகம் ஒளிர பதில் சொன்னாள் காவ்யா...

எதையோ நினைத்துக் கொண்டவனாக...

"காவ்யா..." என்று அழைத்தான் கண்ணதாசன்...

"என்னன்ணே..." படிகளில் இறங்கிக் கொண்டிருந்த காவ்யா திரும்பிப் பார்த்தாள்...

"உன் கடைமுதலாளி எப்ப வருகிறார்..?"

"இந்த வாரக் கடைசிக்குள்ள வந்திருவார்ண்ணே.."

உற்சாகத்துடன் பதில் சொல்லிவிட்டு மான்குட்டியைப் போல படிகளில் தாவி இறங்கிய தங்கையைப் பார்த்தவனின் மனம் கனிந்தது...

'வரட்டும்..' என்று நினைத்துக் கொண்டான்...

'வந்து... அத்தைக்கு மீசையை முளைக்க வைக்கட்டும்.. என்னை ஜெயித்துக் காட்டட்டும்.. இந்தத்

தோல்வியினால் எனக்குத் துக்கமில்லை.. அவனை ஜெயித்து விட்டால்தான் துக்கப்படுவேன்...'

கண்ணதாசன் கண்கள் பனிக்க அலுவலகத்திற்குக் கிளம்பினான்...

கடையில் சுறுசுறுப்புத் தென்பட்டது.. மறுநாள் சம்பளநாளாக இருந்தால் அப்படியொரு சுறுசுறுப்புத் தென்படுமென்று பாவனா சொல்லிச் சிரித்தாள்....

"ஏகாம்பரம் சார் சம்பளம் வாங்கினதும்.. பணத்துக்கு முத்தம் கொடுப்பாரே.. அதைப் பார்க்க கண்கோடி வேணும் காவ்யா..."

ஒப்புதலாக தலையை ஆட்டிச்சிரித்தாள் காவ்யா.. ஏகாம்பரம் அப்படித்தான் செய்வார்.. சம்பள தினத்தில் எல்லோரின் மனதிலும் உற்சாகம் பொங்கும்.. ஆனாலும் ஏகாம்பரத்தின் உற்சாகம் தனியாக இருக்கும்.. அவர் சம்பள பணத்தை வாங்கி.. கண்களில் ஒற்றிக் கொள்வதுடன் நிறுத்திக் கொள்ளாமல் அதற்கு முத்தம் கொடுப்பார்...

"அது இருக்கிறதாலதான் மிஸஸ் ஏகாம்பரம் அவரை வீட்டில் சேர்த்துக்கிறாங்கங்கிற நன்றி உணர்ச்சியில முத்தம் கொடுக்கிறாரோ.. என்னவோ.." என்றாள் பாவனா...

"ஏதோ ஒன்னு.. ஆனா.. எல்லார் மனசிலயும் சம்பள நாள்ன்னா ஒரு சந்தோசம் வரத்தான் செய்யுது..."

“உன் மனசில வருமா..?”

“உனக்கு வராதா..?”

“நான் உன்னைக் கேட்டேன்...”

“வரும்தான்.. என்னதான் ஒரு அடையாளத்துக்காக வேலைக்கு வந்தாலும்.. சுய சம்பாத்தியத்துக்கு இருக்கிற மதிப்பே தனிதான் பாவனா.. இந்தப் பணம் என்னுடையது.. நான் சம்பாதித்தது.. என்கிற நினைப்பு கொடுக்கிற பலம்.. ஆயிரம் யானைகளின் சக்திக்கு சமம்..”

“பாருடா.. இவகூட இந்தப் போடு போடறா..”

“ஏண்டி.. நான் பேசமாட்டேனா..?”

“அப்படிக் கைப்புள்ளைகூடச் சொல்லாது...”

அவர்கள் கலகலத்துச் சிரித்தார்கள்.. அன்று இரவு உணவின்போது கண்ணதாசன் அவளிடம் மெதுவான குரலில் வினவினான்...

“நாளைக்கு சம்பள நாள்தானே காவ்யா..?”

“இதென்ன கேள்விண்ணே.. உனக்குச் சம்பளம் வராதா..? நீ சம்பளம் வாங்க மாட்டியா...?”

“நான் இன்னைக்கே வாங்கிட்டேன்.. இன்னைக்கு தேதி என்னன்னு மறந்து போச்சா.. முப்பத்தியொன்னு..”

“அட.. ஆமாம்.. நீ.. கவர்ண்மென்டு சம்பளக்கார ஆளு.. முப்பத்தியொண்ணாம் தேதியே சம்பளத்தை வாங்கிருவ.. நான் அப்படியா..? ஒன்னாந்தேதிதானே எங்களுக்குச் சம்பளம்..?”

“அதைத்தான் நானும் கேட்டேன்...”

“ஆமாண்ணே.. நாளைக்கு பேங்குக்குப் போகனும்..”

“நானும் கூட வரவா..?”

“வேணாம்.. நான்தான் தனியாப் போய் பணம் எடுக்கப் பழகிட்டேனே...”

மறுநாள் எதிர் கொள்ளப்போகும் பூகம்பம் அவள் வாழ்க்கையையே புரட்டிப் போடப் போகிறது என்பதை அறியாதவளாக இலகுவாக பதில் சொன்னாள் காவ்யா...

## 99

*சின்னச் சின்ன மழைத்துளியில் - நீ*
*என்னை நினைக்க ஆசைகொண்டேன்...*

**அ**ந்த விடியலில் காவ்யா மனதுக்குள் புத்துணர்வை உணர்ந்தாள்.. அர்ஜீனின் சொல்படி அவன் எப்படியும்

அந்தவார இறுதிக்குள் வந்து விடுவான் என்பதே அவளின் புத்துணர்விற்கான காரணமாக இருந்தது.. நேகாவும்.. பார்த்தசாரதியும்.. போர் நிறுத்தம் செய்து விட்டவர்களைப் போல காவ்யாவைக் கண்டு கொள்ளாமல் இருந்ததும் அவளின் புத்துணர்விற்கான மற்றொரு காரணமாக அமைந்தது...

*"புத்தம் புது காலை...*
*பொன்னிற வேளை..."*

பாட்டுப் பாடியபடி சாப்பிட வந்தவளை செல்லமாக முறைத்தாள் அன்னபூரணி...

"இது சாப்பிடற இடமா..? இல்ல நீ பாட்டுக் கச்சேரி நடத்த வந்த மேடையா..?"

"ரெண்டும்தான்னு வைச்சுக்கயேன்..."

காவ்யா தட்டைப் போட்டு அமர்ந்து.. தட்டில் விரல்களால் தாளமிட்டபடி...

*"வைச்சுக்கவா.. உன்ன மட்டும்*
*நெஞ்சுக்குள்ள...*
*சத்தியமா நெஞ்சுக்குள்ள..*
*ஒன்னுமில்ல.."*

என்று பாடினாள்.. அன்னபூரணி கரண்டியால் அவள் தலையில் ஒரு போடு போட்டு பாட்டை நிறுத்தினாள்...

“உளராம சாப்பிடு.. யாராவது பாத்தா.. அன்னபூரணி மகள வளத்து வைச்சிருக்க லட்சணத்தைப் பாருன்னு சொல்லி சிரிச்சுறப் போறாங்க...”

“இதில சிரிக்கிறதுக்கு என்னம்மா இருக்கு..?”

“வாயடிக்காம சாப்பிடுடி.. வேலைக்கு போகனுமா.. வேணாமா..?”

“கட்டாயம் போகனும்மா.. இன்னைக்கு முதல் தேதி.. சம்பளநாள்.. எனக்காக போகலைன்னாலும்.. மத்தவங்களுக்காக போயாகனுமே.. நான் போய்த்தானே சம்பளம் கொடுத்தாகனும்...”

அவசரமாக அள்ளிப் போட்டுக் கொண்டு ஓடிய மகளைப் பெருமையுடன் பார்த்தாள் அன்னபூரணி...

‘எம் மகளுக்குத்தான் எம்புட்டுப் பொறுப்பு..’

அவள் மற்றவர்களைக் கவனிக்கப் போக.. காவ்யா பணத்தை எடுக்கப் பேங்குக்குப் போனாள்.. கூட்ட நெரிசலில் ஒருவழியாக பணத்தை எடுத்துவிட்டு கடைக்குப் போனபோது.. வாசலில் தங்கராஜ் வாயெல்லாம் பல்லாக...

“வாங்க.. வாங்க..” என்றான்...

காவ்யாவுக்காக பேங்கில் காத்திருந்து.. கூட வந்திருந்த கந்தசாமியும்.. ஏகாம்பரமும் வாடகைக் காரிலிருந்து காவ்யாவுடன் இறங்கினார்கள்...

“என்ன தங்கம்.. வரவேற்பெல்லாம் பலமாயிருக்கு..” என்று கேட்டார் கந்தசாமி...

“இருக்காதா பின்னே.. வந்திருக்கிறது நாம மட்டுமா..? இவன் சம்பளப் பணமும் கூட வந்திருக்கில்ல..” என்று உரக்கச் சிரித்தார் ஏகாம்பரம்...

அவர்கள் பேசியபடி முன்னே செல்ல.. காவ்யா பின்னே சென்று அவளிடத்தில் அமர்ந்தாள்... கைப்பையுடன் இருந்த பெரிய பையைத் திறந்து பணக்கட்டுக்களை எடுத்து வெளியில் வைத்தாள்..

“அடேங்கப்பா.. எவ்வளவு பணம்..?” விழி விரித்தாள் பாவனா...

“கண் வைக்காதேடி...” பணக்கட்டுக்களை எடுத்து.. மேஜை டிராயரில் அடுக்கியபடி சொன்னாள் காவ்யா...

“அதில இரண்டு கட்டை என் பக்கம் தள்ளேன்.. தங்க மைனாவில.. தங்க ஜிமிக்கி வாங்கிப் போட்டுக்கறேன்..” வேடிக்கையாக கேட்டாள பாவனா...

“அஸ்க்கு.. புஸ்க்கு.. உனக்கு ஜிமிக்குக்குக் கொடுத்துட்டா.. நான் வைர நகை செட்டை எப்படி வாங்கறதாம்..? இத்தனை பணமும் எனக்குத்தான்..” பதிலுக்கு வேடிக்கையாக பேசி சிரித்தாள் காவ்யா...

“யார் வீட்டுப் பணத்தில.. யார் டயமென்ட் நெக்லெஸ் வாங்குறது..?”

கடுமையான கேள்வியில் திரும்பிப் பார்த்த தோழிகள் இருவரும் திகைத்தார்கள்.. அங்கே நேகாவும்.. பார்த்தசாரதியும் நின்றிருந்தார்கள்.. அவர்களுக்குப் பின்னால் இளங்கோவும் தங்கராஜீம் நின்று கொண்டிருந்தார்கள்..

காவ்யாவிடம் கேள்வி கேட்ட நேகாவின் முகத்தில் எகத்தாளம் பொங்கி வழிந்தது...

“ஆசைக்கும் ஓர் அளவிருக்கனும்.. உன் தகுதிக்கு நீ தங்கத்தில் நெக்லெஸ் வாங்கிப் போட்டுக்கிட்டாலே அது பெரிய விசயம்.. இதில் ஆபிஸ் பணத்தைக் கையாடி.. அதில் டயமெண்ட் நெக்லெஸ் வாங்கிப் போட்டுக்கனும்னு நினைக்கறியா...?”

“நேகா...” காவ்யா அலறிவிட்டாள்...

“பெயரைச் சொல்கிறாயா..?” நேகாவின் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது...

“அதானே உன் பெயர்..? சொன்னாத் தப்பில்லை.. மற்றவங்க பணத்தில ஒரு பைசாவைக் கூட சொந்தம் கொண்டாட நினைக்காத பரம்பரையில் பிறந்து வந்தவ நான்.. யார்கிட்ட என்ன பேசனும்கிறத யோசிச்சுப் பேசு...”

“ஏய்ய்.. எனக்கே நீ அட்வைஸ் பண்றயா..? நான் யாருன்னு உனக்குத் தெரியாது.. நீ அண்ணாந்து

பார்த்தாலும் சின்னப் புள்ளியாத்தான் நான் உன் கண்ணுக்குத் தெரிவேன்.. அவ்வளவு உயரத்தில் இருப்பவள் நான்...”

“இருந்துக்க.. யாரு வேணாம்ன்னு சொன்னது..?”

“என் தகுதிக்கெல்லாம் உன்னிடம் நின்று பேசுவதே தவறு..”

“தெரியுதில்ல.. அப்புறமும் எதுக்காக டயத்தை வேஸ்ட் பண்ற...? என் வேலையைக் கெடுக்காம இடத்தைக் காலி பண்ணு...”

கோபத்துடன் காவ்யா பணத்தை சரி பார்க்கத் தொடங்கினாள்... நேகா எதுவும் பேசாமல் திரும்பி நடந்தாள்.. பார்த்தசாரதிக்கு அவளுடைய மௌனத்தையும்.. பொறுமையையும் கண்டு ஆச்சரியமாக இருந்தது...

‘இவளுக்கு என்ன ஆச்சு..?’

அவரும் புலிவரப் போகுது என்று எத்தனை நாள்தான் காத்திருப்பார்..? என்னதான் புயலுக்கு முன்வரும் அமைதி நேகாவின் அமைதி என்று அவர் மனதை சமாதானப் படுத்திக் கொண்டாலும்.. அவள் இந்த அளவுக்கு அமைதி காப்பாள் என்று அவர் நினைத்தும் பார்க்கவில்லை...

பலர் பார்க்க.. கடையில் அமர்ந்து கொண்டு.. அந்தக் கடை முதலாளியின் வருங்கால மனைவியான நேகாவைப்

பார்த்து.. இடத்தைக் காலி பண்ணு என்று அந்தக் காவ்யா சொல்லுகிறாள்.. உடனே மறுபேச்சுப் பேசாமல் இந்த நேகாவும் இடத்தைக் காலி செய்கிறாள் என்றால் என்ன அர்த்தம்..?

‘ஒரு வேளை.. இவ காவ்யாவைக் கண்டு பயந்து போயிட்டாளோ...’

இருக்கும் என்ற முடிவிற்குத்தான் பார்த்தசாரதி வர வேண்டியதாக இருந்தது.. நேகாவின் ‘புறமுதுகு’ அதைத்தான் அவருக்கு உணர்த்தியது.. இப்படி அப்பட்டமாக தோல்வியை ஒப்புக் கொள்கிறவளை நம்பியா அவர் யுத்த களத்தில் இறங்கியிருக்கிறார்..?

‘ஊஹீம்.. இது வேலைக்கு ஆகாது.. இவ காவ்யாவை ஓட்ட மாட்டா.. பதிலுக்கு இவதான் காவ்யாவுக்கு பயந்து மதுரையை விட்டு ஓடப் போறா...’

கண்ணுக்கு முன்னால் தெரிந்த தோல்வியில் துவண்டு போனார் பார்த்தசாரதி.. நேகாவை நம்பாமல் அவர் களம் இறங்கியிருக்க வேண்டுமோ என்ற காலம் கடந்த யோசனை அவர் நெஞ்சுக்குள் எழுந்தது...

‘ம்ஹீம்.. புலின்னு நினைச்சு கூப்பிட்டுக்கிட்டு வந்தா.. இது பூனையாயில்ல நிக்குது...’

நேகா... ‘மியாவ்..’ என்று சொல்கிறாளா என்று அவதானிப்பவரைப் போல அவள் முகத்தை உற்றுப்

பாத்தபடி அமர்ந்திருந்தார் பார்த்தசாரதி.. செல்போனை காதுக்கு கொடுத்து யாரிடமோ பேசியபடி சுழல் நாற்காலியில் சுழன்று திரும்பிய நேகா.. அவரின் பார்வையைக் கண்டதும்.. புருவங்களை உயர்த்திச் சிரித்தாள்..

‘இவளால் எப்படி இப்படிச் சிரிக்க முடிகிறது..?’ பார்த்தசாரதி குழம்பிப் போனார்..

ஒருவேளை.. இப்படி எதையும் பொருட்படுத்தாமல் தட்டி விட்டபடி அவள் இருப்பதினால்தான் வியாபார உலகில் வெற்றிகளைச் சந்தித்திருக்கிறாளோ என்று அவருக்குத் தோன்றியது...

‘சூடு.. சொரணை இல்லாம இருந்தாத்தான் ஜெயிக்க முடியும்ன்னு இவ கணிச்சு வைச்சிருக்காளோ...’

தாளமுடியாத பார்த்தசாரதிக்கு தலைவலியே வந்துவிட்டது...

“ஹெட் ஏக்கா அங்கிள்..?”

அக்கறையுடன் வினவிய நேகா தலைவலி மாத்திரையை எடுத்து அவர் கையில் கொடுத்தாள்..

‘இது ஒன்றுதான் குறைச்சல்...’

கையிலிருந்த மாத்திரையை கொலைவெறியுடன் பார்த்தசாரதி வெறித்துக் கொண்டிருந்த போதுதான் அது நிகழ்ந்தது..

“ஐயா.. ஐயா..” கந்தசாமி ஓடிவந்தார்...

அவர் வந்த வேகத்தில் கையிலிருந்த மாத்திரையை நழுவவிட்டார் பார்த்தசாரதி..

“என்ன கந்தசாமி... என்ன விசயம்..?”

“காவ்யாம்மா மேஜை டிராயர்ல இருந்த பணத்தைக் காணோமாங்கய்யா...”

“என்னது..!”

அதிர்ச்சியுடன் நேகாவைத் திரும்பிப் பார்த்தார் பார்த்தசாரதி.. அவள் எதுவுமே நடக்காததைப் போன்ற புன்னகையுடன் செல்போன் பேச்சில் ஆழ்ந்திருந்தாள்...

‘ஆஹா.. புலி பதுங்குறது பாயறதுக்காகன்னு தெரியாம கொஞ்ச நேரத்துக்குள்ள என்னென்னவோ நினைச்சிட்டேனே...’

பார்த்தசாரதியின் உடலில் புது ரத்தம் பாய்ந்தது.. செல்போன் பேச்சை முடித்துக் கொண்டு சாவாதானமாய் நிமிர்ந்து பார்த்த நேகா.. அவரைப் பார்த்தாள்... அவள் விழிகளில் ரகசியப் புன்னகை இருந்தது.. அது பார்த்தசாரதியையும் தொற்றிக் கொண்டது...

“வாட்ஸ் தி மேட்டர் அங்கிள்...?”

ஒன்றும் தெரியாத சின்னக் குழந்தை போல.. இமை படபடக்க அவள் வினவியபோது.. இவளல்லவோ

ராஜதந்திரி என்று அவருக்கு அவளைக் கொண்டாடத் தோன்றியது..

"சேலரிக்காக பேங்கில் டிராப் பண்ணிட்டு வந்த பணத்தைக் காணோமாம்..."

"வாட்ஸ் திஸ் அங்கிள்.. இப்பத்தானே அந்தப் பணத்தை அந்தப் பெண் எடுத்து வைத்துக்கிட்டு இருந்ததை பார்த்தோம்..."

"ஆமாம்மா..."

"இப்ப எப்படிக் காணாமல் போகும்..? வேர் இஸ் இளங்கோ..?"

"மேடம்.."

"தங்கராஜைக் கூப்பிடுங்க.."

இளங்கோவும்.. தங்கராஜீம்.. பார்த்தசாரதியின் பின்னால் வர.. பார்த்தசாரதி நேகாவின் பின்னால் வர என்று.. நேகா லேடி பாட்ஷா ஸ்டைலில் காவ்யா இருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்தாள்.. பிண்ணணியில்...

'லேடி பாட்ஷா..' என்றுதான் ஒலிக்கவில்லை..

மற்றபடி.. அவள் வந்த அலப்பறை.. சூப்பர் ஸ்டாரைத் தூக்கிச் சாப்பிடுவதைப் போல இருந்தது.. நேராக

காவ்யாவின் முன்னால் வந்து நின்றவள்.. ஒரே ஒரு கேள்வியைத்தான் கேட்டாள்...

"அந்தப் பணத்தை எங்கே ஒளிச்சு வைச்சிருக்கிற..?"

அந்த ஒரு கேள்வியில் காவ்யாவின் உயிர் துடிதுடித்தது...

## 100

*என்னுடைய உணர்வுகளை - நீ*
*எடுத்துச்செல்ல ஆசைகொண்டேன்...*

"**எ**ன்னது..?..!"

காவ்யாவின் அதிர்ச்சியை நேகா கண்டு கொள்ளவே இல்லை.. இரையை பொறி வைத்துப் பிடித்த வேட்டைக்காரியின் தீவிரம் அவள் கண்களில் தெரிந்தது..

'அலட்டிக்காதேடி.. உன்னைப் போல எத்தனை ஆள்களை பார்த்திருப்பேன்.. நீ ஓங்கிப் பேசினா... அர்ஜீனை உனக்கு விட்டுக் கொடுத்துட்டு நான் ஒதுங்கிப் போயிருவேனா..? நேகாடி.. இது வரைக்கும் நேகா நினைச்சதை சாதிக்காமல் விட்டதில்லை...'

"நானே பணத்தைக் காணோம்ன்னு பதறிப் போயிருக்கிறேன்.. நீ என்ன கேள்வி கேட்கிற..? பணத்தை நான் ஒளிச்சு வைச்சிருக்கேனா..?" காவ்யாவுக்கு மூச்சே நின்று விடும் போல இருந்தது..

"நடிக்காதே.. இப்போத்தான் நானும் அங்கிளும்.. நீ உன் டேபிள் டிராயரில் பணத்தை வைத்துக்கிட்டு இருந்ததைப் பார்த்தோம்.. அதை வைச்சு டயமன்ட் ஜ்வல்ஸ் வாங்கனும்னு பிளான் போட்டுக்கிட்டு இருந்த.. அதைக் கேட்டுவிட்டு உன்னைக் கண்டிச்சேன்.. ஐ விட்னஸ்ஸா இளங்கோவும்.. தங்கராஜீம் இருக்காங்க.. என்ன இளங்கோ.. தங்கராஜ்..? உண்டா.. இல்லையா..?"

இல்லையென்று அவர்கள் இருவரும் எப்படிச் சொல்லுவார்கள்..? அப்படியொரு வாக்குவாதம் நடந்தது உண்மைதானே...

அதனால் மௌனம் சாதித்தார்கள்...

"இளங்கோ...?!..."

காவ்யாவின் கேள்வியில் நீயுமா என்னைச் சந்தேகிக்கிறாய் என்ற துக்கம் ஒளிந்திருக்க.. அதைச் சகிக்க முடியாதவனாக இளங்கோ வேறு திக்கில் பார்த்தான்.. புது மனைவிக்காக இந்த வேலையில் நீடித்தது தவறு என்ற எண்ணம் அவனுக்குள் எழுந்தது...

“என்ன..? இளங்கோன்னு கேட்டா.. அவர் இல்லைன்னு சொல்லி விடுவாரா..? சொல்லு.. பணத்தை எங்கே பதுக்கி வைச்சிருக்கிற..?”

“நேகா.. வார்த்தையை அளந்து பேசு...”

“ஏய்ய்.. முதலில் உன்வாயை அடக்கிப் பேசு.. யாரைப் பார்த்து பெயரைச் சொல்லி பேசற..? நான் நேகா.. நேகா குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டி.. என்னைப் பார்க்கனும்னா எனக்கு ஈக்குவலான கோடிஸ்வரங்களே அப்பாயிண்ட்மென்ட் வாங்கித்தான் பேசனும்... என் கம்பெனியின் செக்யூரிட்டி கூட உன்னைவிட நான்கு மடங்கு அதிகமா சம்பளம் வாங்குகிறவர்.. நீயெல்லாம் என் நிழலைக்கூட நெருங்க முடியாது.. என் வுட்பியோட கடை என்கிற ஒன்றிற்காக நான் இங்கே கால் வைத்திருக்கிறேன்.. இல்லேன்னா.. நீயெல்லாம் எனக்கு இணையா நின்று பேச முடியுமா..?”

“அப்பச் சொன்னதைத்தான் இப்பவும் சொல்றேன்.. நீ யாரா வேணும்னாலும் இருந்துக்க.. அதுக்காக எனக்குத் திருடி பட்டம் கட்டி விட வராதே.. நான் உன்னைப் போல நேர்மைன்னா கிலோ என்ன விலைன்னு கேட்கிற ஆளில்ல.. நேர்மைதான் மூச்சுன்னு வாழ்கிற ஆள்...”

“இந்த நிலைமையிலயும் உன் திமிர் அடங்கலையே...”

"அது அடங்காது.. நினைச்சதை சாதிக்க எந்தக் குறுக்கு வழியிலயும் போகலாம்ன்னு நீ நினைக்கிறப்ப நேர்வழியில போகிற என் திமிர் எதுக்காக அடங்கனும்...?"

"நீ...? நேர்வழியில் போகிறயா...? குட் ஜோக்... கேட்டிங்களா அங்கிள்.. நம்ம பணத்தை திருடிவிட்டு இவ நேர்மை.. அது.. இதுன்னு பேசுகிறதை..."

நேகாவின் குறிப்பை உணர்ந்து கொண்ட பார்த்தசாரதி உடனடியாக களம் இறங்கினார்... காவ்யாவைத் துரத்துவதற்காக இந்த அளவுக்கு நேகா மெனக்கெட்டிருக்கும் போது.. அவர் பங்குக்கு ஒரு துரும்பையாவது கிள்ளிப் போட வேண்டாமா..?

"அதுதானே.. இதோ பாரம்மா.. நீயா குற்றத்தை ஒப்புக்கிட்டா போலிஸீக்கு போக வேண்டிய அவசியமிருக்காது.. இல்லைன்னா.. நோ அதர் வே... நான் அதைத்தான் செய்தாகனும்..." கடுமையாக அவர் பேசினார்...

"போலிஸா..?"

காவ்யாவின் முகம் வெளுத்ததை ரசித்துப் பார்த்தாள் நேகா.. கடையில் வேலை செய்தவர்களெல்லாம் அங்கே குழுமி விட்டார்கள்...

காவ்யாவைப் பார்த்து தங்களுக்குள் கிசுகிசுத்துப் பேசிக் கொண்டார்கள்.. அதை ஜாடையாக கவனித்த

காவ்யாவிற்கு உயிரே போய் விடுவதைப் போல இருந்தது.. பாவனாவினால் தோழியின் நிலைமையை பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க முடியவில்லை...

“பணம் காணாமல் போயிருக்குன்னா அதைத் தேடனும்சார்.. அதை எடுத்தது யார்ன்னு கண்டு பிடிக்கச் சொல்லித்தான் போலிஸிடம் கேட்கனும்.. நீங்களா காவ்யாமேல பழி போடக் கூடாது...” என்று பார்த்தசாரதியிடம் சொன்னாள்...

நேகா கண்களில் கனலோடு பாவனாவின் பக்கம் திரும்பினாள்..

“இங்கே இத்தனை பேர் இருக்காங்கள்ல.. இவங்களுக்கெல்லாம் இல்லாத அக்கறை உனக்கு மட்டும் எதற்காக வருகிறது..? ஸோ.. நீயும் இவளுடன் கூட்டுப் போட்டிருக்கிற.. எவ்வளவு ஷேர் கொடுக்கிறதாச் சொன்னா..? இவளுக்கு டயமன்ட் நெக்லெஸ்.. உனக்கு கோல்டு நெக்லெஸா...?”

“மைன்ட் யுவர் வொர்டுஸ் மேடம்...”

“பர்ஸ்ட் மைன்ட் யுவர் பிஹேவியர்.. எம்.டி பேசும் போது.. அதிலும் திருட்டு சம்பந்தமாக என்கொயரி நடக்கும் போது.. குறுக்கே பேசக்கூடாதுன்னு உனக்குத் தெரியாதா..?”

பாவனா காவ்யாவிற்கு ஆதரவாக பேச ஆரம்பித்ததும் கடையில் வேலை பார்த்தவர்கள் தங்கள் முகக்குறிப்பில் பாவனாவின் பேச்சை ஆதரித்தார்கள்.. அதை நேகா கவனித்து விட்டாள்.. அதை முளையிலேயே கிள்ளி எறியா விட்டால் நேகா நினைத்ததை செய்ய முடியாது... அது காவ்யாவின் ஊர்.. அங்கே அவளுக்குச் சாதகமாக ஒருவர் வாய்திறந்தாலும் அது பலராக மாறிவிடும் அபாயம் இருக்கிறது...

அதனால் உடனடியாக பாவனாவின் வாயை மூட வைக்க எதைப் பேச வேண்டுமோ.. அதைப் பேசினாள்.. பேசும்போதே ஓரக்கண்ணால் கூடியிருந்த வேலையாள்களின் முகத்தைக் கவனித்தபடியே பேசினாள்..

நேகா எதிர்பார்த்ததுதான் நடந்தது.. ஆனானப்பட்ட பாவனாவுக்கே அந்தக் கதியா என்று மற்றவர்களின் முகங்களில் பயம் சூழ்ந்தது.. அவர்களின் முணுமுணுப்பு அடங்கி அங்கே நிசப்தம் நிலவியது.. நேகா திருப்தியுடன் பாவனாவை அலட்சியப் பார்வை பார்த்து புருவங்களை உயர்த்தினாள்..

“டெல் மீ.. உன்னோட ஷேர் என்ன..?”

“உங்க டெக்னிக் புரியுது மேடம்.. இதை நான் கோர்ட்டில் சந்திக்கிறேன்...”

“நான் பார்க்காத கோர்ட்டா..? உன் ஆயுள் பூராவும் கோர்ட்டில சுற்ற வைக்க என்னால முடியாதா..?”

“அந்த ஆணவத்திலேதானே இப்படிப் பழி போடறிங்க...?”

“ஆர் யு எ சைல்ட்..? படிச்சுப் பட்டம் வாங்கி... சுயமாய் சம்பாதிக்கும் உன்னைப் போல மெச்சூரிட்டி வுமனுக்கு இது கூடவா புரியலை..? காவ்யாவின் பொறுப்பில் இருந்த பணம் காணாமல் போய் விட்டதுன்னா.. அது கிடைக்கிற வரைக்கும் அவள்தானே குற்றவாளி...?”

“கடையில் இருந்த பணம் எப்படி மேடம் கால் முளைத்துப் போக முடியும்...?”

“அதையும் நீயே சொல்லேன்.. இது காவ்யாவோட ஊர்.. எங்கே.. எப்படி.. அதைக் கடத்தி விட்டான்னு கேட்டுச் சொன்னா டைம் வேஸ்டாகாதில்ல..?”

“நீங்க ஒரு முடிவோட இருக்கீங்க.. உங்க கூடப் பேசினா வேலைக்கு ஆகாது...”

பாவனா செய்வதறியாதவளாக காவ்யாவை பார்த்தாள்.. அவள் கண்களில் குளம் கட்டியிருந்தாலும்.. இப்படிப்பட்ட பழி போடுபவர்களின் முன்னால் உடைந்து விடக் கூடாது என்று நிமிர்வாகவே நின்றாள்.. அவளின் மனம் உடைந்து விட்டதை பாவனாவினால் கண்டு கொள்ள முடிந்தது..

‘நான் பாவி..’ அவள் மனம் வருந்தினாள்..

'வேலையை விட்டுப் போறேன்னு காவ்யா கெஞ்சினப்பல்லாம் அவ கையைப் பிடிச்சு நிறுத்தி வைச்சேனே.. அவ போறேன்னு சொன்னப்பவே விட்டிருந்தா அவளுக்கு இந்த நிலைமை வந்திருக்காதே...'

அந்தக் கடையை விட்டு விலக வேண்டுமென்றே தீர்மானம் அவள் மனதில் வந்து விட்டது.. அந்த நாளின்.. அந்தக் கொடுமையான நிமிடங்களை வாழ்நாளில் மறக்க முடியாது என்று அவளுக்குத் தோன்றியது..

அவள் கண் முன்னால்.. குற்றமில்லாத அவளுடைய தோழி பழியேற்று கதறி நிற்கிறாள்.. அவளுக்கு உதவிக்கரம் நீட்ட முடியாமல் பாவனாவின் கைகள் கட்டப்படுமானால் அந்த வேலை அவளுக்கு எதற்கு..?

"நான் வேலையை விடறேன் மேடம்.." என்றாள் பாவனா..

"அதை என்கொயரி முடிந்ததும் செய்..." இகழ்ச்சியுடன் சொன்னாள் நேகா...

காவ்யா இதழ்கள் துடிதுடிக்க நின்று கொண்டிருந்ததை குரூர திருப்தியுடன் பார்வையிட்ட நேகாவிற்கு மனம் நிறைந்திருந்தது...

'யாரிடம் உன் வேலையைக் காட்டின..' என்ற கேள்வி அவள் விழிகளில் இருந்தது...

“ம்ம்ம்.. சொல்லு.. சொல்லு.. அந்தப் பணத்தை எங்கே வைச்சிருக்கிற..?” அதட்டினாள் நேகா...

“இங்கேதான் பணம் இருந்தது.. வேற எங்கேயும் நான் வைக்கல...” ஆணித்தரமாகச் சொன்னாள் காவ்யா...

“இங்கேயிருந்தா எங்களிடம் அதைக் காட்டு பார்க்கலாம்...”

“அதுதான் காணாமல் போயிருச்சே...”

“கைகால் முளைத்துப் போயிருச்சா..? இல்லை.. சிறகடித்து பறந்து போயிருச்சா..?”

“எனக்குத் தெரியாது...”

“யாரிடம் கடத்தி விட்ட..?”

நேகா உதாசீனமான குரலில் கேட்டாள்.. காவ்யா வெகுண்டு அவளை நிமிர்ந்து பார்த்தாள்.. அவளின் சினத்தை லட்சியம் பண்ணாமல் நேகா புருவங்களை உயர்த்தி இறக்கினாள்...

“அப்படிப் பார்த்தா.. என்ன அர்த்தம்..? என்னவோ கண்ணகி மதுரையைப் பார்த்ததைப் போல இல்ல என்னைப் பார்க்கிற.. கேள்விக்கு பதிலைச் சொல்லு...”

“நான் மதுரைக்காரி.. மீனாட்சி பார்க்கிற பார்வையைத்தான் பார்ப்பேன்.. வேறு எந்தப் பார்வையைப் பத்தியும் எனக்குத் தெரியாது...”

"பணத்தை எங்கே கடத்தி விட்டிருக்க...?"

"எங்கேயும் கடத்தலை.."

"அதை வைச்சு என்ன செய்யப் போகிற...?"

"அடுத்தவங்க பணத்தை வைச்சு எதுவும் செய்யறதா உத்தேசமில்ல..."

"திருடின பணத்தைத் திருப்பிக் கொடுத்துட்டா உனக்கு நல்லது..."

"திருடியா..?"

காவ்யா மீண்டும் வெகுண்டாள்.. உதடுகளில் நமட்டுச் சிரிப்புடன் அவளின் கையாலாகாத கோபத்தை வெகுவாக ரசித்தாள் நேகா... கட்டிப் போட்டு அடிக்கும் குரூரம் அவள் விழிகளில் தெரிந்தது...

"நான் திருடியில்லை..."

"கடைப் பணத்தை களவாடியிருக்க... நீ திருடியில்லையா...?"

"நான் களவாடலை.. பணம் காணாமல் போயிருச்சு.."

"இரண்டும் ஒன்றுதானே..."

"இல்லை.. ரெண்டுமே வேற.. வேற.. கடைப் பணத்தை எடுக்கனும்னா.. நான் எதுக்காக.. அதைக் கடைக்கு கொண்டு வரனும்..? அப்படியே கொண்டு போயிருக்கலாமே.."

“இப்படிக் காணாமல் போய் விட்டதுன்னு டிராமா போடனுமில்ல... அதுக்காகத்தான் இங்கே வந்தியோ.. என்னவோ...”

“ஏறக்குறைய ஒரு வருசமா நான்தான் பேங்கில பணத்தை டிராப் பண்றேன்.. சேலரி கொடுக்கிறேன்.. அப்பல்லாம் முதலாளி இங்கே இருந்ததில்லை.. அப்பல்லாம் பணத்தை எடுக்காத நான்.. இப்ப.. நீ வந்திருக்கிற சமயத்தில எடுத்து விட்டேனா...?”

காவ்யா சரியான கேள்வியைக் கேட்டுவிட... ‘சபாஷ்...’ என்று மனதுக்குள் தோழியை சிலாகித்துக் கொண்டாள் பாவனா...

நேகா அதைப்பற்றி அலட்டிக் கொள்ளவே இல்லை...

“இந்த ஒரு வருடமா நீ அடித்திருக்கிற பணத்தைப் பற்றி எனக்கென்ன தெரியும்..? இப்ப நான் வந்ததினால் உன்னைக் கையும் களவுமா பிடித்துட்டேன்...? இல்லைன்னா என்ன ஆகியிருக்கும்.. நீ இப்படி பணம் காணாம போயிருச்சுன்னு கதை விட்டு அர்ஜீனை ஏமாத்தியிருப்ப...”

நேகாவின் வார்த்தைகளுக்கு பதில் சொல்ல காவ்யா வாய் திறந்த போது...

“இங்கே என்ன நடக்குது..?” என்ற குரல் கேட்டது..

அனைவரும் திரும்பி பார்த்தார்கள்... அங்கே அர்ஜீன் நின்றிருந்தான்...

# 101

## என் சோகத்திலே உன் தோள் சாய்த்து – நீ எனைத்தேற்ற ஆசைகொண்டேன்...

'**வ**ந்து விட்டாயா...?'

பசுவைக் கண்டு விட்ட கன்றைப் போல கண்ணீர் மழையைப் பொழிந்தாள் காவ்யா.. அவ்வளவு நேரமும் அடக்கி வைத்திருந்த கண்ணீர் மடைதிறந்த வெள்ளமாக கொட்டியதைக் கண்ட நேகாவிற்கு பற்றிக் கொண்டு வந்தது...

'எத்தனை கேள்விகள் கேட்டேன்.. ஒரு சொட்டுக் கண்ணீரை விட்டாளா..? அசையாமல் என் முன்னால் நின்றுவிட்டு அவனைக் கண்டதும் பொங்கிப் பொங்கி அழுகிறாளே.. எவ்வளவு கெட்டிக்காரியாய் இருக்கிறாள்...'

நேகாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அர்ஜீன் அன்று வந்து தொலைப்பான் என்று அவள் எதிர்பார்த்திருக்கவில்லை... அவன் உடனடியாக கனடாவை விட்டுக்கிளம்பி விடக்கூடாது என்றுதான்

புதிதான ஒரு வியாபார ஒப்பந்தத்தை அவனிடம் அனுப்பி வைத்தாள்.. அவளுக்குத் தெரிந்தவரையில் அந்த வியாபார ஒப்பந்தத்தையும்... அது தொடர்பான வேலைகளையும் முடித்து விட்டு வர குறைந்தது இரண்டு மாத காலமாவது ஆகும்.. அப்படியிருக்கும் போது எப்படி அவன் அங்கே வந்து நிற்கிறான்..?

நேகாவிற்குத் தகவல் சொன்னவர்கள் அர்ஜீன் அந்த புதிய ஒப்பந்தத்தை நிராகரிக்கவில்லை.. ஏற்றுக் கொண்டு அது சம்பந்தமான வேலைகளில் இறங்கி விட்டான் என்றுதான் சொன்னார்கள்.. அர்ஜீன் எடுத்த வேலையை முடிக்காமல் திரும்ப மாட்டான்.. அப்படியென்றால் இரண்டு மாத கால அளவில் முடிக்க வேண்டிய வேலையை இரண்டே வாரங்களில் முடித்து விட்டானா..?

‘ஹி.. மேன்..!’

அர்ஜீனை மயக்கத்துடன் பார்த்தாள் அவள்.. அவனோ அவளைக் கவனிக்காமல் காவ்யாவின் கண்ணீரை பதட்டத்துடன் பார்த்தான்...

“என்ன ஆச்சு காவ்யா..? வாட்ஸ் த மேட்டர்..?”

ஒரே கேள்வியை தமிழிலும் ஆங்கிலத்திலும் கேட்டும் அவனுக்கு காவ்யாவிடமிருந்து பதில் கிடைக்கவில்லை...

அவள் அடிபட்ட காயத்தை தாயிடம் காட்டிக் காட்டி அழும் குழந்தையைப் போல தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள்...

“நீங்களாவது சொல்லக் கூடாதா பாவனா..?” அவன் பாவனாவிடம் கேட்ட போது...

“நான் சொல்கிறேன் அர்ஜீன்..” என்று ஒயிலாக ஊடே புகுந்தாள் நேகா...

அர்ஜீனுக்கு அவளிடம் பேச விருப்பமில்லை.. தினந்தோறும் மனரீதியாக காவ்யா படும் சித்திரவதைகளை பாவனாவிடம் கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தவன் அவன்.. அதனால் ஏற்பட்ட வெறுப்புடன் முகத்தை திருப்பிக் கொண்டு...

“இது என் கடை... இங்கே வொர்க் பண்ணுகிறவங்க.. என்னிடம் வொர்க் பண்ணுகிறாங்க.. இந்தக் கடையில் ஏதேனும் பிராப்ளம் நடந்திருந்தா அதை அவங்க என்னிடம் சொல்லுவாங்க.. தேர்ட் பெர்ஸெனெல்லாம் இதில் தலையிட வேண்டிய தேவையே இல்லை...” என்றான்..

‘தேர்ட் பெர்ஸனா..?’ நேகாவின் முகம் மாறிவிட்டது..

அவள் மூன்றாம் மனுஷியா..? அதுவரை அந்தக் கடையின் முதலாளியின் வருங்கால மனைவியாக

அதிகாரம் பண்ணிக் கொண்டிருந்தவளின் அதிகாரம் சுக்கு நூறாக உடைந்து சிதறியது...

"அர்ஜீன்..." பார்த்தசாரதி கர்ஜித்தார்...

வெண்ணெய் திரண்டு வந்த போது தாழி உடைவதை அவர் விரும்பவில்லை.. எவ்வளவு சிரமப்பட்டு நேகா இப்படியொரு திட்டத்தை உருவாக்கியிருப்பாள்..? அதை வெற்றிகரமாக செயல் படுத்திக் கொண்டிருக்கும் போது... நேகாவையே நீ யார் என்று கேட்டு அர்ஜீன் தள்ளி வைக்கலாமா..?

அவரும்.. நேகாவும்.. வன்பாடு பட்டு காவ்யாவை வெளியேற்ற முனைந்தால்.. அதைத் தடுத்து நிறுத்தி விட்டு... அர்ஜீன் நேகாவை வெளியேற்ற முனைகிறானே...

"இது உன் கடைன்னு உரிமை பேசறதை அப்புறமாய் வைத்துக்கலாம்... நீ வரும்வரை இந்தக் கடையை நானும் நேகாவும்தான்... பொறுப்பாக பார்த்துக்கிட்டோம்... எங்க பொறுப்பில் கடையிருக்கிறப்ப இங்கே களவு நடந்திருக்கு... அதைப்பற்றி நாங்க என்கொயர் பண்ணிக்கிட்டிருக்கோம்... அது முடிந்ததும் இது உன் கடைங்கிற உரிமையை நீ கொண்டாடு.. யாரும் தடுக்கப் போவதில்லை..."

"களவா..? என் கடையிலா..?"

"யெஸ்.. இன்றைக்கு வொர்க்கர்ஸீக்கு சேலரி கொடுக்கனும்..."

"ஆமாம்.. அதைத்தான் காவ்யா எப்போதும் பெர்பெக்டா பண்ணிருவாளே..."

"அது அப்போ.. இப்போது அவள்தான் பணத்தை களவாடியிருக்கா...?"

"ஷட் அப்..."

பேசுவது தந்தையென்றும் யோசிக்காமல் கோபத்துடன் இரைந்தான் அர்ஜீன்... காவ்யாவின் கண்ணீருக்கான காரணம் அவனுக்கு பிடிபட்டு விட்டது.. இப்படிக்கூட மனிதர்கள் இருப்பார்களா என்று அவனுக்கு வெறுத்துப் போய்விட்டது.. மகன் காதலித்த பெண்ணைத் திருமணம் செய்து விடக்கூடாது என்பதற்காக.. அந்தப் பெண்ணின் மீது திருட்டுப் பழியைப் போடும் அளவிற்கு அவன் தந்தை தரமிறங்கி விட்டாரா..?

நேகாவைப் பற்றி அவன் யோசிக்கவே இல்லை.. அவள் எதற்கும் துணிந்தவள் என்பதுதான் அவனுக்குத் தெரியுமே...

"பூவோடு சேர்ந்த நாரும் மணம் பரப்பும் டாடி.. பட்.. சேறோடு சேர்ந்தால் என்ன ஆகும்..? அதுதான் இப்போது உங்களுக்கு ஆகியிருக்கிறது..."

அவனது பேச்சில் நேகாவின் முகம் சிறுத்து விட்டது.. அவள் அவமானத்துடன் அவளைச் சுற்றி நின்றவர்களை ஓரக்கண்ணால் பார்த்தாள்.. அது நேரம் வரை அவர்கள் முகத்தில் சூழ்ந்திருந்த பயம் விலகி.. பழைய முணுமுணுப்பு திரும்ப ஆரம்பித்திருந்தது.. அவள் பார்த்தசாரதியை குறிப்பாக நோக்கினாள்.. அர்ஜீனுடனான அவளின் தனிப்ட்ட சந்திப்பு இப்படியா அமைய வேண்டும் என்று அவள் மனம் எரிந்தது...

‘எல்லாம் இவளால் தான்...’

அர்ஜீனுக்கு எப்போதுமே அவளைப் பிடிக்காது என்பதை மறந்து... காவ்யாவினால்தான் அர்ஜீனுக்கு அவளைப் பிடிக்காமல் போனதைப் போல மனம் கொதித்தாள் நேகா...

“என்ன பேசுகிற.. யாரிடம் பேசுகிறேன்னு யோசித்துத்தான் பேசுகிறயா அர்ஜீன்..? நான் உன் டாடி..”

“அதனால்தான் இந்த அளவுக்கு பொறுமையாகப் பேசுகிறேன் வேறு யாராவது இப்படிப் பேசியிருந்தால் நடக்கிறதே வேற...”

“லுக் அர்ஜீன்.. காலையில் பேங்கில் டிராப் பண்ணின பணம் எங்கே போனது...? அதைக் கேட்க எனக்கு உரிமையில்லையா...?”

“இல்லை...” ஆணித்தரமாக மறுத்தான் அர்ஜுன்...

தந்தை என்ற பாசமும்.. மரியாதையும் அவன் மனதில் இருந்தது.. ஆனால்.. காவ்யா.. அவளின் சுயமரியாதை என்று வரும் போது.. அவனை நம்பிக் காதலித்த காதலியின் மரியாதை மட்டுமே அவன் முன்னால் நின்றது.. அவளை அவமானப் படுத்துவது தந்தையென்றாலும் அவன் அதை எதிர்க்க தயாராக இருந்தான்..

“அர்ஜுன்...” பார்த்தசாரதி திகைத்தார்...

“யாரைக் கேட்டு இங்கே வந்தீங்க டாடி..?”

“யாரைக் கேட்டிருக்கனும்..?”

“என்னைக் கேட்டிருக்கனும்.. இது என்னுடைய கடை...”

“ஓகே.. இது உன்னுடைய கடையாகவே இருக்கட்டும்.. மகனின் கடைக்கு வர ஒரு தகப்பனுக்கு உரிமையில்லையா...?”

“ஜஸ்ட் எ விசிட்டுன்னு நீங்க வந்து போகிறதிற்கு மட்டும்தான் உங்களுக்கு உரிமையிருக்கு.. இது என் கடைன்னு அதிகாரம் பண்ணுகிறதிற்கோ.. சம்பந்த-மில்லாதவங்களை வரவழைச்சு.. என் வுட்பின்னு சொல்லி உள்ளே ஆரத்தி எடுத்து கூப்பிட்டுக்கிறதுக்கோ.. என்

ஆபிஸ் ரூமில் அவங்களை அலோவ் பண்ணி.. என் சேரில் உட்கார வைக்கிறதுக்கோ.. என் வொர்க்கர்ஸ்கிட்ட இவங்கதான் உங்க முதலாளியம்மான்னு சொல்லிக் குழப்பி விடறதுக்கோ உங்களுக்கு உரிமையில்லை...”

நேகா உதட்டைக் கடித்துக் கொண்டாள்... அர்ஜீன் பேசப்பேச பாவனாவின் முகத்தில் எழுந்த உணர்வலைகளை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

பாவனாவின் முகத்தில் கேலிப் புன்முறுவல் தவழ்ந்தது... எங்களையெல்லாம் ஆட்டி வைத்தாயே... எந்த உரிமையில் ஆட்டி வைத்தாய் என்ற கேள்வி இருந்தது...

நேகா தன் உயரம் குறைவதை உணர்ந்தாள்.. அதைப் பற்றிய கேள்வியை அர்ஜீனிடம் அவளால் கேட்டு விட முடியாது.. தொழில் என்ற வகையில் பார்த்தால்... அவன் அவளைவிட... அவனுடைய தந்தையான பார்த்தசாரதியைவிட.. மிக.. மிக.. அதிகமான உயரத்தில் இருந்தான்.. அவளால் எட்ட முடியாத உயரம் அவனுடையது.. இரண்டு மாத காலத்திற்கு அவனைக் கனடாவில் தேக்கிவைக்கும் அளவிற்கு வேலை நிறைந்த புது வியாபார ஒப்பந்தத்தை அவள் அனுப்பி வைத்தால்..

அதை இரண்டே வாரத்தில் முடித்து விட்டு திரும்பி வரும் அளவிற்கு வேகம் நிறைந்தவனாக அவன் இருந்தான்.. அவனுடைய சொந்த அலுவலுக்காக.. புதிய ஒப்பந்தத்தையும் அவன் கைநழுவ விடவில்லை.. அதே சமயத்தில் அந்த ஒப்பந்தத்திற்காக கனடாவிலேயே அவன் தேங்கி நிற்கவுமில்லை...

அந்த வேகத்தை நேகா விரும்பினாள்... தகப்பனின் அடையாளத்தை சுமந்து கொண்டு நிற்காமல்.. தனக்கென்று ஒரு அடையாளத்தை உருவாக்கிக் கொண்ட அவனின் சுயமரியாதையை விரும்பினாள்.. அவனது ஆண்மை நிறைந்த ரோசத்தையும்.. வீரத்தையும் விரும்பினாள்...

அதனால்தான் அவனைத் தன்னுடையவனாக்கிக் கொள்ள வேண்டுமென்று அவள் துடித்தாள்.. அப்படித் துடித்தவள் ஒன்றைமட்டும் மறந்துவிட்டாள்...

அவள் அவனை விரும்பியதைப் போல.. அவனும்.. அவளை விரும்ப வேண்டும் என்பது...

ஆண்மை நிறைந்த ஆண்மகனின் வீரத்தை அவள் விரும்புவதைப் போல.. பெண்மையின் பொழிவை அவனும் விரும்புவான் என்பது...

அர்ஜீன் சுந்தரியின் மகன்.. ஆனந்தியின் தம்பி.. அவனை வளர்த்த.. அவனுடன் வளர்ந்த இரண்டு பெண்களும் பெண்மையின் மென்மை நிறைந்தவர்கள்.. சுந்தரி பணக்கார தாய்.. தந்தையின் ஒற்றை வாரிசாக பிறந்தவள்.. அத்தனை சொத்துக்களையும் கணவனுக்கு அர்ப்பணித்து விட்டு தன்னை அடையாளமில்லாதவளாக ஆக்கிக் கொண்டவள்.. அவளுக்கு வீடுதான் உலகம்.. கணவன் குழந்தைகள்.. இவர்களைத்தவிர வேறு எதையும் அறியாதவள்.. அறிய விரும்பாதவள்....

அவளின் அந்தத் தன்மையில் மனம் நெகிழ்ந்தவன் அர்ஜீன்.. அவளைப் பற்றிய அந்த விவரங்களை சுந்தரி நினைவு கூர்ந்ததுமில்லை.. சொல்லிக் காட்டியதுமில்லை.. பார்த்தசாரதியின் மனைவியென்று.. அவரின் நிழலின் பின்னால் தன்னை மறைத்துக் கொண்டவள் சுந்தரி...

ஆனந்தி பார்த்தசாரதியின் மகள்.. பிறக்கும் போதே தங்கக் கிண்ணியில் பாலூட்டப் பட்டு வளர்ந்தவள்.. இருந்தும் அவள் வைரங்களை ரசித்ததில்லை.. வானத்து நிலவை ரசித்தாள்.. பட்டுப் புடவையை விட பருத்திப் புடவையை விரும்பி உடுத்தினாள்...

எளிமை நிறைந்தவள் ஆனந்தி.. அவளிடம் கவிதையிருந்தது.. எதையும் ஆழமாக சிந்தித்து யோசனை

சொல்லும் அறிவுத்திறன் இருந்தது.. ஆன்மிகத்தில் நாட்டமிருந்தது...

அந்தி நேரத்து கோவில் கோபுரங்களில் புறாக்கள் சிறகடிப்பதை ரசித்துப் பார்க்கும் அற்புதமான அனுபவத்தை ஆனந்திதான் அவனுக்கு உணர்த்தினாள்...

பௌர்ணமி நிலவில் மொட்டை மாடியில் அமர்ந்து நிலவை ரசித்துக் கொண்டு.. நிலாச்சோறு சாப்பிடும் ஆனந்தமான அனுபவத்தை ஆனந்திதான் அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தாள்...

ஏதோ ஒரு நதியில் கால் பதித்துப் பார்க்கும் இனிமையான ரசனைகளை ஆனந்திதான் அவனுக்குள் உண்டாக்கினாள்...

இப்படிப்பட்ட தாயும்.. தமக்கையும் வாய்க்கப் பெற்றவனால் நேகாவைப் போன்ற ஒருத்தியை எப்படி விரும்ப முடியும்..?

அர்ஜீன் நேகாவைத் திரும்பிக்கூடப் பார்த்ததில்லை.. அன்றும் அவன் அதையே செய்ததில் நேகாவின் ரத்த அழுத்தம் எகிறி.. கொதிநிலையை அடைந்தது...

# 102

*கட்டி வைத்த முல்லை போல - நீ*
*கட்டிக் கொள்ள ஆசைகொண்டேன்...*

**நே**காவின் மனதைப் புரிந்து கொண்ட பார்த்தசாரதி பதட்டம் கொண்டார்.. அவர் எவ்வளவு சிரமப்பட்டு இப்படிப்பட்ட மருமகளைத் தேடிப் பிடித்திருக்கிறார்..? அதை உணராமல் அவர் மகன்.. ஒற்றைப் பைசாவிற்கும் பிரயோஜனமில்லாத வீட்டில் பெண்ணெடுக்க வேண்டு மென்று பிடிவாதம் பிடித்துக் கொண்டு அவளை அலட்சியப் படுத்துகிறானே...

அவரின் கோபம் அப்படியிருந்ததென்றால்.. அர்ஜீனின் கோபம் வேறு வகையில் இருந்தது..

சுயநலம் நிறைந்த பார்த்தசாரதிக்கு மட்டும்.. சுந்தரியைப் போன்ற குணவதி மனைவியாக அமைய வேண்டும்.. அதுவே அவரது மகனுக்கு என்றால்.. அடங்காப்பிடாரி நேகாதான் அகப்பட்டாளா என்பது அவனுடைய கடுப்பாக இருந்தது...

பார்த்தசாரதி ஒரு முடிவிற்கு வந்தார்.. நேகாவை அர்ஜீன் திரும்பிப் பார்ப்பது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும் என்று தள்ளி வைத்துவிட்டு காவ்யாவை அவன் திரும்பிப் பார்க்காமலிருக்க வழிசெய்து விடும் உத்தேசத்துடன் மகனை முறைத்தார்...

“எதற்காக இந்த கோபம் அர்ஜீன்..? யார் செய்த தவறை மறைக்க இந்த அளவுக்கு வேகம் காட்டுகிறாய்..?”

“டாடி...”

“இந்தப் பெண் பணத்தை திருடியிருக்கிறாள்... அதை நாங்கள் கண்டுபிடித்திருக்கிறோம்.. அதைப் பற்றிப் பேசுவதை விட்டுவிட்டு.. நீ ஏன் பேச்சை மாற்றப் பார்க்கிறாய்...?”

“அபாண்டமாய் பேசக் கூடாது டாடி.. இது என் கடை.. இதை நான் டீல் பண்ணிக்கறேன்...”

“அதாவது.. இவள் செய்த திருட்டை மறைத்துக் கொள்கிறேன் என்கிறாய்...?”

“இவள் திருடமாட்டாள்.. சுட்டுப் போட்டாலும் அந்த குணம் இவளுக்கு வராது...”

“அப்படின்னா அதை இப்போது.. இந்த இடத்திலேயே நீ புரூவ் பண்ணு...”

“அதுக்கு அவசியமென்ன டாடி..?”

“இருக்கே.. இவள் பணத்தை எடுத்து வந்ததை நானும்.. நேகாவும் பார்த்தோம்.. அதை எடுத்து மேஜை டிராயரில் வைத்தபடி அதை வைத்து டயமன்ட் ஜ்வல்ஸ் வாங்கப் போகிறதாய் இவள் பேசியதை எங்களுடன் இந்தக் கடையில் வேலை செய்கிற வொர்க்கர்ஸ் இரண்டு பேர் கேட்டிருக்காங்க.. இப்ப பணம் காணாமல் போயிருச்சுன்னு இவ சொல்கிறாள்.. அப்ப இவதான் பணத்தை திருடியிருக்கான்னு நாங்க சொல்றதில தவறில்லையே... ”

“நான் விசாரிக்கறேன்...”

“விசாரி...”

“நீங்க கிளம்புங்க.. போகும் போது நீங்க அழைச்சு வந்திருக்கிற அழையா விருந்தாளியையும் கையோடு கூப்பிட்டுக்கிட்டு போங்க...”

“ஊஹீம்.. இப்பவும் நீ பூசி மெழுகத்தான் பார்க்கிறாய்.. நாளைக்கே நேகா சென்னைக்குப் போய் இப்படி ஒரு சம்பவம் அர்ஜீனின் கடையில் நடந்தது.. அவன் கடையில் வேலை பார்க்கும் பெண் பணத்தை திருடிவிட்டாள்.. அவன் அதை விசாரிக்காமல் மறைத்து விட்டான்னு சொல்வாளில்லையா..? அப்படி அவள்

சொல்லக் கூடாதுன்னு நாம் சொல்ல முடியுமா..? இங்கே அதுதானே நடந்து கொண்டிருக்கிறது...?”

பார்த்தசாரதியின் வார்த்தைகளில் ஒளிந்திருந்த மிரட்டலை அர்ஜீன் புரிந்து கொண்டான்... அவன் காவ்யாவை மணந்து கொண்டால் நேகா அவளைப் பற்றிய இந்தப் பழியை சென்னை முழுவதும் பரப்புவாள்... அது அர்ஜீனின் தொழில் வட்டாரங்களில் பரவி... இறக்கை முளைத்து அவன் வேரூன்றியிருக்கும் வெளிநாட்டிலும் பரவிப் படரும்.. அது வாழ்நாள் முழுவதும் காவ்யாவைத் துரத்திக் கொண்டேயிருக்கும்...

அர்ஜீனால் அதை அனுமதிக்க முடியவில்லை.. அவனுக்குத் தெரியும்.. காவ்யா கறந்த பாலைப் போன்ற தூய்மையான குணத்தையுடையவள் என்பது...

அதை மற்றவர் முன்பு.. முக்கியமாக நேகாவின் முன்பு அவன் நிருபித்தாக வேண்டுமே..

அர்ஜீன் அக்கினிப் பரிட்சைக்கு ஆளானான்.. அவனுக்கு வேறு வழியிருக்கவில்லை.. காவ்யா அவனுக்கு மனைவியாக ஆகும்போது பார்த்தசாரதிக்கும் மருமகளாகி விடுகிறாள்.. மருமகளைப் பற்றி மாமனார் உயர்வாக நினைக்க வேண்டுவது அவசியமல்லவா..? என்னதான் பார்த்தசாரதி திட்டம் போட்டு காவ்யாவின் மீது பழி

சுமத்தியிருந்தாலும் அதை உடைத்து அவர் முன்னால் அவளை நிரபராதி என்று அவன் நிருபிக்க வேண்டுமல்லவா..? இல்லையென்றால்.. வேண்டாத மருமகளின் மனதைப் புண்படுத்த.. இதையே அவர் சொல்லிக் காட்ட கூடுமல்லவா..? அந்தச் சொல் காவ்யாவை வாழ்நாள் முழுவதும் துரத்துமல்லவா..?

கல்லடியினால் உண்டாகும் காயத்தை விட.. சொல்லடியால் உண்டாகும் காயத்தின் ரணம் ஆறவே ஆறாதே...

அர்ஜீன் மனதை திடப்படுத்திக் கொண்டான்.. கண்ணீர் முகத்துடன் நின்ற காவ்யாவைப் பார்த்தான்...

“சொல் காவ்யா... பேங்கில் டிராப் பண்ணின பணத்தை உன் பொறுப்பில்தானே வைத்திருந்தாய்..? அது எப்படிக் காணாமல் போனது..?” என்று கேட்டான்...

“என்ன சொன்னீங்க...?” காவ்யா விழி விரித்தாள்...

“என்மேல் சந்தேகப்படறிங்களா...?”

“இல்லை.. அப்படியில்லை.. இவங்க பேசறதை கேட்டாய்தானே.. இவங்களுக்கு பதில் சொல்ல வேண்டாமா..?”

“இவங்க கேட்கிறது இருக்கட்டும்.. நீங்க ஏன் அப்படிக் கேட்டிங்க..? அப்ப.. நீங்களும் இவங்க பேசறதை நம்பறிங்க அப்படித்தானே..?”

“அப்படியில்லை காவ்யா.. கடையில் இருக்கிற பணம்.. எப்படிக் காணாமல் போனது..?”

“போகும்ங்க.. அதுக்கு கை கால் முளைச்சு.. காணாமல் போகும்.. ரெக்கை முளைச்சு பறந்து போகும்.. மனச்சாட்சியில்லாம சதிசெய்கிறவங்க திருட்டு வேலையைச் செஞ்சா.. அந்தப் பழி அடுத்தவங்க தலையில வந்து விடியும்.. நான் பண்ணின தப்பு ஒன்னே ஒன்னுதாங்க.. எங்க வீட்டிலே வேலைக்குப் போகாதேன்னு தலைப்பாடாய் அடிச்சுக்கிட்டும் இந்தக் கடையில வேலை செய்ய வந்தேனே.. அதுதான் நான் செய்த தப்பு.. வேலையை விட்டிருன்னு கடவுள் முன்னால குலுக்கிப் போட்ட சீட்டில வந்தும்.. மத்தவங்க பொறுன்னு சொன்னதுக்காக பொறுத்துப் போனேனே.. அதுதான் நான் செய்த தப்பு...”

காவ்யாவின் துயரத்தில் பாவனா கரைந்து விட்டாள்.. தோழியின் கைபிடித்து அவள் தோளை அணைத்துக் கொண்டாள்.. அவள் முகத்திலும் அர்ஜீன் சொன்னதைக் கேட்டு காவ்யாவை வேலையை விட்டுப் போக விடாமல் நிறுத்தி வைத்தது தவறு என்ற எண்ணம் இருந்தது...

அர்ஜீன் தவித்தான்.. காவ்யாவை தோள் சாய்த்து ஆறுதல் சொல்ல முடியாத நிலையில் நிற்பதில் துடித்தான்...

“டிரை டு அன்டர்ஸ்டாண்ட் மி காவ்யா.. நான் அந்த அர்த்தத்தில் கேட்கவில்லை.. இப்ப போலிஸீக்கு தகவல் கொடுத்தாலும் அவர்களும் உன்னிடம்தான் கேள்வி கேட்பார்கள்...”

விளக்கம் சொல்ல வாய் திறந்தவன் உதிர்த்த வார்த்தைகள் அவனுக்கே வில்லங்கமாகப் போயின.. காவ்யா நெற்றிக்கண்ணைத் திறந்தாள்...

“ஓ.. அப்படி வேற எண்ணம் இருக்கா..? ஆக.. கடையில் வைத்த பணம் காணாமல் போனா.. அதுக்கு நான் மட்டும்தான் பொறுப்பு.. இல்லையா..? எத்தனை நாளா என்னை இப்படியொரு கேள்வி கேட்கனும்னு நீங்க காத்துக்கிட்டு இருந்தீங்க..?”

“காவ்யா.. காவ்யா.. ஏன் நிலைமையைப் புரிந்துக்க மாட்டேன்னு அடம் பிடிக்கிற..? பணம் பேங்கிலயோ.. இல்லை வழியிலேயோ காணாமல் போகலை.. கடைக்கு நீ பணத்தை எடுத்துக் கொண்டு வந்து உன் பொறுப்பில் தான் வைத்திருக்கிறாய்.. அதைப் பத்திரமா பார்த்துக்க வேண்டாமா...?”

நேகா போன்ற சதிகாரி இருக்குமிடத்தில் காவ்யா பத்திரமாக இருந்து கொள்ள வேண்டாமா என்ற அர்த்தத்தில் தான் அர்ஜீன் அதைக் கேட்டான்.. ஆனால் காவ்யா அதை வேறு விதமாக... எடுத்துக் கொண்டாள் அதையே அர்ஜீனிடம் கேட்கவும் செய்தாள்...

“இவங்க சொல்கிறதை நீங்க வேறு விதமா சொல்றீங்க.. பணம் என் பொறுப்பில் இருக்கிறப்ப காணாமப் போனா அதை நான்தான் எடுத்திருக்கனும்.. இல்லையா..? பரவாயில்லை... அப்பாவுக்கு பிள்ளை தப்பாம பொறந்திருக்கீங்க.. உங்களுக்கு இதோ இங்கே நிற்கிறாங்களே.. எஜமானியம்மா..! இவங்கதான் பொருத்தமா இருப்பாங்க.. தப்பித் தவறி வேற ஏதாவது அப்பாவிக்கு வலை விரிச்சுராதீங்க.. பாவம்.. மத்தவங்க தப்பிப் பிழைக்கட்டும்...”

“வேண்டாம் காவ்யா.. தேவையில்லாமல் பேசாதே...”

நேகாதான் அவனுக்குப் பொருத்தமானவள் என்று காவ்யா கூறி விட்டதில் எரிச்சலான அர்ஜீன் அவளை எச்சரித்தான்...

“இங்கே நீங்களும்.. மத்தவங்களும்.. தேவையோட தான் பேசிக்கிட்டு இருக்கீங்களா..?”

“பணம் காணாமல் போனதுக்கு உன் அஜாக்கிரதை தானே காரணம்..? சுற்றியிருக்கிறவங்க உன் மேல் பழி போடக் காத்திருக்காங்கன்னுதான் தெரியுதே.. நீ கேர்லெஸ்ஸா இருந்திருக்கலாமா...?”

“ஓ.. கதை அப்படிப் போகிறதா..? சுத்தி இருக்கிறவங்கள பழிபோடாதீங்கன்னு கண்டிக்க

முடியலை.. நீ அலர்ட்டா இருந்திருக்கனும்னு என்கிட்ட சொல்கிறிங்களா..? ஒரு மனுஷி எத்தனை நாளைக்குத் தான் அலர்ட்டா இருக்க முடியும்..? ஒரு நிமிசம் இல்லைன்னா ஒரு நிமிசம்.. அவளும் மூச்சு வாங்க வேணாமா..? அந்த நிமிசத்தில எது நடந்தாலும் அவ அதுக்கு பொறுப்பாகனுமா..? இந்தப் பொறுப்பை நான் கேட்டேனா..? கணக்கு வழக்கு பாக்கிற வேலையில இருக்கிறவகிட்ட கடையோட பொறுப்பை ஏன் கொடுத்தீங்க..? இப்படி ஒருநாள் உங்க அப்பாவும்.. வருங்காலப் பெண்டாட்டியும் வந்து என்மேல திருட்டுப் பட்டம் கட்டறதுக்கா..?”

“காவ்யா...”

“நான் உங்களுக்கு என்ன கெடுதல் செய்தேன்..? என் அப்பா... அம்மா... அண்ணன்னு எல்லோரும் மத்தவங்களுக்கு கொடுத்துப் பழக்கப் பட்டவங்க.. எடுத்துப் பழகினவங்க இல்ல...”

“கண்ட்ரோல் யுவர் ஷெல்ப் காவ்யா.. இதை நாம புருவ் பண்ணியாகனும்..”

“அது என்ன தேவைக்கு..? நாமன்னு என்கூட நீங்க கூட்டுச் சேராதீங்க.. இப்படியாப்பட்ட ஆளு பெத்த புள்ள.. நீங்க மட்டும் எப்படியிருப்பீங்க.. இவரப் போலதானே

இருப்பீங்க.. ஆத்தாடி.. இந்த ஒருவார்த்தைக்கே நான் ஆயுசுபூரா செத்துக்கிட்டு இருக்கப் போறேன்.. அடுத்தடுத்து வார்த்தை வந்தா.. தாங்க மாட்டேன் சாமி.. ஆளை விடுங்க...”

காவ்யா செல்போனை எடுத்தாள்.. நேகாவின் முன்னால் அழுகக் கூடாதென்ற வைராக்கியம் மறைந்து கண்ணீர் விட்டபடி..

“அண்ணா..” என்று போனில் கதறியழுதாள்...

“வந்தட்டேன் காவ்யா..” பக்கத்தில் குரல் கேட்டது...

திரும்பிப் பார்த்தாள்.. வேக நடையுடன் கண்ணதாசன் வந்து கொண்டிருந்தான்.. அவனைக் கண்டதும் பாவனாவின் அணைப்பிலிருந்து விலகிய காவ்யா பாய்ந்தாள்.. இரு கைகளையும் நீட்டி தங்கையை அணைத்துக் கொண்டான் கண்ணதாசன்.. அவன் மார்பில் முகம் புதைத்து காவ்யா கதறியழுதபோது தான் தோற்று விட்டதை உணர்ந்தான் அர்ஜீன்...

எது நடக்கக் கூடாது என்று அவன் அரும்பாடு பட்டானோ அது நடந்தே விட்டது...

தங்கையின் முடி கோதி அவளை சமாதானப் படுத்தியபடி அர்ஜீனைப் பார்த்த கண்ணதாசனின் பார்வையில் நெருப்பு தெரிந்தது..

## 103

*ஆறோடும் வைகைக்கரையில் - நீ*
*அமைதி கொள்ள ஆசைகொண்டேன்...*

"அர்ஜீன் என்ன இது..?"

கண்ணதாசன் கொதிப்புடன் கேட்டான்.. பார்த்தசாரதி முகம் சுளித்தார்.. அர்ஜீனிடம் காவ்யாவின் அண்ணன் உரிமையுடன் பேசுவதை அவர் விரும்ப வில்லை...

"ஹூ ஆர் யு மேன்..?"

காவ்யா 'அண்ணா' என்று அலறியபடி அவன் தோள் சாய்ந்திருக்கிறாள்.. இருந்தும் ஏதும் அறியாதவரைப் போல கண்ணதாசனை நீ யாரென்று கேட்டு வைத்து.. தான் யார் என்று கண்ணதாசனுக்கு உணர்த்தினார் பார்த்தசாரதி...

கண்ணதாசன் அலட்சியமாக அவரைப் பார்த்தான்...

"அதை உங்களுக்குச் சொல்லனும்கிற அவசியமில்லை சார்.. நான் யாருன்னு உங்க மகனுக்குத் தெரியும்.. அது போதும்..."

திருமணம் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் செய்தாகி விட்டது.. இருந்தும் இவன் அர்ஜீனின் மீது உரிமை கொண்டாடுகிறானே என்ற கோபம் பார்த்தசாரதிக்குள் எழுந்தது...

“ஹலோ.. இது என்கொயரி நடக்கிற இடம்.. இங்கே தேவையில்லாம மத்தவங்க வரக் கூடாது...”

“ஹ...! என்கொயரியா..? நீங்க என்ன போலீஸ் ஆபிசரா..?”

“போலிசைத்தான் கூப்பிடுவதாக இருக்கிறோம்...”

“தாராளமாகச் செய்யுங்க... நான் யார்ன்னு உங்களுக்குத் தெரியுமா...? நீங்க பணத்தில பெரியவங்கன்னா.. நான் அதிகாரத்தில பெரியவன்.. இங்கே வந்த பணம் எங்கே போச்சுன்னு தெரியாம இந்த இடத்தை விட்டு நகர மாட்டேன்... அதைச் செய்தவங்களை அரெஸ்ட் பண்ணி உள்ளே தள்ளாம விடவும் மாட்டேன்.. என் பவர் என்னன்னு தெரியாம விளையாடாதீங்க...”

கண்ணதாசனின் கோபத்தில் நேகாவின் முகம் வியர்த்தது.. அவள் பேசாமல் இருக்கும்படி பார்த்தசாரதிக்கு கண்சமிக்ஞை செய்தாள்.. அவர் அடங்கி விட்டார்...

“யாரு கிட்ட..?”

கண்ணதாசன் கோபமாக அர்ஜீன் பக்கம் திரும்பினான்..

“இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா..?” உக்கிரத்துடன் கேட்டான்...

“கண்ணதாசன் சிச்சுவேசனைப் புரிந்துக்காம பேசாதீங்க.. நான் இதற்கு ஆசைப்பட்டேனா..?” அர்ஜீன் நொந்து போனான்...

“பின்னே இல்லையா..? நான்தான் படிச்சுப் படிச்சுச் சொன்னேனே.. அத்தைக்கு மீசை முளைக்காதுன்னு... நீங்க கேட்கலையே.. சித்தப்பான்னு கூப்பிடவா.. இல்ல பெரியப்பான்னு கூப்பிடவான்னு குதிச்சீங்க... இப்ப பாருங்க.. என் தங்கையை எந்த நிலைமையில கொண்டு வந்து நிறுத்தியிருக்கிங்கன்னு.. இதெல்லாம் யாராலே.. உங்களாலே...”

“இல்லை கண்ணதாசன்.. சிச்சுவேசன் இப்படியிருக்கு..”

“ஹ..! சிச்சுவேசனை உருவாக்கினது யாருங்க.. உங்க அப்பாவும்.. உங்க வருங்காலப் பெண்டாட்டியும் தானே..?”

“பாருங்க கண்ணதாசன்... உங்க தங்கையை இந்த நிலைமையில நிறுத்திட்டேன்ங்கிறதுக்காக கோபம் வந்தா என்னை நாலு அடி கூட அடிச்சிருங்க... அதுக்காக கண்டவங்களையும் எனக்கு வருங்கால வொய்ஃபுன்னு சொல்லி வைக்காதீங்க....”

அர்ஜீன் முகம் சுளிக்க.. இதற்குப் பதிலாய் அவன் தன்னை நான்கு போடு போட்டிருக்கலாமே என்று நொந்து போனாள் நேகா.. சொல்லி அழுக பார்த்தசாரதியின் முகம் பார்த்தால் அவர் முகத்திலும் அதே நொந்த தன்மை இருக்க... உதடுகளைக் கடித்துத் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டாள்...

“கண்டுக்காதே நேகா.. நமக்கு காரியம் ஆகனும்.. அது மட்டும் தான் இப்போது முக்கியம்...”

சன்னக்குரலில் கூறி அவளைச் சமாதானப் படுத்தினார் பார்த்தசாரதி...

‘ஆமாமில்ல...’ என்ற நினைவில் அவளும் மனம் தேறினாள்...

“நீங்கதான் இப்படிச் சொல்கிறீங்க.. உங்க அப்பா அப்படி நினைக்கலை போல இருக்கே...”

“யார் என்ன நினைத்தா எனக்கென்னங்க.. நான் இந்த நேகாவை என் வுட்-பியா நினைக்கலைங்க...”

“திஸ் இஸ் நாட் ஃபேர் அர்ஜீன்...”

“நீங்ககூட இதைச் சொல்வீங்களா டாடி...? எதைச் சொன்னா நல்லாயிருக்காதோ.. அதை சொல்லி வைத்திருக்கீங்க.. எதைச் செய்தா நல்லாயிருக்காதோ..

அதைச் செய்து வைத்திருக்கீங்க.. இத்தனையையும் நீங்க செய்துட்டு நான் செய்கிறது.. நல்லாயில்லைன்னு சொல்கிறிங்களே.. எது டாடி நல்லாயில்லை..?"

"இப்ப என்ன நடக்குது..?"

"என்னென்னவோ நடக்குது.. எதுவும் எனக்குச் சரியாப்படலை..."

"என்கொயரி நடக்குது.. நீயும் சரி.. வந்திருக்-கிறவங்களும் சரி.. அதை விட்டுவிட்டு டிராக் மாறிப் பேசிக்கிட்டு இருக்கீங்க..."

"யாரும் டிராக் மாறிப் பேசலை மிஸ்டர் அர்ஜீன்.. உங்க அப்பாவிடம் ஒன்றைச் சொல்லுங்க.. நீங்க வேண்டும்ன்னா எங்களை விடப் பணக்காரங்களா.. கோடிஸ்வரங்களா இருக்கலாம்.. ஆனா.. நாங்க ஒன்றும் இல்லாதவங்க இல்லை.. இந்த ஊருக்குள்ள பணம் காசோடு பிழைக்கிற செல்வாக்கான குடும்பம் எங்க குடும்பம்.. இந்தப் பணம் எங்ககிட்டயும் இருக்கு.. இதை எடுத்துத்தான் என் தங்கை டயமண்ட் நெக்லெஸ் வாங்கனும்னு இல்லை.. ஏற்கனெவே அது கல்யாணத்துக்குன்னு நாங்க வைர அட்டிகையை வாங்கி வைத்திருக்கோம்.. அதனால நாக்கு மேலப் பல்லைப் போட்டு எதையும் பேசாம.. எதப் பேசறதா இருந்தாலும் யோசிச்சுப் பேசச் சொல்லுங்க..."

கண்ணதாசனின் கொதிப்பையெல்லாம் கண்டு கொள்கிறவளா நேகா..? அவள்தான் யார் வந்தாலும் வந்து பார்.. வட்டப் பாறைக்கு.. என்று வாதுக்கு அழைக்கும் ரகமாயிற்றே.. அவள் புறமுதுகு காட்டியது காவ்யாவிடம் மட்டும்தான்.. அதற்குப் பாடம் சொல்லத்தானே அவளை இந்த நிலைமையில் நேகா நிற்க விட்டிருக்கிறாள்..?

“அதற்கென்ன மிஸ்டர் அர்ஜீன்.. நானும் உங்க டாடியும் இனிமேல் யோசித்தேப் பேசுகிறோம்.. இப்ப இவரோட தங்கை எடுத்த பணத்திற்கு இவர் என்ன பதிலைச் சொல்லப் போகிறாராம்.. அதை முதலில் சொல்லச் சொல்லுங்க...”

அவ்வளவு பேச்சை அர்ஜீனின் வாயிலிருந்து கேட்ட பின்னாலும்.. ஆணவம் குறையாமல் பேசினாள் நேகா...

“சொல்லிட்டாப் போச்சு...”

கண்ணதாசன் பணக்கட்டுக்களை எடுத்து அடுக்கினான்.. அவன் பையிலிருந்து பணத்தை எடுப்பான் என்று எதிர்பார்த்திராத பார்த்தசாரதியும்.. நேகாவும் திகைத்துப போய் விட்டார்கள்... அர்ஜீனிடம் சண்டை போட்டு அவன் தங்கை குற்றமற்றவள் என்று நிருபிக்கத்தான் அவன் முயல்வான்.. அவன் வாதத்தை உடைத்து காவ்யாவின் தலையில் திருட்டுப் பட்டத்தைக் கட்டியே தீரவேண்டும் என்ற நினைவோடு இருந்தவர்களின் திட்டத்தை அவன் தகர்த்து விட்டான்..

“உங்க பணத்தை எடுத்துக்கங்க...”

கண்ணதாசன் அர்ஜீனின் முன்னால் பணக்கட்டுக்களைத் தள்ளி வைத்த போது அர்ஜீனால் அவனைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லை.. காவ்யாவின் மதிப்பை அவன் காக்க வேண்டும்.. அதை விட்டுவிட்டு அவள் அண்ணன் வந்து அவள் மதிப்பைக் காத்தால் காதலன் என்று சொல்லிக் கொண்டு அர்ஜீன் எப்படிக் காவ்யாவின் முகம் பார்ப்பான்..?

இது போன்றதொரு சூழ்நிலையில் அவனுடைய காதலியின் அண்ணன் அவனை நிறுத்தி வைப்பானென்று அர்ஜீன் நினைத்தும் பார்க்கவில்லை...

காவ்யா விழி விரிய தமையனைப் பார்த்தாள்.. அவளின் மரியாதை சரியாமல் காப்பாற்றி விட்ட தமையனின் மீது அவளுக்குப் பாசம் பொங்கியது... எப்படி அவன் சரியான தருணத்தில் வந்து அவளைக் காப்பாற்றினான் என்று அவளுக்குப் புரியவில்லை..

‘யார் சொல்லியிருப்பாங்க...?’

கந்தசாமி சொல்லியிருந்தாள்.. அவரால் காவ்யாவின் நிலைமையை சகித்துக் கொள்ள முடியவில்லை.. அதுநாள் வரை ஒன்றாக வேலை செய்கிறவர்களைப் போல இல்லாமல் ஒரே குடும்பத்தினராக பழகிய பழக்கம் அவரை துடிக்க வைத்துவிட்டது..

‘எப்பேற்பட்ட குடும்பத்தில பிறந்த புள்ளை இது... யாரோட தங்கச்சி இது... இதுமேல கூசாம பழி போடறாங்களே...’

மனம் தாளாமல் கடையை விட்டு வெளியே போனவர் எதிரேயிருந்த காயின் போனில் கண்ணதாசனை அழைத்து விவரத்தைச் சொல்லி விட்டார்...

“என்ன சொல்றீங்க கந்தசாமி..?” கண்ணதாசன் வெகுண்டு விட்டான்..

“ஆமாங்கய்யா... முதலாளியோட அப்பாவும்... அவரோட வருங்கால பொண்டாட்டியும் கூட்டுச் சேர்ந்துக்கிட்டு நம்ம காவ்யாப் புள்ளமேல பழி போட்டுட்டாங்கய்யா..”

“பணத்தை பேங்கில இருந்து காவ்யாதானே டிராப் பண்ணிச்சு..?”

“ஆமாங்கய்யா... கூட நானும்.. ஏகாம்பரமும் போனோமே... டாக்ஸியிலதான போனோம்.. திரும்பி வந்ததும் காவ்யா பணத்தை சரி பார்த்து மேஜை டிராயரில வைச்சுப் பூட்டுச்சு.. அது பாத்ரூம் போயிட்டு வாரதுக்குள்ள பணத்தைக் காணோம்.. பூட்டின மேஜைக்குள்ளே இருந்த பணம் எப்படி மாயமாய் மறைச்சிருச்சுன்னு.. யாருக்குமே தெரியலைங்கய்யா...”

“எவ்வளவு பணம் கந்தசாமி..?”

கந்தசாமி பணத்தை பேங்கிலிருந்து எடுத்து வர காவ்யாவுடன் போனவராயிற்றே.. அவர் சொல்லி விட்டார்.. கண்ணதாசன் உடனடியாக அந்தப் பணத்தை ஏற்பாடு பண்ணிக் கையோடு கொண்டு வந்திட்டான்...

காவ்யா அவ்வளவு எளிதாக காப்பாற்றப்பட்டு விடுவாள் என்பதை நினைத்தும் பார்த்திராத நேகா.. எதைச்சொல்லி அவளை மீண்டும் அந்தப் பழியில் இழுத்துப் போடுவது என்று தெரியாமல் திகைத்து நின்றாள்...

‘இவளைக் காப்பாற்ற இப்படியொரு அண்ணன் இருக்கிறானா..?’

பார்த்தசாரதியும் அவளும் எரிச்சலான பார்வைகளைப் பரிமாறிக் கொண்டார்கள்..

“என் தங்கையின் அஜாக்கிரதையாலே காணாமல் போன பணத்துக்கு அவள்தான் பொறுப்பு.. அதை நானும் ஏத்துக்கறேன்.. காணாமல் போன பணத்தைக் கட்டி விட்டேன்.. இனி இது சம்பந்தமாக யாராவது ஒருத்தர் அவமேல ஒரு சொல் சொன்னாலும் அவங்க மேலே மானநஷ்ட வழக்குப் போட்டு விடுவேன் அர்ஜீன்.. ஜாக்கிரதை...”

கண்ணதாசன் ஒற்றை விரலை உயர்த்தி எச்சரித்தான்.. அவன் தங்களைத்தான் சொல்கிறான் என்று

புரிந்ததில் நேகாவும் பார்த்தசாரதியும் கொதித்துப் போனாலும்.. அதை விட கொதிப்பான அவன் முகத்தைக் கண்டு எதற்கு வம்பு என்று வாய்மூடி மௌனமானார்கள்..

"இனி இதுபோல் நடக்காது கண்ணதாசன்.. நான்தான் வந்துட்டேனில்ல.. நான் பார்த்துக் கொள்கிறேன்..."

அர்ஜீன் கண்ணதாசனிடம் சமாதானமாகப் பேச முயல.. நேகாவிற்கும்.. பார்த்தசாரதிக்கும் 'திக்'கென்று இருந்தது...

'இவன் மீண்டும் ஒரு காதல் கதைன்னு ஆரம்பிச்சிருவானோ..'

வயிற்றில் புளி கரைய ஆரம்பிக்க.. பார்த்தசாரதி எதையோ சொல்ல வாய்திறந்தார்.. அவளுக்கு அந்த வேலையை வைக்காமல் கண்ணதாசன் திட்டவட்டமாக பதில் சொல்லி விட்டான்...

"என்னத்தைப் பார்த்துக்குவீங்க அர்ஜீன்..? நீங்க பார்த்துக்கிட்ட லட்சணத்தைத்தான் நான் இன்னைக்குப் பார்த்துட்டேனே..."

"இது ஒரு ஆக்ஸிடெண்ட்ன்னு நினைத்துக்கங்க கண்ணதாசன்..."

"நான் நினைத்துக்கிறது இருக்கட்டும்.. காவ்யா என்ன நினைக்கிறாங்கிறதுதான் இப்ப முக்கியம்.. இத்தனைக்குப்

பிறகும் என் தங்கை இங்கே வேலை பார்க்க ஆசைப்பட்டா நான் அதுக்கு குறுக்கே நிற்க மாட்டேன்...” கண்ணதாசன் சொல்ல..

‘இவன் என்னடா இப்படிச் சொல்கிறான்..’ என்று கதி கலங்கிப் போனாள் நேகா...

இதற்காகவா அவள் வன்பாடு பட்டு இத்தனை வேலைகளையும் செய்து வைத்தாள்..? அது அத்தனையும் விழலுக்கு நீராக விரயம் ஆவதா..?

# 104

## *சொந்தமென்று வந்தவனின்...*
## *சொந்தமாக ஆசைகொண்டேன்...*

**அ**ர்ஜீன் காவ்யாவின் முகத்தைப் பார்த்தான்.. அதே சமயத்தில் பார்த்தசாரதியும்.. நேகாவும் மனம் முழுக்க பதைப்புடன் அவள் முகத்தைப் பார்த்தார்கள்...

‘போக மாட்டேன்னு சொல்லு.. இங்கே வேலை பார்க்க விருப்பப் படறேன்னு சொல்லு...’ அர்ஜீன் கண்களால் இறைஞ்சினான்...

‘ஓடிப் போயிரு.. ஓடிப் போயிரு..’ பார்த்தசாரதியும் நேகாவும் மனதுக்குள் ஜெபித்தார்கள்...

காவ்யா யார் பார்வையையும் கண்டு கொள்ள வில்லை.. கண்ணதாசனின் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்..

“வாண்ணே.. போகலாம்..” உறுதியான குரலில் சொன்னாள்..

அந்த நொடியில் நிமிர்ந்து பார்த்த கண்ணதாசனின் துளைக்கும் பார்வையை அர்ஜுனால் எதிர்கொள்ள முடியவில்லை..

“காவ்யா..” அவன் தடுத்து நிறுத்த முயன்றான்..

“எனக்கு யார் கூடவும் பேச விருப்பமில்லைண்ணே.. வா.. இங்கேயிருந்து போய் விடலாம்... இது என்னைத் திருடின்னு சொன்ன இடம்ண்ணே.. இங்கே நிற்கக்கூட நான் விரும்பலை..”

“வெயிட்.. காவ்யா.. நீ வேலைக்கு வரலைன்னாலும் பரவாயில்லை.. நாம் உட்கார்ந்து பேசலாம்..”

“உட்கார்ந்து பேச எதுவுமேயில்லை அண்ணே.. எல்லாம் முடிஞ்சு போயிருச்சு... ஆவியாய் கரைஞ்சு மாயமாய் மறைஞ்சு போயிருச்சு.. இனி ஒரு நிமிசம் இங்கே நின்னாக்கூட நான் செத்துப் போயிருவேண்ணே..”

காவ்யாவின் துடிப்பில் கண்ணதாசன் அவள் கைப்பற்றிக் கொள்ள. அர்ஜுனின் கண் முன்னாலே

அவனைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் அவளுடைய அண்ணனுடன் அந்தக் கடையை விட்டு வெளியேறி விட்டாள் காவ்யா...

பார்த்தசாரதியும் நேகாவும் இப்போது மகிழ்ச்சிப் பார்வைகளைப் பரிமாறிக் கொண்டார்கள்..

“எது நடந்ததோ.. அது நன்றாகவே நடந்தது...”

அவர்கள் நினைத்தது நடந்து கொண்டிருப்பதில் உண்டான ஆனந்தத்தை அவர்களின் விழிகள் பிரதிபலித்தன..

அர்ஜீன் காவ்யாவை விட்டுப் பிரிந்தால் என்ன.. இல்லை.. காவ்யா அர்ஜீனை விட்டுப் பிரிந்தால் என்ன.. இரண்டும் ஒன்றுதானே...? அவர்களுக்கு அதுதானே வேண்டும்..?

அவர்களின் அந்த எக்களிப்பைக் காணக்காண பாவனாவுக்கு மனம் தாங்கவில்லை.. நல்லவர்கள் தோற்பதுதான் இறைவன் வகுத்த விதியா...? கெட்டவர்கள் வாழ்வதுதான் இறைவன் கொடுக்கும் தீர்ப்பா..?

*“ஆண்டவனும் கோவிலில்*
*தூங்கி விடும் போது...*
*யாரிடத்தில் கேள்வி கேட்பது...?*
*ஏழைகளின் ஆசையும்...*
*கோவில் மணியோசையும்*
*வேறுபட்டால் என்ன செய்வது..?*

*தர்மமே.. மாறுபட்டால்
எங்கு செல்வது..?"*

எதிர்கடையிலிருந்து பாட்டு ஒலித்தது... பாவனாவிற்கு துக்கமாக இருந்தது.. அவள் அந்தக் கடையில் காலடி வைத்தபோது காவ்யா அங்கே இருந்தாள்.. முதல் பார்வையிலேயே காலம் காலமாகப் பழகியதைப் போன்றதொரு தோழமையை அவர்கள் உணர்ந்தார்கள்.. அந்தக் கடையில் அமர்ந்து எத்தனை கதைகளைப் பேசியிருப்பார்கள்...?

இன்று அந்த அருமைத் தோழி அந்தக் கடையில் இல்லை.. வேலையை விட்டு அவள் போய் விட்டாள் என்பதை விட போக வைக்கப் பட்டாள்..

அவளில்லாத கடையில் பாவனா இருப்பதா..? காவ்யா இல்லாத கடையின் வெறுமை அவளைக் கொன்று தின்று விடாதா..? அவள் தோழி பழியேற்று வெளியேறிப் போனபின்பு அவளுக்குமட்டும் அங்கே என்ன வேலை...?

பாவனா ஒரு முடிவுக்கு வந்தவளாக அவளது மேஜைக்கு அருகே சென்று.. வெள்ளைத் தாளை எடுத்து.. அதில் மடமடவென்று எழுதினாள்.. எழுதி முடித்ததும் பேப்பரை கையில் எடுத்துக் கொண்டு அர்ஜீனின் அருகே சென்றாள்.. அவள் என்ன செய்கிறாள் என்று புரியாமல் பார்த்தசாரதியும் நேகாவும் நயன பாஷையில் வினவிக் கொண்டார்கள்..

“சார்..” மெல்லிய குரலில் அழைத்தாள் பாவனா..

தலையைப் பிடித்தபடி நின்றிருந்த அர்ஜீனை பாவனாவின் குரல் கலைத்தது.. அவன் திரும்பினான்..

“சொல்லுங்க பாவனா...”

“இது என்னோட ரெஸிக்னேசன் லெட்டர் சார்..” பாவனா ராஜினாமாக் கடிதத்தை நீட்டினாள்..

“பாவனா..?!...”

அர்ஜீனின் விழிகளில் ‘நீயுமா...?’ என்ற கேள்வி இருந்ததில் நேகாவுக்கு உடன்பாடு இல்லை...

“இது என்ன அங்கிள்.. உங்க சன் இப்படி லேபருக்கு ஈக்குவலா இறங்கி நின்று பேசுகிறாரே... ஐ டோன்ட் லைக் இட்.. இவ போனால் போகட்டுமே...” தாழ்ந்த குரலில் பார்த்தசாரதியிடம் சொன்னாள்..

“அதுதானே...” மகனிடம் இருந்த பயத்தில் அவளை விடத் தாழ்ந்த குரலில் அவளுக்கு ஜால்ரா தட்டினார் பார்த்தசாரதி...

அதையெல்லாம் கண்டு கொள்ளாமல் நிதானமான குரலில் விளக்கம் சொன்னாள் பாவனா...

“ஸாரி சார்.. இன்னைக்கு காவ்யாவுக்கு வந்த பழி.. நாளைக்கு என் மேலயும் விழாதுன்னு என்ன நிச்சயம்..? ஒரு வருசமா அவதான் பேங்கில இருந்து பணத்தை டிராப் பண்ணிட்டு வந்தா.. அவ பொறுப்பிலதான் பணம்

இருந்துச்சு.. எல்லோருக்கும் சேலரியை அவதான் கொடுத்தா.. கடையோட வரவு செலவைக் கவனிச்சுக்கிட்டு ஹேண்டில் பண்ணினா.. பேங்கில பணத்தைக் கட்டினா.. இத்தனையையும் இத்தனை மாதங்களாச் செய்தவளுக்கு இருபது நாள்களுக்கு முன்னால் வரை எந்த பிரச்னையும் வந்ததில்லை...”

பாவனாவின் பார்வை குறிப்பாக பார்த்தசாரதியின் மீது படிந்தது.. அவர் புருவம் சுருங்கினார்...

‘இந்தப் பெண்ணுக்கு எவ்வளவு தைரியம்...?!’

பாவனாவின் துணிச்சலில் அவர் வியந்து போனார்.. மதுரை மாநகர மக்களின் நிமிர்வும் அந்த தெனாவெட்டும் அவருக்கு எரிச்சலை அளித்தது...

‘கொஞ்சம் கூட முதலாளிங்கிற பயமில்லையே...’

பாவனாவின் குறிப்பான பார்வையை உணர்ந்த-வர்களாய் கடையில் இருந்தவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்வதைக் கண்டவரின் கடுப்பு மேலும் அதிகரித்தது...

அவரின் கடுப்பைக் கவனிக்காமல் சொல்ல வந்ததைச் சொல்லிக் கொண்டிருந்தாள் பாவனா...

“இது சாதாரணப் பொட்டிக் கடையில்லை சார்.. லட்சக்கணக்கில் பணம் புரள்கிற கம்யூட்டர் விற்கும் கடை.. இங்கே கை சுத்தமானவங்க மட்டும்தான் வேலை பார்க்கிறோம்... காவ்யாகிட்ட மட்டும் பணப்

பொறுப்பில்லை.. கேஷ் கவுண்டரில் இருக்கிற இளங்கோ கிட்டயும் அது இருக்கு.. இளங்கோவை மாற்றி விடுகிற தங்கராஜ் கிட்டயும் அது இருக்கு... கம்யூட்டர்களை வைத்திருக்கிற கொடவுனைக் காவல் காக்கும் கந்தசாமியிடமும் அது இருக்கு.. வெளியே போய் வருகிற வேலையில இருக்கிற ஏகாம்பரத்திடமும் அது இருக்கு...”

அவள் சொல்லச் சொல்ல.. அங்கேயிருந்த மற்றவர்களின் முகங்கள் இறுகின... அவர்கள் ஆமோதிப்பாக தலையை ஆட்டினார்கள்...

“காவ்யாவை பிடிக்கலைன்னா அவளை வெளியே அனுப்ப இந்த வழியை யாரோ கண்டு பிடிச்சிருக்-காங்கன்னா.. நாளைக்கு எங்களை அவர்களுக்குப் பிடிக்கலைன்னாலும் இதே கதிதானே எங்களுக்கும் வரும்...?” பாவனா அழுத்தமான குரலில் கேட்க...

“நிச்சயமாய் வரும்...” என்றார் ஏகாம்பரம்..

“இந்த ஆளுக்கு வயது எழுபதைத் தாண்டியிருக்கும் போல... இதுவே கவர்ண்மென்ட் ஆபிசா இருந்தா சீட்டைக் கிழிச்சு வீட்டுக்கு அனுப்பி வைச்சிருப்பாங்க.. உங்க சன் அதைச் செய்யலைல்ல...? அந்த நன்றியைத்தான் இப்படிக் காட்டறார்.. கேட்டுக்கங்க...” நேகா சன்னக் குரலில் பார்த்தசாரதிக்கு சாவி கொடுத்துக் கொண்டிருந்தாள்...

என்னதான் அவள் சாவி கொடுத்தாலும்... ‘டம.. டம’ வென்று அடிக்க பார்த்தசாரதி தயாராக இல்லை...

‘அது என்ன தேவைக்கு...’ என்று அவர் நினைத்துக் கொண்டார்...

அர்ஜீன் எழுபது வயது கிழவரை வேலைக்கு வைத்துக் கொண்டால் அவருக்கு என்ன.. இல்லை... என்பது வயதுக் கிழவியை வேலைக்கு வைத்துக் கொண்டால்தான் அவருக்கு என்ன...?

அவருக்குத் தேவையானது ஒன்றே ஒன்றுதான்.. அது காவ்யா அர்ஜீனின் அருகாமையிலிருந்து விலக வேண்டும்.. அது நடந்து விட்டது.. அதற்குப் பின்னால் யார் எக்கேடு கெட்டால் அவருக்கென்ன வந்தது..?

ஏகாம்பரத்தின் உரத்த குரலில் ரோசம் வரப் பெற்ற இளந்தாரிச் செல்வங்கள் அதற்குப் பின்னால் தைரியமாக குரலெடுத்துப் பேச ஆரம்பித்தார்கள்...

“சரியாச் சொன்னீங்க பாவனா...” இளங்கோ ஆமோதிக்க

“நானும் இதைத்தான் நினைச்சேன்..” என்று ஒட்டிக் கொண்டான் தங்க ராஜ்...

“வேணாம் சார்.. காவ்யாவுக்கு ஒன்னுன்னா.. அவளைக் காப்பாத்த அவளோட அண்ணன் இருக்கிறார்.. எனக்கு அப்படியொரு அண்ணன் இல்லை.. அப்பாவுக்கு வயதாகிருச்சு... இதைப் போல ஒன்னு எனக்கு நடந்ததுன்னா கேள்விப்பட்டா அவருக்கு ஹார்ட்

அட்டாக்கே வந்துரும்.. நெஞ்சைப் பிடிச்சுக்கிட்டு ஹாஸ்பிடலில் போய் படுத்துக்குவார்... கண்ணதாசன் சார் போல நிமிர்ந்து நிற்க மாட்டார்.. ஸோ... நான் வேலையிலிருந்து விலகிக்கிறேன்...”

பாவனா பிசிறில்லாத குரலில் பேசி முடிக்க.. பார்த்தசாரதியும் நேகாவும்... ‘ஆஹா...’ வென்று மனதுக்குள் மகிழ்ந்து போனார்கள்.. லட்டு தின்ன ஆசைப் பட்ட அவர்களுக்கு இரண்டாவது லட்டும் கிடைத்து விட்டது.. காவ்யாவின் மீது அன்பும்.. அக்கறையும் கொண்ட அவளுடைய அன்புத் தோழியான பாவனாவும் அர்ஜீனின் கடையிலிருந்து விலகி விட்டாள்...

அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடிய நேகா வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருந்திருக்கலாம்.. அப்படி அவள் இருந்துவிட்டால் எப்படி அவள் நேகாவாக ஆவாள்..?

சும்மா விலகிப் போகிற பாவனாவின் மனதைக் குதறி அனுப்பி வைக்கும் யுக்தியாக...

“போகிறதுக்கு முன்னாலே உன் ஹேண்ட் பேகை திறந்து காட்டிட்டுப் போ...” என்று சொல்லி விட்டாள்...

‘ஆஹா.. காரியத்தைக் கெடுத்தாளே...’ பார்த்தசாரதி மானசீகமாக தலையில் கை வைத்துக் கொண்டார்...

சும்மா நிற்கும் சிங்கத்தைச் சொரிந்து விட்டாலே ஆபத்து.. இதில் கர்ஜனையோடு நிற்கும் சிங்கத்தின் காதுப் பக்கமாக சொரிந்து விடலாமா...?

நேகா அந்தச் செயலைச் செய்து விட.. காவ்யாவின் அன்புத் தோழியும் வெளியறேுகிறாளே என்ற உன்மத்தத்தில் இருந்த அர்ஜீன் ஆவேசத்துடன் நேகாவின் பக்கம் திரும்பினான்..

"என்ன சொன்ன...?" அடிக்குரலில் அவன் சீற...

"நான் சொன்னதில் என்ன தப்பு..?" என்று விடாப்பிடியாக கேட்டு வைத்தாள் நேகா...

"பணத்துக்கு பொறுப்பு காவ்யான்னு சொன்ன.. அவ பணத்தைக் காட்டிட்டுப் போயிட்டா.. இப்ப பாவனாவின் ஹேண்ட்பேகை சோதனை போடனும்னு எதை வைத்துச் சொல்ற...?"

அவன் கண்கள் இடுங்கின.. அதில் பார்த்தசாரதி மனம் பதறினார்...

எல்லா நேரமும் அநியாயப் புத்தி படைத்தவர்கள் ஜெயித்துக் கொண்டே இருக்க மாட்டார்கள்.. யானைக்கே அடிசறுக்கும் போது கோணல் புத்தி படைத்தவர்களின் திட்டம் சறுக்காதா என்ன...?

# 105

*என்வீட்டு முற்றத்திலே...*
*நீ நனைய ஆசைகொண்டேன்....*

**அ**ர்ஜீன் வெறுப்புடன் நேகாவையும்.. பார்த்த சாரதியையும் பார்த்தான்.. அந்த வெறுப்பில் பொசுங்கிப் போன பார்த்தசாரதி..

"அர்ஜீன்.." என்று எதையோ சொல்ல வந்தார்..

"ம்ப்ச்.. பேசாதீங்க.. எனக்கு உங்களிடம் பேசப் பிடிக்கலை.. எதை நினைத்து வந்தீங்களோ.. அந்த வேலைதான் முடிந்து போச்சே... இனியும் இங்கே உங்களுக்கு என்ன வேலை..? நீங்க அழைச்சுக்கிட்டு வந்திருக்கிற எனக்கு வேண்டாத விருந்தாளியைக் கூப்பிட்டுக்கிட்டு கிளம்பறிங்களா...?"

"நான் உன் டாடி அர்ஜீன்..."

"சொல்லாதீங்க.. நினைக்கவே வெறுப்பா இருக்கு.. கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே இங்கே ஒரு அண்ணன் வந்துட்டுப் போனானே.. அவன் தங்கை என்ன செய்தான்னு ஒரு வார்த்தை அவன் கேட்கலை... அவள் மாட்டியிருக்கிறது தெரிந்ததும் பணத்தைப் புரட்டிக் கொண்டுவந்து கட்டிவிட்டு அவன் தங்கையை காப்பாற்றிக்

கூப்பிட்டுக்கிட்டுப் போறான்.. பிறந்தா அப்படிப்பட்ட உறவுகளோடு பிறக்கனும்.. ப்ளீஸ்.. கெட்லாஸ்ட்... எனக்கு உங்க முகத்தைப் பார்க்கப் பிடிக்கலை.. அதைவிட உங்க கூட நிற்கிறவங்க முகத்தைப் பார்க்கக் கொஞ்சம் கூடப் பிடிக்கலை...”

பார்த்தசாதியின் முகம் பேயறைந்ததைப் போல ஆகிவிட்டது.. அது நாள்வரை அவரிடம் அர்ஜீன் முகம் பார்த்துக் கூடப் பேசியதில்லை.. அந்த அளவுக்கு மரியாதை காட்டிய மகனின் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் அவரைப் புரட்டிப் போட்டு அடித்தது..

அவற்றையும் அவன் மற்றவர்களின் முன்னால் சொன்னான்.. பார்த்தசாரதி இருந்த உயரத்திலிருந்து கீழே இறங்கி விட்டதை உணர்ந்தார்.. அவரது தலை தொங்கி விட்டது... நேகா அதை விரும்பவில்லை...

மனிதர் இருக்கிற இருப்பைப் பார்த்தால்.. திருந்திக்கிருந்தித் தொலைத்து விடுவாரோ என்ற எண்ணம் அவளுக்கு...

அதனால் வெளியே கிளம்ப முனைந்தவரை

“பொறுங்க அங்கிள்...” என்று தடுத்து நிறுத்தினாள் நேகா...

‘இவ ஒருத்தி நேரம் காலம் தெரியாம இங்கே நிற்கனும்னு அடம் பிடிப்பா.. அவனே போய் விடுன்னு சொல்கிறான்.. தப்பித்து ஓடி விடலாம்ன்னு பார்த்தா.. இந்தப் பெண் விடுகிறாளா...?’ எரிச்சல் பட்டார் பார்த்தசாரதி..

“எதுக்காக உங்க சன் கோபப்படுகிறார் அங்கிள்...? ஒரு திறமையான அட்மினிஸ்ட்ரேட்டருக்கு இது அழகல்ல.. அவரிடம் வேலை செய்கிறவர்களின் கேர்லெஸ்ஸிற்கு அவர்கள் தான் பொறுப்பேற்க வேண்டும்.. நிர்வாகத்தில் வேண்டியவர்கள்.. வேண்டாதவர்கள்னு பார்க்கக் கூடாது...” என்று ஆரம்பித்து அவள் சொற்பொழிவை தொடர முற்பட்டபோது...

“ஏய்ய்.. நிறுத்து...” என்று அவளைக் கையமர்த்தினான் அர்ஜீன்...

“அட்மினிஸ்ட்ரேசனைப் பற்றி நீ எனக்குச் சொல்லிக் கொடுக்காதே.. உன் கம்பெனிகளுக்கு இருக்கிறதை விட அதிகமான பிரான்சஸ் என் கம்பெனிகளுக்கு இருக்கிறது.. அதில் முக்கால்வாசி வெளிநாடுகளில்தான் இருக்கிறது.. எல்லா இடங்களிலும் பணப் பொறுப்புக்களையும்.. பிரான்சின் பொறுப்புக்களையும் அந்தந்த பிரான்ச்சின் பெர்ஸனல் மேனேஜரிடம்தான் கொடுத்திருக்கிறேன்.. இது வரைக்கும் ஒரு சின்னத்தவறு கூட எங்கேயும்.. எப்போதும் ஏற்பட்டதில்லை.. கோடிக்கணக்கான பணம் தினமும் போங்கில் போடப்பட்டும்.. எடுக்கப்பட்டும் சுற்றிக் கொண்டிருக்கு... இது சின்னக்கடை.. இந்தப் பணம் என் ஒரு நாளின் பாக்கெட் மணி.. இதில் குளறுபடி வந்திருக்கு.. ஏன்...? நீ இங்கே கால் வைத்திருக்க...”

“அர்ஜீன்...”

“ச்சீ.. என் பெயரைச் சொல்லிக் கூப்பிடாதே.. இங்கேயிருக்கிற எல்லோருக்குமே தெரியும்.. காவ்யா..

அந்தப் பணத்தை எடுக்கவில்லைன்னு.. நீ அவமேலே பழி போட்ட.. இப்ப என்னடான்னா.. வேலையை ரிசைன் பண்ணிட்டும் போற பாவனா மேலேயும் பழி போடத் துணிஞ்சிட்ட.. நீ யார் என் கடையின் எம்ப்ளாயிஸை சந்தேகப்பட...?"

"நான் யாரா வேண்டுமானாலும் இருந்துட்டுப் போறேன் அர்ஜீன்.. ஆனா பணம் இந்தக் கடையில இருந்து காணாமல் போனது உண்மைதானே...? அந்தப் பணத்தை காவ்யா எடுத்து அவளோட பெஸ்ட் பிரண்டுகிட்ட ஏன் கொடுத்திருக்கக் கூடாது...?"

'இவ அடங்கவே மாட்டாளா...?'

கொலை வெறியுடன் அர்ஜீன் நேகாவை முறைத்துக் கொண்டிருந்த போது... பாவனா அவள் கைப்பையை எடுத்து அதை அர்ஜீனின் முன்னால் கவிழ்த்துக் காட்டினாள்..

"உள்ளே ஒன்னுமில்லை சார்.. என் அக்கவுண்டை செட்டில் பண்ணும்போது சம்பளப் பணத்தையும் சேர்த்து அனுப்பி வைங்க.. அதை வாங்கறதுக்காகக் கூட இங்கே நிற்க எனக்கு மனசில்லை..."

"பாவனா.. யாரோ.. எதையோ சொல்றாங்கன்னு நீங்க உங்க பையைச் செக் பண்ணச் சொல்லனுமா...?"

"இவங்க யாரோ எவரோ இல்லை சார்... ஆனானப்பட்ட நேர்மையின் சிகரமான காவ்யாவின் மேலேயே பொய்யாய் பழி போட்டு வெளியே அனுப்பி வைச்சவங்க... அவளையே சொன்னவங்க.. நாள பின்ன

என்னையும் எதையாவது எடுத்துட்டுப் போயிட்டேன்னு சொல்லி விட மாட்டாங்களா...? அதை இல்லைன்னு புருவ் பண்றேன் பேர்வழின்னு நீங்க காவ்யாவைக் கேள்வி கேட்டதைப் போல என்னையும் கேள்வி கேட்டுறக் கூடாது பாருங்க.."

"பாவனா..." அர்ஜீன் நொறுங்கி விட்டான்...

அவர்களுக்குள் நடந்த பேச்சு வார்த்தையைக் கவனித்த நேகாவிற்கு பற்றிக் கொண்டு வந்தது...

"சும்மா சீன் கிரியேட் பண்ணாதே.." அவள் காட்டமாக பாவனாவிடம் சொன்னாள்...

"சீன் கிரியேட் பண்றேனா...? நானா...?" பாவனா கேட்டாள்..

"நீயேதான்.. உன் மனதில என்ன நினைத்துக்கிட்டு இருக்கே...."

"உன்னை மாதிரி அடுத்தவங்களைக் கெடுக்கனும்னு நினைக்கலை..."

பட்டென்று பதில் கூறி தான் காவ்யாவின் தோழி என்பதை நிலை நாட்டினாள் பாவனா...

'இந்தப் பெண் வாயை வைத்துக்கிட்டு சும்மா இருக்காமல் வாய் விட்டு வாங்கிக் கட்டிக் கொள்கிறாளே...'

நேகாவின் மூக்கு உடை படுவதில் பார்த்தசாரதி அனுதாபம் கொண்டார்... ஏற்கனவே காவ்யாவிடம் மூக்குடைப்பட்டவள் அவள் தோழியிடம் மோதாமல் அதைத் தவிர்த்திருக்கலாம் என்பது அவர் கருத்து...

அவர் சொன்னால் அதைக் கேட்டுக் கொள்ளக் கூடியவளா நேகா...?

“பணத்தைக் களவாடின பெண்ணுக்கு சப்போர்ட் பண்ணிப் பேசிக்கிட்டு இருக்கிற நீ.. என் நினைப்பைப் பற்றிச் சொல்லுகிறாயா..?” என்று அவள் எகிறிய எகிறிலில்..

“வாயை மூடு..” என்று எகிறி விட்டான் அர்ஜீன்..

“அங்கிள்... உங்கள் சன் பேசுகிறது சரியில்லை...”

“உன் அங்கிள் செய்கிறதுதான் சரியில்லை.. உன்னைப் போலப் பிடாரியைக் கொண்டு வந்து என் கடையில் நிறுத்தி வைத்திருக்கிறார் பார்... அவரைச் சொல்லனும்.. பாவனா மனதில் நினைக்கிற நினைப்பிருக்-கட்டும்.. உன் மனதில் என்ன நினைத்துக்கிட்டு இருக்கிற..? நீ பெரிய நீதி தேவதைன்னு மனதுக்குள் நினைப்போ...?”

“நான் நியாயத்தைத்தான் கேட்டேன்...”

“அதே நியாயத்தைத் தான் நானும் கேட்கிறேன்.. காவ்யா பணத்தை எடுக்கவில்லை...”

“பின்னே அதுக்கு கை கால் முளைத்து நடந்து போயிருச்சா...?”

“பணத்துக்கு கைகால் முளைத்து நடந்து போகனும்னு இல்லை.. கை கால் முளைத்தவங்க நடந்து வந்து அதைக் கடத்திக் கொண்டு போயிருக்கனும்.. அந்தப் பணத்தை யாரோ களவாடியிருக்கிறாங்க... அந்தக் கேடு கெட்ட செயலை என் கடையில் வேலை செய்கிறவங்க செய்திருக்க மாட்டாங்க...”

“அப்ப... அதைச் செய்தது நான்தான்னு சொல்கிறிங்களா..?”

வாய் விட்டு மாட்டிக் கொண்டாள் நேகா.. தனது உயரத்திலும் நேகா குருப் ஆஃப் கம்பெனியின் எம்.டி என்ற அடையாளத்திலும் அவள் அதீத நம்பிக்கை வைத்திருந்தாள்.. அதற்காகவேனும் அர்ஜீன் அவளைச் சந்தேகப்பட மாட்டான் என்று நம்பினாள்.. அந்த நம்பிக்கையை உடைத்துக் காட்டினான் அர்ஜீன்...

“ஏன் இருக்கக் கூடாது...?”

அர்ஜீன் வேகத்துடன் நேகாவின் கைப்பையை எடுத்து அதைத் திறந்து பார்த்தான்.. அவசரத்தில் நேகா வேறு எங்கேயும் மறைத்து வைக்க முடியாமல் அதில் வைத்திருந்த பணக்கட்டுக்கள் அவனைப் பார்த்துக் கண் சிமிட்டின...

‘பார்த்துட்டானே...’ நேகாவிற்கு குப்பென்று வியர்த்தது..

இனி அவன் மனதில் நேகாவிற்கான மதிப்புக் கிடைப்பது வெகு சிரமம் என்பதை உணர்ந்த பார்த்தசாரதி வெளிப்படையாகவே தலையில் கையை வைத்தார்..

‘இந்தப் பெண் கெட்டிக்காரியாச்சே... எப்படி மாட்டிக்கிட்டா...?’

காவ்யா பணத்தை மேஜை டிராயரில் வைத்துப் பத்திரமாகத்தான் பூட்டியிருந்தாள்.. ஆனால் அவளை வெளியேற்ற இது போன்ற பழியைப் போட்டாக வேண்டும்

என்று திட்டமிட்டிருந்த நேகா காவ்யாவின் மேஜை டிராயருக்கான மாற்றுச்சாவியை தயாரித்து வைத்திருந்தாள்.. அது பார்த்த சாரதிக்குக் கூடத் தெரியாது..

இது தெரியாத காவ்யா பேங்கிலிருந்து வந்ததும் பணத்தை சரிபார்த்து பத்திரமாக மேஜை டிராயரில் வைத்துப் பூட்டி விட்டு பாத்ரூம் போனாள்.. பாவனாவும் அவளுடன் பேசியபடி கூடப் போய்விட.. ஏகாம்பரம் வெற்றிலை பாக்கு வாங்கவென்று வெளியே போய் விட்டார்..

அனுகூலமாக அமைந்த அந்த நேரத்தில் நேகா கைப்பையோடு யாருக்கும் சந்தேகம் வராமல் கடையின் பின் பக்கத்தில் இருந்த அலுவலகப் பகுதிக்குப் போய் இயல்பாக காவ்யாவின் நாற்காலியில் அமர்ந்து மேஜை டிராயரைத் திறந்து பணக்கட்டுக்களை எடுத்து அவள் கைப்பையில் நிரப்பிக் கொண்டு டிராயரை பூட்டி விட்டு வந்து விட்டாள்...

பாத்ரூமிலிருந்து வந்த காவ்யா எல்லோருக்கும் சம்பளம் கொடுக்கலாம் என்று மேஜை டிராயரை திறந்தபோது அங்கே பணம் இல்லை.. அடுத்து நடந்த நாடகத்தின் களேபரத்தில் அனைவரும் அங்கே கூடிவிட.. நேகாவால் கைப்பையில் இருந்த பணத்தை இடம் மாற்ற முடியவில்லை...

அர்ஜீன் புளுவைப் பார்ப்பதைப் போல நேகாவை பார்த்தான்.. மற்றவர்களாக இருந்திருந்தால் அந்தப் பார்வையில் சுக்கு நுறாக உடைந்திருப்பார்கள்.. நேகா மற்றவர்கள் போல் இல்லையே.. அதனால் நிமிர்மாகவே

நின்றாள்.. அவள் மனதில் நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்ற எண்ணம் மின்னல் வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது..

“இது என்ன..?” அர்ஜீனின் முகத்தில் அக்கினியின் ஜ்வாலை எழுந்தது...

“யோவ் கந்தசாமி.. பணத்த இந்தப் புள்ளதான் எடுத்திருக்குய்யா.. ஏம்மா.. பெரிய கோடிஸ்வரின்னு வாய்க்கு வாய் சொல்லிக்கற... கடைசியில கடைப் பணத்தில் கைவைச்சிருக்க...? இதத்தான் எங்க ஊரில ஆளப் பாத்தா அழகு.. வேலையைப் பாத்தாச் சொழகுன்னு சொல்வாங்க...”

ஏகாம்பரம் கிடைத்த வாய்ப்பைப் பயன் படுத்திக் கொண்டு சத்தம் போட.. கடையில் இருந்த அனைவரும் நேகாவை துச்சமாக பார்த்தார்கள்...

# 106

## *யுத்தமின்றி என்னுடனே-நீ உறவாட ஆசைகொண்டேன்...*

“**ஆ**த்தி.. ஏம்மா.. அந்தக் காவ்யாப் புள்ள உனக்கு என்னம்மா கெடுதல் பண்ணுச்சு...? அது மேல அநியாயமா பழி போட உனக்கு எப்படிம்மா மனசு வந்துச்சு...? அது

பச்சப் புள்ளம்மா.. யாருக்கும் கெடுதல் நினைக்காது... அது மேல இப்படிப் பழி போட்டுட்டியே.. ச்சீ.. நீயும் ஒரு பொம்பளப் புள்ளயா...?" கந்தசாமி மரியாதையை கைவிட்டார்...

"அதானே.. காவ்யா நேர்மையானவங்க... அவங்க மேல இப்படிப்பட்ட பழியைப் போட்டிருக்கக் கூடாது.." இளங்கோ சொல்லி விட்டான்...

காலங்கடந்து என்றாலும் காவ்யாவுக்கான நியாயத்தை சொல்லி விட முடிந்ததில் அவனுக்குள் நிம்மதி வந்திருந்தது..

"அவங்க மேஜைக்குள்ளே பூட்டி வைத்திருந்த பணத்தை இவங்க எப்படி எடுத்தாங்க...? ஓ..! கள்ளச் சாவியையும் ரெடி பண்ணிட்டாங்களா..? பார்த்துங்-கங்கப்பா.. ஒரு புள்ளய புடிக்கலைன்னா.. கள்ளச் சாவி போட்டு அவங்க மேஜையைத் திறந்து பணத்தை எடுத்து மறைச்சு வைச்சிரனும்ங்கிற அளவுக்கு இவங்க இறங்கியிருக்காங்க.. இந்தப் புத்தியெல்லாம் லேபருக்கு வருமா...?" நேரம் பார்த்து தங்கராஜ் பழி தீர்த்துக் கொண்டான்...

"ஷட் அப் அர்ஜீன்.. இது என் பணம்.. உங்க கடை ஆளுகளை கண்ட்ரோலாய் பேசச் சொல்லுங்க..." நேகா உடனடியாக சீறினாள்...

அர்ஜீன் அதைப் பற்றி அலட்டிக் கொள்ளவே இல்லை.. நோட்டுக்கட்டுக்களை எடுத்துப் பரிசீலனை

செய்தவன் அவற்றின் மீதியிருந்த பேங்கின் பெயரையும்.. சீரியல் நம்பரையும் காண்பித்தான்...

“இது மதுரை பிரான்ச்சில் இருக்கிற பேங்க்... என் கணக்கில் டிராப் பண்ணின பணத்தோட சீரியல் நம்பர்களை இந்த பேங்கில் நோட் பண்ணி வைச்சிருப்பாங்க.. செக் பண்ணிரலாமா...?”

அர்ஜீன் எகத்தாளமாக கேட்டபடி போனை கையிலெடுக்க நேகா வாயடைத்துப் போனாள்...

“நீ ஏ.டி.எம்மில் பணம் எடுத்திருந்தா நோட்டுக்-களாத்தான் வந்திருக்கும்.. நோட்டுக் கட்டுக்களா வந்திருக்காது..”

“நான் பேங்கில் டிராப் பண்ணினேன்...”

“அது எந்த பேங்குன்னு சொல்லு.. எப்படி டிராப் பண்ணினேன்னு சொல்லு.. இந்த சீரியல் நம்பரை அவங்க நோட் பண்ணியிருப்பாங்க.. என் சந்தேகமும் கிளியர் ஆகிரும்..”

அர்ஜீன் போனை காதுக்கு கொடுத்தபடி நேகாவைப் பார்த்தான்.. அவள் முகம் வெளுத்தது..

“கமான்.. டெல்.. மீ..” அர்ஜீன் அதட்டினான்...

நேகா என்னத்தைச் சொல்வாள்...? கையும்.. களவுமாக அகப்பட்டுக் கொண்டவள் பணக்கட்டுக்களை எடுத்து அர்ஜீனின் முன்னால் வைத்துவிட்டு விர்ரென்று

வெளியே போய்விட்டாள்.. அவசரமாக அவளைப் பின் தொடர்ந்து பார்த்தசாரதியும் போய்விட்டார்..

அவர் வந்த வேலைதான் வெற்றிகரமாக முடிந்து விட்டதே.. இனி அந்தக் கடையில் அவருக்கென்ன வேலை..?

“இனி இவங்க இந்தப் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டாங்க...” சத்தமாகவே சொன்னார் ஏகாம்பரம்..

அந்த ‘இவங்க’ளில் ஒருவர் தன் தந்தை என்பதில் மனதுக்குள் அவமானமும்.. வருத்தமும்.. கோபமும் அடைந்தான் அர்ஜீன்..

‘இவர் நினைச்சது நடக்கனும்ங்கிறதுக்காக.... இந்த அளவுக்கு இறங்கலாமா...? அதுவும் மருமகளாக வரப் போகிற பெண்ணின் மீது திருட்டுப் பழியைப் போடலாமா..?’

அவனுக்குப் பார்த்த சாரதியின் மீது வெறுப்பு பெருகியது... அவரின் அந்தச் செயலை அவனால் மன்னிக்க முடியவில்லை...

காவ்யாவும்... பாவனாவும் ஒருவர் பின்னால் ஒருவராக வெளியேறி விட்ட பின்பு கடையே வெறிச்சோடிப் போய் விட்டதாக கந்தசாமி சொல்லி வருத்தப்பட்டார்.

கடையில் இருந்த மற்றவர்கள் கூடிய சீக்கிரத்தில் வேறு வேலையைத் தேடிக் கொள்ள வேண்டும் என்று அர்ஜீனின் காதுபடப் பேசிக் கொண்டார்கள்... அர்ஜீனின் முன்னாலிருந்த பணக்கட்டுக்கள் அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தன...

**க**ண்ணதாசன் மேஜை மேலிருந்த ஃபைல்களில் கவனமாக இருந்த போது...

“உங்களைப் பார்க்க அர்ஜீன்னு ஒருத்தர் வந்திருக்கிறார் சார்..” என்று வந்து சொன்னான் பியூன்..

கண்ணதாசனின் புருவங்கள் முடிச்சிட்டன... அவன் இதை எதிர்பார்த்திருந்தான்.. எப்படியும் அர்ஜீன் வந்து அவனிடம் பேசுவான் என்று அவனுக்கு நிச்சயமாகத் தெரியும்...

காவ்யா வீட்டுக்குள் அடைபட்டு விட்டாள்.. அவளது செல்போன் ‘ஸ்விட்ச் ஆஃப்..’ செய்யப்பட்டு வீட்டின் மூலையில் வீசியெறியப்பட்டு விட்டது...

எந்த வழியிலும் அவளைத் தொடர்பு கொள்ள முடியாத அர்ஜீன் கண்ணதாசனைத் தேடி வந்துதானே ஆக வேண்டும்...?

“வரச் சொல்...” என்றான் கண்ணதாசன்...

அர்ஜீன் வந்தபோது அவனையே கூர்மையான பார்வை பார்த்தான்.. சளைக்காமல் அவன் பார்வையை எதிர்கொண்டான் அர்ஜீன்...

“பணத்தை காவ்யா எடுக்கலைன்னு புரூவ் பண்ணிட்டு வந்திருக்கேன்...”

“தேவையே இல்லை.. அங்கேயிருந்த அத்தனை பேருக்கும் காவ்யா பணத்தை எடுக்கலைன்னு நல்லாவே தெரியும்...”

“எடுத்தது யார்ன்னு தெரியுமா...?”

“ஓஹோ.. அதைக் கண்டு பிடித்துட்டிங்களா...?”

“யெஸ்... நேகாதான் பணத்தை எடுத்திருக்கா...”

இதைக் கேட்டதும் கண்ணதாசன் கோபப் படுவதற்குப் பதிலாக வாய் விட்டுச் சிரித்தான்.. அர்ஜீனின் கண்கள் இடுங்கின...

“இதைக் கண்டு பிடிக்க வெத்தலையில மை தடவியா பாக்கனும்..? கைப் புள்ளயக் கேட்டாக் கூட அது நேகா பக்கமா கை காட்டியிருக்குமே..”

உனக்குத்தான் அது தெரியவில்லை என்ற மறைமுக குற்றச்சாட்டில் முகம் கருத்தான் அர்ஜீன்...

“காவ்யா கொஞ்ச நேரம் அங்கே வெயிட் பண்ணியிருந்தா அவ முகத்திரையை காவ்யா முன்னாலேயே கிழித்திருப்பேன்...”

“அவ வெயிட் பண்ண மாட்டா... அத்தனைக்கும் மேலே அங்கே ஒரு நொடி கூட நின்னாப் பாவம்ன்னு நினைக்கிறவ என் தங்கச்சி.. யார் முகத்திரை கிழிஞ்சா எங்களுக்கென்ன...? கிழியாவிட்டால் எங்களுக்கென்ன...?”

எங்களுக்கு என்று காவ்யாவுடன் கண்ணதாசன் கூட்டுச் சேர்ந்து கொண்டு அர்ஜீனை தனிமைப் படுத்தியதில் அவனுக்கு இதயம் வலித்தது...

“ஐ ஆம் ஸாரி...” என்றான்...

“இதை என்கிட்ட ஏன் சொல்கிறிங்க...? உங்களை நம்பிக் காதலித்தாளே.. அந்த அப்பாவி காவ்யாகிட்டப் போய் சொல்லுங்க...”

“அவதான் கண்ணில தென்பட மாட்டேன்கிறாளே.. போனில் பேசலாம்ன்னா.. போன் ஸ்விட்ச் ஆஃப்ன்னு வருது..”

“அதுக்கு நான் என்ன செய்யனும் மிஸ்டர் அர்ஜீன்.. உங்களுக்காக என் தங்கச்சிக்கிட்ட தூது போகனுமா..? நான் ஸ்டேட் கவர்ண்மென்டில வைற போஸ்டில இருக்கிறவன்.. நீங்க என் வேலையை மாத்த வந்தீங்களா...?”

கண்ணதாசன் நிதானமாக கேட்ட ஒவ்வொரு சொல்லும் அர்ஜீனின் இதயத்தை துளைத்தன..

“இதோ.. உங்க பணம்...”

அர்ஜீன் பணக்கட்டுக்களை எடுத்து கண்ணதாசனின் முன்னால் அடுக்கினான்.. அவற்றை உணர்ச்சியற்ற பார்வை பார்த்த கண்ணதாசன்...

“இதனால் உடைந்து போயிருக்கும் என் தங்கையின் மனதை சரி செய்து விட முடியுமா..?” என்று அர்ஜீனிடம் கேட்டான்..

“எனக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள் கண்ணதாசன்..”

“எதுக்கு...?”

“காவ்யாவிடம் என் காதலை உணரவைப்பதற்கு...”

“இத்தனை நாளாய் அதை நீங்க செய்யலையா..?”

கண்ணதாசன் புருவங்களை உயர்த்தி வினவிய விதத்தில் அர்ஜீனுக்குள் ‘சுர்’ரென்ற கோபம் கிளர்ந்து தலைக்கு ஏறியது..

“இதை நீங்க கேட்கிறதுதான் எனக்கு ஆச்சரியமா-யிருக்கு மிஸ்டர் கண்ணதாசன்.. நான் உணர வைக்காமலா நீங்க என்னைத் தேடிவந்து அவளை விட்டு விலகிப் போகச் சொன்னீங்க...?” பதிலுக்கு அவனும் கேட்டு விட்டான்...

“விலகிப் போயிருந்தால் இந்த வினை வந்திருக்காதே..” அலட்டிக் கொள்ளாமல் பேசினான் கண்ணதாசன்..

“சொல்லிக் காட்டறிங்களா..?” ரோசத்துடன் கேட்டான் அர்ஜீன்....

“இல்லைன்னு சொல்ல மாட்டேன்.. அன்னைக்கு அத்தனை சவடாலாய் பேசின நீங்க என்னை ஜெயிச்-சிருக்கனும்.. சொன்னதைச் செய்து காட்டியிருக்கனும்.. இப்படி இரண்டையும் செய்யாம காதலியை கோட்டை விட்டுட்டு நிற்கக் கூடாது...”

“நான் அவளைக் கோட்டை விடல...”

“பின்னே என்ன.. அவ உங்க கைக்குள்ள இருக்காளா..?”

“ஒரு தடவை.. ஒரேயொரு தடவை... அவகூடப் பேசினா போதும் கண்ணதாசன்.. என் காவ்யா என்னைப் புரிஞ்சுக்குவா.. அந்த நம்பிக்கை எனக்கிருக்கு...”

“ஒரு வேளை அவ உங்களைத் திரும்பிப் பார்க்கலைன்னா...?” கண்ணதாசன் நிதானத்தைக் கைவிடாமல் கேட்டான்...

“திரும்பிப் பார்ப்பா..” உறுதியாகச் சொன்னான் அர்ஜீன்...

“ஓகே.. உங்க ஆசையைக் கெடுப்பானேன்.. நான் லேண்ட் லைனில் போன் போட்டுத் தர்ரேன்.. பேசுங்க...”

கண்ணதாசன் லேண்ட்லைனில் அவனுடைய வீட்டு நம்பர்களை அழுத்திவிட்டுக் காத்திருந்தான்.. அன்னபூரணி போனை எடுத்தாள்...

“அம்மா.. காவ்யா இருக்குதா..?”

“இருக்குதுப்பா..” மறுமுனையில் சொன்னாள் அன்னபூரணி...

“நான் பேசனும்.. கூப்பிடுங்க..” என்று சொன்ன கண்ணதாசன் ரிஸீவரை அர்ஜீனின் கையில் கொடுத்து

“இப்ப காவ்யா வருவா.. பேசிப் பாருங்க...” என்று முகம் மாறாமல் சொன்னான்...

அந்தத் தொனி அர்ஜீனை உசுப்பி விடத்தான் செய்தது.. அவன் காத்திருந்தான்.. மறுமுனையில் காவ்யா

“ஹலோ..” என்றதும்...

“காவ்யா... நான் அர்ஜீன்..” என்று பரபரத்தான்..

“அர்ஜீனா..? யார் அது..?” என்று கேட்டுவிட்டு போனைத் துண்டித்து விட்டாள் அவள்..

‘காவ்யாவா இதைச் செய்தது..?’ அர்ஜீனால் அதை நம்ப முடியவில்லை..

அந்த அளவிற்கு அவள் அவனை வெறுத்து விட்டாளா..?

"என்ன? பேசினாளா..?" அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த கண்ணதாசன் அமைதியாகக் கேட்டான்...

அர்ஜீன் பதில் சொல்லவில்லை... அவன் முகம் கற்பாறையைப் போல இறுகி விட்டிருந்தது..

"அவளுக்கு உங்க மேல இருந்த நம்பிக்கை.. எப்போ எந்த இடத்தில பட்டுப் போச்சுன்னு போய் உங்க ஹோட்டல் ரூமில யோசிச்சுப் பாருங்க அர்ஜீன்..."

"சொல்லிக் காட்டறீங்களா..?"

"ஆமாம்ன்னு வைச்சுக்கங்களேன்.. நான் சொல்லிக் காட்டக் கூடாதா..? நான் பாதிக்கப்பட்டவன் அர்ஜீன்.."

"நானும் பாதிக்கப் பட்டவன்தான்..."

"ப்ளீஸ்.. கெட்லாஸ்ட்.."

"கண்ணதாசன்.."

"சத்தம் போடவேண்டாம் அர்ஜீன்.. நான்தான் படித்துப் படித்துச் சொன்னேனே.. நீங்க வேற.. நாங்க வேறன்னு.. காதில் வாங்கினீங்களா..? சேலை மேல முள் பட்டாலும்.. முள் மேலே சேலை பட்டாலும் சேதம் சேலைக்குத்தான்னு சொன்னேனே.. உங்க புத்தியில் அது உறைச்சதா.. இல்லையே..."

“நடந்தது என் கட்டுப்பாட்டை மீறி நடந்து விட்டது.. அதற்காக காவ்யாவின் மேல் எனக்கிருக்கும் காதலை குறை சொல்ல வேண்டாம் கண்ணதாசன்..”

“காதல்..! உங்களைச் சேர்ந்தவங்களை உங்க கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியாத உங்களுக்கெல்லாம் எதுக்கு காதல்..?”

“கண்ணதசான்...”

“நீங்க சத்தமா பேசிட்டா.. நான் கேட்ட கேள்வியில் நியாயம் இல்லைன்னு ஆகிருமா..?”

“வேண்டாம் கண்ணதாசன்... சான்ஸ் கிடைச்சிருச்சேன்னு பேசிப் பார்க்காதீங்க...”

“இந்த சான்ஸை எதுக்காக எனக்குக் கொடுத்தீங்க.. நான் கொடுங்கன்னு கேட்டேனா..? இல்லை உங்கப்பாவைப் போல கேவலமா இந்த சான்ஸ் எனக்குக் கிடைக்கனும்னு பிளான் பண்ணினேனா..? எதுவும் செய்யலைல்ல..? அப்புறம் எப்படி சார் எனக்கு இந்த சான்ஸ் கிடைச்சது..?”

“உங்களுக்குத் தெரியாது கண்ணதாசன்..”

“எது..? உங்க காதலா..?”

அர்ஜீன் செய்வதறியாத கோபத்துடன் கண்ணதாசனை முறைத்தான்.. அவன் அலட்டிக் கொள்ளாமல் தோள்களைக் குலுக்கினான்...

“என்னை முறைச்சா.. நீங்க செய்ததெல்லாம் சரின்னு ஆகிருமா..? தெரியாமல்தான் கேட்கிறேன்.. உங்களுக்கு

எல்லாம் தெரிந்திருக்கு.. அதுக்கப்புறமும் என் தங்கையைக் காப்பாற்ற இந்தியாவுக்கு ஓடி வராம கனடாவில என்னத்தை வெட்டிமுறிச்சீங்க..?"

பலகோடி ரூபாய்களை வெட்டி முறித்தேன் என்று சொல்ல முடியாமல் சூழ்நிலைக் கைதியாக கண்ணதாசனின் முன்னால் கைகளைப் பிசைந்து கொண்டு நின்றான் அர்ஜீன்..

'இது.. இது.. இந்தச் சொல்.. இவனிடமிருந்து வந்து விடக்கூடாதுன்னுதான் நான் இத்தனை பாடுபட்டேன்.. என்னதான் போராடினாலும் கடைசியில் இவனிடம் இந்த வார்த்தையைக் கேட்டு விட்டேனே...'

"சொல்லுங்க அர்ஜீன்.. நீங்கதானே சொன்னீங்க.. உங்க காதல் தெய்வீக காதல்.. வானமே பொத்துக்-கிட்டாலும் உங்க காதல் ஊத்திக்காது.. யார் தடுத்தாலும் நீங்க கேட்க மாட்டிங்க.. கனடாவில இருந்து வந்ததும் உங்க குடும்பத்தோட ஓடிவந்து என் தங்கையைப் பெண் கேட்பீங்க.. இத்தனையையும் சொன்னது யார்..? நீங்கதானே..?"

"நான் இல்லைன்னு சொல்லலையே..."

"ஏன்..? அதைமட்டும் மிச்சம் வைக்காம சொல்லித்தான் பாருங்களேன்.. யார் கண்டது..? நீங்க சொன்னாலும் சொல்வீங்க.. ஆமாம்.. உங்க குடும்பத்தோட வந்து பெண் கேட்பீங்கன்னு சொன்னீங்களே.. உங்க குடும்பத்தில உங்க அப்பாவும் சேர்த்திதானே..? பெண்

கேட்க வருகிற குடும்பத் தலைவர்தான்.. என் தங்கை மீது திருட்டுப் பட்டம் கட்டினாரா..?"

"கண்ணதாசன்.. ப்ளீஸ்.."

"இதை நான் சொன்னேன்.. உங்ககிட்ட கெஞ்சினேன்.. என் தங்கையின் மனசில ஆசையை விதைக்காதீங்கன்னு எச்சரிச்சேன்.. கேட்டிங்களா.. என்னமோ சபதம் போட்டிங்களே.. கனடாவில இருந்து வந்ததும் உங்களைப் பெத்தவங்கேளாட வந்து பெண் கேட்பீங்கன்னு.. உங்களால அது முடிஞ்சதா..?"

"முடிஞ்சிருக்கும் கண்ணதாசன்.. ஆனால்..."

"இந்த ஆனா.. ஆவன்னாவெல்லாம் என்கிட்ட வேண்டாங்க... அப்படி நடக்கலைன்னா உங்களை யாருன்னு கேட்கச் சொன்னீங்க.. அதைத்தான் கேட்கிறேன்.. நீங்க யார்..?"

மனதில் அறை வாங்கினான் அர்ஜீன்.. எந்தக் கேள்வியை கண்ணதாசன் கேட்டுவிடக் கூடாது என்று நினைத்தானோ.. அந்தக் கேள்வியை கேட்டுவிட்டதில்... மனம் துடிக்க அங்கிருந்து வேகமாக வெளியேறினான்..

- நான்காம் பாகத்தில் தொடரும் -


லட்சுமி பாலாஜி பதிப்பகம்